TNLA Debates

III

No. 1

1980

V 311,31 N80

N 81·3·1;1

120100

வெளியீடு. 28-12-1980] [Issued 28-12-1980

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

புதன்கிழமை 1980 ஜூலை 9—தொகுதி III—எண் I
Wednesday 9th July 1980—Volume III—No. I

தமிழ் நாடு அரசு—GOVERNMENT OF TAMIL NADU
1980

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை—600 009
Assembly Department, Fort, St. George, Madras-600 009.

விலை 3-15 காசுகள்] [Price 3-15 Paise

D
Y211.31 N80
N81-3-131
123100

## உள்ளடக்கம்.

9-7-1980


| | பக்கங்கள் |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும். | i—iv |
| (ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. .. | v—vi |
| (iii) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பெற்ற) பெயர்ப் பட்டியல். .. .. .. .. .. | vii—xv |
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள். | 1—14 |
| 2. உரிமைப் பிரச்சினைகள்— | |
| (அ) பாசனத்துறை அமைச்சர் மீது. | 15—28 |
| (ஆ) 'அண்ணா' பத்திரிகை மீது. | 28—30 |
| 3. ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| காவேரியில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு. | 30—35 |
| 4. கவன ஈர்ப்புகள்— | |
| (அ) தூத்துக்குடி பகுதியில் அயல் நாட்டுக் கப்பல்கள். | 35—37 |
| (ஆ) அத்தியாவசியப் பண்டங்களின் பதுக்கலைத் தடுக்கும் நடவடிக்கைகள். | 37—40 |
| 5. தகவல் கோரல். | |
| பேரவை அலுவலர்களுக்கு பேருந்துகளில் பாஸ் வழங்குவது. | 40—41 |

பக்கங்கள்.

6. 1980–81-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம்— விவாதம்— தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| திரு. எஸ். ஆண்டித்தேவர். | .. | 41—46 |
| திரு. சோ. அழகர்சாமி. | .. | 46—55 |
| திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப். | .. | 55—63 |
| டாக்டர் மு. கருணாநிதி. | .. | 64—86 |
| மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன். | | 86—87 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். | | 86—124 |

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். .. 125


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

### திரு. பிரபுதாஸ் பட்வாரி.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்** (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சி பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, பொதுப்பணித் துறை மற்றும் பொதுப் பணித்துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** (நிதி அமைச்சர்) —நிதி, திட்டம், சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் ராணுவத்தினர்.

3. **மாண்புமிகு திரு. சி. இராமச்சந்திரன்** (மின்துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு.

4. **மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி** (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்; பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத் துறை.

5. **மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. **மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்** (செய்தி அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, காடுகள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. **மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி.

8. **மாண்புமிகு திரு. கா. காளிமுத்து** (வேளாண்மைத்துறை அமைச்சர்)— வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் வேளாண்மை பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு-சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித்துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமி தானம், கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் திரு. எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்)—வேளாண்மை பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃபு.

14. மாண்புமிகு திரு. எஸ். முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் அமைச்சர்) பெருந் தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (கைத்தறி கதர்த்துறை அமைச்சர்)—கைத்தறி, கதர், மது அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மதுவிலக்கு, பயண இசைவுச் சீட்டு.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (அரிசன நலத் துறை அமைச்சர்)—அரிசன நலம், எழுது பொருள்-அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலை வாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NAUU

*Governor of Tamil Nadu*

THIRU PRABHUDAS PATWARI.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. HON. THIRU M. G. RAMACHANDRAN (Chief Minister)—Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Public Works Department and Establishment Matters relating to Public Works Department.

2. HON. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Planning, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. HON. THIRU K. A. KRISHNASAMY (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registration.

5. HON. THIRU S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. HON. THIRU R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. HON. THIRU C. ARANGANAYAGAM (Minister for Education)—Education including Technical Education and Official language.

8. HON. THIRU K. KALIMUTHU (Minister for Agriculture)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. HON. THIRU C. PONNAIYAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. HON. THIRU P. KULANDAIVELU (Minister for Local Administration)—Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. HON. THIRU S. RAGHAVANANDHAM (Minister for Labour) Labour, Housing, Slum-Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. HON. Doctor H. V. HANDE (Minister for Health) Health.

13. HON. THIRU K. RAJA MOHAMMED (Minister for Irrigation)—Agro-Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. HON. THIRU S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. HON. THIRU S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals and Textiles.

16. HON. THIRU S. N. RAJENDRAN (Minister for Handlooms and Khadi)—Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits and Passports.

17. HON. THIRU M. VIJAYASARATHI (Minister for Harijan Welfare)—Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. HON. THIRUMATHI GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)—Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் தலைவர்

*மாண்புமிகு திரு. க. இராசாராம்.

### பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### † மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. இரா. முத்தையா,
2. திரு. கோ. விஸ்வநாதன்,
3. திரு. பெ. சு. திருவேங்கடம்,
4. திரு. ஓ. சுப்ரமணியன்,

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்கள்,

திரு. த. இராதாகிருஷ்ணன்,

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### குழு அலுவலர்,

திரு. ச. பாஷ்யம், பி.ஏ. (ஆனர்ஸ்).

---

* 1980-ம் ஆண்டு ஜூன் திங்கள் 21-ம் நாளன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

† 1980-ம் ஆண்டு ஜூன் திங்கள் 26-ம் நாளன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.

## சார்புச் செயலாளர்கள்,

திரு. வி. சீதாராமன், பி.காம்.,
திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி.ஏ.,
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.,
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.,
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.,
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.,
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ., (எஸ்டேட் அதிகாரி).
திரு. ப. கோதண்டராமன்—பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.

## தலைமை நிருபர்,

திரு. மா. சந்திரசேகரன்.

## விவாதப் பதிப்பாளர்,

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி. லிட்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற) பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 1 அங்குசாமி, திரு. ச. | .. | திருவாடானை. |
| 2 அப்துல் ரசாக், திரு. கே. எம். | | ஆலந்தூர். |
| 3 அப்பாதுரை, திரு. மு. | .. | ஒட்டப்பிடாரம் (செவ). |
| 4 அம்பிகாபதி, திரு. மு. | .. | மன்னார்குடி. |
| 5 அரங்கநாதன், திரு. எஸ். | .. | தர்மபுரி. |
| 6 அரங்கநாதன், திரு. மு. | .. | கூனூர் (செ.வ.). |
| 7 அரங்கநாயகம், திரு. செ. | .. | கோவை (மேற்கு). |
| 8 அரங்கராசன், திரு. வெ. | .. | உப்பிலியாபுரம். |
| 9 அருணாசலம், திரு. இரா. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 10 அழகர்சாமி, திரு. சோ. | .. | கோவில்பட்டி. |
| 11 அன்பழகன், திரு. க. | .. | புரசைவாக்கம். |
| 12 அன்பழகன், திரு. தி. | .. | நாட்ராம்பள்ளி. |
| 13 அன்பில் தர்மலிங்கம், திரு. | .. | லால்குடி. |
| 14 ஆண்டி அம்பலம், திரு. மெ. | | நத்தம். |
| 15 ஆண்டித் தேவர், திரு. எஸ். | | உசிலம்பட்டி. |
| 16 ஆறுமுகம், திரு. எம். | .. | அவினாசி (செ.வ.) |
| 17 சேலம் ஆறுமுகம், திரு. மு. | .. | சேலம்-2. |
| 18 ஆறுமுகம், திரு. த. .. | .. | அரியலூர். |
| 19 இரத்தினம், திரு. எம்.வி. | .. | பொள்ளாச்சி. |
| 20 இராசகுமார், திரு. மே.அ. | .. | மருங்காபுரி. |
| 21 இராசமாணிக்கம், திரு. இரெ. | | குத்தாலம். |
| 22 இராசரத்தினம், திரு. து. | .. | பூந்தமல்லி. |
| 23 இராசாம்பாள், திரு. தா. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 24 இராசாராம், திரு. க. | .. | பனமரத்துப்பட்டி. |
| 25 இராசாராமன், திரு. எஸ். | | பாபநாசம். |
| 26 இராசு, திரு. ஜே. எஸ். | .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 27 இராசேந்திரன், திரு. எஸ்.என். | | தூத்துக்குடி. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 28 இராமச்சந்திரன், திரு. எம்.ஜி. | மதுரை (மேற்கு). |
| 29 இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர். |
| 30 இராமச்சந்திரன், திரு. ச. .. | பன்ருட்டி. |
| 31 இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. | செஞ்சி. |
| 32 இராமசாமி, திரு. த. .. | இராமநாதபுரம். |
| 33 இராமசுப்பிரமணியன், திரு. என். | ஸ்ரீவைகுண்டம். |
| 34 இராமலிங்கம், திரு. ஏ. .. | காட்டுமன்னார் (செ.வ.) |
| 35 இராமலிங்கம், டாக்டர், கே.பி. | இராசிபுரம். |
| 36 இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர். |
| 37 இராஜசேகரன், திரு. வெ. .. | இராதாகிருஷ்ண நகர். |
| 38 இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி. |
| 39 இராஜேந்திரன், திரு. எஸ்.எஸ். | ஆண்டிப்பட்டி. |
| 40 இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 41 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம். |
| 42 உகம்சந்த், திரு. எஸ்.டி. .. | மதுராந்தகம். |
| 43 உச்சி, திரு. கே. .. | கூடலூர். |
| 44 உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 45 உமாநாத், திரு. ரா. .. | நாகை. |
| 46 கண்ணன், திரு. ம. .. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 47 கணபதி, திரு. கே. ஆர். .. | சிதம்பரம். |
| 48 கணேசன், திரு. இ. .. .. | இடப்பாடி. |
| 49 கணேசன், திரு. சி. .. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 50 கந்தசாமி, திரு. கா. வே. .. | கிணத்துக்கடவு. |
| 51 கந்தசாமி, திரு. பி. .. | பொங்கலூர். |
| 52 கபாலி, திரு. டி. கே. .. | மைலாப்பூர். |
| 53 கருணாநிதி, டாக்டர் மு. .. | அண்ணாநகர். |
| 54 கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| 55 கருப்பையா, திரு. இரா. .. | குளித்தலை. |
| 56 கருப்பையா, திரு. ஏ. டி. .. | வால்பாறை. |
| 57 கல்லன், திரு. கே. .. | உதகமண்டலம். |
| 58 கலிதீர்த்தான், திரு. சோ. .. | சங்கராபுரம். |
| 59 கலியமூர்த்தி, திரு. பெ. .. | மங்களூர் (செ.வ.) |
| 60 நன்னிலம் கலையரசன், திரு. அ. | நன்னிலம் (செ.வ.) |
| 61 காளிமுத்து, திரு. கா. .. | திருப்பரங்குன்றம். |
| 62 கிட்டப்பா, திரு. என். .. | மாயவரம். |
| 63 கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம். |
| 64 கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம்விளக்கு. |
| 65 கிருட்டிணமூர்த்தி, திரு. சா. .. | ஆண்டிமடம். |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. | நெல்லிக்குப்பம். |
| 67 கிருஷ்ணராஜ், திரு. ஜி. .. | சேலம்-1. |
| 68 கிருஷ்ணன், திரு. ரா. .. | வாசுதேவநல்லூர். |
| 69 குப்புசாமி, திரு. என். .. | மொரப்பூர். |
| 70 குப்புசாமி, திரு. கே. .. | ஓட்டன்சத்திரம். |
| 71 குப்புசாமி, திரு. செ. .. | வந்தவாசி (செ.வ.) |
| 72 குமரி அனந்தன், திரு. .. | திருவொற்றியூர். |
| 73 குருசாமி, திரு. ப. .. .. | அந்தியூர் (செ.வ.) |
| 74 குருசாமி என்கிற அண்ணாதாசன், திரு. எம். .. | திருவரும்பூர். |
| 75 குலசேகர், திரு. ஏ. டி. .. | சிங்காநல்லூர். |
| 76 குலசேகர பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி. |
| 77 குழந்தைவேலு, திரு. ப. .. | உடுமலைப்பேட்டை |
| 78 கேசவ ஆதித்தன், திரு. சி. | திருச்செந்தூர். |
| 79 கோபால், திரு. சி. .. .. | சோளிங்கர். |
| 80 கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம். |
| 81 கோபாலன், திரு. ஆர். டி. .. | கம்பம். |
| 82 கோமதி சீனிவாசன், திருமதி. | வலங்கை (செ.வ.) |
| 83 கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி. |
| 84 கோவைத்தம்பி, திரு. .. .. | பேரூர். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 85 | சக்கரபாணி, திரு. ஆர். .. | பொன்னேரி. |
| 86 | சங்கரய்யா, திரு. என். .. | மதுரை (கிழக்கு). |
| 87 | சட்டநாத கரையாளர், திரு. கி. | தென்காசி. |
| 88 | சண்முகம், திரு. இரா. .. | திருத்தணி. |
| 89 | சண்முகம், திரு. ஏ.சி. .. | ஆரணி. |
| 90 | சத்தியமூர்த்தி, திரு. வ. .. | கடலாடி. |
| 91 | சந்திரசேகரன், திரு. ஏ. .. | சோழவந்தான். |
| 92 | சபாபதி, திரு. சி. .. .. | அரூர் (செ.வ.). |
| 93 | சமரசம், டாக்டர் கே. .. | காவேரிப்பட்டணம். |
| 94 | சாகுல் ஹமீது, திரு. ஏ. .. | கடையநல்லூர். |
| 95 | சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம். |
| 96 | சித்தன், திரு. என்.எஸ்.வி. | திருமங்கலம். |
| 97 | சிதம்பரம், திரு. சி. த. .. | காரைக்குடி. |
| 98 | சிவசாமி, திரு. செ. .. .. | இளையான்குடி. |
| 99 | சிவஞானம், திரு. ந. .. | திருவோணம். |
| 100 | சிவப்பிரகாசம், திரு. சீ. .. | சேந்தமங்கலம் (செ. வ.) |
| 101 | சிவபெருமாள், திரு. மு. .. | ஓமலூர். |
| 102 | சிவராமன், திரு. எஸ். .. | சின்ன சேலம். |
| 103 | சின்னசாமி, திரு. எம். .. | கரூர். |
| 104 | சின்னதுரை, திரு. ஏ. .. | மேல்மலையனூர். |
| 105 | சின்னராசு, திரு. க. இரா. .. | கிருஷ்ணகிரி. |
| 106 | சின்னராஜ், திரு. எம் .. | தொண்டாமுத்தூர். |
| 107 | சுந்தரம், திரு. கே. ஆர். .. | குடியாத்தம். |
| 108 | சுந்தரம், திரு. ப. .. .. | திருப்பத்தூர். |
| 109 | சுந்தரம், திரு. மு. .. .. | ரிஷிவந்தியம். |
| 110 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். .. | முகையூர். |
| 111 | சுந்தரராஜ், திரு. நா. .. | திருமயம். |
| 112 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர். |
| 113 | சுப்பிரமணியன், தி. உ. .. | சிவகங்கை. |
| 114 | சுப்பிரமணியன், திரு. தே.எம். எஸ். | போடிநாயக்கனூர். |
| 115 | சுப்பிரமணியன், திரு. மா. .. | திருவையாறு. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 116 | சுப்பிரமணியன், திரு. வி. .. | திருநாவலூர். |
| 117 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர். |
| 118 | சுவாமிநாதன், திரு. வி. வி. .. | புவனகிரி. |
| 119 | செங்கோட்டையன், திரு. கு.அ. | கோபிச்செட்டிப்பாளையம் |
| 120 | செம்மலை, திரு. செ. .. | தாரமங்கலம். |
| 121 | செல்லமுத்து, திரு. எம். .. | திருவாரூர் (செ.வ.). |
| 122 | செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம். |
| 123 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி. |
| 124 | சேதுராமன், திரு. ஏ. எம். .. | ஆற்காடு. |
| 125 | சொக்கலிங்கம், திரு. கெ. .. | திருப்போரூர். |
| 126 | சோமசுந்தரம், திரு. எஸ்.டி... | பட்டுக்கோட்டை. |
| 127 | சோமு, திரு. என்.வி.என். .. | பூங்கா நகர். |
| 128 | சௌந்திரராசன், திரு. கே. .. | திருச்சி-2. |
| 129 | டாக்டர் செளரிராஜன், திரு. . கே. | தி. நகர். |
| 130 | தங்கமணி கவுண்டர், திரு. . கே.எம். | திண்டிவனம். |
| 131 | தங்கராசு, திரு. ஏ. .. .. | குறிஞ்சிப்பாடி. |
| 132 | தங்கவேல்ராஜ், திரு. பி.எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 133 | தங்கவேலு, திரு. பி. .. | செயங்கொண்டான். |
| 134 | தவசி, திரு. ஆர். .. .. | பரமக்குடி (செ.வ.). |
| 135 | தனபால், திரு. ப. .. .. | சங்கரி (செ.வ.). |
| 136 | தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகளத்தூர். |
| 137 | தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிப்புத்தூர். |
| 138 | தியாகராசன், திரு. ஆர். .. | விருத்தாச்சலம். |
| 139 | திருச்சி ஆர். சௌந்திரராஜன், திரு. | ஸ்ரீரங்கம். |
| 140 | திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி. |
| 141 | திருமாறன், திரு. பெ. .. | ஆலங்குடி. |
| 142 | திருமான், திரு. .. .. | ஏற்காடு (செ.வ.). |
| 143 | திருவேங்கடம், திரு. பெ.சு. .. | கலசப்பாக்கம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 144 | தீர்த்தராமன், திரு. ப. | பென்னகரம். |
| 145 | துரைசாமி, திரு. பி.எஸ். | பர்கூர். |
| 146 | துரைமுருகன், திரு. .. | இராணிப்பேட்டை. |
| 147 | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில். |
| 148 | துரைராஜ், திரு. பி. | சங்கரநாயினர் கோவில் (செ.வ.). |
| 149 | தேவராஜ், திரு. வி.எம். | வேலூர். |
| 150 | நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 151 | நரசிம்மன், திரு. பூ.மு. | பள்ளிப்பட்டு. |
| 152 | நல்லப்பன், திரு. தி.கா. | பெருந்துறை. |
| 153 | நவநீதகிருஷ்ணபாண்டியன், திரு. | ஆலங்குளம். |
| 154 | நாச்சிமுத்து, திரு. கே.பி. | மேட்டூர். |
| 155 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை. |
| 156 | நாராயணன், திரு. பி.ஜி. | பவானி. |
| 157 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி. |
| 158 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய). |
| 159 | பக்கீர் முகமது, திரு. இ.எஸ். எம். | கும்பகோணம். |
| 160 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர். |
| 161 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம். |
| 162 | பரமசிவகவுண்டர், திரு. பி. என். | பல்லாடம். |
| 163 | பலராமன், திரு. இல. | போளூர். |
| 164 | பழனிசாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம். |
| 165 | பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர். |
| 166 | பழனியப்பன், திரு. கு.ப. | விழுப்புரம். |
| 167 | பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.). |
| 168 | பாண்டியன், திரு. பி.எச். | சேரன்மாதேவி. |
| 169 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர். |
| 170 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு. |
| 171 | பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.). |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 172 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி. |
| 173 | பாலகிருஷ்ணன், திரு. வி. | சிவகாசி. |
| 174 | பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.). |
| 175 | வேடசந்தூர் பாலசுப்பிரமணியன், திரு. வி.பி. | வேடசந்தூர். |
| 176 | பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ.வ.). |
| 177 | பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ.). |
| 178 | பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை. |
| 179 | பிரபாகரன், திரு. ஜே.சி.டி. | வில்லிவாக்கம். |
| 180 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை. |
| 181 | பூங்காவனம், திரு. என்.ஏ. | காட்பாடி. |
| 182 | பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ. வ.). |
| 183 | பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் (செ.வ.). |
| 184 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.). |
| 185 | பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம். |
| 186 | பொன்னம்மாள், திருமதி. ஏ.எஸ். | நிலக்கோட்டை (செ. |
| 187 | பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம். |
| 188 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு. |
| 189 | மணி, திரு. டி. | விளவங்கோடு. |
| 190 | மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர். |
| 191 | மாணிக்கம், திரு. எம்.எஸ். | வேதாரண்யம். |
| 192 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.). |
| 193 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம். |
| 194 | முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி-1. |
| 195 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி. |
| 196 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு. |
| 197 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம். |
| 198 | முத்துவேல், திரு. என். | வானூர் (செ.வ.). |
| 199 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி. |
| 200 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிபூண்டி. |
| 201 | முனுசாமி, திரு. மு.ப. | பாலக்கோடு. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 202 மூர்த்தி, திரு. ஜி. .. .. | பேரணாம்பட்டு (செ. வ.) |
| 203 மொக்கையன், திரு. பி. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 204 யசோதா, திருமதி. டி. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 205 ரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம். |
| 206 ரங்கசாமி, திரு. ஆர். .. | சத்தியமங்கலம். |
| 207 ரங்கசாமி, திரு. க. .. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.). |
| 208 ரமணி, திரு. கு. .. .. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 209 ராமசாமி, திரு. எஸ். என். .. | சாத்தான்குளம். |
| 210 ராஜமாணிக்கம், திரு. எஸ். கே. | முசிறி. |
| 211 ரெத்தினராஜ், திரு. எஸ். .. | குளச்சல். |
| 212 வரதராஜன், திரு. என். .. | திண்டுக்கல். |
| 213 வால்மீகி, திரு. வி. .. .. | திருப்பத்தூர். |
| 214 விசயலட்சுமி, செல்வி. வி. .. | வீரபாண்டி. |
| 215 வின்செண்ட், திரு. மி. .. | நாகர்கோவில். |
| 216 விஜயசாரதி, திரு. எம். .. | அரக்கோணம் (செ.வ.) |
| 217 விஜயபாலன், திரு. என். .. | பூம்புகார். |
| 218 விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை. |
| 219 விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர். |
| 220 விஸ்வநாதன், திரு. கோ. .. | அணைக்கட். |
| 221 வீராசாமி, திரு. த. .. .. | ஒரத்தநாடு. |
| 222 வீரானம்பலம், திரு. க. வெ. .. | மேலூர் |
| 223 வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சி. |
| 224 வெங்கடரெட்டி, திரு. டி. .. | ஒசூர். |
| 225 வெங்கடேசன், திரு. பி.எம்... | பெரணமல்லூர். |
| 226 வெள்ளைச்சாமி, திரு. ஆ. .. | ஆத்தூர். |
| 227 வேணுகோபால், திரு. த. .. | தண்டராம்பட்டு. |
| 228 வேலப்பன், திரு. சி. வி. .. | கபிலர் மலை. |
| 229 ஜகத்ரட்சகன், திரு. எஸ். .. | உத்திரமேரூர். |
| 230 ஜான் வின்செண்ட்; திரு. மு. | நாங்குனேரி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 231 ஜெகதீசன், ஆனூர், திரு. பு. சோ. | செங்கல்பட்டு. |
| 232 ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி. |
| 233 ஹாஜா செரீப், திரு. கே.எஸ்.ஜி. | திருவல்லிக்கேணி. |
| 234 ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. | திருவட்டார். |
| 235 மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | நியமன உறுப்பினர். |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்**

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது—அமைச்சர்.
5. திரு. க. வெங்கடசாமி—வழக்கறிஞர் (பொறுப்பு.)

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

## புதன் கிழமை, 1980 ஜூலை 9.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின் ''.

தாம் சொல்ல விரும்பும் கருத்துக்களை ஒழுங்குபெறத் தொகுத்து வைத்துக்கொண்டு, இனிமையாகச் சொல்லுதல் வேண்டும். அத்தகைய வல்லமை வாய்ந்தவர் கிடைக்கப்பெற்றால், இவ்வுலகில் உள்ளோர், தாமே அவரிடம் விரைந்து சென்று அவர் இடும் கட்டளையை ஏற்று விரைந்து செயல்படுவர்.

இது திரு. அழகர்சாமி அவர்களுக்குப் பொருந்தும் என்று நினைக்கிறேன்.

## 1. வினாக்கள் - விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

திருச்சி மத்திய சிறையில் கைதிகள் உண்ணாவிரதம்.

*கு. கா. வி. எண் 9—திரு. ரா. உமாநாத், திரு. என். வரதராஜன், திரு. கு. ரமணி : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மத்திய சிறையில், சிறை அதிகாரிகளது அத்து மீறிய நடவடிக்கைகளை ஆட்சேபித்து 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 5 ஆம் நாள் முதல் இரு கைதிகள் காலவரம்பற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

<u>திரு. ரா. உமாநாத் :</u> பேரவைத் தலைவரவர்களே, 1979 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இரண்டு சாவுகள் அந்த சிறைச் சாலைக்குள்ளே நடந்ததாக ஜூடிஷியல் விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்பட்டு ரிப்போர்ட் கூட வந்திருக்கின்றது. அந்தச் சம் பவத்திற்குப் பிறகும் அங்குள்ள அதிகாரிகள் தொடர்ந்து கைதி களை சித்திரவதை செய்துகொண்டிருக்கிறார்கள். 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22 ஆம் நாள் அன்று நடந்த ஹையரிங் போது அடிபட்டவருக்கு அவருடைய கால் இன்னும் சரியாக ஆகாத நிலை இருக்கின்றது. அவரை சிகிச்சைக்காகக் காலில் கட்டுப்போடுவதற்காக அழைத்துக்கொண்டு செல்கின்றபோது, கால் ஏன் இப்படி இருக்கின்றது என்று கேட்ட ஒரே ஒரு காரணத் திற்காக அவருடைய தம்பியை சீப் வார்டரை வைத்துக் கொண்டு அந்த அதிகாரி அடித்து நொறுக்கி இருக்கின்றார். இந்த மாதிரி அதிகாரிகள் நடந்துகொள்கிறார்கள். சாதாரணமாக ஹங்கர் ஸ்ட்ரைக் என்றாலே அதிகாரிகள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். ஆகவே, நிர்ப்பந்தம் செய்து இதைக் கைவிடச் செயதிருப்பார்கள். ஆகவே, கனம் அமைச்சரவர்கள் என் போன்ற 3, 4 எம்.எல்.ஏக்களையும் அழைத்துக்கொண்டு அந்த சிறைச்சாலைக்கு நேரில் சென்று இந்தச் சம்பவம் சம்பந்தமாக விசாரிப்பதற்குத் தயாராக இருக்கிறார்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> பேரவைத் தலைவ ரவர்களே, 16-ஆம் தேதிக்குமேல் மாண்புமிகு உறுப்பினர் அவர் களுக்கு வசதியாக இருக்கின்ற ஒரு நாளில் அங்கே போகலாம். நான் ஏற்கெனவே போகலாம் என்று முடிவு செய்திருக்கிறேன். ஆகவே, அப்போது உறுப்பினர் அவர்களிடம் கூறிவிட்டு அங்குச் சென்று நேரடியாக இதைப் பார்வையிடுகிறேன்.

<u>திரு. ரா. உமாநாத் :</u> தலைவரவர்களே, அந்த இடத்திற்கு நேரடியாக என்னையும் அழைத்துக்கொண்டு போகலாம் என்று சொன்னதற்கு மிக்க நன்றி. ஆனால், ஆறுமுகத்தை அடிக்கின்ற போது அந்த ஜெயிலர் குறிப்பாக என்ன சொன்னார் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஆதாவது நீ செத்தாலும் எங்களை ஒன்றும் செய்துவிட முடியாது, எத்தனைக் கமிஷன்கள் வந்தாலும் இந்த விஜயநாராயணன் சந்திக்கத் தயாராக இருக்கின்றான், என்று கூறி இருக்கிறார். இப்படி ஒரு ஜூடிஷியல் கமிஷ னையே ஒரு அதிகாரி மதிக்காமல் பேசுகின்றார் என்ற நிலையில், இது குறித்து விசாரிப்பதற்கு முன்னதாக அந்த அதிகாரியை அங்கே இருந்து உடனடியாக டிரான்ஸ்பர் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?



<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய நிகழ்ச்சிகள் எப்போதுமே அங்கு நடக்க வில்லை என ஐ.ஜி. அவர்களிடம் இருந்து தகவல் வந்திருப்பதால் நேரடியாகச் சென்று அங்கு விசாரித்துவிட்டு பிறகு முடிவு எடுக்கலாம். இதற்காகத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர் களையும் நேரடியாக அழைத்துச் செல்கிறேன் என்று கூறி இருக் கிறேன்.

<u>திரு. என். வரதராஜன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு மே திங்கள் 6 ஆம் தேதி நடந்த சம்பவம் இது. அவர்களுடைய ரேஷன் திருடப்படுகிறது. இன்னும் சில உரிமைகள் பாதிக்கப்படுகிறது என்று கைதிகளில் சிலர் கேட்கிற போதுதான் இப்படிப்பட்ட கொடுமைகள் நடக்கின்றன. கசை யடி கொடுத்தல், தனிக் கொட்டடியில் அடைத்தல் போன்ற பெரிய தண்டனைகளை, அந்தக் கைதிகளிலேயே சிலரை காவலர் களாக உபயோகப்படுத்திக்கொண்டு வழங்கும் பழக்கம் தமிழக சிறைச்சாலைகளில் நடைமுறையில் இருக்கிறது. அதே போல திருச்சியில் கைப்புளி, கலியன் என்னும் இரு கைதிகளை மண்டை உடைபடும்படி அடித்து நிர்வாணமாக்கி, அவமானப்படுத்தி, அதற் குப் பிறகு அவர்களை திருச்சியில் இருக்கக் கூடிய ஆஸ்பத்திரியில் அனுமதித்திருக்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு மக்கள் பிரதி நிதிகளைக் கொண்ட குழுக்களை வைத்து, இப்படிப்பட்ட சிறை களை அடிக்கடி சோதனை செய்து, இதுபோன்ற நிகழ்ச்சிகளின் உண்மை நிலையை அறிய ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா ? என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற நிகழ்ச்சிப் பற்றிய தகவல்கள் எதுவும் அரசுக்கு வரவில்லை. ஆனால், மக்கள் குழுக் கள் பல, சிறைச் சாலைகளுக்கென்று ஏற்கெனவே இருக்கிறது. இன்னும் பல சிறைச்சாலைகளுக்கு போட வேண்டியிருக்கிறது. விரைவில் அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>திரு. கு. ரமணி :</u> பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி சிறையில் இருக்கிற கைதிகளுக்கு கொடுக்கப்படுகிற ரேஷன் ஏராள மாகத் திருடப்படுகிறது என்றும், அதற்கு மேலே இருக்கும் சூப்பிரண்டெண்டெண்ட்டிலிருந்து கீழே இருக்கும் ஆட்கள் வரைக் கும் உதவியாக இருந்து நடத்தப்பட்டு வருகிறது என்றும், அதை எதிர்க்கிற கைதிகளைத்தான் இப்படி அவர்களுக்குள்ளேயே சிலரைப் பயன்படுத்திக்கொண்டு அடிக்கிற வேலை நடைபெறு கிறது என்றும் செய்திகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து, அல்லது இலாகாவிலிருந்து வராவிட்டாலும் கூட வெளியிலிருந்து செய்திகள் அரசுக்கு கிடைத்திருக்கின்றதா ? அப்படி பல சிறை

[1980 ஜூலை 9

களில் நடக்கிறது என்பது உண்மை. நாங்களெல்லாம் கைதிகளாக சிறைகளில் இருக்கும்போது இப்படி நடந்திருக்கிறது. நாங்களும் எதிர்த்துப் போராடியிருக்கிறோம். அப்படிப்பட்ட நிகழ்வுகளைத் தடுப்பதற்கு எம்.எல்.ஏக்களைக் கொண்ட குழுக்களை நிரந்தரமாக அமைத்து சோதனை செய்தால் என்ன? இப்போது அமைச்சர் அவர்கள், திரு. உமாநாத் அவர்களை அழைத்துப் போவதாகச் சொன்னார்; வரவேற்கிறோம். ஆனால், நிரந்தரமாக அதற்கு ஒரு ஏற்பாடு செய்தால், அவர்களுக்கு தாங்கள் கண்காணிக்கப்படுகிறோம் என்ற ஒரு அச்சம் இருக்கும். அப்படி ஒரு ஏற்பாட்டைச் செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இது போன்ற தகவல்கள் எந்தவகையிலும் அரசுக்குக் கிடைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் இப்போது அவைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நேரடியாக விசாரிக்காமல், இரகசிய விசாரணை மூலமாக அங்கே என்ன நடைபெறுகிறது என்று கண்டுபிடித்து கடுமையான நடவடிக்கை எடுக்க உத்தரவு இடுகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, திரு. உமாநாத் அவர்கள் கூறிய குற்றச்சாட்டிலிருந்து பாதிக்கப்பட்ட கைதிகளினுடைய உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய நிலை இருக்கிறதாகத் தெரிகிறது. ஆகவே, அந்த அதிகாரிகளை மாற்ற வேண்டும் என்றும், விசாரணை செய்ய வேண்டும் என்றும் உறுப்பினர்கள் கேட்டார்கள். விசாரணை செய்கிற வரையில் அந்தக் கைதிகளினுடைய உயிருக்குப் பாதுகாப்பு ஏதாவது அரசாங்கம் கொடுத்திருக்கிறதா? அந்த அதேபோல மாணவர் தலைவர் மாசிலாமணி என்பவர் கைதியாக வேலூர் சிறையில் இருக்கிறார். அவரை நன்றாக அடித்திருக்கிறார்கள். உயிருக்கு ஆபத்து விளைகிற அளவுக்கு தாக்கப்பட்டிருக்கிறார். ஆகவே அமைச்சர் நேரடியாகச் சென்று நடத்தும் சோதனையை திருச்சி சிறைக்கு மாத்திரம் அல்லாமல், வேலூர் சிறைக்கும் அப்படி சோதனை நடத்தச் செல்வதற்கான நடவடிக்கை எடுக்க முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, வேலூர் சிறையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல் எந்த வித நிகழ்ச்சியும் நடைபெற்றதாகத் தகவல் இல்லை. ஆகவே, உறுப்பினர் அவர்கள் விளக்கமாகக் குறிப்பிட்டு எழுதி கொடுப்பார்களேயானால் அது குறித்தும் நடவடிக்கை எடுக்கப்படும்.



[1980 ஜூலை 9]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, The answer is not full. நான் ஏற்கனவே மாணவர் தலைவர் மாசிலாமணி என்னும் கைதி வேலூர் சிறையிலே உயிர் போகிற அளவுக்கு தாக்கப்பட்டிருக்கிறார் என்று சொல்லியிருக்கிறேன். As it has been widely published day before yesterday, I think the Minister will take note of what is published in the Papers.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, அது குறித்து விசாரிக்கப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, திருச்சி சிறையில் சுந்தரம் என்ற ஒரு கைதியையும் செல்வராஜ் என்கிற மற்றொரு கைதியையும் அவர்கள் இரத்தம் வாமிட் செய்யக் கூடிய அளவுக்கு அடித்து நொறுக்கி அவர்களது உடல் நிலையை மோசமாக்கியிருக்கிறார்கள். அது பற்றிய செய்தி அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா? இது போன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறாமல் தடுக்க, இதுபற்றிய ஜூடிஷியல் என்கொயரி நடத்துவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9—10]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஹேமா அவர்கள் கூறுகிற குற்றச்சாட்டுப் பற்றி அரசுக்குத் தகவல் வரவில்லை. அதைப்பற்றியும் குறிப்புகள் தருவார்களானால் விசாரிக்கிறேன்.

திரு. என்.எஸ்.வி. சித்தன்: தலைவர் அவர்களே, மாண்பு[மிகு] அமைச்சர் அவர்கள் சிறைச்சாலையில் நடைபெறுகிற இந்தக் [கொ]டுமைகள் பற்றி நேரில் பார்த்து விசாரிக்கிறேன் என்று சொன்[னா]ர்கள். அப்படி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் அவர்[களு]ம் செல்கிற நேரத்தில் எந்தவிதமான முன் அறிவிப்பும் இல்லாமல் செல்வார்களா? அறிவிப்புக் கொடுத்துவிட்டுச் சென்றால் எல்லாம் சரியாக இருக்கும். ஆகவே, சிறைச்சாலைக்குச் செல்லும்போது திடீரென்று செல்வதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தற்போது அவையில் பேசிய பேச்சுக்கள் அனைத்துப் பத்திரிகையிலும் வெளிவரும்போது இதுவே ஒரு முன் அறிவிப்பாக அமைந்துவிடும் என்று கருதுகிறேன்.

திரு. வி. எம். தேவராஜ் : வேலூர் சிறைச்சாலையில் மாணவர் தலைவர் மாசிலாமணி என்பவரை அடித்து அவர் வேலூர் மருத்துவ மனையில் இருக்கிறார். அவரைப்போய் நான் பார்த்து விட்டு வந்தேன். அது அரசாங்கத்திற்குத் தெரியவில்லை என்றால் வேடிக்கையாக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பதில் இல்லை.)

## அனந்தனாறு கால்வாய் சிமெண்ட் லைனிங் திட்டம்.

* கு. கா. வி. எண் 10—திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் ஓடுகின்ற அனந்தனாறு முழுமையும் சிமெண்ட் லைனிங் ( lining ) போடும் திட்டத்திற்கு 250 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்று சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டது என்ன நிலையில் உள்ளது ?

(ஆ) எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களிடமிருந்து வந்துள்ள இத்திட்ட அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மி. வின்சென்ட் : இத்திட்டத்தின் மூலம் எவ்வளவு ஆயிரம் ஏக்கர்கள் பயனடைகிறது? இதனால் எவ்வளவு அதிகமான அளவிற்கு உற்பத்தியாகிறது? இத்திட்டத்தின் பயன், செலவு இதன் விகிதாசாரம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : 3,600 ஏக்கர் இருபோக சாகுபடி நன்செய் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 2,300 ஏக்கர் இருபோக சாகுபடி நன்செய் நிலங்களுக்கு பாசனப் பற்றாக்குறையைப் போக்குவதும் இத்திட்டத்தின் மூலம் சாத்தியமாகிறது. இதன் மூலம் 7,280 டன் கூடுதலாக உணவு உற்பத்தி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் பயன்—செலவு விகிதாசாரம் 3.096 : 1 என்றளவில்தான் இருக்கிறது.



திரு. மி. வின்சென்ட் : அமைச்சர் அவர்களின் விளக்கம் இந்தத் திட்டம் இனிப்பான திட்டம் என்று ஊர்ஜிதம் செய்திருக்கிறது. நாகர்கோவில் விவசாயிகள் போராட்டத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள். வாதாடி வெல்லமுடியும் என்று துடிக்கும் நாகர்கோவில் விவசாயிகளுக்கு அவர்கள் வாழ்வு மலர இந்தத் திட்டத்தை அரசு கட்டாயம் எடுத்துக்கொள்ளும் என்று நம்பலாமா? எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இத்திட்டத்தின் பயன் செலவு விகிதாசாரம் இத்திட்டம் பொருளாதார ரீதியில் கட்டுபடியாகக் கூடிய திட்டமாகத் தெரிகிறது. எனவே அரசாங்கப் பரிசீலனையிலிருந்து நிச்சயமாக இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் நம்பலாம்.

திரு. துரை முருகன் : இந்தத் திட்டத்திற்கு சுமார் 250 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று பேரவையில் அறிவிக்கப்பட்டது என்று மட்டுந்தான் இருக்கிறது. எப்போது அறிவிக்கப்பட்டது? அறிவிக்கப்பட்ட பிறகு, இது காண்ட்ராக்ட்டுக்கு விடப்பட்டதா? லைனிங் வொர்க் என்றால் பிரித்துப் பிரித்து கொடுத்துவிடுவார்கள். எப்படி நடக்கிறது என்பது அமைச்சருக்குத் தெரியும். அப்படியில்லாமல் பெரிய ரிக்கக்னைஸ்ட் காண்ட்ராக்டராகப் பார்த்து முழுமையாக ஒப்படைத்து முழுமையாக நிறைவேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? இல்லை என்றால் அதிகாரிகள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு கொஞ்சங்கொஞ்சமாகப் பிரித்துக் கொடுத்து கமிஷன் வாங்கிக்கொள்வார்கள். வாங்காமலா இருக்கிறார்கள்? யார் வாங்குவார்கள்? நாட்டில் அவர்கள்தான் வாங்குவார்கள். அவர்களது ஆட்சி. பொதுப்படையாக திட்டம் நிறைவேறவேண்டும். ஆகவே ரிக்கக்னைஸ்ட் காண்ட்ராக்டரிடம் முழுமையாக ஒப்படைத்து, 'வெல் எஸ்ட்டாப்ளிஷ்ட் காண்ட்ராக்டரிடம்' இந்த காண்ட்ராக்ட் விடப்படுமா அல்லது துண்டுதுண்டாக விடப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கேள்விகள் கேட்கலாம், விளக்கங்கள் பெறலாம்; ஐயப்பாடுகளை நீக்கலாம். ஆனால், கேள்வி கேட்கும்போது குற்றச்சாட்டுகள் இருக்கக்கூடாது என்றிருக்கிறது. அதைத்தான் சொன்னார்கள். ஆளுங் கட்சியினர் கமிஷன் வாங்குகிறார்கள் என்று சொன்னது குற்றச்சாட்டு.

திரு. துரை முருகன் : நான் அப்படிச் சொல்லவில்லை. சில பேர்கள் கமிஷன் வாங்கிக் கொண்டு போய்விடுகிறார்கள். அது ஆளும் கட்சியாகவும் இருக்கலாம்; எந்தக் கட்சியாகவும் இருக்கலாம். நான் தனிப்பட்டவர்களைத் குற்றம் சாட்டவில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பொதுப்படையாகச் சொன்னால் பரவாயில்லை; குறிப்பிட்டுச் சொல்வது கூடாது என்பதுதான்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் விளக்கம் பெறவேண்டுமென்ற அடிப்படையிலே சில கேள்விகளை இங்கே கேட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் இப்போதுதான் அரசினுடைய ஆய்விலே இருக்கிறது. இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்று சென்றமுறை மாண்புமிகு நீர்ப்பாசன அமைச்சராக இருந்த திரு. குழந்தைவேலு அவர்கள் அவையிலே ஒரு உறுதியை அளித்திருக்கிறார்கள். அதே உறுதியை நானும் இங்கே நிச்சயமாக உறுதி செய்கிறேன். இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும். இந்தத் திட்டத்தின் பயன், செலவு விகிதாசாரம், பொருளாதார ரீதி எல்லாம் கட்டுப்படியாகக் கூடியதாக இருக்கிறது. எனவே, இந்தத் திட்டத்தை ஆய்வு முடிந்தவுடன், அரசு செயல்படுத்தும். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல், இந்தத் திட்டம் யாரிடம் ஒப்படைத்தால் நலமாக இருக்கும் என்பதிலே இந்த [illegible] நிச்சயமாக கவனத்தில் கொள்ளும். அவர்களுடைய பண[illegible] அனுபவங்களை இங்கே பேசுவது என்பது எங்களுக்கு எச்சரிக்கையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பழைய கால அனுபவங்கள், கசப்பான நிகழ்ச்சிகள் இந்த ஆட்சியிலே தொடராது என்ற உறுதியினைத் தருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, பழைய அனுபவங்கள் என்று சொன்னால், அதிகாரிகள் பற்றிச் சொல்கிறேன். சில நேரங்களில் அதிகாரிகள் திட்டங்களை பாழ்படுத்துகின்ற முறையில் காரியங்கள் செய்வார்கள், சிலர் சில அரசியல் வாதிகள் அவர்களை மிரட்டி காரியங்கள் செய்ய முற்படுவார்கள். அந்த அடிப்படையிலேதான் ஆக்கபூர்வமான யோசனைகளைச் சொல்கிறேன். இந்தத் திட்டம் வெல் எஸ்டாபிலிஷ்ட் கன்ட்ராக்டர்களுக்கு விடப்படுமா? இதைத் தடுத்து நிறுத்துவதற்கு தக்க நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.





மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் அனுபவ ரீதியாகச் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆளும் கட்சியில் இருந்த நாங்கள் இந்த கசப்பான அனுபவங்களைப் பார்த்துவிட்டுப் பிறகு உங்களுக்குச் சொல்கிறோம் என்று அவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் இதற்கு மிக்க நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக பழையதவறுகள் நடக்காது என்ற உறுதியினை நீங்கள் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம்தான், அந்தக் கட்சிக்காரர்கள் தான் அந்தமாதிரி என்று சொல்வது சரியல்ல. அண்ணா தி.மு.க. யார் யாரிடத்திலே இந்த மாதிரியான வேலைகளைக் கொடுத்திருக்கின்றது என்பதற்கு நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான குற்றச்சாட்டுக்களை ஆதாரபூர்வமாக முதலமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்திருக்கிறோம். ஆகவே, ஒரு கட்சிக்கு மட்டும் இது பொருந்தாது; மற்றவர்களுக்கும் இது பொருந்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : நான் பொதுப்படையாகத்தான் சொன்னேன். எந்தக் கட்சிக்காரராக இருந்தாலும் சில அதிகாரிகள்........................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். நான் நின்றால் மைக் வேலை செய்யாது. இப்போது விவாத நேரமல்ல விவாத நேரம் வரும்போது, பேசலாம்.

திரு. துரை முருகன் : நான் பொறுப்போடு தான் கேள்வி கேட்கிறேன், அவை முன்னவர் அவர்கள் சொன்னதை ஒத்துக் கொண்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒரு சின்ன திட்டம் இதிலே பெரிய விவாதம் வேண்டாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மை ஹம்பிள் சப்மிஷன் என்னவென்றால், இந்தத் திட்டம் முறையாக நிறைவேற்றப்பட வேண்டுமென்பதற்காக தன் ஆலோசனைகளைக் கேள்வி மூலமாக, அமைச்சருக்கு உதவுகின்ற முறையிலே சொன்னார்கள். அதோடு ஆளும் கட்சிக்கு உதவ வேண்டுமென்பதற்காக, அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் திரு. துரைமுருகன் அவர்கள் இந்தக் கேள்வியை அமைத்தார்கள்.

[1980 ஜூலை 9

[முற்பகல் 9-20]

ஆனால் அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற நேரத்தில்—He made a definite charge that it is past experience: Is it right? அவை முன்னவர் அவர்கள் கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது என்று சொன்னார்கள், திருத்தினார்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடிய நேரத்தில் முறையான பதில் சொல்லியிருந்தால் பிரச்சனை வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி—பதில் நேரத்திலே கேள்வி பதிலோடு நின்றுவிட்டால் பிரச்சினை வராது ஆறு ஓடுகிறது இனிமேல்தான் காண்டிராக்டுக்கு விடவேண்டும். அதை அரசியல் ஆக்க வேண்டாம். ஆற்றிலே போய் அரசியல் தேவையில்லை.

திரு. டி. மணி: சிற்றார் பட்டணம் கால்வாய்களில் சிமெண்ட் லைனிங் போடாததினால் கால்வாய்களில் விடப்படும் நீரில் பாதிக்குமேல் பாழ் அடைந்து விடுகிறது. எனவே, சிற்றார் பட்டணம்கால் கால்வாய்களுக்கும் சிமெண்ட் லைனிங் போடப்படுமா என அறிய விரும்புகிறேன். இது போன்று நெய்யார் இடது கரை கால்வாய்களுக்கும் சிமெண்ட் லைனிங் போடப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சிற்றாறு பட்டணங்கால் பற்றிய கருத்துரு அரசு கவனத்திற்கு வரவில்லை. அரசு கவனத்திற்கு வந்த பிறகு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

## நகராட்சிகளில் கழிப்பிடங்கள் அமைக்கும் திட்டம்

* கு. கா. வி. எண் 11—டாக்டர் கே. பி. இராமலிங்கம், திரு. மி. வின்செண்ட்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்பொழுது சில நகராட்சிகளில் கட்டப்பட்டுள்ளது போல (Pay and use) கழிப்பிடங்கள் கட்டும் திட்டம் எல்லா நகராட்சிகளுக்கும் விரிவு படுத்தும் திட்டம் உள்ளதா?

(ஆ) அவைகளின் பராமரிப்பு ஒப்பந்தக்காரர்கள் வசம் கொடுக்கப்படுமா அல்லது நகராட்சிகளின் நேரிடை கண்காணிப்பில் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) ஆம்.



1980 ஜூலை 9]

(ஆ) தற்பொழுது நகராட்சிகளில் இக்கட்டண கழிப்பிடங்கள் சூழ்நிலைக்கு ஏற்ப ஒப்பந்தக்காரர் மூலமோ அல்லது இலாகா மூலமோ பராமரிக்கப்படுகிறது. அந்தந்த நகராட்சிகளில் தீர்ப்புரிமைக்கு ஏற்ப (Discretion) இது பற்றி முடிவு செய்யப்படுகிறது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: கிராமங்களில் பெண்களுக்கு என்று தனியாக இதுபோன்ற கழிப்பிடங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றனவா? நகராட்சி மேற்பார்வையில் எவ்வளவு கழிப்பிடங்கள், தனியார் மேற்பார்வையில் எவ்வளவு கழிப்பிடங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. துர்நாற்றத்தைப் போக்க ஓடோனில் என்ற ரசாயனப் பொருள் வைக்கப்படுமா? பஸ்களில் வைத்திருப்பது போல் இசை கேட்பதற்கு வசதி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பெண்களுக்காக ஒவ்வொரு பஞ்சாயத்துக்களிலும் தனியாக கழிப்பிடங்கள் கட்டுவதற்கான திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு இந்த ஆண்டு எடுக்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு பஞ்சாயத்துக்களிலும், எங்கெங்கு பேருந்து நிலையங்கள் இருக்கின்றனவோ, அந்தந்தப் பேருந்து நிலையங்களுக்குப் பக்கத்தில் கழிப்பிடங்களைக் கட்டி பெண்களுக்குத் தனி வசதிகள் செய்து கொடுக்க இந்த அரசு முன் வந்திருக்கிறது. நகராட்சிகளிலே இதுவரை 46 கழிப்பிடங்கள் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதிலே பதினோரு கழிப்பிடங்கள் நகராட்சிகளின் மூலமாக பராமரிக்கப்பட்டு கட்டணம் வசூலிக்கப்பட்டிருக்கிறது. 35 கழிப்பிடங்கள் ஒப்பந்தக்காரர்கள் மூலமாகப் பராமரிக்கப்பட்டு கட்டணங்கள் வசூலிக்கப் பட்டு வருகின்றன. 1980–81-ம் ஆண்டு 38 கழிப்பிடங்கள் கட்ட வேலை நடைபெற்று வருகிறது. வருகிற ஆண்டில் அதற்காக பத்து இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இசைத் தட்டுகள் மூலம் கழிப்பிடங்களுக்குச் செல்லுகின்றவர்களுக்கெல்லாம் களிப்பூட்டுகின்ற நிகழ்ச்சியைப் பற்றிச் சொன்னார்கள். பொதுவாக கழிப்பிடங்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்ற காரணத்தால்தான் 'பே அண்டு யூஸ்' என்ற முறையில் கட்டப்பட்டு வருகின்றன. நிதி நிலைமைக்கேற்ப ஆங்காங்கு இசைத் தட்டுகள் வைப்பது அல்லது ஆடல் பாடல்கள் வைப்பது என்பது அவரவர்கள் வசதியைப் பொருத்தது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மி. வின்செண்ட்: இப்படிக் கட்டும் கழிப்பிடங்கள் பொதுமக்கள் வசதி கருதிக் கட்டப்படுகின்றன. நகராட்சி வருமானத்திலிருந்து கட்டப்படுகின்றன. வசூலிக்கப்படும் கட்டணம் நகராட்சி பெறுகிற அடிப்படையில் ஒரே சீராக்கப்படுமா?

[1980 ஜூலை 9

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே பொது மக்களுடைய வசதிக்காகத்தான் அவை கட்டப்படுகின்றன. நகராட்சிகளுடைய வருமானத்திற்காக அல்ல. 'பே அன்ட் யூஸ்' என்ற முறையிலே சுத்தமாக கழிப்பிடங்களை வைத்திருக்கின்ற ஏற்பாடுகளைச் செய்து இருக்கிறோம். அந்த வகையிலேதான் சிறிய கட்டணத்தை வசூலித்து அதன் மூலம் பராமரித்து வருகிறோம். அதிகமான வருமானம் வரவேண்டுமென்று நினைத்திருந்தால் அதிகமான கட்டணம் வசூலிக்கக் கூடிய நிலைமை இருக்கும். ஆனால் அப்படிப்பட்ட நிலைமை இங்கே இல்லை.

திரு. ப. பொன்னுரங்கம் : சென்னை நகரத்திலே உள்ள கழிப்பிடங்கள் இன்றையதினம் முறையற்ற நிலைமையிலே மக்களுக்கு சுகாதார கேடு பயக்கின்ற நிலைமையிலே இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? அப்படியானால் அதைத் தடுப்பதற்கு தக்க நடவடிக்கைகளை எடுக்க முன்வருவார்களா ? இரண்டாவதாக ஆளுந்தரப்பிலேயிருந்து ஒரு உறுப்பினர் அங்கே இசை கேட்கிற அளவுக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று யோசனை தெரிவித்தார். என்னுடைய யோசனை அங்கே டி.வி. வைக்க ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கழிப்பிடங்களில், இசை, டி.வி. இவற்றை அமைப்பது பற்றி கேட்கப்பட்ட வினாக்களுக்கு அமைச்சர்கள் பதில் சொல்லத் தேவையில்லை. கழிப்பிடங்கள் சுத்தமாக வைத்துக் கொள்ளப் பெறவேண்டும். அவ்வளவுதான்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, பேருந்து நிலையங்களிலே இருக்கிற கழிப்பிடங்களிலே 5 அல்லது 10 பைசா கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஏழை எளிய மக்கள் 5 அல்லது பத்து காசு கொடுப்பதற்கு வசதியில்லாத நிலையிலே ஏழை எளியவர்களாக இருக்கின்ற காரணத்தினால்—அரசாங்கம் நகராட்சிகள் வேறு வகையிலே வரியைப் போட்டு வருமானத்தை பெருக்கிக் கொள்ளலாம் என்ற முறையிலே,—கழிப்பிடங்களை சுகாதாரமாக வைத்துக் கொண்டு அதே நேரத்திலே 'பே அன்ட் யூஸ்' இல்லாத முறையிலே 'பே பண்ணாமலே அவைகளைப் பயன்படுத்துகின்ற முறையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று அனைத்து நகராட்சிகளுக்கும் அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கழிப்பிடங்களைப் பொறுத்த வரையில் 'பே அன்ட் யூஸ்' கழிப்பிடங்கள் தவிர, சாதாரண கழிப்பிடங்களும் இருக்கின்றன. 'பே அன்ட் யூஸ்' கழிப்பிடங்கள் வைத்திருப்பதன் முக்கியமான காரணமே,



1980 ஜூலை 9]

அவைகள் சுத்தமாக இருக்க வேண்டும் என்பதுதான். கழிப்பிடங்களுக்குச் செல்கின்றவர்கள் மோசமான நிலைமையை ஏற்படுத்தாமல் வேலையை முடித்து விட்டு திரும்ப வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் அந்த முறை வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல் ஏழை எளியவர்களுக்காக, சாதாரண கழிப்பிடங்களும் இருக்கின்றன. காசு கொடுக்காமல் அவைகள் பயன்படுத்துகிற நிலைமையும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்தவரையில் கழிப்பிடங்களுக்கு வசூல் செய்வதில் ஏலம் விடுவதன் மூலமாக முதலிலே எவ்வளவு வசூல் செய்யப்பட்டது ? இந்த ஆண்டிலே அப்படி ஏலம் விட்டதிலே எவ்வளவு தொகை வந்தது என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மூலக்கேள்வி நகராட்சிகள் மூலமாகக் கட்டப்படுகின்ற கழிப்பிடங்களைப் பற்றியதுதான். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் மாநகராட்சியைப் பற்றிக் கேட்கிறார், தனிக் கேள்வி கேட்க வேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, 'பே அன்ட் யூஸ்' கழிப்பிடங்கள் என்று இருந்தாலும் கூட இனாமாகப் பயன்படுத்த முடியாத நிலைமையில், மூத்திரம் பெய்ய வேண்டுமென்றால் கூட 10 காசு கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. விழுப்புரம் பஸ் ஸ்டாண்டிலே பார்த்தால் அப்படிப்பட்ட வசதிகள் இல்லாத நிலைமையிலே தெருக்களிலே போகக்கூடிய நிலைமை இருப்பதால் அசிங்கப்படுத்தக் கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, காசு இல்லாமல் போகக்கூடிய நிலைமையை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தெருக்களிலே அசுத்தம் செய்யக் கூடாது என்பதற்காகத்தான் தனிக் கழிப்பிடங்கள் கட்டப்படுகின்றன. விழுப்புரத்தில் மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய நிலைமை இருக்குமானால் அது கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, அநேக முனிசிபாலிட்டிகளில் பஸ் நிலையத்தில் வருகின்ற பஸ்களுக்கு கட்டணம் வாங்கி லாபம் சம்பாதிக்கிற நிலைமை இருந்தும் பஸ் பயணிகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்காமல் அவர்கள் பின் தங்கியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் வேகமாகச் செயலாற்றக் கூடியவர். ஆகவே அவர் இங்கிருந்து

கன்னியாகுமரி வரையில் ஸ்டேட் பஸ்ஸில் சென்று அங்கங்கே உள்ள கழிப்பிடங்களை தொலைவிலே இருந்து பார்த்தால் போதும். ... செய்வார்களா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல் தான் நான் சமீபத்திலே கூட கோவை நகராட்சியிலே உள்ள கழிப்பிடங்களுக்கு சென்று, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல தொலைவிலே இருந்தல்ல, நேரிலே பக்கத்திலேயே போய் பார்த்து வந்தேன்.

[முற்பகல் 9-30]

தூரத்தில் மட்டும் அல்ல ; பக்கத்திலேயே பார்த்து, உடனடியாக யார் யார், எந்தெந்த அதிகாரிகள் தவறு செய்கிறார்களோ, சுத்தம் செய்யவில்லையோ அவர்களை சஸ்பெண்ட்கூட செய்திருக்கிறோம். ஆகவே அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, எவ்வளவு தூரம் சுத்தமாக வைத்து, அதன் மூலம் சுகாதாரத்தின் அடிப்படையிலே நல்ல கழிப்பிடங்கள் கட்டி அவைகளைச் செய்ய நாங்கள் முன் வந்திருக்கிறோம்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கழிப்பிடங்களின் முன்பாக பீடி, சிகரெட் வைக்க ஆவன செய்யப்படுமா ? நகராட்சிகளிலே உள்ள பஸ் நிலையங்களில் சில நகராட்சிகளில் ரசீது கொடுத்தும், சில நகராட்சிகளில் ரசீது இல்லாமலும் வசூல் செய்கிறார்கள். எல்லா நகராட்சிகளிலும் ரசீது போடுவதற்கு ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, Sm king is injurious to health ஆகவே, புகை பிடிக்கின்ற அந்தப் பழக்கத்தைத் தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், அவர்களுக்கு வேண்டியவர்களும் கைக் கொள்ள வேண்டாமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். பாக்கியிருக்கக்கூடிய வசதிகள் செய்து தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெறறது என்பதைக் குறிக்கும்].



## 2. உரிமைப் பிரச்சினைகள்.

### அ. பாசனத்துறை அமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை. பேரவையின் 246-வது விதியின் கீழ் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பாசனத் துறை அமைச்சர் அவர்கள் மீது அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினைக்கான அறிவிப்பு ஒன்றைக் கொடுத்துள்ளார். இது எப்படி அவை உரிமை மீறியதாகும் என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இதே பொருள் குறித்துத் திரு. துரை முருகன் அவர்களும் ஒரு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள்.

*Thiru V. Krishnamoorthi : Sir, Under Rule 246 of the Assembly Rules I raise a motion of privilege against the Hon. Minister Mr. Raja Mohammed for having made a false statement in the House on 5th July 1980 while answering a question on sharing of river water between Kerala and Tamil Nadu stating........

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் ஆங்கிலத்தில் சொல்கிறார்களே, தமிழிலே சொல்லக் கூடாதா ?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, நான் நோட்டீசைப் படித்து விட்டுப் பிறகு தமிழில் பதில் சொல்கிறேன். திரு. உமாநாத் அவர்களுக்குத் தமிழிலே இருக்கின்ற ஆர்வத்தை நான் பாராட்டுகிறேன். அடிக்கடி அவர்கள்தான் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவார்கள். நான் நோட்டீசைப் படித்து விடுகிறேன். (குறுக்கீடு) தமிழிலே பேசுவதால்தான் நீங்கள் இங்கே இருக்கிறீர்கள். தமிழிலே பேச முடியவில்லை என்றால் நீங்கள் இங்கே வர முடியாது.

திரு. ரா. உமாநாத் : காங்கிரஸ் தலைவரவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நோட்டீசை இங்கே படிக்கிறேன். பிறகு தமிழிலே பேசுகிறேன்.

while answering a question on sharing of river water between Kerala and Tamil Nadu stating that official level discussion had taken place between the two Governments."

பேரவைத் தலைவரவர்களே, 1980-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 5-ம் நாளன்று கேரளாவிற்கும், தமிழ்நாட்டிற்கும் நதி நீர்ப் பங்கீடு குறித்து எழுந்த கேள்விக்கு அன்றைக்குப் பதில்

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1980 ஜூலை 9

அளிக்கையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு உப கேள்விக்கு. திரு. ஈஸ்வரமூர்த்தி கேட்ட உப கேள்விக்குப் பதில் அளிக்கையி இவ்வாறு சொன்னார்கள். திரு. ஈஸ்வரமூர்த்தி கேட்ட கேள் '' இது சம்பந்தமாக கேரள அரசுடன் ஏதாவது பேச்சு வார்த் நடத்தியிருக்கிறார்களா ? இல்லை என்றால் பேச்சு வார்த் நடத்த முயற்சி செய்வார்களா?'' இது மாண்புமிகு உறுப்பி திரு. ஈஸ்வரமூர்த்தி எழுப்பிய வினா. அதற்கு அமைச்சரவர்கள் பதில் சொல்லும் நேரத்தில், இந்தப் பேச்சு வார்த்தை பிர ராக மொரார்ஜி தேசாய் இருந்த சமயத்தில் நடந்திருக்கிற என்று கூறிவிட்டு, இந்த அவையிலே கூறினார்கள். '' இப்போ புதிதாக ஆட்சிக்கு வந்த பிறகு கூட இரண்டு முறை அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு வார்த்தை நடந்திருக்கிறது. வருகின்ற 10-ந் தேதி கூட கேரள அதிகாரிகளுக்கும் நம்முடைய அதிகாரி களுக்கும் இடையே முதல் கட்டப் பேச்சு நடக்க இருக்கிறது'' என்று அவர்கள் அழுத்தந்திருத்தமாக, தமிழ்நாட்டின் அதி காரிகளுக்கும், கேரளாவின் அதிகாரிகளுக்கும் நதி நீர்ப் பங்கீடு குறித்து இரண்டு முறை, ஆட்சிக்கு வந்த பிறகு கூட இரண்டு முறைகள் அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு வார்த்தை நடந்திருக்கிறது என்று வலியுறுத்திப் பதில் கூறியிருக்கிறார்கள். எனக்குக் கிடைத்த தகவல், இந்த அதிகாரிகள் மட்டத்திலே பேச்சு வார்த்தைகள் ஒன்றுகூட நடக்கவில்லை என்பதுதான். அப்படி நடக்காத அதிகாரிகள் மட்ட கூட்ட நிகழ்ச்சியை இந்த அவையில் நடந்ததைப் போல—அதுவும் ஒரு முறை அல்ல இரண்டு முறை நடந்ததைப் போல அமைச்சரவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அப்படி நடக்காத கூட்டம் நடந்ததாகச் சொல்லியிருப்பார்களேயானால்,—சொல்லியிருப்பதாக எனக்குத் தகவல் இருக்கிறது.

அப்படி நடக்காத ஒரு சம்பவத்தை நடந்ததாக இந்த அவை யிலே சொல்வது உரிமை மீறிய செயலாகும் என்று நான் தங் களுக்குப் பணிந்து கூறிக் கொள்கிறேன். அப்படி நடைபெற் றிருந்தால், எந்த, எந்த இடங்களிலே நடைபெற்றது, எந்த், எந்த அதிகாரிகள் கலந்து கொண்டார்கள், எத்தனை மணிக்கு நடைபெற்றது என்ற விவரங்கள் இருக்கும். அவைகளினுடைய ப்ரொசீடிங்ஸ் இருக்க வேண்டும். ஆனால், எனக்குக் கிடைத்த ஆதாரம் அப்பேர்ப்பட்ட அதிகாரிகள் மட்ட கூட்டம் ஒன்று கூட நடைபெறவில்லை, என்பது. 10-ம் தேதி நடைபெற இருக்கக்கூடிய கூட்டம் வேறு. ஆனால், இரண்டு அதிகாரிகள் மட்டத்தில் கூட்டங்கள்—டிஸ்கஷன்—நடந்திருப்பதாகக் கூறுவது வேறு. ஆகையினால், நடக்காத அதிகாரிகள் கூட்டத்தை, இரண்டு முறை நடந்ததாக, இந்த அவையிலே கூறியது உரிமை மீறிய செயலாகும் என்று நான் கூறுகிறேன். அதற்கு ஆதார மாக, எனக்கு வந்துள்ள ஆதாரத்திற்கு அப்பாற்பட்டு இந்து பத்திரிகையில் வந்துள்ள செய்தியைக் குறிப்பிடுகிறேன். அப் பத்திரிகை நேற்றைய தினம் ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது,



1980 ஜூலை 9] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

கேரளா மாநிலத்திலே, இந்தத் துறையைச் சேர்ந்த திரு. பால கிருஷ்ணன் பிள்ளை என்ற அமைச்சரவர்கள் சொன்னதாக,

Kerala not aware of river talks move

என்கிற ' காப்ஷனி 'லே, தலைப்பின் கீழே, மதிப்பிற்குரிய இந்து பத்திரிகையிலே செய்திகள் வந்திருக்கின்றன. அப்பேர்ப் பட்ட அதிகாரிகள் மட்டத்திலே நடைபெற்ற பேச்சினை இல்லை யென்று சொல்லக் கூடிய அளவிற்கு, அங்கே சட்டமன்றத்திலே அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகையினால், நடை பெறாத ஒரு அதிகாரிகள் மட்ட கூட்டத்தை நடைபெற்றதாக, அதுவும் இரண்டு முறை நடைபெற்றதாக, இந்த மன்றத்திலே கூறியது அவை உரிமை மீறிய செயலாகும் என்று கூறி, இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்று தங்களைப் பணிந்து நான் கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. துரை முருகன் : தலைவரவர்களே, 1980-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 5-ம் நாளன்று நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் மேற்கு நோக்கி ஓடும் ஆறுகளைக் கிழக்கு நோக்கித் திருப்பி விடும் பிரச்சினை குறித்து சட்டமன்றத்தில் கேட்கப் பட்ட வினாக்களுக்கு பதில் உரைத்தார். 8 நதிகள் மேற்கு நோக்கி ஓடிக் கொண்டிருக்கின்றன. 1,500 டி.எம்.சி. நீர் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளின் மூலம் கடலில் சென்று விரயம் ஆகிறது. அந்த 1,500 டி.எம்.சி. யில் 82 டி.எம்.சி.தான் நாம் கேட்கிறோம். இதனை கிழக்கு நோக்கி திசை திருப்புவதன் மூலம் சுமார் 6,000 ஏக்கர் நிலங்கள் பயன் பெறும். மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கோவை ஆகிய மாவட்டங் களின் வறட்சி இதனால் போக்கப்படும். ஆதலால் மேற்கு. நோக்கி ஓடிக் கொண்டிருக்கும் ஆறுகளைக் கிழக்கு நோக்கித் திருப்பி விட வேண்டும் என்ற முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டு இருக்கிறது என்ற தகவலை அமைச்சர் பதிலின் பொழுது வெளி யிட்டார்.

இதை ஒட்டி திரு. ஈசுவரமூர்த்தி, கேரள அரசுடன் இது சம்பந்தமாக ஏதாவது பேச்சு வார்த்தை நடத்தி இருக்கிறீர்களா இல்லாவிட்டால், முயற்சி செய்வீர்களா என்ற துணைக் கேள் வியை அமைச்சரிடம் கேட்டார்.

அதற்குப் பதில் உரைத்த மாண்புமிகு அமைச்சரவர்கள் அ.தி.மு.க. 1977-ம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ம் நாள் (ஆட்சிக்கு) வந்த பிறகு பல்வேறு கட்டங்களில் இது குறித்து அரசு பேச்சு வார்த்தை நடத்தி இருக்கிறது. முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய் தலைமையில் கூட நம்முடைய முதலமைச்சர் இது குறித்து பேசி இருக்கிறார். இப்பொழுது புதிதாக ஆட்சிக்கு வந்தபிறகு கூட இரண்டு முறை அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு வார்த்தை நடந்து இருக்கிறது. வருகின்ற 10-ம் தேதி கூட

[திரு. துரை முருகன்] [1980 ஜூலை 9

கேரள அதிகாரிகட்கும் நமக்கும் இடையே முதல் கட்ட பேச்சு வார்த்தை நடைபெற இருக்கிறது என்று குறிப்பிட்டார். இது அவைக் குறிப்பிலே இடம் பெற்றிருக்கிறது.

ஆனால், கேரள சட்டமன்றத்தில் நதிநீர் சம்பந்தமான துறையை நிர்வகிக்கும் மின்சாரத் துறை அமைச்சர் திரு. பாலகிருஷ்ண பிள்ளை அவர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவையில் மாண்புமிகு அமைச்சர் இராஜா முகமது அவர்கள் மேற்கு திசை நோக்கிப் பாயும் நதிகளைக் கிழக்கு நோக்கித் திருப்பும் பிரச்சினை சம்பந்தமாக புதியதாக ஆட்சிக்கு வந்த பிறகு, இரண்டு முறை அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு வார்த்தை நடந்து இருக்கிறது என்பதனை மறுத்து இருக்கிறார். மேற்கு நோக்கிப் பாயும் நதிகளை கிழக்கு நோக்கித் திருப்பும் பிரச்சினை சம்பந்தமாக கேரள அரசை யாரும் அணுகவில்லை. இந்தப் பிரச்சினை குறித்து எங்களுக்குத் தெரியாது. கேரள அரசு அதிகாரிகளுக்கு நதி நீரை திசை திருப்பி விடும் பிரச்சினை சம்பந்தமாக........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> கேரள சட்டமன்ற ப்ரசீடிங்ஸை முழுவதும் படிக்காதீர்கள். இந்தச் சட்டசபை நடக்காது. சொல்ல வேண்டியதைச் சுருக்கமாகச் சொல்லுங்கள். திரு. பாலகிருஷ்ண பிள்ளை பேச்சைப் படித்துக் கொண்டிருந்தால் எப்படி ? உரிமை மீறல் எப்படி என்று மட்டும் சொன்னால் போதும்.

<u>திரு. துரை முருகன் :</u> பிரச்சினை சம்பந்தமாக பேச்சு வார்த்தை நடத்துவதற்கு கேரள அரசு எந்த அனுமதியும் தரவில்லை. ஒரு மாநிலத்தின் ஆற்றை இன்னொரு மாநிலத்திற்கு திசை திருப்பி விடும் கொள்கையை நாங்கள் ஒப்புக்கொள்ள வில்லை. உண்மைக்கு மாறாக, சபையை திசை திருப்பும் முயற்சியில் உள் நோக்கத்தோடு பேசியிருக்கிறார் அமைச்சர்.

ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து அரசிடம் இருந்து தகவல் பெறுவது மாமன்ற உறுப்பினர்களின் உரிமையாகும். இந்த மாமன்றத்தில் தவறான தகவலை அமைச்சர் தந்து இந்த அவையை வெளிச்சத்திற்குப் பதிலாக இருட்டில் ஆழ்த்தியிருக்கிறார். அவமதிப்பும் செய்திருக்கிறார். அத்துடன் இது சபை உரிமையை மீறிய செயலாகவும் இருக்கிறது. எனவே, இதை சபையின் உரிமைக் குழுவுக்கு விட வேண்டும். இது அவை உரிமை மீறிய செயலாகும் என்று நான் சுட்டிக் காட்ட விழைகிறேன்.



1980 ஜூலை 9]

[முற்பகல் 9—40]

<u>*மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு நோக்கிப் பாயும் நதிகளை கிழக்கு நோக்கித் திருப்பிவிட்டு தமிழகத்தின் வறண்ட பகுதிகளுக்குச் செழுமை சேர்க்க வேண்டும் என்ற முயற்சியில் அரசு ஈடுபட்டிருப்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் பல துணைக் கேள்விகளைக் கேட்டார்கள். அதிலே ஒரு பகுதி, புதிதாக நாங்கள் ஆட்சிக்கு இப்போது வந்ததற்குப் பிறகு 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 9 ஆம் தேதி பதவி ஏற்பு நடந்ததற்குப் பிறகு இரண்டு கட்டத்திலே இது குறித்து பேச்சுவார்த்தைகள் நடந்தது என்று நான் இந்த அவையிலே குறிப்பிட்டிருக்கிறேன். அவைக் குறிப்பிலேயும் இருக்கின்றது. திரும்பவும் அதை நான் உறுதி செய்கிறேன். எனவே, இந்த அவைக்கு நான் தெரிவித்தது தவறான தகவல் அல்ல. இதிலே நீங்கள் கவனிக்க வேண்டிய ஒன்றை நான் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் உபரி நீரை வைத்திருக்கக் கூடியவர்கள் ; தரவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். நாம் பெற வேண்டிய நிலையில் இருக்கிறோம். வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியாமல் நடக்கக் கூடிய நன்கொடைக் காரியம் அல்ல இது. அது இடது கைக்கும் தெரிய வேண்டும். இடது சாரி அணி ஆட்சியிலே இருப்பதால் அவர்களுக்கும் தெரிந்திருக்க முடியும். ஆனாலும் கூட என்ன அரசியல் நிர்பந்தத்திலே அவர்கள் இதை மறுத்து இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஜூன் மாதமே சென்ட்ரல் வாட்டர் கமிஷனுடைய முயற்சியின் பேரில் அதிகாரிகள் அங்கே கலந்து முதலாவது கட்ட பேச்சுவார்த்தையை, அகில இந்திய அளவிலே கிடைக்கக்கூடிய உபரி தண்ணீரைப் பங்கிடுவது பற்றிப் பேசி இரண்டாவது நாள், ஒரு நாள் முழுவதும் மேற்கு நோக்கி பாயும், நதிகளைப் பற்றி அவர்கள் பேசி, அதற்குப் பிறகு முடிவு எடுத்திருக்கிறார்கள். அதையும் நான் தெரிவித்தேன். மத்திய அரசு உபரி நீரைப் பங்கிடுவதற்கு அவர்களே ஒரு கமிட்டி அமைத்து அதிலே நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். அது பாராட்டக்கூடிய விஷயம் என்று நான் தெரிவித்து இருக்கிறேன். இதுவும் பத்திரிகையிலே வந்திருக்கிறது. எனவே, இந்த அவையிலே தவறான தகவலைத் தரவில்லை என்று நான் சொல்லிக் கொள்ளுகிறேன். இதற்குமேல் புள்ளி விவரங்களைக் கொடுத்து, அங்கே பேசிய அமைச்சர் கருத்தை மறுத்து, அல்லது விரோதமான கருத்தை சொல்வது நம்முடைய நலனுக்கு உகந்தது அல்ல என்ற காரணத்தால் அன்றைக்குப் பல்வேறு கேள்விகளைக் கேட்ட பொழுதும் கூடச் சொன்னேன், தயவு செய்து இதற்குள் ஆழமாகப் போக வேண்டாம். இது பேச்சுவார்த்தை மூலமாக. நல்லெண்ணத்தின் அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை என்று மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் பதில் சொல்லி இருக்கிறேன். டெக்னிக்கலாக அவர்கள் அதை மறுத்திருக்கிறார்கள். அதிலே முதலிலே கூட்டப்

[திரு. கே. இராஜா முகமது] [1980 ஜூலை 9

பட்டது அனைத்து இந்திய அளவிலே நதிநீர்ப் பங்கீடுபற்றிக் கூட்
டப்பட்டது. அதிலே இந்த மேற்கு நோக்கிப் பாயும் நதிகளைப்
பற்றி எதுவுமே பேசாததைப்போல அவர்கள் அங்கே உள்ள
சூழ்நிலைக்குத் தக்கபடி பேசி இருக்கிறார்களே தவிர, ஒரு நாள்
முழுவதும் மேற்கு நோக்கிப் பாயும் நதிகளைப் பற்றி அங்கே
நம்முடைய அதிகாரிகள் பேசி இருக்கிறார்கள். அதற்குப் பிறகு
அவர்கள் ஒரு முடிவை மேற்கொண்டு இருக்கிறார்கள். அதை
யும் மாண்புமிகு பாலகிருஷ்ணப்பிள்ளை அவர்கள் பத்திரிகையிலே
தெரிவித்திருக்கிறார்கள். ஒரு வேளை அதிகாரிகள் கேரள அதி
காரிகளோடு பேசி இருக்கலாம்.

"Kerala officia's have been probed"

பத்திரிகையிலேயும் கொடுத்திருக்கிறார்கள். அதெல்லாம், ஒரு வேளை நடந்திருக்கலாம், போகலாம், வந்திருக்கலாம் என்று சொல்வதை எல்லாம் நாம் எடுத்துக்கொண்டு இந்தப் பிரச்சினையைத் தயவு செய்து பெரியதாக ஆக்கவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். நல்லெண்ணத்தின் அடிப்படையில் As on optimistic on loud thinking என்று கூட நாம் எடுத்துக் கொள்ளலாம். ஆனால், சொன்னது உண்மை என்பதை நான் திரும்பவும் சொல்லுகிறேன். எனவே, நான் அவைக்குத் தவறான தகவலைத் தராத காரணத்தாலே இதிலே உரிமை மீறல் எதுவும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை மிகவும் முக்கியமான பிரச்சினை என்பதாலும், இரு மாநிலங்களுக்கு இடையேயுள்ள உறவின் அடிப்படையிலே அமையவேண்டியது என்ற காரணத்தினாலே சில விவரங்களைத் தருவது என் கடமை என்று கருதுகிறேன். தமிழகத்தைப் பொறுத்த வரையில் கேரளத்திலே உற்பத்தியாகி மேற்கு நோக்கி ஓடுகின்ற ஆறுகளில் உபரி தண்ணீர் ஓடுகிறது என்று நாம் கேட்கிறோம். கேரள மாநிலத்தைப் பொறுத்த வரையில், எங்களுடைய தேவைக்குப் போதுமான அளவுக்குத்தான் தண்ணீர் இருக்கிறது. உபரி நீர் இல்லை என்கிற நிலையை அவர்கள் எடுத்துச் சொல்கிறார்கள்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அவர்கள் இருட்டுக்குப் பதில் வெளிச்சம் தேவை என்று சொன்னார்கள் அதற்காகத்தான்....

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மின்சாரத்துறை அமைச்சர் நல்ல விளக்கம் தருவார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.



1980 ஜூலை 9]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் முடித்துவிடுகிறேன். உங்களுக்குத் தேவையில்லை என்றால் நான் விட்டுவிடுகிறேன். எனக்கு ஒன்றும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நம்முடைய ஸ்டேட் இன்டரஸ்ட்டிலே சொல்லுகிறேன்.

*திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு திரு. இராஜா முகமது அவர்கள் பதில் சொல்வதில் திறமை மிக்கவர். அவர் சொல்லியதில், திறமை குறைவாகச் சொல்லியிருந்தால், இன்னொரு அமைச்சர் பதில் சொல்லலாம். அவருக்குத் திறமை உண்டு. ஆகவே, அவருக்குப் பதிலாக மற்றொரு அமைச்சர் பதில் சொல்லி முலாம் பூச வேண்டிய தேவையில்லை. நாங்கள் சொல்வது என்னவென்றால், இங்கே ஒரு உரிமை மீறல் பிரச்னையை நானும், திரு. துரைமுருகனும் எழுப்பியிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் திரு. இராஜாமுகமது அவர்கள் இரண்டு கட்டத்திலே அதிகாரிகள் மட்டத்திலே கூட்டங்கள் நடைபெற்று இருக்கின்றன என்று மீண்டும் வற்புறுத்தி பதில் சொல்லி இருக்கிறார். இங்கே இருக்கக்கூடிய பிரச்னை என்ன என்றால் 10 ஆம் தேதி கூட கூட்டம் நடைபெற இருக்கிறது என்று சொன்னார்கள். இது பிட்வீன் ஸ்டேட்ஸ்—கேரளா அரசாங்கத்திற்கும், தமிழ் நாட்டு அரசாங்கத்திற்கும் இடையே நடைபெற இருக்கிற பை-பார்ட்டி அபீசியல் லெவல் டிஸ்கஷன். தமிழ் நாட்டு அதிகாரிகளுக்கும், கேரளா அதிகாரிகளுக்கும் இடையே நடக்கிற டிஸ்கஷன். ஆனால், அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது ஆல் இந்திய லெவலில் நடைபெற்ற கூட்டம். நாங்கள் தெரிந்து கொள்ள விரும்புவது—இரண்டு மாநில அதிகாரிகளுக்கு இடையே இரண்டு முறை பேச்சு வார்த்தை நடைபெற்றதாக அமைச்சர் கூறினார்களே, அது எந்த இடத்தில் கூட்டப்பட்டது. அந்தக் கூட்டங்களில் யார் யார் கலந்து கொண்டார்கள், அதனுடைய மினிட்ஸ் இருக்கிறதா, ப்ரொசீடிங்ஸ் இருக்கிறதா, அப்படி ப்ரோசீடிங்ஸ் இருந்தால்—தாங்கள் இன்றைக்குக்கூட முடிவு சொல்ல வேண்டியது இல்லை. நீங்களே ப்ரோசீடிங்சை வரவழைத்துப் பார்த்து, இரண்டு கட்டத்தில் அதிகாரிகள் மட்டத்தில் கூட்டம் நடந்து இருக்குமானால், இதை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை.

ஆனால், அகில இந்திய அளவிலே நடைபெற்ற கூட்டத்திலே கேரளா, கோவா, மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் இருந்து வந்தவர்கள் கலந்து கொண்டு பேசியிருக்கலாம். அது "டிஸ்கஷன் ஆன் ஆல் இந்தியா பேசிஸ்" நாங்கள் குறிப்பாகத் தெரிந்து கொள்ள விரும்புவது, இங்கே சொல்லப்பட்டதுபோல், கேரளா அதிகாரிகள் தமிழ் நாட்டிற்கு வந்தோ, அல்லது தமிழ் நாட்டு அதிகாரிகள் கேரளாவிற்குச் சென்றோ இரண்டு முறை அதிகாரிகள் மட்டத்தில் பேசியிருக்கிறார்களா ? இந்தப்பிரச்னை குறித்துப் பேசியிருக்கிறார்களா? எந்த இடத்தில்

சென்று பேசினார்கள் ? திருவனந்தபுரம் சென்று பேசினார்களா ? மைசூர் சென்று பேசினார்களா ? வேறு எந்த இடத்திலாவது சந்தித்துப் பேசினார்களா ? எந்த இடத்தில் பேசினார்கள், அது குறித்த ப்ரொசீடிங்க்ஸ், கலந்து கொண்ட அதிகாரிகள் யார், யார், அவர்கள் கையெழுத்துப் போட்டு இருக்கிறார்களா, என்பதை ஸ்பீக்கராக இருக்கிற நீங்கள் தங்கள் அறைக்குத் தருவித்துப் பார்த்து, அந்த ப்ரொசீடிங்க்ஸ் மூலம் இரண்டு கட்டத்தில் பேச்சுவார்த்தை நடந்து இருப்பது உண்மை, இரண்டு மாநில அதிகாரிகளும் கலந்து கொண்டு பேசியிருக்கிறார்கள் என்பதை அறிந்து, அந்தப் ப்ரொசீடிங்க்ஸை எங்களுக்கும் காண்பித்து விட்டால் ,உரிமைப் பிரச்னை எழாது, இதை உரிமைக் குழுவிற்கு அனுப்பவேண்டிய அவசியம் இருக்காது ஆனால்,, எங்களுக்குக் .கிடைத்திருக்கும் தகவல் எல்லாம், அப்படிப்பட்ட கூட்டம் தனியாக இரண்டு மாநில அதிகாரிகள் மட்டத்தில் நடக்கவே இல்லை. அப்படி நடக்காத ஒரு சம்பவத்தை, இரண்டு கட்டத்தில் அதிகாரிகள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடந்து இருக்கிறது என்று கூறியது அவை உரிமையை மீறிய செயலாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அது சம்பந்தமாக மினிட்ஸ் இருந்தால், தங்களுடைய அறையில் அதைத் தருவித்து, எங்களை வைத்துக் காட்டிவிட்டால், மீண்டும் இந்த மன்றத்திற்கு அது வரவேண்டிய அவசியம் இல்லை, முடிவை மட்டும் தாங்கள் சொல்லலாம் என்று கூறிக்கொள்கிறேன்.

இந்தப் பிரசிச்னை ஒரு சென்சிடிவ் பிரச்சினைதான். இதை நாங்கள் எழுப்பி, கேரளாவில் இருந்து தண்ணீர் வராமல் செய்துவிடவேண்டும் என்கிற நோக்கம் இல்லை. எங்களுக்குத் தண்ணீர் வேண்டும். ஆனால், இப்படிச் சொல்வதன் மூலம் கிடைக்க வேண்டிய தண்ணீர் கிடைக்காமல் போய்விடுமோ என்றுதான் இதை எழுப்பி இருக்கிறோம். ஆகவே, தான் இந்த இரண்டு மீட்டிங் சம்பந்தமாக, இரண்டு மாநில அதிகாரிகள் இடையே நடந்த மீட்டிங் மினிட்ஸ் வாங்கிப் பார்த்து, எங்களுக்கும் காட்டினால் மிகவும் உதவியாக இருக்கும் என்று சொல் விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது இரண்டு மாநிலங்களுக்கு இடையில் உள்ள பிரச்சினை......

THE HON. THIRU S. RAMACHANDRAN : On a point of personal explanation. I am entitled for a personal explanation.

திரு. துரை முருகன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் பேசுவதைக் கேட்க நாங்கள் தயார். இன்னும் சொல்லப்போனால், மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்வார். ஆனால், நாங்கள் கொடுத்து இருப்பது உரிமைப் பிரச்சினை. அதில் எந்தவிதமான எக்ஸ்பிளே [illegible]னும் தேவையில்லை.





மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகிறபோது, மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சருக்குத் திறமை குறைவா என்று கேட்டு, அதற்காக நான் பதில் சொல்கிறேன் என்று சொன்னார்கள்........

திரு. துரை முருகன் : நாங்கள் கொடுத்து இருப்பது உரிமைப் பிரச்னை. அது குறித்து தாங்கள் தீர்ப்பு சொல்ல வேண்டும்.

THIRU J. HEMACHANDRAN : We want to hear what is the fact.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர்களுக்கு '' கலெக்டிவ் ரெஸ்பான்சிபிளிடி '' இருச்கிறது என்கிற முறையில் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் தரவோ வேறு வகையில் பேசுவதற்கோ உரிமை இருக்கிறது. ஆகவே, அவர் விளக்கம் தருவதில் தவறு இல்லை. பிரிவிலேஜ் பிரச்னையைப் பொறுத்தவரையில், முடிவு செய்ய வேண்டிய பொறுப்பு பேரவைத் தலைவருக்குத்தான் உண்டு. ஆனால், சில நேரங்களில் பிரிவிலேஜ் மேட்டர் வருகிறபோது இங்கே வீற்றிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் கூட—உரிமைப் பிரச்னை கொண்டுவராத மற்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட—கருத்துக்கள் தருவதற்கு வாய்ப்பு உண்டு. பல தடவை இந்த மன்றத்தில் அப்படி நடைபெற்று இருக்கிறது. உரிமைப் பிரச்னை கொண்டு வந்தவர்கள் தான் பேச வேண்டும் என்று நிலை இருந்தாலும், உரிமைப் பிரச்னை கொண்டு வராத ஒவ்வொரு கட்சிகளும் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லி, கடைசியில் அந்தப் பிரச்னை மீது தீர்ப்பு கூறுகிற நிலைமை உண்டு.

[முற்பகல் 9-50]

ஆனரல் அனுமதிப்பதும் அனுமதிக்காததும் தலைவரைப் பொருத்தது. ஆகையால், சொல்ல உரிமை இல்லை என்று சொல்வது சரியல்ல. மாண்புமிகு அமைச்சர் இராஜாமுகமது அவர்கள் சொன்ன கருத்திற்குத் துணையாக, துணைபுரிகின்ற வகையில் மற்றொரு அமைச்சர் சொல்வதில் தவறு இல்லை. அதுபற்றி முடிவு செய்ய வேண்டியது பேரவைத் தலைவர் தான்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, அவை முன்னவர் சொன்னதிலே மாறுபட்ட கருத்து இல்லை. இது ஒரு கூட்டுப் பொறுப்புள்ள அமைச்சரவை, அதனால் சொல்லலாம், ஆனால் மின்சாரத் துறை அமைச்சரவர்கள் விளக்கம் சொல்ல விரும்புகிறார்கள். விளக்கத்தைக் கேட்கத் தயார். அதற்கு நாங்கள் அவாவுடையோம். ஆனால் எழுப்பப்பட்டிருக்கிற

[திரு. துரை முருகன்] [1980 ஜூலை 9

பிரச்சனை அவை உரிமைப் பிரச்சனை. நாங்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறோம்; அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார். இதைப்பற்றித் தீர்ப்பு அளிக்கவேண்டியது நீங்கள்.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் விளக்கம் சொல்வதாகச் சொல்லி பழைய வரலாற்றையெல்லாம் சொல்ல விரும்புகிறார்கள். இந்த வரலாறுகளை எல்லாம் அவர் மெத்தத் தெரிந்தவர்; அதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் இந்தப் பிரச்சனையில் அவர் விளக்கம் சொல்லக் கூடாது. அமைச்சர் இராஜா முகமது அவர்கள் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள்; நாங்கள் கூறியதை மறுத்திருக்கிறார்கள். இங்கே அதை நாங்களும் மறுத்திருக்கிறோம். அப்படி இரண்டு கட்டப் பேச்சு நடக்கவில்லை. 10-ந் தேதி அன்று நடைபெற இருக்கின்ற பேச்சுவார்த்தை கூட 'பெரியாறு' பற்றியதாக இருக்கிறதே தவிர மற்றவற்றைப் பற்றியதாக இல்லை. எனவே, நடக்காத ஒன்றை வேண்டுமென்றே திசை திருப்பும் நோக்கத்தோடு சபையில் சொல்லியிருக்கிறார். இது அவை உரிமை மீறல் பிரச்சனை என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். அமைச்சர் விளக்கம் சொல்லியிருக்கிறார். சபாநாயகராகிய தாங்கள் தீர்ப்புச் சொல்ல வேண்டும். வேறு யாரும் விளக்கம் சொல்வது சரியல்ல. (திரு. உமாநாத் எழுந்தார்). விளக்கம் சொல்ல அனுமதிப்பதாக இருந்தால் எல்லோருக்கும் அனுமதி அளியுங்கள்; நாங்களும் விளக்கங்கள் சொல்லவேண்டும்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தலைவரவர்களே, இப்போது இரண்டு அசெம்பிளி சம்பந்தமான பிரச்சனை இங்கே வந்திருக்கிறது. அதுதான் ரொம்பக் கவலையாக இருக்கிறது. இந்த அசெம்பிளியில் சொன்னது அங்கே ரெஃபர் ஆகியிருக்கிறது. அங்கே சொன்னது இப்போது இங்கே ரெஃபர் ஆகியிருக்கிறது. இன்று இங்கே எழுந்த பிரச்சனைகள் நாளை அங்கே மீண்டும் வேரியஸ் ஹெட்டில் வரலாம். இதனுடைய ப்ரொசீடிங்ஸ் நாளை பேப்பரிலே வந்து, அது அந்த அசெம்பிளியில் பிரிவிலேஜாக வரக்கூடும். இப்படியே போனால் இரண்டு மாநிலங்களுக்கும் இருக்கும் உறவு, 'மியூச்சுவல் அட்வான்டேஜ்' கெட்டுப்போகும் என்ற அச்சத்தினால் நான் சொல்கிறேன். அந்தமாதிரியான நிலைமைகள் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக மின்சாரத் துறை அமைச்சர் அடிஷனல் பாக்ட்ஸ் கொடுக்கலாம். அது பரஸ்பர உறவு கெட்டுப் போகாமல் இருக்க உதவியாக இருக்கும். in the interest of both the States.



1980 ஜூலை 9]

திரு. துரை முருகன் : அதைத்தான் நாங்களும் சொல்கிறோம். கேரள மாநிலத்திற்கும் தமிழகத்திற்கும் இருக்கிற விவகாரம் இது. பரஸ்பரம் கெட்டுப்போகக் கூடாது என்ற நல்லெண்ணம் எங்களுக்கும் இருக்கிறது. இன்னும் சில விவரங்கள் தெளிவாகவே இருக்கிறது. ஆனால் அங்கே என்ன நடந்தது என்று நாங்கள் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மின்சாரத் துறை அமைச்சர் தன்னிலை விளக்கம் அளிப்பதாக இருந்தால் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவரவர்களே, திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது மாண்புமிகு அமைச்சர் இராஜா முகமது திறமை இல்லாதவர்; அதனால் இவர் பேச வந்திருக்கிறார் என்று குறிப்பிட்டார்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: இல்லை. அது தவறு (குறுக்கீடுகள்) சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர் (கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் பேசவேண்டும் என்று முனைந்ததற்கு இரண்டு காரணங்கள். ஒன்று, அமைச்சரவைக்கு கூட்டுப் பொறுப்பு என்பது. அதை அவை முன்னவர் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். இன்னொன்று, இதே நீர்ப்பாசனத் துறைக்கு நானும் பொறுப்பு வகித்திருக்கிறேன் என்பதால், சில விளக்கங்களை இந்த அவை முன் வைத்தால் நம்முடைய அரசுக்கும் கேரள அரசுக்கும் கருத்து வேற்றுமைக்கு இடம் இருக்காது என்பதால் நீங்கள் அனுமதித்தால் பேசுகிறேன்; இல்லை என்றால் நான் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசலாம். (குறுக்கீடு) சுமூகமான உறவு வளரட்டும், அதற்கு உதவியாக பேச்சு அமையட்டும்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, அப்படியானால் எங்களிடமும் இரண்டுபேர்கள் இருக்கின்றார்கள் இதுபற்றி நல்ல ஆலாசனைகள் கொடுப்பதற்கு (கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து எல்லோரும் அமைதியாக இருங்கள். அவையின் முன்னவர் அவர்கள் இப்போது பேசுவார்கள்.

[1980 ஜூலை 9

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே இரண்டு உறுப்பினர்கள் உரிமை மீறல் பிரச்சனையைக்கொண்டு வந்து அதற்கான காரண காரியங்களைக் கூறி விளக்கங்கள் பலவற்றை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அந்த உரிமை மீறல் பிரச்சனைக்கு மாண்புமிகு அமைச்சவரவர்கள் பதிலுரை தந்திருக்கிறார்கள். அந்த இரண்டையும் கேட்ட பிறகு தாங்கள் அதை ஆராய்ந்து பார்த்தபிறகு தீர்ப்பு வழங்க இருக்கிறீர்கள். ஆகவே அது பற்றிய முடிவு வந்ததற்கு பிறகு வேண்டுமானால் மாண்புமிகு அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் விளக்கம் கொடுப்பதற்கு தாங்கள் ஏற்பாடு செய்யலாம். ஆனால் மற்றொன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அவையிலே இருக்கின்ற 234 உறுப்பினர்களும் தங்கள் தங்கள் உரிமைகளைக் காப்பாற்றி கொள்ளும் திறமை படைத்தவர்கள்தான். இந்த அவையினைக் காப்பாற்றுகின்ற முழு பொறுப்பு பேரவைத் தலைவராக இருக்கின்ற தங்களுக்கு இருக்கின்றது. ஆகவே எந்த ஒரு பிரச்சனை ஏற்பட்டாலும் பிரச்சனைகள் எழுப்புகின்ற உரிமைக்கும், தங்களுக்கும் இடையிலே யாரும் யாருக்காகவும் பாதுகாப்பாக வரவேண்டிய அவசியம் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அந்தந்தப் பிரச்சனைகளை அந்தந்த உறுப்பினருக்கும் பேரவைத் தலைவருக்கும் விட்டுவிடவேண்டுமே தவிர உட்கார் என்று சொல்வதும், மற்றவர்கள் எழுந்திரு என்று சொல்வதும் இரண்டு பக்கங்களிலும் தேவையில்லை என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். எதிர் தரப்பிலேயும் ஆளும் தரப்பிலேயும் இருக்கின்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் பொறுப்பு இருக்கின்றது என்பதை நான் மிக்க பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, அந்த வகையில் எதிர்தரப்பில் இருப்பவர்களும் ஒத்துழைப்பு தரவேண்டும். இரண்டு தரப்பினரும் நடந்து கொள்கின்ற முறையை வைத்துதான் நாம் இந்தியாவிற்கு வழிகாட்டியாக இருக்க முடியும். நாம் சில கருத்துக்களைப் பரிமாறிக்கொள்கின்றபோது அந்தக் கருத்து நாட்டுக்கு நன்மை பயக்கின்றதா, பயன்படுகின்ற வகையில் இருக்கின்றதா என்ற அளவில்தான் இருக்கவேண்டும். பிரச்சனைகள் வருகின்றபோது பேரவைத் தலைவரின் தீர்ப்புக்கு அடங்கி நடப்பதுதான் முறையே தவிர ஒரு உறுப்பினருக்காகப் பரிந்துகொண்டு பலபேர் வரவேண்டாம் என்று இரண்டு பக்கத்திலேயும் இருக்கின்ற உறுப்பினர்களைப் பார்த்து அவை முன்னவர் என்ற முறையில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவையிலே 234 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆகவே அந்தந்த உறுப்பினர்கள் தங்களைக் காப்பற்றிக்கொள்ள முடியவில்லை என்று கூறிவிட்டால் மற்றவர்கள் வரலாம். ஆனால் இந்த அவையிலே இருக்கின்ற 234 உறுப்பினர்களும் மிகத் திறமை பெற்றவர்கள், வலிமை பெற்றவர்கள்.





ஆகவே அந்த வகையிலே இங்கே அமைதியை நிலைநாட்டுவதற்கு இரு சாராரும் ஒத்துழைப்பு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து இந்த உரிமை மீறல் பிரச்சினையில் முடிவெடுக்கவேண்டியது தங்களுடைய பொறுப்புதான். ஆகவே தங்களுடைய கருத்தை அறிந்த பிறகு மாண்புமிகு அமைச்சரவர்கள் தங்களுடைய விளக்கத்தைத் தரலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-00]

<u>*மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது</u> : தலைவர் அவர்களே, தங்களுடைய கருத்தைக் கூறுவதற்கு முன்னால் நான் என்னுடைய விளக்கத்தைக் கூறி விடுகிறேன். பத்திரிகைகளில் தவறான செய்தி வந்து விடக்கூடாது என்பதற்காக நீங்கள் தீர்ப்பு சொல்வதற்கு முன்பு நான் என்னுடைய விளக்கத்தைக் கூறி விடுகிறேன். இந்தப் பிரச்சினை இரண்டாவது முறை எழுப்பப்பட்டபோது மாண்புமிகு உறுப்பினர் திரு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொற்களை அதிகமாகச் சேர்த்திருப்பதாகத் தெரிகிறது. அதை விளக்கிச் சொல்லி விட்டால் உங்களுக்கும் முடிவு கூறுவதற்கு உதவியாக இருக்கும். நான் அன்று சொல்லியிருப்பது அவை குறிப்பில் வந்திருக்கிறது. அதிலே, "10 தினங்களுக்கு முன்பு நடைபெற்ற அனைத்து மாநிலங்களுடைய தலைமைப் பொறியாளர் மாநாட்டில், மத்திய நீர்ப்பாசன ஆய்வுக் குழுவின் தலைவரும் கலந்து கொண்டு ஒரு முடிவினை எடுத்திருக்கிறார்கள். எந்தெந்த மாநிலங்களில் அதிகமாக உபரி நீர் இருக்கிறதோ, அதை எப்படிப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்கு மத்திய அரசே ஒரு கமிட்டியை அனுப்பி அவர்கள் பரிசீலித்து, அந்தக் கூடுதல் நீரை எந்தெந்த மாநிலங்களுக்கு அளிக்கலாம் என்று சொல்லி பங்கீடு செய்வதற்கான ஒரு சாத்தியக் கூறுகளை அவர்கள் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்" என்று சொல்லியிருக்கிறேன். அதற்குப் பின்னால் மாண்புமிகு உறுப்பினர் திரு. சொரணம் அவர்களின் கேள்விக்குப் பதில் அளிக்கையில், "அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1977-ம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ம் நாள் வந்ததற்குப் பிறகு பல்வேறு கட்டங்களில் கேரள அரசோடு பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறது. குறிப்பாக முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் தலைமையில் கூட நம்முடைய முதலமைச்சரும் கேரள முதலமைச்சரும் பேசியிருக்கிறார்கள். இப்போது புதிதாக ஆட்சிக்கு வந்த பிறகு கூட இரண்டு முறை அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு வார்த்தை நடந்திருக்கிறது." என்று சொல்லியிருக்கிறேன். குறிப்பேட்டில் வந்திருக்கிறது. திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள திரும்பவும் பேசும்போது தனியாகப் பேசினார்கள் என்று சொல்லியிருப்பதுபோல் சொல்லியிருக்கிறார். அதையும் குறிப்பேட்டிலே பார்க்க வேண்டும். 'பொதுப் படையாக அதிகாரிகள் மட்டத்திலே பேச்சுவார்த்தைகள் நடந்

திருக்கிறது' என்று சொல்லி அது குறிப்பேட்டிலும் வந்திருக்கிறது. அதையும் தாங்கள் பார்த்துக் கொண்டு தீர்ப்பு அளிக்க வேண்டும் என்று தயவு செய்து கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, நானும் புரொசீடிங்ஸ் பார்த்தேன். இரண்டு மீட்டிங்குகள் நடந்திருக்கின்றன ஆல் இண்டியா லெவலிலே என்று சொன்னார். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து எல்லோரும் உட்கார வேண்டும், அனைத்து இந்திய ரீதியில் நடைபெற்ற மாநாடுகள் வேறு காரணத்திற்காக நடைபெற்றன. இந்த மாநாடுகள் வேறு ; இந்த மகாநாட்டில் அமைச்சர் தாம் சொன்ன தகவலைப் படித்துக் காட்டி விளக்கம் சொன்னார். அவரது விளக்கத்திற்குப் பிறகு உரிமை மீறல் பிரச்சினையை வலியுறுத்த வேண்டும் என்று திரு. கிருஷ்ணமூர்த்தி விரும்புகிறாரா ?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, அவைக் குறிப்பை நானும் பார்த்தேன். நான் கேட்பது திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் அவர்களின் கேள்விக்கு பதில் அளிக்கையில் அமைச்சர் அவர்கள், ' இப்போது புதிதாக ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு கூட இரண்டு முறை அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு வார்த்தை நடந்திருக்கிறது. வருகிற 10-ம் தேதி கூட கேரள அதிகாரிகளுக்கும் நம்முடைய அதிகாரிகளுக்கும் முதல் கட்டப் பேச்சு நடக்க விருக்கிறது ' என்று சொன்னார்.

He means only bi-partite discussions.

அதிகாரிகள் மட்டத்திலே நடந்திருக்கிற பேச்சு வார்த்தைகள் என்று சொல்கிறார். அவர் சொல்வது அகில இந்திய மட்டத்திலே நடந்த பேச்சு வார்த்தைகளைத்தான் சொல்கிறார். அதனால் நான் இதை பிரஸ் பண்ணுகிறேன், வலியுறுத்துகிறேன் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் நான் படித்துப் பார்த்த பிறகு பின்னர் தீர்ப்புச் சொல்கிறேன்.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, நான் கொடுத்தது என்னவாயிற்று ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கும் சேர்த்துத் தான் இந்தப் பதில். எல்லாவற்றையும் படித்துப் பார்த்துப் பின்னர் தீர்ப்புச் சொல்கிறேன்.



(ஆ) அண்ணா பத்திரிகை மீது.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 246-ன் கீழ் அடியிற்கண்ட உரிமைப் பிரச்சினையை (Breach of Privilege) இந்தச் சட்டப் பேரவைமுன் கொண்டுவர தங்கள் அனுமதியை வேண்டுகிறேன்.

சட்டப் பேரவையில் 1980-ம் ஆண்டு ஜூன் திங்கள் 28-ம் நாளன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் தமிழ்நாட்டில் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகங்கள் கிடைக்காமல் அவதியுறுவது அரசுக்குத் தெரியுமா? என்ற குறுகிய கால வினாவை எழுப்பினார். அதையொட்டி சட்டப் பேரவை மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் நோட்டுப் புத்தகங்களை தயாரிக்கும் பணியை தனியார் கம்பெனிக்கு கொடுத்து உள்ளீர்கள். அவர்களால் குறிப்பிட்டபடி தயாரிக்க இயலவில்லை. இருந்தும் தனியார் கம்பெனிகளிடம் நோட்டுப் புத்தகங்களை தயாரிப்பதை ஏன் தர வேண்டும் என்று கேள்வி எழுப்பினார். இந்தக் கேள்விக்கு கல்வி அமைச்சர் திரு. அரங்கநாயகம் அவர்கள் பதில் உரைத்தார். அவருடைய பதிலில் மாணவர்களுக்கு மலிவு விலையில் அளிக்கப்பட்ட காகிதத்தை முன்பு இருந்த தி.மு.க. வினர் முறை கேடாக விற்று விட்டனர் என்று, தி.மு.க. ஆட்சியின் மீது குறிப்பிட்டு ஆதாரங்களோடு எந்தவித குற்றச்சாட்டையும் சொல்லவில்லை. அது தெளிவாக குறிப்பேட்டிலும் இருக்கிறது.

ஆனால் அதற்கு மாறாக 1980-ம் ஆண்டு ஜூன் திங்கள் 28-ம் நாளன்று வெளியான அண்ணா பத்திரிகையில் மத்திய அரசு மலிவான விலையில் தந்த நோட்டு புத்தக காகிதம்—முறைகேடான விற்பனை—என்று கொட்டை எழுத்துக்களில் போட்டுவிட்டு உள்ளே ' தி.மு.க. வினர் மீது அமைச்சர் அரங்கநாயகம் குற்றச்சாட்டு என்று தலைப்பிட்டு மாணவர்களுக்கு மலிவு விலையில் நோட்டுப் புத்தகங்களை தயாரித்து அளிக்க மத்திய அரசால் மலிவு விலையில் அளிக்கப்பட்ட காகிதத்தை முன்பு இருந்த தி.மு.க. வினர் விற்றுவிட்டதாக அபாண்டமாக கல்வி அமைச்சர் சொல்லாததை, சட்டசபையில் அவர்கள் எடுத்துச் சொல்லாததை இப்படி அவர்கள் பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார்கள். முன்பு இருந்த தி.மு.க. அரசின் மீது அமைச்சர் அரங்கநாயகம் அண்ணா பத்திரிகையில் மேற்கூறியவாறு செய்தி வெளியிட்டதைப் போல சட்டப் பேரவையில் தனது பதில் உரையில் குற்றச்சாட்டு எதுவும் சொல்லாமல் இருக்கும் நிலையில் அண்ணா பத்திரிக்கை வேண்டுமென்றே ள் நோக்கத்தோடு முன்பிருந்த தி.மு.க. ஆட்சிக்கும், தி.மு.க. னருக்கும் மக்கள் மத்தியில் களங்கம் ஏற்படுத்தும் விதத்திலும் தவறான எண்ணம் ஏற்படும் விதத்திலும் உண்மைக்குப் புறம்

[திரு. அ. ரகுமான்கான்] [1980 ஜூலை 9

பான செய்தியை பிரசுரம் செய்திருக்கிறது. இது அவையின் உரிமையை மீறிய செயலாகும். இதில் உரிமை மீறல் மிகத் தெளிவாக இருக்கிறது. எனவே, ஊழலைப் போக்குவதற்காகவே பிறப்பெடுத்திருப்பதாக சொல்லும் அந்தப் பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பிரச்சினை குறித்து பத்திரிகை ஆசிரியர் அளித்துள்ள விளக்கத்தில் "திரு. செ. அரங்கநாயகம் சட்டப் பேரவையில் அளித்த பதிலில் முன்பு இருந்தவர்கள் எனக் கூறியதை அடுத்து, முன்பிருந்த ஆட்சியாளர்கள் என கருத்தில் கொண்டு, தி.மு.க. வினர் என்று தலைப்பில் மட்டும் தவறாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தவறாக வெளியிட்டமைக்காக வருத்தம் தெரிவித்துக் கொள்கிறோம், இனியும் இத்தகைய தவறு நேராது எனத் தெரிவித்துக் கொள்கிறோம். குறிப்பிட்ட செய்திக்கான திருத்தமும் 1980-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 8-ம் நாள் அண்ணா நாளிதழில் வெளியிடப் பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று எழுதியிருக்கிறார்கள்.

ஆகவே இதில் மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : வருத்தம் தெரிவித்திருப்பதற்காக நன்றி.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### காவேரியில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. உமாநாத், அ. ரகுமான்கான், சே. எம். தங்கமணி, செ. இராமலிங்கம், ஆ. எஸ். எம். பக்கீர் முகமது, இ. முத்துராமலிங்கம், பொ. விஜயராகவன் நா. சுந்தரராஜ், சோ. அழகர்சாமி, பொ. உத்திராபதி, எம். ஆறுமுகம், ஆர். கருப்பையா, ரா. கிருஷ்ணன், எம். செல்லமுத்து ஆகியோர் "காவேரியில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கும், அதனால், விளைந்துள்ள பாதிப்புக்களும் குறித்து" ஒத்திவைப்பு தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்களுள் கட்சிக்கு ஒருவர் மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.



1980 ஜூலை 9]

*திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் காவேரியில் ஏற்பட்ட கரை புரண்ட வெள்ளம் காரணமாக இதற்கு முன்னால் இல்லாத அளவிற்கு மிகப் பெரிய சேதம் ஏற்பட்டிருப்பதை இந்த மன்றம் நன்கு அறியும். குறிப்பாக பள்ளிப்பாளையம், குமாரபாளையம் பவானி, இன்னும் அதைச் சுற்றியிருக்கிற இடங்களில் வெள்ளப் பெருக்கு அதிகமாக வந்த காரணத்தினால் ஆறு பேர்கள் பலியாகியிருக்கிறார்கள். மூன்று பேர்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான குடிசைகள் மூழ்கி இருக்கின்றன. இதனால் ஏற்பட்டிருக்கிற இழப்பு, பொதுவாக தனியாருக்கு ஏற்பட்டிருக்கிற இழப்பு ஒருபுறமிருக்க, அரசாங்கச் சொத்தாக இருக்கிற மின்சாரம் உற்பத்தி செய்கிற கருவிகள் உட்பட தண்ணீரில் மூழ்கி அரசுக்கு பல இலட்சக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அதோடு இம்மாதிரி ஒவ்வொரு ஆண்டும் வெள்ளம் வரும்போது உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் தவிர்க்கமுடியாத அளவிற்கு பெருகிக்கொண்டிருப்பதால் அரசாங்கம் இதில் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது, வருங்காலத்தில் இம்மாதிரி வெள்ளம் ஏற்பட்டால், இழப்பு ஏற்படாமலிருக்க என்ன முன் எச்சரிக்கை எடுக்க உள்ளது என்பதையும் இப்போது ஏற்பட்டுள்ள சேதத்திற்கு மக்களுக்கு அரசு என்ன விதமான ஈட்டுத்தொகை உதவி செய்ய இருக்கிறது என்பதையும்பற்றி விவாதிப்பதற்காக இம்மாமன்றத்தின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதைவிட தமிழகத்தில் மக்களின் கவனத்தை ஈர்க்கிற பிரச்னை வேறு எதுவும் இருக்க முடியாது. எனவே, இப்பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10–10]

திரு. எம். செல்வமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, காவிரியிலே அதிகமான வெள்ளம் வந்து, அங்கே இருக்கின்ற அதிகமான குடிசைகள் அடித்துச்செல்லப்பட்டிருக்கின்றன. அப்படிச் சென்றதற்குப் பிறகு, அங்குள்ள மக்கள் அவதிக்குள்ளாகி இருக்கிறார்கள். அதனால், பல பேர்கள் நஷ்டம் அடைந்திருக்கிறார்கள். அங்கே உள்ள ஆடு, மாடுகள் பூராவும் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் ஈடு செய்வதற்கு இப்போது அரசு குடிசை இழந்தவர்களுக்கு 200 ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி இங்கே குடிசைகளை இழந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு 200 ரூபாய் கொடுப்பதோடு, அவர்களுடைய ஆடு, மாடுகள் இன்னும் பல பொருள்கள் சேதமடைந்திருப்பதால், அவர்களுக்கு போதுமான நஷ்ட ஈடுகள் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, இந்தமாதிரி வெள்ளம் வரக்கூடிய காலத்தில் வெள்ளத்தைத் தடுப்பதற்கும், கரையை பலப்படுத்துவதற்கும் உரிய முறையில்

நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஆறுகள் எல்லாம் கடைநிலைப் பகுதியிலே இருப்பதால், அவைகளின் கரைகள் எல்லாம் பலஹீனமாக இருக்கின்றன. அவைகளை பலப்படுத்தி, இந்த வெள்ளத்தைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்பற்றி விவாதிப்பதற்கு இந்த அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து, விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, காவேரியின் வெள்ளப்பெருக்கு காரணமாக பலர் உயிரிழந்து இருக்கிறார்கள். அவர்கள் வசித்து வந்த குடிசைகள் எல்லாம் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. கால்நடைகளை எல்லாம் அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகள் இழந்திருக்கிறார்கள். இன்றைய தினம் இந்த வெள்ளத்தின் காரணமாக அந்தப் பகுதிகளிலே உள்ள மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதோடு, தஞ்சை மாவட்டம் கடைநிலைப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், இத்தகைய அபாயகரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. காவேரியின் உப நதிகளிலே எல்லாம் வெள்ளப் பெருக்கு காரணமாக இன்றையதினம் குறுவை சாகுபடி செய்ய முடியாத அபாயகரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற விவசாயிகள் இந்த வெள்ளப்பெருக்கின் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு தொடக்கத்திலே பருவ மழை நல்ல முறையிலே பெய்திருக்கின்றது என்றாலும், அரசு முன்னெச்சரிக்கையாக ஆரம்ப காலத்திலேயே அதிகமான தண்ணீரைத் திறந்து விடாததால் இத்தகைய அபாயம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, சம்பந்தப்பட்ட பொதுப்பணி இலாகாவினர் தான் இதற்குக் காரணம். இன்றையதினம் இந்த வெள்ளப் பெருக்கின் காரணமாக கடை, மடைப் பகுதிகளிலே இருக்கின்றவர்களுக்கு முக்கியமாக அபாயம் ஏற்பட்டிருக்கிறது. அதனால், அந்தப் பகுதி பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, அதைப்பற்றி விவாதிப்பதற்கு இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணையில் நீர் அதிகமாக வருகின்றதென்றும், அணைகள் உடைக்கப்பட இருக்கிறதென்றும், இந்த அபாயகரமான நிலைமை வருமென்றும் ரேடியோவிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதோடு பத்திரிகைகளிலேயும் தொடர்ந்து அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படி அறிவித்துக் கொண்டிருக்கின்ற நேரத்திலே 5,000-க்கும் அதிகமான குடிசைகள் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. 4 பேர்களை உடனடியாக அந்த வெள்ளம் கொன்றிருக்கிறது, மேலும், 3 பேர்கள் செத்திருக்கிறார்கள். இப்படி





ஒவ்வொரு ஆண்டும் வெள்ளம் வருகின்ற நேரங்களிலே எல்லாம்,
முன்கூட்டியே அறிவித்தும் பல்லாயிரக்கணக்கான குடிசைகள்
வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படுவதும், பல பேர்கள் உயி
ரிழந்து போவதும், அவர்களுடைய ஆடு மாடுகள் இறந்துபோய்
விட்டன என்றெல்லாம் அறிவிக்கப்படுகின்றது. , ஆனால், இப்படி
ஒரு அபாயம் வரக் போகின்றது என்பது முன்கூட்டியே அங்கே
இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு தெரிந்தும்கூட, 5,000- க்கும்மேற்
பட்ட குடிசைகளிலே வசிக்கின்றவர்களை அங்கேயிருந்து வெளி
யேற்றாமல் அங்கேயே வைத்திருந்து இப்படி நாசமாக்கியது இந்த
அதிகாரிகளின் அலட்சியப் போக்கினால்தான். எனவே, இதை
அரசு பரிசீலிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்
கொள்கிறேன்.

குறிப்பாக, தஞ்சை மாவட்டம் கடலோரத்திலே இருக்கின்ற
ஒரு மாவட்டமாகும்.

இப்படி ஒவ்வொரு ஆண்டும் வெள்ளம் வரக்கூடிய காலங்
களில் ஆபத்து ஏற்படுவதற்குக் காரணம் கரைகளைப் பலப்படுத்
தாமல் இருப்பதுதான். எதிர்காலத்திலாவது இப்படி வெள்ளம்
வருகிற போது உயிர்ச் சேதம் வராமல், குடிசைகள் பாதிக்கப்
படாமல் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்
போது ஏழு பேர் உயிர் பலியாகியிருப்பதால் அவர்கள் குடும்பங்
களுக்கு அரசு ஊழியர்கள் இறந்தால் கொடுப்பது போன்று
பத்தாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று கேட்டு,
பதட்டமான சூழ்நிலை இருப்பதால் அவையின் பிற அலுவல்களை
ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலை
வரவர்களே, காவிரியில் தண்ணீர் வரவில்லை, அதற்காக கேரள
மாநிலத்தோடும், கர்நாடக மாநிலத்தோடும் பேச வேண்டும்.
மத்திய அரசு உதவ வேண்டும் என்று பேச வேண்டிய நேரத்தில்
வெள்ளம் வந்திருக்கிறது, மக்களுக்கு ஆபத்து என்று ஒரு ஒத்தி
வைப்புத் தீர்மானம் வரும் என்பதை யாரும் எதிர்பார்க்கவில்லை
என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

முதலில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள்
பேசுகிறபோது இதைப்போல் வெள்ளமே வந்தது இல்லையென்று
சொன்னார்கள். ஆனால், இதைப்போல் வெள்ளமே வந்ததில்லை
என்று சொல்லுவது இதை மிகைப்படுத்தி சொல்வதாகக் கருத
முடியுமே தவிர, இன்றைக்கு உள்ள நிலையைப் பொறுத்தவரை
வெள்ளம் வந்து பாதகம் ஏற்பட்டது என்பது எதுவுமே இல்லை
என்பதைக் குறிப்பாகச் சொல்ல முடியும். அருமைச் சகோதரர்
உத்திரபாதி அவர்கள் சொல்லுகிறபோது தஞ்சை மாவட்டம்
பாதிக்கப்பட்டது, பாதிக்கப்படும் என்று சொன்னார்கள். நேற்று
தான் நம்முடைய அருமை மாண்புமிகு உறுப்பினர் உமாநாத்

[திரு.எஸ் டி. சோமசுந்தரம்] [1980 ஜூலை 9

அவர்கள் என்னுடைய தொகுதிக்கு தண்ணீர் வரவில்லை என்று சொன்னார்கள். நேற்று தண்ணீர் வரவில்லை என்று சொல்லப் பட்டது, இன்றைக்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது என்று சொல்லப்படுகிறது. நேற்றைக்கு முன்தினம் மேட்டூர் நிலைமை வேறு. நேற்றைக்கு முன்தினம் கிருஷ்ணராஜசாகர் காச்மென்ட் ஏரியாவில் மழை பெய்கிற மர்க்காராவில் நிலைமை வேறு· இன்றைக்கு மர்க்காரா நிலவரம் வேறு. மழை அங்கு அதிகமாகப் பெய்யவில்லை என்பது இன்றைக்கு வருகிற தண்ணீரைப் பார்த் தால் தெரியும். இன்று மேட்டூருக்கு வருகிற தண்ணீர் 9, 500 கன அடிதான். ஆனால், இரண்டு தினங்களுக்கு முன்னால் ஒரு இலட்சத்திற்கு அதிகமான கன அடி தண்ணீர் வந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கொள்ளிடத்தைப் பொறுத்தவரை இரண்டரை இலட்சம் கன அடி தண்ணீரை விட முடியும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், இன்று கொள்ளிடத்தில் விடப்படுகிற தண்ணீர் 65,000 கன அடிதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், காவிரி, வெள்ளாறு, கல்லணைக்கால்வாய் ஆகியவற்றில் எவ்வளவு தண்ணீர் விட முடியுமோ அவ்வளவு தண்ணீரை விட்டிருக் கிறார்கள். ஆனால், எங்கும் சேதம் இல்லை. அதுதான், எனக்கு வந்த சேதி, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர் களுக்கு வந்த சேதி. கடைமடைப் பகுதிக்குத் தண்ணீர் போய்ச் சேரவில்லை என்பதுதான் இன்றைக்கு வந்த சேதி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

இப்போது எவ்வளவு தண்ணீர் வந்தாலும் ஆபத்து இல்லை. காரணம் இங்கே பருவ மழை இல்லை. பருவ மழையின்போது இப்படி தண்ணீர் வருமானால் காவிரியில், கொள்ளிடத்தில் எவ் வளவு தண்ணீர் விட முடியுமோ அந்தத் தண்ணீரை விடும்போது இங்கு பெய்கிற மழையின் காரணமாக ஆங்காங்கு தண்ணீர் அதிகமாகி வெள்ளம் பெருகும். இங்கே நவம்பர்-டிசம்பர் மாதங் களில்தான் மழை பெய்யும் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். இன்றைக்கு ஆபத்து இல்லை. மேட்டூரைப் பொறுத்தவரை 120 அடி தண்ணீர் இருக்கிறது. ஆபத்துக் காலத்தில் அதற்கு மேலும் வைத்திருக்கிறார்கள். பொதுப்பணித்துறையில் நான் பணியாற்றியபோது 1961-ல் 124 அடி வரை கூட வைத்திருந் தார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையால், இன்றைக்கு எந்த விதமான ஆபத்தும் இல்லை. ஆகவே, அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், பாதிக்கப்பட்ட இடம்—சேலம் மாவட்டத்திலும், பெரியார் மாவட்டத்திலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.



1980 ஜூலை 9] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

[முற்பகல் 10-20]

குடிசைகளிலே இருந்த பாதிக்கப்பட்டவர்கள் எல்லாம் அப்புறப்படுத்தப்பட்டு அவர்களுக்கு 100 ரூபாய் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தீ விபத்திலே பாதிக்கப்பட்டவர் களுக்குத்தான் 100 ரூபாய் என்ற உத்தரவு போடப்பட்டு இருக்கிறது, இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 100 ரூ. கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு வேண்டிய மற்ற உதவிகளும் செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுப் பணித் துறை அதிகாரிகள் அஜாக் கிரதையாக இருந்தார்கள் என்று சொல்வது சரியல்ல. பொதுப்பணித் துறை அதிகாரிகள் வெள்ளம் வந்தால் எப்படி தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பார்த்து அந்த முறையிலே போர்க்கால நடவடிக்கைகளை எடுத்திருக் கிறார்கள். வெள்ளம் வந்தால் எதை எதை சேகரிக்க வேண்டுமோ மணல் மூடை, சவுக்கு மரம், சிமின்ட் இவைகள் எல்லாம் தேவைக்கும் அதிகமாக சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றன, என்ற தகவல் இருக்கிறது. ஆகவே இந்தச் சபையை ஒத்திவைத்து அதை விவாதிக்க வேண்டிய நிலைமை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அதைப் பற்றி விவாதிக்க அவையை ஒத்திவைக்க வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. கவன ஈர்ப்புகள்.

### (அ) தூத்துக்குடி பகுதியில் அயல் நாட்டுக் கப்பல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, பேரவை விதி 54 இன் கீழ் கொடுக்கப்பட்டிருக்கிற கவன ஈர்ப்பு. திருவாளர்கள் மு. அம்பிகாபதி, பொ. விஜயராகவன், இ. முத்துராமலிங்கம் ஆகியோர் இருக்கைகளில் இல்லை. திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்—

*"தூத்துக்குடி துறைமுக பகுதியில் வெளிநாட்டு மீன்பிடி படகுகள் நடமாடுவதால் அங்குள்ள மீனவர்கள்மத்தியில் நிலவும் கவலை குறித்து".

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1 ஆம் நாளன்று ''சக்தி'' என்ற கடற்படைக் கப்பல் கேப்டன் திருப்பதி என்பவரால் ஆறு அந்நிய நாட்டு மீன்பிடி கப்பல்களில் ஒன்றான 'யுன்ஷின்' என்ற கப்பலை தூத்துக்குடி துறைமுகத்திற்கருகில் மீன் பிடித்தபோது அதனை சூழ்ந்து பிடித்து, அதிலிருந்து 18 அயல் நாட்டவர்களையும் கைப்பற்றினார். மேற்படி 18 பேரும் தாய்வான் நாட்டவர்கள் என்பதும் அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது என்பதும் தெரியவந்தது. இந்த மீன்படி கப்பல் 120 அடி நீளமுள்ளதும், மற்றும் அதில் நைலான் வலைகளும், மீனும், இருந்ததாகவும், டீஸல் இருப்பும் குளிர்பதன வசதி உள்ளதும் தெரியவந்தது. மேற்படி 18 அயல் நாட்டவர்களும் பாஸ்போர்ட் வைத்துள்ளனர். மேற்படி அயல் நாட்டவர்களுடன் மணப்பாடுக்கருகில் ஒரு சிறிய சண்டை நிகழ்ச்சிக்குப் பின் ஹெலிக்காப்டர் உதவியுடன் அக்கப்பலும் 18 அயல் நாட்டவர்களும் பிடிக்கப்பட்டனர். ஆனால் மற்ற ஐந்து அயல் நாட்டு மீன்பிடிக் கப்பல்களும் தெற்கு திசையில் தப்பிச் சென்றுவிட்டன.

அக்கப்பலில் இருந்த சுமார் 30 டன் மீன்களில். 25 டன் மீன்கள் மீன்துறையால் 5—7—1980 வரை அப்புறப்படுத்தப் பட்டு, குளிர்பதன அறையில் வைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள மீன்களும் அக்கப்பலிருந்து அகற்றப்பட்டு வருகின்றன. 4 டன் மீன்களை மீன் துறை 3 நபர்களுக்கு ஏலம்விட்டு அதன் விற்பனை மூலம் ரூ. 12,460 பெறப்பட்டது. மீதமுள்ள மீன் களை விரைவில் பகிரங்க ஏலத்தில் விட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

மேலும் இவ்வாறு அயல்நாட்டு மீன்பிடிக்கப்பல்கள் இந்திய மீன்பிடி எல்லைக்குள் மீன்பிடிப்பதை தடுக்கும்பொருட்டு மீன்துறைக்குச் சொந்தமான கலன்களுடன் மீன்துறை அதிகாரி கள் காவல்துறை அதிகாரிகளுடன் தூத்துக்குடித் துறை முகத்தில் தயார் நிலையில் உள்ளனர்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, மாண்பு மிகு நிதி அமைச்சர் அவர்களுடைய குறிப்பிலே இவ்வாறு அயல்நாட்டு மீன்பிடிக் கப்பல்கள் இந்திய மீன்பிடி எல்லைக் குள் மீன்பிடிப்பதை தடுக்கும்பொருட்டு மீன் துறைக்குச் சொந்தமான கலன்களுடன் மீன் துறை அதிகாரிகள் காவல் துறை அதிகாரிகளுடன் தூத்துக்குடி துறைமுகத்தில் தயார் நிலையில் உள்ளனர் என்று தெரிவித்து இருப்பதற்காக நான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரி வித்துக்கொள்கிறேன்.





வல்லரசுகளின் தூண்டுதலின் பேரில் மீன்பிடி படகு களைப்போன்ற அயல்நாட்டுக் கப்பல்கள் உளவு வேலைக்காக வருவதாகத் தெரிகிறது. ஆகவே இதைப்பற்றியும், முன் கூட்டியே அன்னியர் படையெடுப்பைத் தடுக்கிற முறையிலே யும் மத்திய அரசுக்கு மாநில அரசு தகவலை அனுப்புமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவை தைவான நாட்டைச் சேர்ந்த மீன்பிடி கப்பல்கள். அவர்கள் 6 கப்பல்களிலே வந்திருக்கிறார்கள். அவர்கள் இந்திய அரசினுடைய மீன்பிடி எல்லைக்குள் வந்ததன் காரணமாக அப்படிப்பட்ட தகராறு ஏற்பட்டது. அங்கே இருந்த மீன்துறை அதிகாரிகளும் காவல் துறை அதிகாரி களும் நடவடிக்கை எடுத்ததின் பேரில், இந்திய அரசு கப்பல் படை உதவியின்பேரில் ஹெலிகாப்டர்களைப் பயன்படுத்தி அந்தக் கப்பல்களைப் பிடிக்க முயன்றதில் 5 கப்பல்கள் தப்பி விட்டன. ஒன்றே ஒன்று பிடிப்பட்டது. அந்தக் கப்பலிலே இருந்த சுமார் 30 டன் மீன்களில் 25 டன் மீன்கள் அப்புறப் படுத்தப்பட்டு, குளிர்பதன அறையில் வைக்கப்பட்டு, பிறகு ஏலம் விடப்பட்டது. அவர்கள் வேவு பார்ப்பதற்காக வந்த தாகத் தெரியவில்லை. காரணம் அவர்களுக்கு அவர்களுடைய மொழியைக் தவிர வேறு எந்த மொழியோ ஆங்கிலமோ தெரியவில்லை. அது மட்டுமல்ல, அந்தப் படகின் அடிப்படைத் தன்மைகள், வலைகள், இவைகள் எல்லாம் பார்த்தால் அடிக்கடி மீன்பிடிப்பதற்கு வருகின்ற கப்பல்கள் என்று தெரிகிறது. ஜப்பான் நாட்டிலிருந்தும், தைவான் நாட்டி லிருந்தும் மீன் பிடிக்க அவைகள் அடிக்கடி வருவது உண்டு. ஆழ்கடலில் அவர்கள் மீன் பிடிப்பதிலே தவறில்லை. இந்திய மீன்பிடி எல்லைக்குள் வந்த காரணத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இப்போது உஷார் படுத்தப்பட்டிருக்கிறார் கள். ஆகவே அவைகள் வேவு பார்க்க வந்த படகுகளாகத் தெரியவில்லை.

## (ஆ) அத்தியாவசியப்பண்டங்களின் பதுக்கலைத் தடுக்கும் நடவடிக்கைகள்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ் வினை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்—

''சென்னை நகரில் பெருமளவில் பாமோலின் எண்ணெய் ஜூன் மாதத்தில் கைப்பற்றப்பட்டது குறித்து''

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 16 ஆம் நாளன்று உணவுத் துறை குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் சென்னை நகரில் ராயபுரத்தில் ஆண்டியப்ப கிராமணி தெருவிலும், திருவொற்றியூரில் பட்டினத்தார் தெருவிலும் உள்ள கிடங்குகளைத் திடீர் சோதனை நடத்தியதில் 14,497 பீப்பாய்கள் பாமோலின் எண்ணெய்யைக் (பீப்பாய் ஒன்று சுமார் 200 கிலோ கொள்ளளவு உள்ளது) கைப்பற்றினார்கள். கைப்பற்றப்பட்ட பாமோலின் எண்ணெய் இறக்குமதி செய்யப் பட்டதாகக் கூறப்பட்டது. கையிருப்புக்கு சரியான கணக்குகள் காட்டப்படவில்லை. தவிர கையிருப்பு விவரங்களை சரிவர அறிவிப்புப் பலகைகளில் காட்டவுமில்லை. மேலும் பருப்பு, எண்ணெய் வித்துக்கள், சமையல் எண்ணெய் இருப்புக் கட்டுப்பாடு ஆணை 1977-படி சென்னை நகரில் சமையல் எண்ணெய்யை ஒரு வணிகர் ஒரே நேரத்தில் 800 குவிண்டால்களுக்கு அதிகமாக கையிருப்பு வைத்திருக்கக் கூடாதென்று இருந்தும், இந்த வழக்குகளில் சம்பந்தப்பட்ட வணிகர்கள் கூடுதலாகப் பாமோலின் எண்ணெய்யை கையிருப்பில் வைத்திருந்தார்கள். இந்தக் குற்றங்களைப் பற்றி திருவொற்றியூர் காவல் நிலைய குற்றப்பதிவு எண் 1007/80–லும் ராயபுரம் காவல்நிலைய குற்றப்பதிவு எண் 1076/80-லும் இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ஆய்வில் உள்ளன. ஆய்வின்போது மேலும் 819 டின்கள் பாமோலின் எண்ணெய்யும், 3 டேங்கர்களில் 962 டன்கள் பாமோலின் எண்ணெய்யும் கைப்பற்றப்பட்டுள்ளன. மொத்தத்தில் கைப்பற்றப்பட்டுள்ள பாமோலின் எண்ணெய்யின் மதிப்பு ரூ. 2,63,97,995 ஆகும்.

கீழ்க்காணும் விவரப்படி கைப்பற்றப்பட்ட பொருட்கள் சம்பந்தப்பட்ட வழக்கு மன்றங்களின் முன்னால் கொண்டு வரப்பட்டன—

(1) செங்கல்பட்டு பிரதம மாஜிஸ்ட்ரேட்டு வழக்கு மன்றத்தின் முன்பு ஒப்படைக்கப்பட்ட 10,747 பீப்பாய்களையும் போலீசார் பொதுமக்களுக்கு ஏலத்தின் மூலம் விற்கலாம் என தீர்ப்பளிக்கப்பட்டது.

(2) ஜார்ஜ்டவுன் 16 ஆவது மெட்ரோபாலிடன் மாஜிஸ்ட்ரேட் வழக்குமன்றத்தின் முன்பாக ஒப்படைக்கப்பட்ட 3,750 பீப்பாய்கள், 819 டின்கள், 3 டாங்கர்களில் உள்ள கைப்பற்றப்பட்ட பாமோலின் எண்ணெய்யை உரிமம் பெற்றுள்ளவர்களுக்கு ஏலத்தில் விடலாம் என்று ஆணையிடப்பட்டது.



இதற்கிடையில் மேற்கூறப்பட்ட இரு வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்ட ஹைதர் எண்டர்பிரைஸஸ் கம்பெனியார் இவ்விஷயமாக உயர்நீதி மன்றத்தில் கிரிமினல் மிசலேனியஸ் ( criminal miscellaneous ) மனு மூலமாக வழக்கு தொடுத்துள்ளனர். உயர்நீதி மன்றம், செங்கல்பட்டு பிரதம குற்ற இயல் நீதிபதியின் ஆணையையும் ஜார்ஜ் டவுன் 16 ஆவது மெட்ரோபாலிடன் மாஜிஸ்ட்ரேட் ஆணையையும் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது. 10—7—1980 அன்று உயர்நீதி மன்றத்தில் மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என அறியப்படுகிறது.

உணவுத்துறை குற்றப்புலனாய்வு பிரிவு பதுக்கலைத் தடுக்க தீவிரமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 1—1—1980 முதல் 30—6—1980 வரை 550 குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 343 குற்றங்கள் பதுக்கலுக்கு சம்பந்தப்பட்டவை. 162 குற்றங்கள் இருப்புகளையும் விலைகளையும் அறிவிக்காததற்காக ஏற்பட்டுள்ள குற்றங்கள். இந்த 550 குற்றங்களில் கைப்பற்றப்பட்டுள்ள இன்றியமையாப் பண்டங்களின் விலை மதிப்பு ரூ. 3.33 கோடி ஆகும். 9—6—1980 முதல் 30—6—1980 வரையிலான குறுகிய காலத்தில் மட்டும், 69 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட பண்டங்களின் விலை மதிப்பு ரூ. 2.70 கோடி ஆகும்.

<u>திரு. சேலம் மு. ஆறுமுகம்</u> : பேரவைத் தலைவரவர்களே, உணவுத் துறைக் குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகளால் இராயபுரம், திருவொற்றியூர் பகுதிகளில், ஜூன் திங்களில் 28,99,400 கிலோ, சமையலுக்குத் தேவையான, கிடைத்தற்கரிய, அந்நியச் செலாவணி மூலம் இறக்குமதி செய்யும் இந்தப் பொருள்களைப் பதுக்கி வைத்து சமையல் எண்ணெய், எண்ணெய் வித்துக்கள், பருப்பு இருப்பு ஆணை 1977 ஆம் சட்டத்திற்குப் புறம்பாக வைத்திருந்த அந்தப் பதுக்கல், கொள்ளைக்காரர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இம்மாதிரி பதுக்கல்காரர்கள் அத்தியாவசியமான பண்டங்களான சமையல் எண்ணெய் போன்றவைகளைப் பதுக்கி வைப்பதன் மூலம் செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, பஞ்சத்தை சிருஷ்டிப்பவர்களின்மீது தடுப்புக் காவல் சட்டத்தின் மூலமாக ஏன் கடுமையாக நடவடிக்கை எடுக்கவில்லை? இந்தப் பதுக்கலில் ஈடுபட்ட எவ்வளவுபேர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பதுக்கல்காரர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருள்களைப் பற்றிய விவரக்குறிப்புகள்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1980 ஜூலை 9

இங்கே தரப்பட்டிருக்கின்றன. அவர்கள்மீது தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆய்வின்போது மேலும் 819 டின்கள் பாமோலின் எண்ணெயும், 3 டேங்கர்களில் 962 டன்கள் பாமோலின் எண்ணெயும் கைப்பற்றப்பட்டுள்ளன. மொத்தத்தில் கைப்பற்றப்பட்டுள்ள பாமோலின் எண்ணெயின் மதிப்பு 2,63,97,995 ரூபாய் ஆகும். கைப்பற்றப்பட்டவைகள் ஏலத்தில் விட கோர்ட் உத்தரவிட்டுள்ளது. குற்றவாளிகளின்மீது கடுமையாக நடவடிக்கை எடுக்க காவல்துறையினர் முயன்று வருகிறார்கள். உணவுத்துறை குற்றப்புலனாய்வுப் பிரிவு பதுக்கலைத் தடுக்க தீவிரமான நடவடிக்கை எடுத்து வருகிறது. 1—1—1980 முதல் 30—6—1980 வரை 550 குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 343 குற்றங்கள் பதுக்கலுக்குச் சம்பந்தப்பட்டவை. 162 குற்றங்கள் இருப்புகளையும், விலைகளையும் அறிவிக்காததற்காக ஏற்பட்டுள்ள குற்றங்கள். இந்த 550 குற்றங்களில் கைப்பற்றப்பட்டுள்ள இன்றியமையாப் பண்டங்களின் விலை மதிப்பு 3 கோடியே 33 இலட்சம் ரூபாய் ஆகும். 9—6—1980 முதல் 30—6—1980 வரையிலான குறுகிய காலத்தில் மட்டும், 69 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட பண்டங்களின் விலை மதிப்பு 2 கோடியே 70 இலட்சம் ரூபாய் ஆகும். உணவுத் துறை குற்றப் புலனாய்வுப் பிரிவில் "Anti Hoarding Cell" என்று பதுக்கலை மட்டும் கண்டு பிடிக்க தனி செல் ஏற்படுத்தி, இதற்குக் காவல் துறை உயர் அதிகாரிகளையும் அவர்களுக்குத் துணை அதிகாரிகளையும் நியமித்துத் தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள். இவர்கள்மீது என்னென்ன வகையில் சட்டப்படி வழக்குகளைத் தொடுக்க வேண்டுமென்பதிலேயும் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

திரு. அன்பில் தர்மலிங்கம் : தலைவரவர்களே, accused என்று இருக்கிறது. அந்தக் குற்றவாளிகளின் பெயர் இல்லை. அவர்களின் பெயரைச் சொல்வதில் என்ன தவறு இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில், பெயர் கொடுத்தவர்கள் தான் கேட்க வேண்டும். மற்றவர்கள் யாரும் எழுந்து கேட்பது கூடாது என்ற முறை இருக்கிறது.

## 5. தகவல் கோரல்.

## பேரவை அலுவலர்களுக்கு பேருந்துகளில் பாஸ் வழங்குவது.

திரு. ரா. உமாநாத் : தலைவர்வர்களே, போன வருஷம் இந்த பட்ஜெட் டிஸ்கஷனின் பொழுது எம்.எல்.எக்களுக்குப் பல சலுகைகளை அறிவித்த பொழுது, குறிப்பாக இந்த அசெம்பிளி



1980 ஜூலை 9] [திரு. ரா. உமாநாத்

ஸ்டாப்புக்குப் பஸ் பாஸ் கொடுக்க வேணடுமெனறு கேட்ட பொழுது, அப்பொழுது நிதியமைச்சரவர்கள் உத்தரவாதமாக. கொடுக்கப்படும் எனறு, அசெம்பிளி நடக்கிறபொழுது—எல்லா நாடகளிலும் அல்ல—அசெம்பிளி நடக்கும் பொழுது அசெம்பிளி ஸ்டாப்புக்குக் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவா : போன தடவை நடந்தது என்றால் அதுபற்றி எழுதிக் கேளுங்கள்.

திரு. ரா. உமாநாத் : கொடுக்கபபடும் என்று அஷ்யூரன்ஸ் கொடுத்தார்கள். பிறகு ஃபைனான்ஸ் மினிஸ்டர் அவர்கள் இன்னொரு செஷனிலே, அப்படி வாக்குறுதி கொடுக்கப்பட்டால் அது கொடுக்கப்படும் என்று தட்டிக் கழித்தார்கள். மூன்று செஷன்கள் முடிந்து விட்டன. இந்த செஷனுக்கும் கொடுக்க வில்லை. கொடுக்கிற வாக்குறுதிக்கு என்ன மதிப்பு? உடனடியாக அந்த வாக்குறுதிப்படி பஸ் பாஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றி எழுத்து மூலம் கொடுங்கள்.

[முற்பகல் 10-30]

## 6. 1980-81-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம்—விவாதம்—தொடர்ச்சி.

*திரு. எஸ். ஆண்டித்தேவர் : பேரவைத் தலைவர் அவர்களே, 1980-81-க்கான நிதிநிலை அறிக்கையின் மீது அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக எனது கருத்தினையும் கூறுவதற்கு அனுமதி அளித்த தலைவருக்கு நன்றியைக் கூறிக் கொள்கிறேன். இப்பொழுது, அவை முன் வைக்கப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கை ஏழை, எளிய மக்களுக்கு ஒரு நல் வாழ்வு அளிக்கின்ற நிதிநிலை அறிக்கையாக இருக்கிறது என் பதனைக் கூறுவதோடு, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது எங் களது இயக்கத்தின் சார்பாக நான் வரவேற்று, இந்த நாட்டி லுள்ள ஏழை, எளிய அடித்தளத்து மக்களுக்கு நல் வாய்ப்பளிக் கின்ற நிதிநிலையாக இருக்கிறது என்பதனைக் கூறுவதோடு, இந்த நாட்டில் 100-க்கு 80 விவசாய மக்களுக்கு இதுவரையில் கொடுக்கப்படாத கடன் நிவாரணம்—இந்த அரசால் ரூ. 60 கோடி அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அதையும் குறிப் பாக, 5 ஏக்கர் நிலங்களுக்குக் குறைவாக உள்ளவர்களுக்கும், 5 ஏக்கர் உள்ளவர்களுக்கும் கொடுத்திருப்பதை நான் உளமா வரவேற்கிறேன்.

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1980 ஜூலை 9

அதே நேரத்தில், 5 ஏக்கருக்கு அதிகமாக வைத்திருக்கின்ற விவசாயிகளுக்கும், அவர்கள் பெற்றிருக்கிற கடன் தொகைகளை நீண்ட காலக் கடனாக மாற்றியும், பெற்ற கடன்களுக்கு வட்டியைத் தள்ளுபடி செய்தும் கடனை வசூலிப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, இந்த விவசாயக் கடன்களை ரத்து செய்து நிவாரணம் அளிக்கின்ற பொழுது, இந்த அரசு அதைச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசிடம் நிதி உதவி கேட்டு எழுதியிருக்கிறோம் என்று அறிவித்ததோடு, இந்த மன்றத்திலுள்ள அத்தனை அங்கத்தினர்களும் அதை ஏற்று, ஆதரவாக தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதை எங்களது அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியின் தலைவர் நேதாஜி அவர்கள் 1939-ம் ஆண்டிலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தியாவிலே ஒரு ஆட்சி ஏற்பட வேண்டுமானால், மத்தியிலே இருக்கக்கூடிய ஆட்சி There should be a strong Central Government at the same time we want an Independent and Republic State என்று எங்களது இயக்கத்தினுடைய திட்டவட்டமான கொள்கையை நேதாஜி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மத்தியிலே நிலையான, உறுதியான ஆட்சிவேண்டும். அதே சமயத்திலே மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கூடக் கேட்கவில்லை. நேதாஜி அவர்கள் சுதந்திர மாநிலம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதை அடிப்படையாக வைத்து, சென்ற 1977-ம் ஆண்டு ஜூன் திங்கள் 29-ம் நாளிலே, மதுரையிலே கூடிய, எங்களது அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியினுடைய தேசியக் கவுன்சில் (National Council) கூட்டத்திலேயும் அந்தத் தீர்மானத்தை நிறை வேற்றியிருக்கிறோம். மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்பதனை வலியுறுத்தி அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியினுடைய தேசியக் குழு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

அது மட்டுமல்ல, எங்களது இயக்கத்தின் சார்பிலே ஆட்சிப் பொறுப்பிலேயிருக்கிற வங்க மாநிலத்திலும், திரிபுரா மாநிலத்திலும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும், அப்பொழுதுதான் சமதர்ம சமுதாயத்தை அமைப்பதற்கு, நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மாநில அரசுகளால் முடியும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அதைப் போன்றுதான் கேரள மாநிலம், மற்றும் இடதுசாரி அணி இருக்கிற மாநிலங்களில், மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று, இந்த அரசும் மத்தியிலே இருக்கிற அரசு, மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரம் வழங்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றுகின்ற பொழுது, எங்களது



1980 ஜூலை 9] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

இயக்கத்தின் சார்பாக நாங்கள் தெள்ளத் தெளிவாகக் கூறிக் கொள்கிறோம், அதற்கு ஒத்துழைப்புத் தர எங்களது இயக்கம் தயாராக இருக்கிறது என்று.

வேளாண்மைத் துறையிலே நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்காக இந்த அரசு நல்ல பல திட்டங்களை அறிவித்திருக்கிறது. இருந்தாலும் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்காக மூல விதை உற்பத்தி செய்வதற்காக, 14 இடங்களிலே வேளாண்மைத் துறை மூலமாக மூல விதைகளைக் கொடுக்க இந்த ஆண்டு அதிக நிதி ஒதுக்கம் செய்திருக்கிறார்கள். நான் அதிலே ஏற்படுகின்ற சில தவறுகளைச் சுட்டிக் காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

மூல விதைகள் உற்பத்தி என்ற பெயரால், தனி நபர்கள், தனி விவசாயிகள், இந்த விதைகளை வாங்கும்போது, விவசாயிகளுக்கு, தனி நபர்களுக்குக் கொடுக்கின்ற நல்ல விதை என்ற பெயரால், சாதாரண மார்க்கெட் விலையை விட ரூ. 10 அல்லது ரூ. 15 அதிகமாகக் கொடுத்து, தனியாரிடம் விலைக்கு வாங்கி, அதைத்தான் ஊராட்சி ஒன்றியங்களிலிருந்தும் மற்ற விவசாயப் பண்ணைகளிலிருந்தும் விவசாயிகளுக்கு வழங்குகிறார்கள்.

அப்படி வழங்குகிற நேரத்தில் சென்ற முறை எனது தொகுதிக்குப் பக்கத்துத் தொகுதியான திருமங்கலம் தொகுதியில் 2,000 மூட்டை கடலை விதைகளை வெளி மார்க்கட்டில் குறைந்த விலைக்கு வாங்கி அரசு, பண்ணையில் அதை 10,15 ரூபாய் அதிகம் வைத்து தனி நபர் ஒருவர் விற்றிருக்கிறார். அதன் மூலம் கிடைத்த பணத்தை அவர்கள் அதிகாரிகளும், அந்தத் தனி நபரும் பிரித்து எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். இது போன்ற குறைகள் நிகழாத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, பஞ்சாயத்து யூனியன்களில் தக்காளி விதைகள் ஒரு கிலோ ரூ. 250 என்று கொடுக்கிறார்கள். அப்படி ஒரு கிலோ தக்காளி விதை ரூ. 250 என்று கொடுத்தால், அதை வாங்கி விவசாயிகள் பலன் அடைய முடியாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட மூல விதைகளைக் குறைந்த விலையில் கொடுக்க ஆவன செய்ய வேண்டும். மேலும் பஞ்சாயத்து யூனியனில் விற்கப்படுகின்ற மூல விதைகளை தனியார் வாங்கிக் கொள்ளை லாபம் அடிப்பதையும் தடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நல்ல மூல விதைகளை விவசாயிகளுக்குக் கொடுக்கவும், அரசுப் பண்ணைகளில் உற்பத்தி செய்கிற விதைகளையே கொடுக்க வேண்டும் என்றும் இந்த நேரத்தில் நான் அரசுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[திரு. எஸ். ஆண்டித்தேவர்] [1980 ஜூலை 9

இந்த நிதிநிலை அறிக்கையில் மீனவர்களுக்கு வீட்டு வசதி, குடிநீர் வசதி, சாலை வசதி என்று அறிவித்து இருக்கிறார்கள். என்னுடைய முகவை மாவட்டத்தில் அங்கேயிருக்கும் ராமேஸ்வரம் தீவில் உள்ள மீனவர்கள் பாதுகாப்பு இல்லாத நிலையில் அவர்கள் பல நேரங்களில் நஷ்டத்திற்குள்ளாகிற நிலையில் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கேயுள்ள மீனவர்களுக்கு விசைப் படகு கொடுக்கப்பட்டு இருக்கிறது. விசைப் படகு வைத்திருப்பவர்கள் 3 மைல் கடலுக்குள் சென்றுதான் மீன் பிடிக்க வேண்டும். 3 மைல் கடலுக்குள் சென்று மீன் பிடிக்கச் செல்கிறபோது, அண்டையில் இருக்கும் சிலோன் நாட்டிலிருந்து கப்பல் மூலமாக அந்தப் பகுதிக்கு வந்து நம்முடைய மீனவர்களுடைய படகுகளைக் கவிழ்த்து விடுகிறார்கள், அல்லது மீன் வலைகளை பிடுங்கிக் கொண்டு போய் விடுகிறார்கள். அதன் காரணமாக நம்முடைய மீனவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. அவர்கள் வைத்துள்ள ரூ. 20,000 பெறுமான வலையை இழந்து விட்டால் அதற்கு எந்தவிதமான நஷ்ட ஈடும் கிடையாது. விசைப் படகு என்று சொன்னால் கிட்டத்தட்ட 1 லட்சம் ரூபாய் ஆகிறது. இந்த விசைப் படகு வாங்கவும், மீன் வலைகள் வாங்கவும் அரசிடம் தான் அந்த மீனவர்கள் கடன் பெறுகின்றனர். ஆனால் அவர்களுக்கு கடலில் இப்படிப்பட்ட நிலை ஏற்படுகிறது என்று சொன்னால், ஒரு பாதுகாப்பற்ற நிலை இருக்கிறது என்று சொன்னால், அதைத் தடுக்க இந்த அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கவும், படகு இழந்தவர்களுக்கு நஷ்ட ஈடு அளிக்கவும், வலை இழந்தவர்களுக்கு வாங்கிய கடன் தள்ளுபடி செய்யவும், போன்ற நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிகழ்ச்சிகள்—பைரசி என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே,—அதாவது கடல் கொள்ளை போல் இருக்கிறது. இதைத் தடுக்க நம்முடைய அரசு கப்பல் படை அமைத்து அந்த மீனவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

60 வயதிற்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு பென்ஷன் தரப்படும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டு இருந்தும், அவர்களுக்கு எந்த அளவிற்குப் பென்ஷன் தரப்படும் என்று அறிவிக்கப்படவில்லை, அது திட்டவட்டமாக அறிவிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டோர், பிற்பட்டோர் நலன் குறித்துச் சொல்ல விரும்புகிறேன். இங்கே சில சலுகைகள் சொல்லப்பட்டு இருக்கின்றன. இட ஒதுக்கீட்டில் 50 சதவிகிதம் என்று ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்கது. இந்த பிற்பட்டோர் பட்டியலில் 'டிநோடிபைட் ட்ரைப்ஸ்'—எக்ஸ்—கிரிமினல் ட்ரைப்' வரும்— அவர்களுக்கும் அந்தச் சலுகை கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அவர்கள் குற்றப் பரம்பரை சட்டத்தால் ஆங்கிலேயர்



1980 ஜூலை 9] [திரு. எஸ். ஆண்டித்தேவர்]

காலத்திலேயே கஷ்டப்பட்டவர்கள். அவர்களுக்கு பிற்பட்டோர் பட்டியலில் இடம் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்வதை விட, 'டிநோடிபைட் ட்ரைப்' என்பதற்காக தனியாக 'ஷெட்யூல்ட் காஸ்ட், ட்ரைப்'-க்கு ஒதுக்குவது போல் இட ஒதுக்கீடு ஒரு சில பர்சன்டேஜ் இருக்க வேண்டும் வேலை வாய்ப்பு கொடுக்கும் விஷயத்தில் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-40]

இங்கே பெரியார், அண்ணா அவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்புவதாகக் கூறப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டில் தந்தை பெரியார் அவர்களுடைய நினைவு கொண்டாடப்பட்டு அவர்களுக்கு ஒரு மாவட்டத்தின் பெயரே வைக்கப்பட்டுள்ளது. அண்ணா அவர்களுடைய வீட்டை வாங்கி அது நினைவுச் சின்னமாக ஆக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறேன். அதேபோன்று முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு அரசு விழா வெடுத்து இரண்டு ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. ஆனால் அந்த விழா மதுரையில் மட்டும்தான் நடைபெறுகிறது. அதை மாநிலம் முழுவதும் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அவர்கள் குடி இருந்த வீட்டை வாங்கி அதை நினைவுச் சின்னமாக ஆக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது). மதுரையிலே நடைபெற விருக்கும் உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி, பாண்டித்துரைத் தேவருக்கும் நினைவுச் சின்னம் அமைக்க வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொண்டு, என்னுடைய தொகுதியைப்பற்றி ஒரு சில வார்த்தைகளை சொல்ல ஆசைப்படுகிறேன்.

உசிலம்பட்டியிலே இருந்து லிங்கப்பநாயக்கனூர் வரையில் உள்ள 14 கிலோ மீட்டர் ரோடு மிகவும் மோசமாக உள்ளது. யாரோ அதிகாரிகள் டென்டர் விடுவதிலே 1972 ஆம் ஆண்டு தவறு செய்துவிட்டபடியால், அது விஜிலன்ஸில் 8 ஆண்டு காலம் இருப்பதால், அந்த ரோடு பழுது பார்க்கப்படாமல் இருக்கிறது. அது சுப்ரீம் கோர்ட்டில் இருப்பதால் அதில் சட்டப் பிரச்சனை இருக்கிறது. எனவே அதை அப்படியே வைத்து, மறு டெண்டர் கேட்டு அந்த 14 கிலோ மீட்டர் சாலையை பழுது பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1952 முதல் இந்த தொகுதியிலே எந்தத் தொழிலும் துவக்கப்படவில்லை. உசிலம்பட்டி நகருக்கு குடிதண்ணீர் திட்டம் போடப்பட்டு, 17 லட்சம் ரூபாயில் திட்டம் இடப்பட்டு அதிகாரிகளால் பரிசிலிக்கப்பட்டும், கடந்த 2 ஆண்டுகாலமாக வேலைகள் துவக்கப்படாமல் இருக்கின்றன. இதனால் அந்தப் பகுதி மக்கள் குடிநீரின்றி பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எங்கள் தொகுதியில் விளக்குகள் எரிவதில்லை.

[1980 ஜூலை 9

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு ரொம்ப நேரம் ஆகும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : இந்த அரசு நல்லபல திட்டங்களை அறிவித்திருக்கிறது. ஆனால் அந்த திட்டங்கள் நாட்டு மக்களுக்குப் போய்ச்சேராவண்ணம் அதிகாரிகள் தடையாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகளை மாற்றிவிட்டு நாட்டு மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய அதிகாரிகளை போட இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். நாட்டு மக்களுக்கு இப்படிப்பட்ட திட்டம் நல்லபடியாக சேருகின்ற அளவில் நடைமுறைப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு வாய்ப்பு தந்தமைக்காக நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் உரையும் இன்றைக்கேதான். தலைவர்கள் ஒத்துழைத்தால் சாப்பாடு நேரத்திற்கு சபை கலையும்.

*திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அவை முன்னவர் அளித்துள்ள இந்த நிதிநிலை அறிக்கையின்மீது எங்களுடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் பல விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். நான் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மேலும் சில விவரங்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

வழங்கப்பட்டிருக்கிற வரவு—செலவுத் திட்டத்தில், ஆயிரம் கோடி ரூபாய் வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். இப்போது மத்திய அரசின் நடவடிக்கைக் காரணமாக, அவர்கள் சமர்ப்பித்து இருக்கும் பட்ஜெட்டின் காரணமாக நாம் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மத்திய சர்க்கார் இன்று பெரிய முதலாளிகளுக்கு ஆதரவாக, அவர்கள் கடைபிடிக்கின்ற கொள்கையின் காரணமாக, விலைவாசிகள் ஒரே வாரத்திற்குள் 4 புள்ளிகள் ஏறியிருக்கின்றன. இதுவரையில் கடந்த 30 ஆண்டுகளாக ஒரு வாரகாலத்தில் 4 புள்ளிகள் உயர்ந்ததே கிடையாது. இந்த ஆண்டு அவர்கள் சமர்ப்பித்த பட்ஜெட்டில் பெரு முதலாளிகளுக்குச் சலுகையளித்து இருப்பதால் தான் விலை உயர்வு சாதாரண விவசாயிகள் உபயோகிக்கும் உரம், டீசல் போன்றவைகளின் விலை உயர்த்தப்பட்டுள்ளது. மத்திய அரசின் பட்ஜெட்டினால் மக்களுக்குப் பாதகம் ஏற்பட்டிருக்கிற நேரத்தில், மாநில நிதி நிலை அறிக்கையில் நிவாரணம் அளிக்கப்படவேண்டும் என்ற அந்த நல்ல நோக்கத்தோடு அளித்திருக்கின்ற அவர்களின் அணுகு முறையைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.





குறிப்பாக நம்முடைய பட்ஜெட்டில் பெரிய தொழில்களைத் தொடங்குவதற்கு முயற்சி செய்திருக்கலாம்; அது பற்றி ஆராய்ந்து பார்க்கவேண்டும். இந்திய அரசு நமக்குக் கொடுக்கக்கூடிய உதவிகள் நாளுக்கு நாள் குறைந்து வந்திருக்கிறது என்பதைத் தெளிவாக நம்முடைய அவை முன்னவர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, நம்முடைய மாநிலத்தின் வளர்ச்சி விகிதம் தனி மனிதனுடைய திட்டச் செலவு கூட குறைந்துகொண்டே வந்து, இன்றைக்கு 19 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறது என்ற விவரத்தையும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. இன்றைக்குத் தொழில் தொடங்க வேண்டுமென்றால் மத்திய அரசுக்கு நாம் விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டும். சென்ற ஆண்டு 49 விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இப்போதும் அனுப்பி இருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் அவர்கள் அனுமதி வழங்க வேண்டும்; ஆனால் அப்படி வழங்கப்படுவதில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. சீக்கிரமாக அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

புதிய தொழில்களைத் தொடங்க நம்முடைய மாநிலத்தில் என்னென்ன வசதிகள் இருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். பல இடங்களில் தொழில் தொடங்க வாய்ப்பு இருந்தும் தொடங்கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதையும் பார்க்க வேண்டும்.

இந்த அறிக்கையிலே ஒன்றை மட்டும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது மின்சாரத்திற்கு 150 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதிலே கூட கல்பாக்கம் அனல் மின் நிலையம் கட்டும் பணி திட்டமிட்டபடி வேகமாகச் செயல்படவில்லை. அதனால் பலவிதமான கஷ்டங்கள், மின்சாரம் கிடைக்காமல் தொழில்கள் சீராக நடப்பதற்கு மிகவும் கஷ்டமான நிலை ஏற்பட்டுள்ளது. அதையெல்லாம் நம்முடைய முயற்சியால் மட்டும் செய்துவிட முடியாது. மத்திய அரசின் முயற்சி பெருமளவுக்கு வேண்டும். எனவே, பல்வேறு பிரச்சனைகளில் கேரள அரசும், வங்காள அரசும் மத்திய அரசின் போக்கை எதிர்த்து குரல் கொடுக்கும்போது நாமும் அவர்களோடு இணைந்து குரல் கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக இன்றைக்கு நம்முடைய நிதிநிலை அறிக்கையில் பிரதானமாகச் சொல்லப்பட்டிருப்பது, விவசாய உற்பத்திக்கான பல திட்டங்கள். நீண்ட நெடுங்காலமாக விவசாயிகள் தங்களுடைய கோரிக்கைகளின் பிரதானமாக சொல்லிக் கொண்டிருப்பது, விளைபொருளுக்கு கட்டுப்படியாகும் விலை

[திரு. சோ. அழகர்சாமி] [1980 ஜூலை 9

கிடைக்க வேண்டும் என்பது. கட்டுப்படியான விலை கிடைக்காததால் விவசாயிகள் வாங்கியக் கடனை கட்ட முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அதனால் மிகப்பெரிய போராட்டம் எல்லாம் வந்தது. அவர்களுடைய இந்த கோரிக்கைகக்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இந்த கோரிக்கையை மாநில அரசு மட்டும் நிறைவேற்ற முடியாது. நியாயமான விலை விளைபொருளுக்கு நிர்ணயம் செய்ய வேண்டுமானால், அதற்கு மத்திய அரசு ஒப்புதல் வேண்டும் அவர்கள்தான் விலை நிர்ணயம் செய்கிறார்கள். அதற்கு மத்திய அரசுதான் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆகவே, மத்திய அரசை வற்புறுத்தி, நியாயவிலை நிர்ணயம் செய்வதற்கு போராட்டம் நடத்தாமல் அவர்கள் செய்ய மாட்டார்கள். தேவைப்பட்டால் அதற்கு நாம் தயாராக வேண்டும்.

அதே நேரத்தில் 5 ஏக்கருக்கு குறைவாக நிலம் வைத்திருப்பவர்களின் கடன்களை தள்ளுபடி செய்து அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார்கள். இதில் 5 ஏக்கர் என்றால் 5 சாதாரண ஏக்கரா அல்லது 5 ஸ்டான்டர்டு ஏக்கரா என்பது தெளிவாக்கப்படவில்லை. புஞ்சை நிலங்களுக்கும் 5 ஏக்கர் என்று சொல்வது பொருத்தமல்ல. இராமநாதபுரம், நெல்லை, மதுரை, திருச்சி போன்ற மாவட்டங்களில் எல்லாம் வெறும் வானம் பார்த்த பூமியாக பெரும்பகுதி இருக்கிறது. அவை மழையை நம்பியே விளையும் நிலங்கள். அதற்கும் 5 ஏக்கர் என்றால் அர்த்தமில்லை. உச்சவரம்பு சட்டத்தில் நிலத்திற்குச் சொன்னதைப்போல 5 ஸ்டான்டர்டு ஏக்கர் என்று இருக்க வேண்டும். 5 ஸ்டான்டர்டு ஏக்கர் என்றால் புஞ்சை நிலத்தில் 15 ஏக்கர் வரையில் அதில் அடங்கும். புஞ்சை நிலம், வானம் பார்த்த பூமி 20, 30 ஏக்கர் ஒருவருக்கு இருந்தாலும் அதனால் பிரயோஜனம் இல்லை. மழை இல்லை என்றால் விளையாது. ஆகவே இதையெல்லாம் கருத்திற்கொண்டு, 5 ஏக்கர் என்பதை 5 ஸ்டான்டர்டு ஏக்கர் என்று திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் அறிவித்திருப்பதுமாதிரி 5 ஏக்கர் நிலத்திற்கு உட்பட்டு நிலம் வைத்திருப்பவர்களுடைய கடனை எடுத்துக் கொண்டால் கூட 1978 டிசம்பர் 31-ந் தேதி வரையில் நிலுவையாக இருக்கிற பணம் 158 கோடி ரூபாய். குறுகிய கால கடனும் மத்திய கால கடனாக 18 கோடி ரூபாயும் மூன்றாண்டு கடனாக மாற்றப்பட்ட கடன் 81 கோடி ரூபாயும் ஆக 258 கோடி ரூபாய் மொத்தக் கடன் இருக்கிறது. அதன்படி பார்த்தால் 5 ஏக்கருக்கு கீழ் நிலம் வைத்திருப்பவர்களுக்கு 50 சதவீதம் கடனை ரத்து செய்வது என்றால் ஏறத்தாழ 125 கோடி ரூபாய் தள்ளுபடி செய்திருக்க வேண்டும். ஆனால் நீங்கள்



1980 ஜூலை 9] [திரு. சோ. அழகர்சாமி]

ரத்து செய்திருக்கிற கடன் அசலில் 35 கோடி ரூபாயும், வட்டியில் 7 கோடி ரூபாயும் ஆக 42 கோடி ரூபாய் தள்ளுபடி செய்து அறிவித்திருக்கிறீர்கள்.

[முற்பகல் 10—50]

இதுபோது ஏறக்குறைய 90 கோடி ரூபாய் 5 ஏக்கருக்குக் கீழே நிலம் வைத்திருப்பவர்கள் செலுத்தவேண்டியதிருக்கும். அவர்களால் அதை எப்படிச் செலுத்த முடியும்? ரூ. 1,000 கடன் பெற்றவர் அதற்குரிய வட்டியைச் செலுத்தினால்தான் கன்வர்ஷன் கொடுக்க முடியும் என்று கூட்டுறவு விதி இருந்தது. ஆகவே இன்றைக்கு பல சிறு விவசாயிகளின் கடன்களுக்கு கன்வர்ஷன் கொடுக்கப்படாத சூழ்நிலை இருக்கின்றது. வறட்சி, புயல் போன்ற காலங்களில் வாங்கப்பட்ட கடன்களுக்கு கன்வர்ஷன் கொடுக்கவேண்டும் என்று சட்டம் இருந்தாலும்கூட அதிலே ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாக வாங்கியவர்கள் வட்டியினைக் கொடுத்தால்தான் அது மூன்றாண்டுகளாக மாற்றப்படும் என்று சொல்லப்பட்டு இருக்கின்றது. அப்படி இருக்கின்ற காரணத்தால்தான் பல விவசாயிகளின் கடன்கள் மத்திய காலக் கடனாக மாற்றப்படாமல் இருக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. அதிகாரிகள் கொடுத்திருக்கின்ற கணக்கைப் பார்த்தாலே சிறு விவசாயிகள் என்று சொல்லப்படுகின்ற 5 ஏக்கருக்கு குறைவாக நிலம் வைத்திருப்பவர்கள் கொடுக்கவேண்டிய கடன் பாக்கி கிட்டத்தட்ட 125 கோடி நிலுவையாக இருக்கின்றது. ஆகவே அவர்களுக்கு இந்தக் கடனை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து புதிதாக சாகுபடி செய்யக்கூடிய நிலை இருக்கின்றது. இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் குறுவை சாகுபடி செய்யவேண்டிய பருவம் வந்துள்ளது. அவர்களுக்கு கூட்டுறவுக் கடன்களை விட்டால் வேறு வழியே கிடையாது. அவர்கள் வேறு வகைகளிலே கடன் வாங்குகின்ற சக்தி இல்லாமல் இருக்கின்றார்கள். ஆகவே கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக அவர்களுக்குத் திரும்பவும் கடன் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது ஒரு பிரதானமான பிரச்சினை. ஆகவே இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும் விவசாயிகளுக்கு இப்படிப்பட்ட கடன்களை வழங்குகின்றபோது இந்தக் கடன்களை எல்லாம் அந்த விவசாயிகளால் திருப்பிக்கொடுக்க முடியும் என்பதற்கு என்ன உத்தரவாதம். ஏனென்றால் இன்றைக்கு அவர்களுக்குச் சரியான விலை உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்குக் கிடைப்பதில்லை. உற்பத்திச் செலவை விட விலைகுறைவாக இருக்கின்றது. நெல்லுக்கு 130 ரூபாய் கொடுக்கவேண்டும் என்று நாமெல்லாம் முன்பு கேட்டுக்கொண்டிருந்தோம். மத்திய அரசு

105 என்று நிர்ணயித்திருக்கின்றது. ஆனால் 150 ரூபாயாவது கிடைக்க வேண்டுமென்று விவசாயிகள் கேட்கிறார்கள். ஆனால் உண்மையான நிலை என்ன? நெல் அறுவடை ஆன உடனேயே ஒரு மூட்டை 45 ரூபாய்க்கு வந்துவிடுகின்றது. இதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். சிறு சிறு விவசாயிகள் எல்லாம் இவ்வாறு கட்டாயமாகக் குறைந்த விலைக்கு விற்கவேண்டிய நிலைக்கு நிர்பந்தப்படுத்தப் படுகிறார்கள். ஆனால் அதிகமாக நிலம் வைத்திருக்கக்கூடிய விவசாயிகள் இவர்களுடைய நெல்லையும் சேர்த்து வாங்கி வைத்துக்கொண்டு 100 ரூபாய், 80 ரூபாய் என்று பிறகு கூட்டி விற்கிறார்கள். இந்த நிலை தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றது. ஆகவே நியாயமான விலையை விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்கின்ற நேரத்தில் மத்திய அரசை இணங்க வைக்கின்ற வகையில் நாம் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று வற்புறுத்த விரும்புகிறேன்.

அடுத்து பருத்தி ஒரு மிகப் பிரதானமான பொருளாகும். பருத்தியை வாங்க நாதி கிடையாது. அதுபற்றிக் குறிப்பிடுகின்றபோது புதிதாக மில்களை எல்லாம் திறக்க அனுமதி அளிக்கப் போகிறோம் என்று சொல்கிறீர்கள். அந்த அனுமதியைத் தனியாருக்குக் கொடுப்பதற்குப் பதிலாக கூட்டுறவுத்துறையிலே கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தனியார் மில்களிலே இன்றைக்குப் பருத்தியை வாங்குவதிலே பலவிதமான மோசடிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அது மூன்று நான்கு கைகள் மாறிச் செல்கின்ற நிலை ஏற்படுவதால், உற்பத்தி செய்த விவசாயிக்கு மிகக் குறைந்த விலைதான் கிடைக்கின்றது. ஆகவே விவசாயிகளிடமிருந்து பஞ்சை வாங்குகின்ற மில் அதிபர்கள் கோடி கோடியாகக் கொள்ளை அடிக்கின்ற நிலை இருக்கின்றது. அந்தக் கொள்ளையைத் தடுக்கவேண்டுமென்றால் அரசு தைரியமாக நடவடிக்கை எடுத்து விவசாயிகளுக்குப் பருத்திக்கு நியாயவிலைக் கிடைக்கச்செய்ய வேண்டும். மேலும் புதிதாக கூட்டுறவுத் துறையிலே மில்களைத் துவக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மஹாராஷ்டிர மாநிலத்தை எடுத்துக் கொண்டால் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பருத்திக்கு நியாயமான விலை கிடைப்பதற்காக மாநில அளவில் ஒரு ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் என்ற ஒரு கழகத்தை ஆரம்பித்து ஏகபோகமாக அவ்வளவு பஞ்சையும் வாங்கி மில்களுக்குக் கொடுக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் அதிலே லாபம் வருகின்றபோது போனஸ் என்ற வகையிலே விவசாயிகளுக்கும் லாபத்திலே பங்குகொடுக்கின்ற நிலை அங்கே இருக்கின்றது. ஆகவே அந்த முறையிலே நமது மாநில அரசும் விவசாயிகளுக்கு நியாயமான விலை கொடுக்க





ஏற்பாடு செய்யவேண்டும் என்பது பற்றிச் சிந்தித்து ஒரு முடிவு எடுத்தாகவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இப்போது பல சட்டங்கள் போடப்படுகின்றன. ஆனால் அப்படிப்பட்ட சட்டங்கள் எல்லாம் சரியாக அமல் நடத்தப்படுகின்றனவா என்று பார்க்கவேண்டும். நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் சென்ற ஆண்டு இரண்டு சட்டங்களை இங்கே கொண்டுவந்தார்கள். அதாவது குத்தகை விவசாயிகள் இருக்கின்ற குத்தகை பாக்கிகளை எல்லாம் செலுத்த நிவாரணம் அளிக்க ஓராண்டு பாக்கியை மூன்று தவணைகளில் செலுத்தினால் முன்பாக்கி ரத்தாகும் என அறிவித்தார்கள். இப்போது 1384-வது பசலியிலே இருந்து குத்தகை பாக்கி இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்தபடி ஜூன் 30-ஆம் தேதிக்குள் கட்டவேண்டும் என்று இருக்கின்றது. ஆனால் ஜூன் மாதம் முடிந்துவிட்டது. அவ்வாறு செலுத்தாதன் காரணமாக எங்களுடைய மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் கோர்ட்டில் மட்டும் கிட்டத்தட்ட 1,500 வழக்குகள் விவசாரணையில் இருக்கின்றன.

ஆக அவையெல்லாம் பார்த்து, 1384–ம் பசலிக்கு முன்பிருந்த பாக்கியை யெல்லாம் சேர்த்து, அவைகள் ஏற்கனவே தள்ளுபடி செய்யப்பட்டவை—இன்று வரையுள்ள பாக்கிகளை, இரண்டு வருட குத்தகை பாக்கிகள் முன்பு செலுத்தியது போக மீதியை மூன்றாண்டு தவணைகளில் செலுத்தும் வகையில் ஏற்பாடுகள் செய்யவேண்டும். இந்த முறையில் செலுத்திவிட்டால், மற்ற பாக்கிகள் ரத்து செய்யப்படும் என்பது போன்ற நிவாரணத்தை அவர்களுக்கு அளிக்க வேண்டும்.

1384-ஆம் பசலியிலிருந்து புயல், வெள்ளம், வறட்சி எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. அவை உங்களுக்கும் தெரியும். அதனால் அந்த பழைய பாக்கிகளை எல்லாம் 2 ஆண்டு குத்தகை பாக்கிகளை 3 தவணைகளில் செலுத்திவிட்டால் பழைய பாக்கிகள் அனைத்தும் ரத்து செய்யப்படும் என்று சொல்லிவிடுங்கள். அதோடு, ஜூன் 30–ம் தேதி செலுத்துவதற்கு கடைசி நாள் என்று இருப்பதை டிசம்பர் 30-ஆம் தேதி என்று மாற்றியமைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் எல்லா இடங்களிலும் இந்த குத்தகை பாக்கி இருந்து கொண்டிருக்கிறது. அதனால் கொஞ்சம் தவணை கொடுத்தால் நல்லது.

அடுத்து இந்த கூட்டுறவு சங்கங்களின் கடன்கள். மகாராஷ்டிர மாநிலத்தில் கூட இந்த கூட்டுறவுச் சங்கக் கடன்களை ரத்து செய்திருப்பதாக பத்திரிக்கையில் பார்த்தேன். இது வரையில் நாம் அவைகளை நீட்டித்துக் கொண்டே போனோமே தவிர இப்போதுதான் அவைகளை தள்ளுபடி செய்திருக்கிறோம். அந்த வகையில் நான் முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். கட்டமுடியாத நிலையில் இருப்பவர்கள் கடனை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று மனிதாபிமானத்தோடு எண்ணி அந்தப் பிரச்னையை நீங்கள் அணுகி இருக்கும் முறையினை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, 4,800 ரூபாய் ஆண்டு வருமானம் உள்ளவர்கள், எந்தக் கடன் வாங்கியிருந்தாலும், யாரிடம் வாங்கியிருந்தாலும் ரத்து செய்யப்பட வேண்டும் என்று சட்டம் போட்டிருக்கிறோம். ஆனால் இதில் முக்கியமான பிரச்னை என்னவென்று சொன்னால், 4,800—க்கு குறைவாக வருமானம் வருகிறது என்பதை நிரூபிக்க முடியாமல் கடன் வாங்கியவர்கள் திண்டாடுகிறார்கள். தாசில்தார் ஆபீசுக்கு மனு கொடுத்தால், அவர்கள் உன் வருமானம் 4,800க்கு மேல் வருகிறது என்று ஏதோ காரணம் காட்டி மனுவை தள்ளுபடி செய்கிறார்கள். அதனால் அவனுக்கு ஆண்டு வருமானம் 4,800—க்கு மேலே வருகிறதா, குறைவாக வருகிறதா என்று நிரூபிக்கும் பொறுப்பு கடன் கொடுத்தவர்களுக்குத்தான் இருக்க வேண்டும். அந்த வகையில் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும்.

அதோடு, இந்த வருமான வரம்பு ஆண்டுக்கு 4,800—க்கு குறைவுதான் என்று நிரூபிக்க ஒருவன் தாசில்தார் அலுவலகத்தில் மனு கொடுத்திருந்தால், இந்த மனு அங்கே நிலுவையில் இருக்கும்போதே, கோர்ட்டில் சிவில் வழக்குப் போடப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஜப்தி, ஏலம் எல்லாம் நடைபெற்று விடுகிறது. ஏனென்றால், அப்படி சட்டத்தில் பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது. தாசில்தார் அலுவலகத்தில் கடன் நிவாரணம் வேண்டி மனு கொடுக்கப் பட்டிருந்தால், அதற்கான விசாரணை முடியும்வரை சிவில் கோர்ட் நடவடிக்கை மேற்கொள்ளப்படக்கூடாது என்று சட்டத்தில் பிரத்தியேகமாக எந்தவித பாதுகாப்பும் இல்லை. அப்படிச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர வேண்டும். அதேபோல் சில சட்டங்கள் சரிவர அமுல் நடத்தப்படுவதில்லை ஏன்? அதற்காக அதிகாரிகளை மட்டும் நம்பியிருப்பது தான் காரணம். அதிகாரிகளால் மட்டும் அவைகளை நடத்துவதற்கு, அமுலில் கொண்டு வருவதற்கு முடியாது என்பது அனைவருக்கும் தெரியும். அவைகள் சரியாக [illegible]





நடத்தப்பட வேண்டும் என்று சொன்னால், அவைகளில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். குறிப்பிட்ட தொகைக்கு மேல் வருமானம் வருகிறதா இல்லையா என்று நிரூபிக்கும் பொறுப்பை கடன் கொடுத்தவர்கள் ஏற்க வேண்டும், அல்லது தாசில்தார் அலுவலகத்தில் அதற்கான மனு கொடுக்கப்பட்டிருந்தால் அந்த விசாரணை முடியும் வரை கோர்ட் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்று அந்தச் சட்டங்களிலேயே திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த வரவு செலவுத் திட்டத்தில் கிராமப்புற பகுதி ஏழை எளிய மக்களுக்காக பல திட்டங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள் அதை நான் பாராட்டி வரவேற்கிறேன். அதிலே, ஆளுநர் உரையின்போது விவசாய தொழிலாளர்களுக்குப் பென்ஷன் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப் பட்டிருந்தது. அதை நாங்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றோம். ஆனால் இந்த பட்ஜெட் உரையில் அதை முதியோர்கள் பென்ஷனோடு, அனாதைகளோடு சேர்த்து விட்டீர்கள். அவர்கள் எல்லாம் மிகவும் வருத்தப்படுகிறார்கள். விவசாய உற்பத்தி பெருக்கத்திற்காக உழைத்தவர்கள். அவர்களுக்கு எந்தவிதமான வளமும் வாழ்க்கையில் இல்லை என்று சொன்னால் வருத்தம் தானே வரும்? அவர்களுக்கு குழந்தைகள் இருக்கின்றன. அநாதைகள் இல்லை. ஆனாலும் அவர்கள் குடும்பங்களை கவனிக்கவே சரியாக இருக்கிறது. இப்போது இருக்கும் விலைவாசியில் பெற்றவர்களுக்கு உதவிசெய்ய முடியாத நிலையில்தான் இருக்கிறார்கள். அது எல்லோருக்கும் தெரியும். அதனால் இந்த விவசாயிகளுக்கு, முதியோர் பென்ஷனிலோ, அநாதைகள் பென்ஷனிலோ சேர்த்துவிடாமல், அவர்களுக்கென்று தனியாக 50 ரூபாய் மாதம் பென்ஷன் தருவதாக அறிவிப்பு செய்து, அது அவர்களுக்கு முறையோடு போய்ச் சேர வேண்டிய நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் கோவில்பட்டியில் தீப்பெட்டித் தொழிற் சாலைகளுக்காக பலர் லைசன்சுகள் வாங்கி வைத்து கட்டடங்கள் கூட கட்டி, எல்லாம் ரெடியாக வைத்திருந்தும் மூலப்பொருள் குளோரைட் கிடைக்கவில்லை என்று நிறுத்தி வைத்திருக்கிறார்கள். தொழிற்சாலைகள் இயங்கவில்லை. அவர்களுக்கெல்லாம் உதவி செய்ய அரசு முன் வரவேண்டும். இதுமாதிரி குடிசைத் தொழில்களுக்கு ஊக்கம் கொடுத்து அதன் மூலப்பொருள்கள் தடை இன்றி கிடைக்க அரசு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சோ. அழகர்சாமி] [1980 ஜூலை 9

அடுத்து இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறீர்கள். ' மரக்குச்சிகள் தயார் செய்ய கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படும் ' என்று அறிவித்திருக்கிறீர்கள்.

[முற்பகல் 11—00]

அதேமாதிரி குளோரைட்போன்றவை கேரளா போன்ற மற்ற மாநிலங்களிலிருந்து வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இது மாதிரிப் பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய தொழில்களை நம் மாநிலத்தில் துவங்க வேண்டும்.

விவசாய விளைபொருள்களுக்கு நியாயமான விலை நிர்ணயம் செய்ய ஏற்பாடு செய்வதோடு, நாம் நிர்ணயம் செய்த விலை கிடைக்கும்படி உத்திரவாதம் கொடுக்க வேண்டும். பல இடங்களில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் வேண்டிய கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கு வேண்டிய பொருள்களை மொத்தமாகக் கொள்முதல் செய்து விநியோகிக்கும் ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

இன்று தொழில்கள் சம்பந்தப்பட்டவரை உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். தொழில் தகராறுகள் ஏற்பட்டால் உடனடியாக அவற்றைத் தீர்த்துவைக்க அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டும். அவற்றில் போலீஸ் தலையிடாமல் நம் நடவடிக்கைகளை அந்த முறையில் அமைத்துக் கொள்ள வேண்டும். இந்த நிதிநிலை அறிக்கையில் நல்ல திட்டங்கள் உள்ளன. அவற்றை நிறைவேற்றும்போது அதிகாரிகளை மட்டும் நம்பியிராமல் ஆங்காங்கே எல்லாக் கட்சியினரையும் கொண்ட கமிட்டிகள் அமைத்து திட்டங்கள் சீரான முறையில் நடக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். மக்கள் தங்களுக்கு வேண்டிய நிவாரணங்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள். வீட்டு மனைப் பட்டாக்களை எடுத்துக் கொண்டால் வீட்டு மனைப் பட்டாக்கள் நீண்டகாலமாக கிடைக்காமல் இருக்கிறது. வீடு கட்டும் திட்டத்தைப் பொறுத்தவரையில், கிராமங்களில், 30,000 வீடுகள் கட்டயிருப்பதாக அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. அதற்காக, சென்ற ஆண்டு ரூபாய் 5,000 கொடுத்தார்கள். இப்போது வீடு கட்ட ரூபாய் 3,000 கடன், ரூபாய் 1,000 மானியம் என்று செய்திருக்கிறார்கள். நான் கேட்டுக் கொள்வது, கடனை ரூபாய் 5,000 என்று உயர்த்தினால்தான் வீடு கட்ட உதவியாக இருக்கும். ஆகவே, அந்த முறையில் இந்தத் திட்டத்தைப் பொறுத்து ரூபாய் 4,000 என்பதை ரூபாய் 5,000 என்று உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



980 ஜூலை 9] [திரு. சோ. அழகர்சாமி]

அரசாங்க ஊழியர்களைப் பொறுத்தமட்டில், மத்திய அரசில் கொடுப்பது போல் மற்ற மாநிலங்களில் அகவிலைப்படியை உயர்த்துகிறார்கள். அதே போல் நம் மாநில அரசு ஊழியர்களுக்கும் தகுந்த முறையில் அந்த அகவிலைப்படி கிடைக்க வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் சில நல்ல அம்சங்கள் இருப்பதை வரவேற்று அவற்றை அமலுக்குக்கொண்டு வர எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய சகல ஒத்துழைப்புகளையும் நாங்கள் கொடுக்கிறோம். அவற்றிற்காக ஆங்காங்கு பொது மக்கள் கமிட்டிகள் அமைத்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப் : தாற்காலிக சபாநாயகர் அவர்களே, கனம் நிதியமைச்சர் அவர்கள் இந்த சபையில் கொண்டுவந்துள்ள நிதிநிலை அறிக்கையின் மீது எனது சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நான் எற்கெனவே ஆளுநர் அவர்கள் உரைமீதான விவாதத்தில் பேசும்போது இந்த சர்க்கார் என்ன நல்ல திட்டங்களைக் கொண்டுவருகிறார்களோ, அவைகளுக்கெல்லாம் நாங்கள் பூரண ஒத்துழைப்பு கொடுப்போம் என்று சொல்லியிருக்கின்றேன். அதைத் திரும்பவும் நான் இங்கே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். பல நல்ல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள் இந்த நிதிநிலை அறிக்கையில். அதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். அவசியம் எங்களுடைய பூரா ஒத்துழைப்பையும் கொடுப்போம் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். விவசாயக் கடன்களைப் பொறுத்தவரையில், 58, 60 கோடி ரூபாய் அளவிற்குத்தான் தள்ளுபடி செய்யப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதுபற்றி பல அங்கத்தினர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். நீங்கள் உங்கள் தேர்தல் அறிக்கையில் கடன் பூராவையும் நாங்கள் வஜா செய்கிறோம் என்று சொன்னீர்கள் ; இப்போது இவ்வளவுதான் என்று சொல்லியிருக்கிறீர்களே என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு கனம் நிதி அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அறுபது கோடி ரூபாய் என்பது பர்ஸ்ட் இன்ஸ்டால்மென்ட்டா ? இல்லை, இதோடு இது முழுவதையும் கைவிடப் போகிறீர்களா ? என்று கேட்க ஆசைப்படுகிறேன். நிதி அமைச்சர் அவர்கள் தம் பேச்சில் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கம் உதவி செய்தால் அவசியம் கடன் பூராவையும் ரத்து செய்துவிடுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு ஒரு மாநிலத்திற்கு மட்டும் தனியாக உதவி செய்ய முடியாது. இது எல்லா மாநிலங்களுக்கும் உள்ள பிரச்சினை. மத்திய அரசு நம் மாநிலத்திற்கு மட்டும் என்று சொல்லிவிட்டால் மற்ற மாநிலங்களுக்கும் அதே மாதிரிச் செய்ய வேண்டும்.

[திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்] [1980 ஜூலை 9

மஹாராஷ்டிரா சர்க்கார் பூராவையும் ரத்து செய்திருக்கிறார்கள், பத்து நாட்களுக்கு முன்பு. அங்குள்ள முதல் அமைச்சர் அவர்கள் பேசும்போது, விவசாயக் கடன்கள் சற்றேறக்குறைய 300 கோடி ரூபாய்க்குமேல் இருந்ததை பூராவாக ரத்து செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நமது நிதி அமைச்சர் அவர்கள் இதுபற்றி ஒரு விளக்கம் கொடுக்க வேண்டும். அதிலும் இந்த பட்ஜெட்டில் 60 கோடி ரூபாய் ஒதுக்கவில்லை; எப்படிக் கொடுக்கப் போகிறார்கள் என்பதற்கு அவர்கள் விளக்கம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சார், பவர் தெர்மல் ஸ்டேஷனைப் பற்றி நான் ஏற்கெனவே பேசி இருக்கிறேன். எலக்ட்ரிசிடி நமக்கு மிகவும் முக்கியமாக, தேவையான வஸ்துவாகும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். விவசாயத்திற்கும் சரி, தொழில் அபிவிருத்திக்கும் சரி, இன்னும் வீட்டில் உள்ளவர்களுக்கும் சரி இது மிகவும் முக்கியமானது. நமக்கு பெரிய தெர்மல் ஸ்டேஷன் இருந்தும், ஹைடல் ஸ்டேஷன் இருந்தும் எப்போதும் வருடாவருடம் பற்றாக்குறை இருந்துகொண்டே வருகின்றது. அதன் காரணமாக பல மாதங்களுக்கு கட் ஏற்படுகின்றது. 35 சதவிகிதம், 40 சதவிகிதம் கட் ஏற்படுகின்றது. அதனால் பலத்த நஷ்டம் ஏற்படுகின்றது. விவசாயத்திற்கும் சரி, தொழிலுக்கும் சரி ஏன் இந்த மாதிரி கட் வருகின்றது என்பதை இந்த அரசாங்கம் தீவிரமாக ஆலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆளுநர் உரையிலே பேசுகின்றபோதே நான் இதைப்பற்றி சொன்னேன். இதற்கு ஒரு ஸ்பெஷல் கமிட்டி, எக்ஸ்பர்ட்டுகளைக் கொண்ட கமிட்டியை இந்த மாநிலத்திலே இருந்தாலும் சரி, வெளி மாநிலத்திலே இருந்தாலும் சரி அவர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை அமைத்து, அங்கங்கே இருக்கக்கூடிய தெர்மல் ஸ்டேஷன்களுக்கு அவர்கள் சென்று, அங்கு ஒரு வாரமோ, இரண்டு வாரமோ தங்கி, எந்தக் காரணத்தினால் மாக்சிமம் புரொடக்ஷன் தடைபடுகிறது, அதற்கு என்ன செய்யவேண்டும் என்று அவர்கள் ரெக்கமன்டேஷன் கொடுத்தால், அந்த ரெக்கமன்டேஷன் அடிப்படையில் அரசாங்கம் ஒரு நல்ல தீர்வை காண முடியும். எனக்குத் தெரிந்த ஒரு கருத்து. இப்போது இருக்கக்கூடிய தெர்மல் ஸ்டேஷன்களிலே நாம் எபிஷியன்டாக அவைகளை உபயோகப்படுத்தினால், நமக்கு பற்றாக்குறை வரவேண்டிய அவசியம் இல்லை என்று தெரிகிறது. இந்தப் பற்றாக்குறையினால் எவ்வளவு கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்பதை அரசாங்கம் அறிய வேண்டும் என்பதை நான் கேட்டுக் கொள்கிறேன்.

"கோல்" ஷார்டேஜ் என்கிறார்கள். எப்படி நிலக்கரி ஷார்டேஜ் வர முடியும்? அந்தந்த தெர்மல் ஸ்டேஷன்களுக்கு எவ்வளவு நிலக்கரி வேண்டுமோ, அதை கல்கத்தாவிலே இருந்து கொண்டு வருவதற்கு ஒரு நல்ல முறையை வகுக்க வேண்டும்.



1980 ஜூலை 9] [திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்]

அப்படி வகுத்ததாகத் தெரியவில்லை. 1955-56 ஆம் வருஷத்தில் மதராஸ் துறைமுகம் கிட்டத்தட்ட 4½, 5 லட்சம் டன் இறக்குமதி செய்தது. அப்போது கோஸ்டல் டிராபிக் இருந்தது. கோஸ்ட் டு கோஸ்ட் டிராபிக் இருந்தது. கப்பலிலே தான் போக வேண்டும். ரயிலை உபயோகப்படுத்தக் கூடாது என்று சொல்லப்பட்டது. பின்னால் இது கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வந்தது. இப்போது இந்த அரசாங்கமே ஒரு கப்பல் கம்பெனியை வைத்திருக்கிறது. அதன் மூலமாகவும், கப்பல்கள் சார்டர் செய்வதன் மூலமாகவும் அரசாங்கம் இந்தப் பற்றாக்குறையில் ஒரு நல்ல முடிவைக் காணமுடியும். பீகாரிலிருந்து கல்கத்தா போர்ட்டுக்கு நிலக்கரி கொண்டு வரவேண்டும். கல்கத்தா போர்ட்டிலிருந்து மதராஸ், தூத்துக்குடி, கடலூர் மற்றும் எந்தெந்த துறைமுகங்களுக்கு கொண்டு வரவேண்டுமோ அப்படி கொண்டு வரலாம். பீகாரிலிருந்து கல்கத்தாவிற்கு கரி கொண்டு வராததன் காரணமாக, கப்பல் அங்கே லோடை ஏற்றுமதி செய்ய முடியாமல், 10, 15 நாட்கள் அங்கேயே தங்க வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. ஒரு கப்பல் ஒரு நாளைக்கு வீணாக வேலையில்லாமல் இருந்தால் குறைந்தது ரூ. 60, 70 ஆயிரம் செலவாகும். எனவே, 3, 4 தினங்களில் ஏற்றுமதி செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். 15, 20 நாட்கள் இருக்க வேண்டுமென்றால், எந்தக் கப்பல் முதலாளியும் கப்பலைக் கொடுப்பதற்கு தயங்குவான். காரணம், அதிலே பெரிய நஷ்டம் ஏற்படுகிறது. அதனால், அரசாங்கம் இதற்கு ஒரு நல்ல முடிவு காண வேண்டும். பீகாரில் இருந்து கல்கத்தா போர்ட்டுக்கு நிலக்கரியைக் கொண்டுவந்து குறைந்தது 3, 4 கப்பல் லோடுகளுக்கான ஸ்டாக்குகளை அங்கே வைத்திருக்க வேண்டும். கல்கத்தா, ஹால்டியா போர்ட்டுக்கு இந்தக் கப்பல்களிலே 2, 3 தினங்களிலே ஏற்றுமதி செய்ய வேண்டும். இங்கே அவைகளை, 4, 5 தினங்களுக்குள் இறக்குமதி செய்துக் கொள்ள வேண்டும். இந்த மாதிரி செய்தால், அவசியம் பற்றாக்குறை இருக்காது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதற்கு ஏதாவது உதவி வேண்டுமென்றால் அவசியம் நாங்கள் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறோம் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

[முற்பகல் 11–10]

அதுமட்டுமல்ல, பவர் ஷார்டேஜ் அடிக்கடி வருகிறது. எண்ணூர் பக்கத்தில் பெரிய தொழிற்சாலைகள் இருக்கின்றன. பல பெரிய தொழிற்சாலைகளுக்கு நிலக்கரி அத்தியாவசியமாக இருக்கிறது. எண்ணூரில் ஒரு சிறு துறைமுகத்தை ஏற்படுத்த வேண்டும். அதன் மூலம் அந்த நிலக்கரியை ரயில் வாகன்களில் ஏற்றிக் கொண்டு போக வேண்டிய அவசியமில்லாமல் அங்கேயே இறக்க சாத்தியமாக இருக்கும். பன்னிரண்டு பதின்மூன்று வருடங்களுக்கு முன்பே நிபுணர்கள் அதுபற்றி ஆராய்ந்து அங்கு ஒரு மைனர்

போர்ட்டை ஏற்படுத்துவது சாத்தியமாக இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். இப்போது அதற்கு வேண்டிய முயற்சிகளை அரசாங்கம் செய்யவேண்டும்.

தனியார் துறையில் தெர்மல் ஸ்டேஷன்கள் வைக்க அரசாங்கம் உதவி புரியவேண்டும். நாம் மகத்தான உற்பத்தியை மின்சாரத்தில் செய்து கொண்டே வருகிறோம். அப்படிப் பெருக்கியும் கோடிக்கணக்கான ரூபாய் முதலீடு போட்டு நடத்தக்கூடிய தொழிற்சாலைகளுக்கு பவர் ஷார்டேஜ் வரும்போது பாதகம் ஏற்படுகிறது. உற்பத்தி குறைகிறது. 35, 40 சதவிதம் கட் என்பது நடைமுறையில் 50, 55%-க்கு மேல் போய்விடுகிறது. The private sector should be permitted to establish their own thermal stations at any place, wherever they want.

அதுமட்டுமல்லாமல் சிறு சிறு துறைமுகங்கள் இருக்கின்றன. கடலூர், நாகப்பட்டினம், எண்ணூர் இருக்கின்றன. அங்கெல்லாம் சிறு பவர் ஸ்டேஷன்கள் 50 மெகாவாட் 100 மெகாவாட்டில் வைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தனியார் துறையில் பவர் ஸ்டேஷன்கள் வைக்க அரசாங்கம் அவசியமாக தீவிர ஆலோசனை செய்து நல்ல முடிவை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : இந்த மின்சார நிலையங்களை நாங்கள் அறிந்த அளவு மத்திய சர்க்கார் கூட பொதுத் துறையில் தான் வைக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். இன்றைக்கு தனிப்பட்ட முதலாளிகளுக்கு தெர்மல் ஸ்டேஷன்கள் வைக்க அனுமதிக்க வேண்டுமென்று சொல்லுவது இந்திய தேசிய இந்திரா காங்கிரஸ் கட்சியின் அதிகாரப்பூர்வமான கொள்கையா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப் : இது என்னுடைய சொந்த அபிப்பிராயம். கனம் அங்கத்தினர் அவர்களுடைய தத்துவங்களை மிகவும் நான் அறிந்திருக்கிறேன். அடுத்தபடி அதைக் கூறலாம் என்று இருக்கிறேன்.

அடுத்தப்படியாக கனம் முதலமைச்சர் அவர்களுக்கும் சக அமைச்சர்களுக்கும் ஒரு வேண்டுகோளை விடுக்கிறேன். வரவு 982 கோடி ரூபாய் இருக்கிறது. கிட்டத்தட்ட 1,100 அல்லது 1,200 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும். அப்படிச் செலவு செய்யும்போது ஒவ்வொரு துறைக்கும் கணிசமான அளவு நிதி ஒதுக்கியிருக்கிறோம். அந்த நிதி பயனுள்ள முறையில் நல்ல முறையில் செலவு செய்யப்படுகிறதா, போட்ட திட்டங்கள் நல்ல முறையில் அமலாகிறதா என்று கண்காணிக்க ஒரு 'சப்ஜக்ட் கமிட்டி' ஒவ்வொரு துறைக்கும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்





டுக் கொள்கிறேன். இதை இப்போது கேரள மாநிலம் எக்ஸ்பரிமென்டாகச் செய்து வருகிறது. பார்லிமென்டிலும் இந்த சப்ஜக்ட் கமிட்டி இருக்கிறது. கேரள மாநிலம் எக்ஸ்பரிமென்ட் செய்து வருவதை காப்பி அடிக்க வேண்டுமென்று நான் சொல்லும் போது கனம் அங்கத்தினர்கள் மிகவும் சந்தோஷப்படுவார்கள் என்று நினைக்கிறேன். அவர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எகனாமிக் கண்டிஷன் பெருகிவரும் ஒவ்வொரு தேசத்திலும், பார்லிமெண்டிலும் இந்த மாதிரி சப்ஜக்ட் கமிட்டி இருக்கிறது. இவர்கள் நல்ல முறையில் பணிபுரிகிறார்கள். இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இந்த சப்ஜக்ட் கமிட்டி கூடி இலாகாவைப் பொறுத்த ஆபீசர்கள் விவரங்களைக் கொடுத்தால் துரிதமாக என்னென்ன செய்யலாம் என்று ஆலோசனை கூற மிக்க அனுகூலமாக இருக்கிறது.

அவசியம் முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களும் அதை கவனித்து ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சார், இன்டஸ்ரியல் டெவலப்மென்டைப் பொறுத்தவரைக்கும் அதிகமான நிதி ஒதுக்கவில்லை என்பது என்னுடைய அபிப்ராயம். இந்த அரசாங்கம் இன்டஸ்ட்ரியல் டெவலப்மெண்டிலே அதிக அக்கறை கொள்ளவில்லை என்பதை நான் அடிக்கடி வற்புறுத்தி வருகிறேன். அப்படி இருந்திருந்தால் இன்டஸ்ட்டிரியல் டெவலப்மெண்ட் மிகவும் மகத்தானதாக இருந்திருக்கும். இதைப்பற்றி நண்பர் உமாநாத் அவர்கள் நேற்றுப் பேசும்போது கூடச் சொன்னார்கள். இந்திய அரசிலே இன்டஸ்ட்டிரியல் பாலிசியை நாம் நிர்ணயித்து இருக்கிறோம். அதிலே தனியார் துறையும் இருக்கும். பொதுத் துறையும் இருக்கும். இரண்டும் சேர்ந்த ஜாயின்ட் துறையும் இருக்கும் என்று நிர்ணயித்து இருக்கிறோம். அதன் காரணமாக மகத்தான வளர்ச்சியைப் பெற்றிருக்கிறோம். அதை மறுக்கவோ மறக்கவோ முடியாது. இருந்தாலும் ஒவ்வொரு மாநிலத்திலேயும் பெரிய பெரிய இன்டஸ்ட்ரிகள் வர வேண்டும். அரசாங்கம் நடத்துகிற தொழிலை அரசாங்கமே நடத்தவேண்டும். தனியார் துறையிலே நடத்துகிற தொழிலை தனியாரே நடத்த வேண்டும். சில தனியார் துறைகளிலே சில குற்றங்களைச் செய்கிறார்கள் என்ற காரணத்தினால் தனியார்கள் துறையையே கண்டம் பண்ணுவது சரியல்ல. யார் குற்றம் செய்தாலும், அரசாங்க அதிகாரிகள் குற்றம் செய்தாலும் சரி, தனியார் துறையிலே குற்றம் செய்தாலும்சரி, அரசாங்கம் அதற்காக உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டுத்தான் நடக்கவேண்டும்.

இன்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட் எவ்வளவோ பண்ணலாம். இன்டஸ்ட்ரியல் எவ்வளவோ இருக்கிறது. ஆயில் ரிபைனரீஸ் பெட்ரோ-கெமிக்கல்ஸ் புரொடக்ஷனை இரண்டு மடங்காக ஆக்கவேண்டுமென்று

சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இப்போது பெரிய பெட்ரோ காம்ப்ளக்ஸ் ஏற்படுத்துவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. மத்திய அரசோடு இந்த அரசாங்கம் தொடர்பு கொண்டு நல்ல தீர்வு காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே மெடிசினல் பீல்டிலே நிறைய டெவலப் மென்ட் செய்வதற்கு சாத்தியம் இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலே நேச்சுரல் ரிசோர்சஸ் இருந்தும் கூட மெடிசினல் டெவலப்மெண்ட் கம்பெனிஸ் சரியாக வருவதில்லை என்பது என் னுடைய அபிப்ராயம். அது மகாராட்டிரா மாநிலத்திலேயும் குஜராத் மாநிலத்திலேயும் பிரம்மாண்டமாக வளர்ந்திருக் கிறது. அதை இங்கே வளர்ப்பதற்கு வழிவகை வகுக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த அரசாங்கம் பெரிய தொழில் களின் வளர்ச்சிக்காக நல்ல கிளைமேடிக் கன்டிஷன்ஸ ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய நண்பர் கூடச் சொன்னார். எந்த ஒரு கஷ்ட மான நிலைமை வந்தாலும் அதிலே உடனுக்குடன் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதைத்தான் நான் கேட்டுக்கொண்டேன். பிரைவேட் செக்டாராக இருந்தாலும், பப்ளிக் செக்டாராக இருந்தாலும் அல்லது துறைமுகமாக இருந் தாலும் எங்கே ஒரு கஷ்டம் வந்தாலும் என்ன என்ன உதவிகள் செய்யவேண்டுமோ அந்த உதவிகளைச் செய்வதற்கும் விரைவிலே முன்வந்தால்தான் ஒரு கான்பிடன்ஸ் ஏற்படும். தொழிலதிபர்களுக் கும் மற்றவர்களுக்கும் நல்ல கான்பிடன்ஸ் ஏற்படும்,

I want that confidence t be created by the ruling party of this House.

சார், ஒரு இன்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட் கமிட்டி போட வேண்டும். அதன்மூலமாக அந்த கமிட்டி பல பெரிய மாநிலங் களுக்குச் சென்று அங்கே உள்ள இண்டஸ்ட்ரியலிஸ்டுகளை அணுகி அவர்களுடைய ஒத்துழைப்புடன் இங்கே அவர்கள் வந்து இண்டஸ்ட் ரிஸ் ஸ்டார்ட் பண்ணுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டாடாவாக இருந்தாலும் பிர்லாவாக இருந்தாலும் கமானியாக இருந்தாலும் சொமானியாக இருந்தா லும் அவர்கள் இங்கே வந்து தான் இண்டஸ்ட்ரிஸ் ஸ்டார்ட் பண்ணப் போகிறார்கள். அவர்கள் கோடிக்கணக்கான ரூபாய் மூலதனம் போட்டு இங்கே நடத்துவதால் இங்கே உள்ள நிலைமை எவ்வளவு வளம்பெறுகிறது. எத்தனை ஆயிரம் பேர்களுக்கு வேலை கிடைக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். இதிலே எனக்கும் நண்பர் திரு. உமாநாத் அவர்களுக்கு ஏகப்படியான



வித்தியாசம் இருக்கிறது என்று தெரிகிறது. டாடா பிர்லா பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதே பிர்லாவைத்தான் இன்றைக்கு சைனாவிலே கூப்பிட்டு இங்கே வந்து 100 கோடி ரூபாய் உள்ள தொழிற்சாலையை அமையுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

[முற்பகல் 11—20]

சைனா, ரஷ்யா தேசங்களே,—அவர்கள் மார்க்சிஸ்ட் கம் யூனிஸ்டைச் சேர்ந்தவர்கள்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே..........

திரு. கே.எஸ்.ஜி. ஹாஜாசெரீப் : I am not yielding Mr. Speaker. அவர்கள் எந்தெந்தத் தத்துவத்தை வைத்துக்கொண் டிருக்கிறார்களோ, அந்தத் தத்துவத்தை second thinking ஆகக் கொண்டு வருகிறார்கள். அந்த மார்க்சிஸ்ட் மூலமாக—அந்தத் தத்துவத்தின் மூலமாக அவர்களுடைய தேசம் பெரிய வெற் றியைப் பெற்றிருக்கிறதா? ஏதாவது விருத்தி அடைந்திருக்கிறதா என்று யோசனை செய்து கொண்டு வருகிறார்கள். அதன் விளை வாகத் நான் எவ்வளவோ விஷயங்களில் தளர்ந்திருக்கிறார்கள். If there is no incentive. I can assure this House there may not be much growth and development. There may be growth and develop- ment but not in any effective manner. I want to impress upon Communist Members whether it is Tata or Birla or Samania or Kamania, if they are going to start an industry here, they are for the development of our State, by which thousands of our men will be employed.

பல யூனிவர்சிட்டிகளை நீங்கள் கொண்டு வரப்போவதாகத் திட்டம் தீட்டியிருக்கிறீர்கள். இதில் ஒரு காமர்ஸ் யூனிவர் சிட்டியையும் மதராசில் அமைக்க வேண்டும். இம்மாதிரி யூனிவர் சிட்டி அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதில் காமர்ஸ் வியா பாரம் சம்பந்தப்பட்ட எல்லா போஸ்டுகளும் இருக்க வேண்டும். மெட்ராஸ் யூனிவர்சிட்டிலே ஒன்றிரண்டு வைத்திருக்கி றார்கள். அது போதாது. காமர்ஸ் யூனிவர்சிட்டி என்று ஏற் படுத்தி, எல்லா வியாபார சம்பந்தமாகவும் நடைமுறையில் இருக்கின்ற எல்லா கோர்ஸ்களையும் கொண்டு வர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் மீனவர்களுக்கு நல்லதொரு திட்டத்தை அளித்திருக் கிறீர்கள். வீடுகள் கட்டிக் கொடுப்பதை, கடலோரத்தில் இல்லா மல் குறைந்தது இரண்டு மூன்று பர்லாங்குக்குப் பிறகு கட்டிக்

[திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப்] [1980 ஜூலை 9

கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
பருவ மழையின் பொழுதும், பெரிய புயல் அடிக்கின்றபொழுதும் காரணம்,
அவர்கள் அவதிக்குள்ளாகின்றார்கள். எனவே, அவர்களுக்குக்
கட்டிக் கொடுக்கப்படும் வீடுகளை கடலிலிருந்து இரண்டு மூன்று
பர்லாங்கு தூரத்திற்குப் பிறகு கட்டிக் கொடுக்கவேண்டு
மென்றும், அதிலும் கூட மேடாக உள்ள இடத்தில் கட்டிக்
கொடுத்தால் அவர்கள் கஷ்டங்கள் இல்லாமல், நல்ல தொழில்
வளர்ச்சியில் ஈடுபடுவதற்கு நன்றாக இருக்கும் என்பதையும்
தெரிவித்துக்கொள்கிறேன்.

போலீசாருக்குச் சில திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள்.
1961-ஆம் ஆண்டில் போலீஸ் பட்ஜெட்டை எஸ்டிமேட் கமிட்டி
பார்த்தபொழுது—நான் அதற்குச் சேர்மனாக இருந்தேன்—
கிட்டத்தட்ட 48 ரெகமென்டேஷன்கள் கொடுத்திருக்கிறோம்.
அவற்றில் எவ்வளவு ரெகமன்டேஷன்களை கவர்ன்மென்டில்
இம்ப்ளிமென்ட் செய்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை.
நேற்று ஒரு அங்கத்தினர் பேசும்பொழுது சொன்னார்கள். அவர்
களுக்கு இரண்டு பல்புகளோ, மூன்று பல்புகளோதான் இருக்
கின்றன என்று சொன்னார்கள். அவர்களுக்கு ஏன் இரண்டு
மூன்று பல்புகள் மட்டும் இருக்க வேண்டும்? அவர்களுடைய
பிள்ளைகளும் படிக்க வேண்டும், அவர்களுடைய குடும்பம்
நல்லமுறையில் இருக்க வேண்டும். எனவே, அவர்களுக்கு இந்த
எலக்ட்ரிக் ரெஸ்ட்ரிக்ஷன் இருக்கக் கூடாது. அவர்களுடைய
நிலைமை இன்னும் நல்லமுறையில் விளங்க அரசாங்கம் கவனிக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குக் காரணம்,
அவர்கள் 24 மணி நேரமும், எவரெடியாக—எவரெடி பேட்டரி,
மாதிரி இருக்க வேண்டும். எனவே, அதற்குத் தகுந்த வதியத்
தையும், மற்ற சௌகரியங்களையும் செய்து கொடுக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

அடுத்து, இந்த மைனர் போர்ட்டுகள் பற்றி சில வார்த்தைகள்
சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பல மைனர் போர்ட்டு
கள் இருக்கின்றன. இப்பொழுது பூராவும் ஓர்க்கிங் கண்டிஷனிலே
இல்லை. கடலூர் இருக்கிறது. அங்கு சரியாகப் பயன்படுத்தப்
படவில்லை. நாகப்பட்டினம், போர்ட்டனோவோ, காரைக்
கால் முதலிய இடங்கள் இருக்கின்றன. எல்லாக் கப்பல்களும்
மெட்ராசுக்கு வந்து 30, 40 நாட்கள் காத்துக்கொண்டிருந்தால்
அதனால் தேசத்திற்கு எவ்வளவு நஷ்டம்? ஒரு கப்பல் ஒரு
நாளைக்கு வேலையில்லாமல் இருந்தால் 60,000 ரூபாய் 70,000
ரூபாய் அளவிற்கு நஷ்டம் ஆகிறது. இப்படி 30 நாட்கள், 40
நாட்கள் வேலையில்லாமல் இருந்தால் எவ்வளவு நஷ்டம் ஆகும்
என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே, மைனர் போர்ட்டுகளை
நல்லமுறையில் வைத்திருந்தால்தான், அவைகளில் என்னென்ன
சரக்குகளை இறக்க முடியுமோ அந்தந்த சரக்குகளை இறக்க



1980 ஜூலை 9] [திரு. கே எஸ். ஜி. ஹாஜாசெரீப்]

வதற்கு சௌகரியமாக இருக்கும். அதையும் அவசியம் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப்பற்றிக் கூட விவாதிப்பதற்காக கமிட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அந்தக் கமிட்டி நல்ல தீர்ப்பை—முடிவைக் கொண்டு வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஹரிஜன் வெல்பேர்களுக்கும் நீங்கள் பல நல்ல திட்டங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். அவசியம் அது வரவேற்கத் தக்கது. அதை நீங்கள் நல்லமுறையில் அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதே சமயத்தில் மைனாரிட்டி கம்யூனிட்டிஸுக்கும் நீங்கள் அந்தச் சலுகையை அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, நான் கேட்டுக்கொள்வதெல்லாம். கனம் சபாநாயகர் அவர்களே, இந்த, கிட்டத்தட்ட ரூ. 1,008 கோடியைச் செலவு பண்ணும்போது, நல்ல முறையில், பலன் கொடுக்கக்கூடிய முறையில் நாம் செலவு செய்வோமேயானால், இப்பொழுது இருப்பதைவிட மிகவும் பிரம்மாண்டமான நல்ல தொழில் வளர்ச்சியை அடையமுடியும். 30 வருஷத்திற்கு முன் நம்முடைய நிலை என்ன? இப்பொழுது 30 வருஷத்திற்குப் பின் நம்முடைய நிலை என்ன என்பதை எல்லோரும் அறிவார்கள். அருகிலுள்ள கனம் அங்கத்தினர்கள் முக்கியமாக அறிவார்கள். அப்பொழுது நமக்குத் தேவையான எல்லா வஸ்துக்களையும் பொருள்களையும் வெளி தேசத்திலேயிருந்து நாம் இங்கே வரவழைத்துக் கொண்டிருந்தோம். இப்பொழுது எல்லா பொருள்களையும் இங்கே உற்பத்தி செய்து வெளி நாடுகளுக்கு அனுப்புகிறோம். கப்பல் முதற்கொண்டு, ஏரோப்ளேன் முதற்கொண்டு, பெரிய வாகன்ஸ் முதற்கொண்டு இங்கே உற்பத்தி செய்து, வெளி தேசத்திற்கு அனுப்புகிறோம். அம்மாதிரியாக பெரிய தொழிற்சாலைகள் ஏற்பட்டால்தான் அதை ஒட்டி, சிறிய சிறிய நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகளை ஏற்படுத்த முடியும். இதற்கெல்லாம் அவசியம் நீங்கள் நல்ல முடிவை மேற்கொண்டு, நல்ல ஒரு குழுவை போட்டு செய்வீர்களானால், அவசியம் நம்முடைய மாநிலத்தை முதல் மாநிலமாகக் கொண்டு வருவதற்குச் சாத்தியமாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

<u>திரு. பொ. உத்திராபதி</u> : ஒரு விளக்கம் ........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. ஹாஜாசெரீப் பேச்சுக்கு விளக்கம் தானே, அதை தனியாகக் கேட்டுக் கொள்ளலாம்.

[1980 ஜூலை 9

* டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த அவையிலே அமர்ந்தபோது வாழ்த்துகின்ற வாய்ப்பினை நான் பெற இயலவில்லை என்றாலும், தாமதமாக வாழ்த்தினாலும் தாங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையோடு தங்களையும் துணைத் தலைவரையும் வாழ்த்தி, நம்முடைய நிதியமைச்சர், அன்புக்குரிய நாவலர் அவர்கள் இந்த அவையின் முன்னால் வைத்துள்ள நிதிநிலை அறிக்கை குறித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்துக்களை எடுத்து இயம்ப கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கு ஆளுங்கட்சித் தரப்பிலும், எதிர்க்கட்சித் தரப்பிலும், தோழமைக் கட்சிகளின் சார்பிலும் பேசிய பல தலைவர்களும் உறுப்பினர்களும் இந்த வரவு செலவுத் திட்டம் குறித்து அடைமொழிகளைத் தந்து அமர்ந்திருக்கின்றார்கள். எதிர்க்கட்சித் தரப்பிலே பொய்மான் கரடு'' என்றும் ஆளுங்கட்சி தரப்பிலே ''புள்ளிமான் விளையாடும் பூந்தோட்டம்'' என்றும் இப்படி பல்வேறுவிதமான அலங்கார சொற்களுக்கிடையே இருதரப்பிலும், தோழமைக் கட்சிகள் சார்பிலும் வார்த்தைகள் விளையாடி இருக்கின்றன இந்த மாமன்றத்தில்.

இது சப்ஜக்டே இல்லாத பட்ஜெட் என்று நண்பர் துரை முருகன் கூற, 'ஆப்ஜக்டே' இல்லாமல் அவர் கூறுகிறார் என்று ஆளுங்கட்சி சார்பிலேயிருந்து இன்னொருவர் மறுத்துக் கூற இப்படியும் வாதங்கள் நடைபெற்றிருக்கின்றன.

நம்முடைய நாவலர் அவர்கள் பேசும்பொழுது பேச இருக்கிற ஒரு கருத்தை நான் முன்கூட்டியே எடுத்துக்கொள்கிறேன் என்று அவர் கருதக் கூடும். ஏனென்றால், அவர் சொல்வார் என்று எனக்கு தெரியும். நீண்டநெடுங்காலமாக, ஒன்றல்ல, இரண்டல்ல, 40 ஆண்டுக்காலத்திற்கு மேலாக அவரோடு இளமை முதல் பழகியவன் என்ற முறையில் அவர் என்னென்ன பேசக் கூடும், என்னென்ன பாணியிலே பேசக் கூடும் என்பதை நான் அருகிலிருந்தே கவனித்தவன். எனவே பட்ஜெட்டுக்கு அவர் விளக்கம் கூறாமல் இருக்க மாட்டார். அதற்கான குறிப்புகளும் அவை உறுப்பினர்களுக்குத் தரப்பட்டிருக்கின்றன. இந்த அவையிலே வைக்கப்பட்டிருப்பது பட்ஜெட்டே அல்ல. யாரும் திடுக்கிடத் தேவையில்லை. பல ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்து நாட்டிலே நிதியமைச்சர் பொறுப்பை ஏற்றிருந்தவர் அந்த ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தை ஒரு பையிலே போட்டு எடுத்துக் கொண்டு அவைக்கு வர அவர் வரவு-செலவுத் திட்டத்தைப் போட்டு வைத்துக் கொண்டு வந்த அந்த பைக்குப் பெயர்—தோல் பைக்குப் பெயர் பட்ஜெட் என்று அழைக்கப்பட்ட காரணத்தால், அதையே பின்பற்றி அனைவருமே தாங்கள்





கொண்டு வருகின்ற வரவு-செலவு திட்டத்தை ஒரு தோல் பை யிலே போட்டுக்கொண்டு அவைக்குள்ளே நுழையவும் அது பட் ஜெட் என்கிற வழக்கமான பெயரைப் பெறவும் உரியதாக ஆயிற்று.

[முற்பகல் 11—30]

பட்ஜெட் ரகசியம் வெளியே வந்துவிடக் கூடாது. நிதி நிலை அறிக்கையில் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும் முன்கூட்டியே அது வெளியே வந்துவிட்டால், நிதி அமைச்சரின் பதவிக்கேகூட ஆபத்துஎன்கிற காரணத்தால், இது ஒரு காலத்தில் தோல் பையிலே வைத்து எடுத்துவரப்பட்டது. அந்தத் தோல் பையையும் சேர்த்துத் திருடிக்கொண்டு போகக்கூடியவர்கள் நாட்டிலே அப்போது இல்லாத காரணத்தால் அது தோல் பையின் அளவி லேயே இருந்தது. எனவே, பட்ஜெட் என்பது நிதி அமைச்சர் அவர்கள் அந்த ஆண்டிற்கான வரவு-செலவு திட்டத்தை அளிக் கிறார். அதற்கான குறிப்பேடுகளை மன்ற உறுப்பினர்களுக்குத் தருகிறார். அது குறித்து விவாதம் நடைபெறுகிறது. அந்த விவாதத்திற்குப் பிறகு ஆளுங்கட்சித் தரப்பில் நிதி அமைச்சர் தன்னுடைய விளக்கங்களைத் தருகிறார். எடுத்துச் சொல்லப் பட்ட கருத்துக்களின் அடிப்படையில் ஆக்கபூர்வமான காரியங் களை அரசின் சார்பில் நடத்துவதற்காக உதவிகரமான ஒரு பணி இந்த மாமன்றத்தில் நடைபெறுகிறது என்ற அளவிலேதான், இந்த விவாதம் கடந்த சில நாட்களாக இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நம்முடைய வரவு-செலவுத் திட்டம் கிட்டத்தட்ட இந்த ஆண்டு 1,000 கோடி ரூபாயை எட்டி இருக்கிறது என்பது பெருமைக்குரிய, மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். 1938—39 ஆம் ஆண்டில் வரவு-செலவு மதிப்பீட்டின் படி, வருவாய்க் கணக்கிலே மொத்த வருவாய் 16 கோடியே 13 லட்சம் என்றும் செலவு 16 கோடியே 10 லட்சம் என்றும், நிகர உபரி 3 லட்சம் ரூபாய் என்றும், ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு முன்பு 16 கோடி ரூபாய்தான் நம்முடைய வரவு-செலவு திட்ட மொத்தக் கணக்கு என்றிருந்த நிலை மாறியது.

காங்கிரஸ் கட்சி இந்த மாநிலத்தை ஆண்டபோது நிதி அமைச்சராக இருந்த சி. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு ஆண்டு 100 கோடி ரூபாய்க்கு வரவு-செலவு திட்டத்தைத் தயாரித்து, நான் 100 கோடி ரூபாய்க்கு வரவு-செலவு திட்டத்தை முதன் முதலாக இப்பொழுது இந்த மாமன்றத்திலே வைப்பதிலே பெருமைப் படுகிறேன் என்று புளகாங்கிதம் உற்றார். (குறுக்கீடு). திருத்தியதற்கு நன்றி. அவரால் 100 கோடி ரூபாய்க்கு வைக்க முடியாமல், 100 கோடி ரூபாய்க்கு வைக்க எண்ணியிருந்தேன்,

[டாக்டர் மு. கருணாநிதி] [1980 ஜூலை 9

ஆனால் 90 கோடி ரூபாய்க்குத்தான் வைக்க முடிந்தது என்று அவர்
சொன்னார். இதே நிலைதான் நம்முடைய நாவலருக்கும்.
அவர் கூட 1,000 கோடி ரூபாய்க்கு இங்கே வரவு செலவு திட்டத்
தை வைத்திருக்கலாம். ஒரு 16, 17 கோடி ரூபாய். குறைந்து
விட்ட காரணத்தால் 1,000 கோடிக்கு வரவு-செலவுத்திட்டத்தை
இங்கே வைக்கப்பட வழியில்லாமல் இந்த ஆண்டு போய்விட்டது.

1967—68-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள்தலைமையிலே திரா
விட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட
காலகட்டத்தில் வருவாய் கணக்கிலே 233.39 கோடி ரூபாயும்
செலவு 233·33 கோடி ரூபாயும் நிகர உபரி 6 லட்சம் ரூபாயும்
என்ற நிலை இருந்தது. பிறகு 1975—76-லே இது மேலும்
உயர்ந்தது. வருவாய்க் கணக்கிலே 563·36 கோடி ரூபாய் என்
றும், செலவு 557·9 கோடி ரூபாய் என்றும் உபரி 5·44 கோடி
ரூபாய் என்றும் ஆயிற்று.

7-வது நிதிக் குழு அளித்த பரிசுகளின் விளைவுகளாலும்
நம்முடைய மாநிலத்துக்கு வரவேண்டிய வரி, வருவாயினுடைய
பங்கு கடந்த 2 ஆண்டுகளிலே மிக அதிகமாக உயரத் தொடங்கிய
காரணத்தினாலும் இந்த ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்
டின்படி. வருவாய் கணக்கிலே வருவாய் 982·66 கோடி ரூபாயும்
செலவு 967·27 கோடி ரூபாயும் உபரி 15·3 கோடி ரூபாயும் என்று
குறிப்பிடப்பட்டு, அனைத்துக் கணக்குகளையும் மொத்தமாகப்
பார்க்கும்போது நிதி நிலை அறிக்கையிலே எல்லா கணக்குகளை
ஆண்டின் வரவு செலவில் பார்க்கும்போது இறுதியில் உபரி 33
லட்சம் இருக்கும் என்று குறிப்பிடப்பட்டு உள்ளது.

ஆனால் இங்கே தரப்பட்டுள்ள 1980—81ஆம் ஆண்டுக்கான
''நிதி நிலை குறிப்பில்'' 33 லட்சம் ரூபாய் உபரி என்று போடு
வதற்கு பதிலாக 6-வது பக்கத்தில் மைனஸ் 33 லட்சம் என்று
தமிழறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இதை நிதி அமைச்
சர் வாயிலாக அதிகாரிகள் கவனத்திற்குக்கொண்டு வர நான்
கடமைப்பட்டு இருக்கிறேன். ஏனென்றால் உபரியை '' மைனஸ்
33'' என்று போட மாட்டார்கள். ''பிளஸ் 33'' என்று போட
வேண்டும். நான் தமிழில் தரப்பட்டுள்ள அறிக்கைபற்றி குறிப்பிடு
கிறேன். எனவே இந்தக் குறைப்பாட்டை அதிகாரிகள் நீக்கிக்
கொள்ள வேண்டியதவசியம். பல நேரங்களில் ஆங்கில ஏட்டிற்
கும், ஆங்கிலத்தில் தரப்படுகிற அறிக்கைகளுக்கும், தமிழில்
தரப்படுகிற அறிக்கைகளுக்கும், இடையே இப்படிப்பட்ட பலத்த
வேறுபாடு உள்ளன என்பதை இந்த மன்றத்தில் சுட்டிக் காட்
டப்படும், அது திருத்திக்கொள்ளப்படவில்லை என்பது உள்ள
படியே வருந்தத்தக்க ஒன்று. உபரியாக இருந்தத் தொகை
எவ்வளவு என்பதை 'பிளஸ்' என்று கூட்டல் அடையாளம்
போட்டுக்காட்டுவதற்கு பதிலாக 'மைனஸ்' என்று கழித்தல்
அடையாளம் போட்டு இருப்பது மிக மிகத் தவறாகும்.



1980 ஜூலை 9] [டாக்டர் மு. கருணாநிதி]

நிதிநிலை அறிக்கையின் 52-வது பக்கத்தில் மத்திய அரசு
தமிழ்நாட்டிற்கு வழங்கும் திட்ட நிதி உதவி குறைந்து கொண்டே
வருவதன் காரணமாக தமிழ்நாட்டின் நபர்வாரி திட்டச் செல
வும் குறைந்து வருகிறது என்று நமது நிதி அமைச்சர் குறிப்
பிட்டுள்ளார். தமிழகத்திற்கு ஒவ்வொரு 5 ஆண்டு திட்டத்
திலும், நாம் கேட்கிற நிதி ஒதுக்கீடு தொகை கொடுப்பது இல்லை.
திட்டங்களுக்காக மாநில அரசுக்கு மத்திய அரசின் உதவி போது
மான அளவு கிடைக்காவிட்டாலும் தமிழக அரசு திட்டச் செல
வோடு. திட்டத்தில் சேராத வளர்ச்சிப் பணிகளுக்கு தன்னுடைய
சொந்த முயற்சிகளில் வருவாயைப் பெருக்கி, கணிசமான தொகை
செலவழித்து தமிழகத்தின் திட்ட அளவை பெருக்கி வரவேண்டும்
என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்டவும் வேண்டுகோளாக
வைக்கவும் கடமைப்பட்டு இருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது,
அப்படி செய்யப்பட்டதை அதிகாரிகள் நம்முடைய நிதி அமைச்
சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள் என்று நான்
நம்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்
பில் இருந்தபோதும் மத்திய அரசின் நிதி உதவி போதுமான
தாக இல்லை என்பது பல முறை எடுத்துக் கூறப்பட்டு இருக்
கிறது. அதனால் அதற்கு அப்போது இருந்த எதிர்க்கட்சி
களுடைய ஆதரவு ஆட்சிக்குக் கிடைத்ததா இல்லையா என்பது
வேறு விவகாரம். ஆனால் ஆட்சியின் சார்பில் மத்திய அரசால்
மாநில அரசுக்குத் தரப்படுகின்ற நிதி மிக மிகக் குறைவாக,
மேலும் மேலும் குறைந்து கொண்டு போகிற நிலையில் இருக்
கிறது என்பதை எடுத்துக் காட்டி வாதாடி இருக்கிறோம்.
11—1—1976-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மாற்றப்
படுவதற்கு சில நாட்களுக்கு முன்பு இதழாளர்களுக்கு—அதா
வது நிருபர்களுக்கு—அளித்த பேட்டியில் அன்று பொறுப்பில்
இருந்தவன் என்ற முறையில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில்
மத்திய அரசால் எல்லா மாநிலங்களுக்கும் கொடுக்கப்பட்ட
உதவித் தொகையில் தமிழ்நாட்டிற்கு 10·8 சதவிகிதம் கொடுக்
கப்பட்டது என்பதையும், இரண்டாவது திட்ட காலத்தில் 9
சதவிகிதம் கிடைத்தது என்பதையும், மூன்றாவது திட்ட காலத்
தில் 7·4 சதவிகிதம் தான் கிடைத்தது என்பதையும், 4-வது
திட்ட காலத்தில் 5·5 சதவிகிதம் என்ற அளவிற்கு படிப்படியாக
மத்திய அரசின் நிதி உதவி குறைந்து கொண்டே வந்தது என்
பதையும், நம்முடைய மாநிலம் அதன் காரணமாகப் பாதிக்கப்
பட்டு இருக்கிறது என்றும், நான் அந்த நிருபர்களிடத்தில் ஆட்சிப்
பொறுப்பில் இருந்த நேரத்தில் சுட்டிக் காட்டியிருக்கிறேன். நபர்
வாரி திட்டச் செலவு, நபர் வாரி வருமானம், எந்த நிலையில்
இருந்தது என்பதையும் நான் அன்றைக்கே சுட்டிக்காட்டி இருக்
கிறேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1980 ஜூலை 9

இப்போது தமிழ் நாட்டில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தாலும் கூட, தமிழகத்தின் தேவைகளுக்கு, தமிழ் நாட்டின் வளம் பெருகுவதற்கு, தமிழ் நாட்டில் சீரும், செழிப்பும் ஓங்கிட வேண்டும் என்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் நாடாளுமன்றத்தில் இன்னமும் வாதாடிக்கொண்டு இருக்கிறது. வாதாடியது, இப்போதும் வாதாடுகிறது, தொடர்ந்து வாதாடும் என்பதை நான் இந்த அவையிலே எடுத்துக் காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். மாநிலங்கள் அவையிலும் மக்கள் அவையிலும் சென்னையில் 'பாதாள ரயில் திட்டத்தை—மெட்ரோபாலிடன் ராபிட் டிரான்சிட் சிஸ்டம்' கொண்டு வரவேண்டும் என்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்திப் பேசியிருக்கிறார்கள்.

[முற்பகல் 11-40]

கன்னியாகுமரி, நாகர்கோவில், திருநெல்வேலி பகுதியை மதுரை இரயில்வே கோட்டத்தோடு தொடர்ந்து இயங்கச் செய்ய வேண்டும்; திருவனந்தபுரம் கோட்டத்தோடு சேர்க்கக் கூடாது என்று திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இரு அவைகளிலும் டெல்லியிலே எடுத்துரைத்ததோடு மட்டுமல்ல; அனைவரும் 3—7—80 அன்று மந்திரி இரயில்வே அமைச்சர் கமலபதி திருபாதி அவர்களைச் சந்தித்து ஒரு மகஜரும் அளித்து, எடுக்கப்பட்ட முடிவை மீண்டும் பரிசீலனை செய்வதாக மத்திய இரயில்வே அமைச்சர் திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்களிடத்தில் வாக்குறுதி அளித்திருக்கிறார் என்பதையும் ஏடுகளிலே நாம் கண்டிருக்கின்றோம்.

கரூர், திண்டுக்கல், மதுரை, தூத்துக்குடி, நெல்லை நகரங்களுக்கிடையே அமைக்கப்பட்டுள்ள இரயில் தடத்தை 'ப்ராட் கேஜ்'—அதாவது அகல இரயில் பாதையாக அமைக்க வேண்டுமென்று நெடுநாள் எடுத்துச் சொல்லப்படுகின்ற தேவையினை டெல்லியிலே உள்ள இரண்டு அவைகளிலும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

போத்தனூர் பணிமனையை ஒலவக்கோடு கோட்டத்தோடு இணைக்கக் கூடாது என்றும், பொன்மலை இரயில்வே தொழிலாளர்கள் வேலைப் பளு குறைக்கப்பட புதிதாக கலாசிகள் நியமிக்கப்பட வேண்டுமென்றும், இன்னும் தமிழ்நாட்டிற்குத் தேவைப்படும் இரயில் பாதைகள் பலவற்றைக் குறித்தும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் டெல்லியிலே இரு அவைகளிலும் வற்புறுத்தி பேசி இருக்கிறார்கள்.

கல்பாக்கம் அணுமின் உற்பத்தி நிலையத்தில் விரைவில் உற்பத்தியைத் தொடங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது



1980 ஜூலை 9] [டாக்டர் மு. கருணாநிதி]

குறித்தும்; ஹொகனேக்கல்—காவிரியிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கான பணிகளை உடனடியாகத் தொடங்க வேண்டும் என்றும்; கீழ் மேட்டூர் மின் உற்பத்தி நிலையத்திற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும்; சேதுசமுத்திரம் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும்; சேலம் உருக்காலைத் திட்டத்தை விரைவுபடுத்தவும், விரிவுபடுத்தவும் வேண்டும் என்றும்; பாண்டியாறு—புன்னம்புழா திட்டம் நிறைவேற்றப்படவேண்டும் என்றும்; தமிழகத்தில் நிலக்கரி, இரும்பு தட்டுப்பாட்டால் ஏராளமான சிறு தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி, அந்தப் பற்றாக் குறையைப் போக்க மத்திய அரசு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்; தமிழகத்தின் தெற்கு கடலோர பகுதியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்பட வேண்டும் என்றும்; மேற்குத் தொடர்ச்சி மலையிலே மேற்கு நோக்கி ஓடி கடலிலே வீணாகும் நீரை தமிழகத்தில் பயன்படுத்த வேண்டும் என்றும்; காவிரி நீர் பங்கீட்டுப் பிரச்சனையில் விரைவாக முடிவுகாண மத்திய அரசு முனைந்திட வேண்டும் என்றும்; கங்கை—காவிரி இணைப்புத் திட்டம் மேற்கொள்ளப் படவேண்டும் என்றும்; இப்படி தமிழகம் வளம்பெறுவதற் கான பல்வேறு திட்டங்களை... இங்கே இருக்கிற ஆட்சி அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அல்லவா? ஏன் இதற்காக வெல்லாம் வாதாட வேண்டும் என்ற குறுகிய நோக்கம் இல்லாமல் தமிழக மக்கள், தமிழ்நாடு வளம்பெற வேண்டு மென்று பெரு நோக்கோடு—நாடாளுமன்றத்திலே கழக உறுப்பினர்கள் வாதாடி இருக்கிறார்கள்; வலியுறுத்தியிருக் கிறார்கள் என்பதை நான் மெத்த பெருமையோடு இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அளிக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையில் தேர்தல் நேரத்திலே அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் எந்த அளவுக்கு விடுபட்டு போய் இருக்கின்றன என்பது ஒரு பகுதி; அளிக்கப் பட்ட வாக்குறுதிகளை எந்த அளவுக்கு நிறைவேற்ற முன் வந்திருக்கிறார்கள் என்பது மற்றொரு பகுதி. இந்த இரண்டு பகுதிகளையும் நான் இங்கே சற்று விரிவாக எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையிலே "வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள மக்கள் வேலை கிடைக்கும் காலத்தில் ஓரளவு வாழ்ந்தும், வேலையற்று பட்டினி கிடந்தும் வாழ்க்கை நடத்தும் நிலையை மாற்றி, வேலை கிடைக்காத காலத்தில் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் வயதுவந்த ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் கிடைக்கச் செய்வோம்" என்று கூறப்பட்டுள்ளது. இது இந்த தேர்தல் அறிக்கையில் மட்டுமல்ல

[டாக்டர் மு. கருணாநிதி] [1980 ஜூலை 9

கடந்த 1979–80 ஆம் ஆண்டு இந்த அவையில் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே அமைந்த அமைச்சரவையின் சார்பாக வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை பக்கம் 7-ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் உறுதியான வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒரு நாளைக்கு 3 ரூபாயும் அரிசியும் கோதுமையும் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும். வேலை ஏதும் அளிக்கப்படாத நாட்களில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாயோ அல்லது அதற்கிணையான அரிசியோ கோதுமையோ வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையைப் படித்தவர் யார் என்றெல்லாம் ஆராய்ச்சியில் இறங்க மாட்டீர்கள் என்று கருதுகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு அளித்த அறிக்கைதான் அது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, 1979–80 ஆம் ஆண்டு இங்கே வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைக்குப் பொறுப்புடைய அரசு என்ற காரணத்தால் நான் கேட்க விரும்புகிறேன். ஒரு நாளைக்கு 3 ரூபாய் அரிசி, கோதுமை ஒவ்வொருவருக்கும் கிடைக்கும், வேலை எதுவும் அளிக்கப்படாத காலங்களில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாய் அல்லது அதற்கு இணையான அரிசி அல்லது கோதுமை வழங்கப்படும் என்று 1979–80-ல் உறுதியளித்திருக்கிறீர்கள். தேர்தல் காலத்திலே அளித்த உறுதி இருக்கட்டும் நிதிநிலை அறிக்கையிலே உறுதியளித்திருக்கிறீர்களே, அப்படி வேலை கிடைக்காத நாட்களில் ஒரு ரூபாய் வீதம் எத்தனை பேருக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டது 1979–80-ல் என்ற விவரத்தை இந்த ஆண்டு அறிக்கையிலே தந்திருக்கிறீர்களா? அப்படியானால் எவ்வளவுபேருக்குத் தந்தீர்கள், இந்த விளக்கங்களை எல்லாம் உங்களைத் கேலி செய்வதாகவோ, உங்களை மாட்ட வைப்பதாகவோ எண்ணாமல் கேட்கின்ற விளக்கத்திற்கு சரியான பதிலை அளிப்பீர்கள் என்கிற ஆர்வத்தோடு இந்த அவையின் முன்னால் நிதியமைச்சரிடத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து தேர்தல் அறிக்கையிலே இன்னொன்றும் குறிப்பிட்டிருக்கிறீர்கள், அதாவது '' வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள ஏழைகளுக்கு அவர்கள் 5 கிலோ அரிசி வாங்கினால் ஒரு கிலோ அரிசி இலவசமாக கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்'' என்று இப்படி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கை ஆணித்தரமாக கூறியது. இந்த நிதிநிலை அறிக்கை வந்தபோதும் கூட பல பத்திரிகைகளில் பெரிய தலைப்புபோட்டு கொட்டை



1980 ஜூலை 9] [டாக்டர் மு. கருணாநிதி]

எழுத்துக்களில் என்ன போடப்பட்டிருக்கின்றது என்றால் '' ஏழைக் குடும்பங்களுக்கு இலவச அரிசி '' என்று பல ஏடுகளிலே பெரிய எழுத்துக்களில் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் எந்த ஏழைகளுக்கு இது என்று பல சல்லடைகளை வைத்து வடிகட்டி கடைசியாக இவர்களுக்குத் தான் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்? நீங்கள் எத்தனை பேருக்கு இந்த ஒரு கிலோ அரிசியை வழங்கி இருக்கிறீர்கள்? முதலிலே அறிவித்த 5 கிலோ அரிசி வாங்கினால் அவர்களுக்கு ஒரு கிலோ அரிசி இலவசமாகத் தரப்படும் என்ற அந்த நிலையை மாற்றி விட்டீர்கள், பரவாயில்லை ஏழைக்கு வாரம் ஒரு கிலோ என்று அறிவிப்பு செய்திருக்கிறீர்கள். எந்த ஏழைக்கு? அதிலே எத்தனை குவாலிபிகேஷன்? எத்தனை தகுதிகளைப் பிரித்திருக்கிறீர்கள் என்பதை தயவு செய்து எண்ணிப் பார்க்கவேண்டும். இந்த வரவு செலவுத் திட்டம் இந்த அவையிலே வைக்கப்பட்ட போது, நிருபர்கள் அதுபற்றி என்னிடம் கேட்டபோது வாக்களித்த மக்களுக்குத் திருப்தி என்றால் எனக்கும் திருப்தி தான் என்று நான் சொன்னேன். அதைக் கூட ஆளும் கட்சி உறுப்பினர்கள் தங்களுக்கு சாதகமாக எடுத்துக்கொண்டு எதிர்க் கட்சித் தலைவரே ஆதரிக்கிறார் என்று குறிப்பிட்டுள்ளார்கள். நான் இப்போதும் ஆதரிக்கிறேன். வாக்களித்த மக்களெல்லாம் இதை ஆதரிக்கிறார்கள் என்பது உண்மையானால் நானும் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். வாக்களித்த மக்களுக்கு தரப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்பட்டதா ? என்ற உண்மை அந்த வாக்களித்த மக்களுக்குத் தெரியுமா இல்லையா என்பதுதான் இப்போது நம் முன்னால் உள்ள கேள்வியாகும். எனவேதான் சிலபேர் இந்த பட்ஜெட்டுக்குள்ளே அதிகமாக வராமல் மத்திய அரசின் பட்ஜெட்டுக்குள்ளே நுழைந்து அந்த பட்ஜெட்டில் குறைபாடுகளை எடுத்துக் சொன்னார்கள். மத்திய அரசுக்காக வக்காலத்து வாங்க நான் விரும்பவில்லை. அதற்குரிய இடமும் இதுவல்ல என்பதை நான் அறிவேன். ஆனால் இந்த வரவுசெலவுத் திட்டத்தில் ஏழைகளுக்கு இலவச அரிசி என்று சொல்லப்பட்டிருக்கின்றதே அந்த ஒரு கிலோ அரிசியைப் பெற இருப்பவர்கள் யார் ? முதியோர் உதவித்தொகை பெறுவோர், கைம்பெண்கள் உதவித்தொகை பெறுவோர், உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை பெறுவோர், விவசாயத் தொழிலாளர் உதவித்தொகை பெறுவோர் ஆகியவர்களுக்குத் தான் வாரம் ஒரு கிலோ அரிசி இலவசமாக வழங்க அரசு முடிவு செய்துள்ளது என்று நாவலர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

வறுமைக் கோடு வறுமைக்கோடு என்று நம்முடைய மாமன்றத்தில் கடந்த சில நாட்களாக அது படாதபாடு பட்டுக் கொண்டிருக்கிறது. வறுமைக்கோடு என்றால் என்ன, அது

[டாக்டர் மு. கருணாநிதி] [1980 ஜூலை 9

என்ன வறுமைக்கோடு என்றெல்லாம் ஆளும் கட்சி சார்பிலேயும் எதிர்க்கட்சி சார்பிலேயும் எடுத்து பேசப்பட்டு நேற்றையதினம் அதற்கான சில விளக்கங்களைக் கூட என்னுடைய அருமை நண்பர் திரு நெடுமாறன் அவர்கள் இங்கே தந்தார் என்று அறிகிறேன். ஆகவே அதுபற்றிப் பல கருத்துக்கள் இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லப்பட்டிருந்தாலும் கூட நான் ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன்.

[முற்பகல் 11–50]

மத்திய திட்டக் குழு, பேராசிரியர் டி. ஆர். காட்கில் அவர்களுடைய தலைமையில், டாக்டர் பி. எஸ். கங்குலி, டாக்டர் பி. எஸ். லோகநாதன், திரு. எம். ஆர். மசானி, திரு. அசோக் மேத்தா, டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் ஆகியவர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்தது. வறுமை கோடு என்றால் என்ன என்பதை வரையறுத்துக் கூற வேண்டும் என்பது அந்தக் குழுவிற்கு இடப்பட்ட பணியாகும். அவர்கள் வறுமை கோடு என்பதை Minimum level of consumption அதாவது குறைந்த பட்ச உணவு, உடை, உறைவிடம். அதாவது, சாப்பிட ஆகாரம், கட்டத் துணி, இருக்க இடம் ஆகிய இந்த மூன்றையும் அடிப்படையாக வைத்து அந்தக் குழுவினர் இந்த வறுமை கோடு பற்றி கணித்தார்கள். அதில் ஒருவருடைய வருமானம் எவ்வளவாக இருந்தாலும் குறைந்த பட்சத் தேவையான உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றிற்கு என்ன செலவு ஆகுமோ அந்தச் செலவைத்தான் வறுமை கோட்டை நிர்ணயிப்பதற்கு அளவு கோலாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு அளவு கோலாக பணத்தை எடுத்துக் கொள்வதா, அல்லது சத்துணவை எடுத்துக் கொள்வதா என்று சர்ச்சை எழுந்தது? ரூபாயினுடைய மதிப்பு மாறிக் கொண்டேபோகும். குறைந்து கொண்டும் போகும் என்ற காரணத்தினால் சத்துணவையே அடிப்படையாக வைத்து எடுத்துக் கொள்ளலாம் என்று வைத்து, கிராம மக்களுக்கு ஒரு நாளைக்கு சத்துணவு 2,400 காலரீஸ் என்றும், நகரத்தில் வாழ்கிற மக்களுக்கு ஒரு நாளைக்கு தேவைப்படுகிற சத்துணவு 2,100 காலரீஸ் என்றும் அந்தக் குழு நிர்ணயித்தது.

அந்த அளவு உணவைப் பெறுவதற்கு கிராம மக்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு நபருக்கு 1960–61 ஆம் ஆண்டிலே 20 ரூபாய் தேவைப்பட்டது. நகரத்திலே உள்ள நபருக்கு 1960–61 ஆம் ஆண்டிலே 25 ரூபாய் தேவைப்பட்டது. விலைவாசி ஏற்றத்தாலும், பண வீக்கத்தாலும் 1976–77-ல் அந்த அடிப்படைத் தேவைக்கு கிராம மக்களுக்கு நபர் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 61.80 பைசா என்றும் நகர்ப்புற மக்களுக்கு, ஒரு நபருக்கு மாதம் ஒன்றுக்கு 71.30 பைசா என்றும் கணிக்கப்பட்டது. இன்



1980 ஜூலை 9] [டாக்டர் மு. கருணாநிதி]

றைய விலைவாசி நிலையில் நம்முடைய மாநில திட்டக் குழு, மதிப்பீடு செய்து கிராமங்களிலே நபர் ஒன்றுக்கு ஒரு மாதத்திற்கு 75 ரூபாய் என்றும், நகரத்திலே நபர் ஒன்றுக்கு, ஒரு மாதத்திற்கு 90 ரூபாய் என்றும் கணக்கிட்டது. அந்த அடிப்படையிலே தமிழ் நாட்டினுடைய மக்கள் தொகையை கணக்கிட்டுப் பார்த்தால், எனக்கு கிடைத்த தகவல்படி கிராமங்களிலே 48 சதவீதம் பேர் கள் இந்த வறுமை கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள். நகர்ப் புறத்திலே 41 சதவீதம் பேர்கள் இந்த வறுமை கோட்டிற்கும் கீழே இருக்கிறார்கள்.

நமது அருமை நண்பர் நெடுமாறன் அவர்கள் நேற்று தெரி வித்தது போல் ஏறத்தாழ 60 சதவீதம் பேர்கள் தமிழ்நாட்டில் இந்த வறுமை கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள். நீங்கள் என்ன சொன்னீர்கள்? வறுமை கோட்டிற்குக் கீழே உள்ள ஏழை களுக்கெல்லாம் 1 கிலோ அரிசி தரப்படும் என்று சொன்னீர்கள். ஆனால், இன்றைய தினம், முதியோர், கைம்பெண்கள், உடல் ஊனம் உற்றோர், கண்ணொளி இழந்தோர் உதவித் தொகையை பெறுகிறவர்களுக்கு மாத்திரம் என்று சொல்கிறீர்கள். அவர் களுடைய எண்ணிக்கை எவ்வளவு? நாவலர் அவர்கள் தந்திருக் கிற நிதிநிலை அறிக்கையிலே 41 ஆம் பக்கத்திலே புரட்டிப் பார்த்தால் இந்த 1 கிலோ அரிசி அறிவிப்பு இருக்கிறது. 40 ஆம் பக்கத்தில் பார்த்தால், அந்த முதியோர், கைம்பெண்கள், உடல் ஊனம் உற்றோர், கண்ணொளி இழந்தோர் ஆகியவர்களுடைய கணக்கு என்னவென்றால் 1,13,970 என்று குறிப்பிடப்பட்டிருக் கிறது. வறுமை கோட்டிற்கு கீழே உள்ளவர்களின் எண்ணிக்கை 200 இலட்சம் பேர்கள். சராசரி 2 கோடி பேர்கள். அவர் களுக்கு இலவச அரிசி வழங்குவதாக தேர்தல் அறிக்கையிலே கூறிவிட்டு இப்பொழுது 1,13,970 பேர்களுக்கு அல்லது 1,15,000 பேர்களுக்கு, இன்னும் கொஞ்சம் அதிகமாக விவசாயத் தொழி லாளர்களையும் கணக்கில் சேர்த்துக்கொள்வோமேயானால் 2 இலட்சம் பேர்களுக்கு கொடுக்கப்படுவதாக கணக்கு வருகிறது. 200 இலட்சம் பேர்களுக்கு இந்த 1 கிலோ அரிசி இலவசமாக வழங்குவதாக சொல்லிவிட்டு, 2 இலட்சம் பேர்களுக்கு வழங்கு வதாக நிதிநிலை அறிக்கையிலே கூறியிருக்கிறீர்கள். அதைத் தான் நான் சொன்னேன் வாக்களித்த மக்களுக்கு திருப்தி என் றால் எனக்கும் திருப்திதான் என்று நான் குறிப்பிட்டேன்.

இந்த 1 கிலோ அரிசி 2 ரூபாய் என்று வைத்துக்கொண்டா லும், கொஞ்சம் அதிகமாகவே சொல்கிறேன் சர்க்கார் விலையை- 2 ரூபாய் என்று வைத்துக்கொண்டாலும்கூட மாதம் ஒன்றுக்கு 8 ரூபாய் தருகிறீர்கள். ஏற்கெனவே இந்த முதியோர் பென்ஷன், கைம்பெண்கள், உடல் ஊனம் உற்றோர் பென்ஷன், கண்ணொளி இழந்தோர் பென்ஷன் ஆகிய அத்தனை பேர்களும் 25 ரூபாய் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் வாரம் தோறும் 1

கிலோ அரிசியை அளப்பதற்குப் பதிலாக வாரம் 2 ரூபாய் என்று
கணக்கிட்டு நாலால் பெருக்கி, 4 இண்டட்டு 2 எட்டு ரூபாய் என்று
கணக்கிட்டு, அந்த 25 ரூபாயோடு 8 ரூபாயைச் சேர்த்து 33
ரூபாயாக தருகிறோம் என்றால் அல்லது 35 ஆக உயர்த்தித்
தருகிறோம் என்றால் இந்த முதியோர் பென்ஷன், கைம்பெண்
கள், மற்றும் உள்ள உடல் ஊனம் உற்றோர், கண்ணொளி இழந்
தோர் ஆகிய பென்ஷன்கள் 20லிருந்து 25 ஆக உயர்ந்து, 25
லிருந்து இப்பொழுது 35 ஆக உயர்ந்திருக்கிறது என்கிற அந்த
அளவு பெருமையாவது நீங்கள் இதிலே அடையலாம்.

முதியோர் பென்ஷன் என்றாலும், அல்லது அறுபது வயது
கடந்த ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு மாத ஓய்வூதியம்
வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்களே அந்தப் பென்ஷன்
என்றாலும், நான் கேட்பதெல்லாம் இந்த முதியோர் பென்ஷன்
பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் தமிழகத்தின் முதல்வர்
பொறுப்பேற்றிருந்த காலத்தில் நடைமுறைக்குக் கொண்டுவரப்
பட்டது. அது முதல் இதுவரை தமிழகத்தில் இருக்கிற தகுதி
வாய்ந்த எல்லா முதியவர்களுக்கும் இந்தப் பென்ஷன் தரப்படுவ
தில்லை. நாம் ஓர் அளவுகோல் வைத்திருக்கிறோம். இதற்
காக இவ்வளவு தொகை ஒதுக்குவது என்று ஓர் அளவுகோல்
வைத்திருக்கிறோம். அது காமராஜ் காலமானாலும் சரி, பக்த
வச்சலம் காலமானாலும் சரி, பேரறிஞர் அண்ணா காலமானா
லும் சரி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலமானாலும்
சரி, இந்த ஆட்சிக் காலமானாலும் சரி இவ்வளவு இலட்சம்
ரூபாய் இந்த பென்ஷனுக்காக ஒதுக்குவது என்று ஒதுக்கி வைத்து
விட்டு, அதற்குள்ளேதான் செலவிட்டிடுக்கொண்ருக்கிறோம்.
அதற்குள்ளேதான் நாம் வட்டமிட்டுக்கொண்டிருக்கிறோம்.
ஒரு கிராமத்தில் ஐம்பது பேர்கள் முதியோர் பென்ஷன் பெறு
வார்களானால் 51வது நபர் வெயிட்டிங் லிஸ்டில் இருப்பார்.
இந்த 50 பேர்களில் ஒருவர் இந்த உலகத்தை விட்டு நீங்கிவிடு
வார்களானால், 50 என்பது 49 ஆக ஆகுமானால் இந்த 51வது
நபர், வெயிட்டிங் லிஸ்டில் உள்ளவர் 50வது இடத்தை நிரப்பு
வார். இதுதான் இந்தப் பென்ஷன் முறை. இது அனைவருக்
கும் தெரிந்த ஒன்று. இது சில ஆளும் கட்சி உறுப்பினர்களுக்
கும், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் தெரியாமல்கூட இருக்
கலாம். எனவே, ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களுக்கு தெரி
யும் என்ற காரணத்தினாலும், அனுபவரீதியாகவும் இங்கே எடுத்
துச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பென்ஷன் எல்லோருக்கும்
தருவதில்லை. அதிலும் சல்லடை போட்டு சலித்துத் தருகிறார்
கள். இப்போது அறுபது வயது கடந்த ஏழை விவசாயத் தொழி
லாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்று அறிவித்திருக்
கிறார்கள். இதில் நான் தெரிந்து கொள்ள விரும்புவதெல்லாம்
இதுவரை இந்த முதியோர் பட்டியலில் இந்த அறுபது வயது
கடந்த விவசாயத் தொழிலாளர்கள் வரவில்லையா? அவர்கள்





ஏன் ஒதுக்கப்பட்டார்கள்? இந்த விவரம் எனக்குத் தேவை
அறுபது வயது கடந்த எல்லா விவசாயத் தொழிலாளர்களுக்கும்.
இந்த ஓய்வூதியம் தரப்பட இருக்கிறதா என்ற விவரம் எனக்கும்
தேவை, நாட்டுக்கும் தேவை, அதை விட விவசாயத் தொழி
லாளர்களுக்கு மிகமிக அதிகமாகத் தேவை. இவர்கள் அத்தனை
பேர்களையும் சேர்த்து கிட்டத்தட்ட 1,15,000 பேர்களுக்கு
வாரந்தோறும் ஒரு கிலோ அரிசி தருகிறோம் என்று கூறினால்
தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட உறுதிமொழிக்கும், கூட்
டங்களில் பேசப்பட்ட உறுதிமொழிக்கும் முற்றிலும் புறம்பானது
என்பதை மாத்திரம் நான் இங்கே எடுத்துக்கூற கடமைப்பட்
டிருக்கிறேன். அரசாங்க அலுவலர்களுக்கு தேர்தல் அறிக்கையில்
தரப்பட்ட உறுதிமொழிகள் சாமான்யமானவை அல்ல. நிலை
யான பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அமைப்புக்குழு ஒன்று
உருவாக்கப்படும் என்றும் அந்தக் கமிட்டி மூன்று மாதங்களுக்கு
ஒருமுறை கூடும் என்றும் அரசாங்க அலுவலர்களுக்கு ஓய்வுகால
குடும்ப நலத் நிதி திட்டம் நடைமுறைக்கு வரும் என்றும், மத்திய
அரசு ஊழியர்களுக்குச் சமமாக அகவிலைப்படி, மாநில அரசு
ஊழியர்களுக்கும் தரப்படும் என்றும் அண்ணா திராவிட முன்
னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.
இந்த நிதிநிலை அறிக்கையில் தேடித்தேடிப் பார்த்தாலும் எங்
குமே அதற்கான நிதி ஒதுக்கீடோ அதற்கான அறிவிப்போ இல்லை
என்பதை நான் ஆழ்ந்த வருத்தத்தோடு சுட்டிக்காட்டக் கடமை
பட்டிருக்கிறேன். தேர்தல் அறிக்கையில் இன்னொன்றையும்
குறிப்பிட்டீர்கள். ஒரு கவர்ச்சிகரமான உறுதிமொழி. பிரசவத்
தின்போது தாய், சேய் உடல்நலத்தை பராமரிப்பதற்காக ஏழை
தாய்மார்களுக்கு ரூபாய் 50 வீதம் மூன்று மாதங்களுக்கு சத்
துணவிற்காக ரூபாய் 150 தரப்படும் என்று குறிப்பிட்டிருந்தார்
கள். இது மாநில அரசின் செலவில்கூட செய்யப்படுகிற காரியம்
அல்ல, நலிந்தோர் நல்வாழ்வு என்ற அந்தத் திட்டத்தின் கீழ்
உலக வங்கியிலிருந்து பணம் பெற்று உதவி பெற்று செய்யப்படு
கிறது இந்தக் காரியம். எல்லோரும் எண்ணிக்கொண்டார்கள்.
தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா மாவட்டங்களிலும், எல்லா ஊர்
களிலும் இருக்கிற ஏழைத் தாய்கள் பிரசவத்தின்போது ரூபாய்
150 மூன்று மாதங்களுக்கு தங்களுடைய சத்துணவிற்காக குழந்
தைகளின் சத்துணவிற்காக பெறலாம் என்று எண்ணினார்கள்.
ஆனால் நிலைமை என்ன? இந்தத் திட்டம் தமிழ்நாட்டில்
மதுரை மாவட்டத்தில் உள்ள கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்
றியத்தில் முன்னோடித் திட்டமாக இந்த ஆண்டு செயல்படுத்தப்
பட்டு பின்னர் நான்கைந்து மாவட்டங்களைக் குறிப்பிட்டு அந்த
மாவட்டங்களில் ஐந்தாண்டுக் காலத்திற்குள் எடுத்துக்கொள்ளப்
படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த கொட்டாம்
பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிற தாய்கள்தான் ஏழைத்
தாய்களா?

[டாக்டர் மு. கருணாநிதி] [1980 ஜூலை 9
[நண்பகல் 12–00].

இந்த 150 ரூபாய், இந்த பிரசவ காலத்திற்கு சத்துணவுத்
திட்டத்திற்காக வழங்கப்படும் என்று அறிவித்துள்ளதற்கும்,
தேர்தல் அறிக்கைக்கும் எள்ளளவும் சம்பந்தம் இருக்கிறதா என்
பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

விவசாயிகளுடைய கடன்களைப் பற்றி இங்கே பலரும் பேசி
யிருக்கிறார்கள். நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின்
சார்பிலே பேசிய அழகர்சாமி அவர்கள், அவர்களுடைய கட்சி
யின் சார்பில் சில ஆக்கபூர்வமான யோசனைகளை இங்கே
எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவருடைய கட்சியின் சார்
பிலே போடப்பட்டுள்ள—கட்சியல்ல—கம்யூனிஸ்ட் விவசாய
சங்கம் அழகர்சாமி அவர்கள் தலைமையிலே போடப்பட்ட
தீர்மானத்தில் 150 கோடி ரூபாய் பயிர்க் கடனை ரத்து செய்ய
வேண்டும் என்ற தலைப்பில் வந்துள்ள செய்தியிலே கூட அவர்
கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். 60 கோடி ரூபாய் கடனைத்
தள்ளுபடி செய்ய முன்வந்த தமிழக அரசினுடைய நடவடிக்கை
களை வரவேற்றுவிட்டு, அடுத்துச் சொல்கிறார்கள், "பாதிக்கப்
பட்ட விவசாயிகள் அனைவருக்கும் நிவாரணம் அளிப்பதற்குப்
பதில், சிறிய விவசாயிகளுடைய பயிர்க் கடனில் ஒரு பகுதியை
மட்டும் தள்ளுபடி செய்யப்படும் என்பது எந்த வகையிலும்
விவசாயிகளுக்கு திருப்தி அளிக்காது; பெரும் ஏமாற்றத்தையே
உண்டாக்கும். மாநில அரசின் கூற்றுப்படி பார்த்தாலும், சிறிய
விவசாயிகளின் பயிர்க் கடன் மட்டும் மொத்தமுள்ள பயிர்க்
கடன் 300 கோடி ரூபாயில் பாதி உள்ளது. மேலும் தள்ளுபடி
செய்யப்பட்டது போக, பாக்கிக் கடன்களை இப்போதே திருப்
பிச் செலுத்த வேண்டும் என்று கோருவது மீண்டும் ஜப்தி
போன்ற கெடுபிடிகளுக்கு கொண்டு செல்லும் நிலையைத்தான்
உருவாக்கும். எனவே, 5 ஸ்டாண்டர்டு ஏக்கர்களுக்கு உட்பட்ட
விவசாயிகளின் மீதான அனைத்துப் பயிர்க் கடன்களையும்
தள்ளுபடி செய்ய வேண்டும்; மற்ற விவசாயிகளின் பயிர்க்
கடன்களுக்கான வட்டி முழுவதையும் தள்ளுபடி செய்து, அசலை
10 ஆண்டுகளில் வட்டியில்லாக் கடனாகச் செல்லும் வகையில்
ஒத்தி வைக்க வேண்டும். நடப்பு ஆண்டில் விவசாயக் கடன்கள்
அனைத்தும் விவசாயிகளுக்கு கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.
நீண்ட கால கடனைப் பொறுத்த வரையில், பயன்படாமல்
போன கடன்களை சரியான பரிசீலனை அடிப்படையில் தள்ளு
படி செய்து, மிஞ்சிய கடனுக்கான வட்டி முழுவதையும்
தள்ளுபடி செய்து, 10 ஆண்டு தவணைகளில் செலுத்தும்
வாய்ப்பை அளிக்க வேண்டும்" என்ற இத்தகைய தீர்மானங்களை
நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர், இந்திய கம்யூனிஸ்ட்



1980 ஜூலை 9] [டாக்டர் மு. கருணாநிதி]

கட்சியைச் சார்ந்த அழகர்சாமி அவர்கள் தலைமையிலே கூடிய
விவசாயச் சங்கத்தின் சார்பிலே நிறைவேற்றியிருக்கிறார்கள்.
இதிலே பெரும்பான்மையான அளவுக்கு தி.மு.க. வும் ஒத்துப்
போகின்றது என்ற நல்ல கருத்தினை நான் இங்கே எடுத்து
வைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால், அளிக்கப்பட்ட உறுதிமொழிகள் என்ன? அதை
மறந்துவிடக் கூடாது. நான் குத்திக் காட்டுகிறேன் என்று தயவு
செய்து எண்ணிவிடவும் கூடாது. தேர்தலுக்கு முன்பு மாண்பு
மிகு முதலமைச்சர் பேசியதாக அண்ணா பத்திரிகையில் 1980-ம்
ஆண்டு மேத் திங்கள் 17-ம் தேதியிட்ட இதழில் வெளிவந்துள்ள
பேச்சை மாத்திரம் இங்கே படித்துக் காட்டுவது என்னுடைய
பொறுப்பென்று கருதுகிறேன். "விவசாயிகள் 9 அம்சத் திட்டம்
பற்றி தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே தெளிவாக எதையும்
குறிப்பிடவில்லை. விவசாயிகளுடைய கோரிக்கைகளிலே முக்கிய
மான கோரிக்கை, கடன் தள்ளுபடி கோரிக்கையாகும். அண்ணா
தி.மு.க. ஆட்சிக்கு வந்தால், விவசாயிகளின் கடனைத் தள்ளுபடி
செய்வதற்கு உதவ மத்திய அரசை வற்புறுத்தும். மத்திய அரசு
மறுத்தால், ஐந்தாண்டு காலத்திற்குள் கழக அரசே அந்தக்
கடனைத் தள்ளுபடி செய்யும் என்று அண்ணா தி.மு.க. தேர்தல்
அறிக்கையிலே திட்டவட்டமாகத் தெளிவாக குறிப்பிட்டிருக்
கிறோம். ஆனால் தி. மு. க. தேர்தல் அறிக்கையிலே இப்படி
அவர்கள் கூறவில்லை. நாங்கள் ஆட்சிக்கு வந்தால், விவசாயக்
கடனைத் தள்ளுபடி செய்வோம் என்று தேர்தல் அறிக்கையிலே
சொல்வதற்கு திராணியற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தார்
இப்போது மேடையிலே பேசுகிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு
வந்தால் விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்வோம் என்று
மேடையிலே பேசுகிறார்கள். இது ஏமாற்று வேலை என்பதை
மக்கள் மறந்து விடக் கூடாது. இந்த தேர்தலில் விவசாயிகளை
ஏமாற்றி, ஓட்டு வாங்குவதற்காகவே தி.மு. கழகத்தார் இப்படி
பேசுகிறார்கள்" என்று பேசினார். அது மட்டுமல்ல. "விவ
சாயக் கடனை நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ரத்து செய்வோம்.
மத்திய அரசு ஒத்துக் கொள்ளாவிட்டால், கடன் பணத்தை
தமிழக அரசே ரிசர்வ் பாங்குக்கு கொடுக்கும். ஆனால், கருணா
நிதி என்ன சொல்கிறார்? விவசாயிகள் கடனை ரத்து செய்ய
ஆவன செய்வோம் என்கிறார். ஆவன செய்வோம் என்றால்
என்ன அர்த்தம்? ஒருவர் 100 ரூபாய் கேட்கிறார். உடனே
அடுத்தவர், ஆவன செய்வதாகக் கூறிவிட்டு, 2 ரூபாய் கொடுக்
கிறார். இதுதான் ஆவன செய்வது. இந்தப் பிரச்சினை பற்றி
கருணாநிதி உறுதியாகச் சொல்லவில்லை. ஏமாற்றப் பார்க்
கிறார்" என்றும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்

அன்றைக்குப் பேசி, 1980-ம் ஆண்டு மேத் திங்கள் 15-ம் நாளன்றும், 1980-ம் ஆண்டு மேத் திங்கள் 17-ம் நாளன்றும் அண்ணா பத்திரிகையிலே வந்திருக்கிறது.

'ஆவன செய்வோம்' என்றால் என்ன அர்த்தம் என்று கேட்பதற்குப் பொருள் கூறியிருக்கிறார்கள். அது 100 ரூபாய் கேட்பவர்களிடம் இரண்டு ரூபாய் கொடுப்பதுதான். அதைத் தான் இப்போது இந்த அரசு சார்பில் சொல்லியிருக்கிறார்கள். எல்லாக் கடனையும் ரத்து செய்வதாகச் சொல்லிவிட்டு 60 கோடி ரூபாயை ரத்து செய்திருப்பதாக அறிவித்திருக்கிறீர்கள். அதிலே புள்ளி விவரங்களுக்கு ஆழமாகச் சென்று பார்த்தால் தக்காவிக் கடன் ரத்து 16 கோடி ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள். தக்காவிக் கடன் என்றால் என்ன? வெள்ளைக்காரன் காலத்திலிருந்து தரப்பட்டு இப்போது கொடுக்கப்படாமலே இருக்கும் ஒரு கடன் தக்காவிக் கடன். அது வராக் கடன் என்று ஒதுக்கி வைக்கப்பட்ட கடன். ஆனாலும் நம்முடைய நிதிநிலை அறிக்கை கணக்கேட்டில் அது தோன்றிக் கொண்டே இருக்கும். அப்படித் தோன்றுவதற்கு ஒரு முக்கியமான காரணம் உண்டு. மத்திய சர்க்காரிடம் மாநில அரசே நிதி உதவி கோருகிற நேரத்தில் நம்முடைய ரிசோர்சஸ் என்ன, நிதி ஆதாரம் என்ன என்று கேட்கத் தவற மாட்டார்கள். நம்முடைய நிதி ஆதாரங்கள் அடிப்படையில் ரிசோர்சஸ் அடிப்படையில்தான் மத்திய அரசின் உதவிகளைப் பெற வேண்டியவர்களாக இருக்கிறோம். எனவே, 16 கோடி ரூபாய் கடனை எந்த விவசாயிகளிடத்திலும்—அது காமராஜர் ஆட்சியாக இருந்தாலும் சரி, பக்தவத்சலம் ஆட்சியாக இருந்தாலும் சரி, அண்ணா அவர்கள் ஆட்சியாக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியாக இருந்தாலும் சரி—ஏன் அ.தி.மு.க. ஆட்சி இதுவரையிலும் சரி, அந்தத் தக்காவிக் கடனைக் கேட்டதே இல்லை. அது வராக் கடன் என்று ஏறத்தாழ எழுதப்படவில்லையே தவிர, 'ரைட் ஆஃப்' என்று சொல்லப்படவில்லையே தவிர, அது வாராக் கடன் என்று ஒதுக்கி வைக்கப்பட்ட கடன். அதைப் போய்த் தள்ளுபடி செய்திருக்கிறோம். அது நம்முடைய ரிசோர்சைக் குறைத்துக் காட்டி பாதிக்கப்படுகின்ற நிலையாக இருக்குமே தவிர, உள்ளபடியே விவசாயிகளுக்கு நன்மை செய்திற ஒன்று என்று நிச்சயமாக என்னால் கூற இயலாது.

நாற்பத்தி இரண்டு கோடி ரூபாய் ஐந்து ஏக்கர் நிலம் உள்ள விவசாயிகளுக்கு கடன் ரத்து என்று நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ஐந்து ஏக்கர் என்பது மாவட்டத்திற்கு மாவட்டம், ஏன் மாவட்டத்திற்குள்ளேயே வட்டத்திற்கு வட்டம், பகுதிக்குப் பகுதி இந்த ஐந்து ஏக்கர் தன்மை மாறுகிறது என்பதை மறந்து விடக்கூடாது, அதைத்தான் இங்கு பேசிய தோழமைக் கட்சி உறுப்பினர்கள்கூட சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஐந்து ஏக்கர்





ஓரிடத்தில் பத்தாயிரம் ரூபாய் வரக் கூடிய வளமான பூமியாக இருக்கும். ஐநூறு ரூபாய் ஆயிரம் ரூபாய் வரக்கூடிய மிகச் சாதாரணமான பூமியும் உண்டு. ஐந்து ஏக்கராவில் அதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் பொத்தாம் பொதுவில் ஐந்து ஏக்கர் நிலம் உடையவர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆங்கில அறிக்கையிலும்— '5 acres owning' உடைமையாளர்கள் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. கடன் வாங்குகிறவர்கள் உடைமையாளர்கள்தானா என்றால் இல்லை. பெரும்பகுதியினர் குத்தகைதாரர்கள். குத்தகைதாரர்கள் தாங்கள் குத்தகைக்கு எடுத்து சாகுபடி செய்யும் நிலத்திற்குக் கடன் பெறுகிறார்கள். ஆக, இந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்வதில் குத்தகைதாரர்கள் நிலை என்ன? விளக்கம் தேவை. நிதியமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்தாக வேண்டும். ஐந்து ஏக்கர் என்று பொத்தாம் பொதுவில் சொல்வார்களானால் பத்தாயிரம் ரூபாய் வருமானம் உள்ள ஐந்து ஏக்கரும், ஆயிரம் ரூபாய் வருமானம் பெற முடியாத ஐந்து ஏக்கராவும் ஒன்றுதானா? அப்படித்தான் அதிகாரிகள் உங்களுக்குச் சொல்லியிருக்கிறார்களா? ஏதோ கேட்கிறார்கள்— சொல்லி வைப்போம் என்று அதிகாரிகள் சொல்லி விட்டார்களா? தேர்தல் அறிக்கையில் சொன்னதை இந்த அறிக்கையில் தரவேண்டுமென்று அவசரப்பட்டு இந்தக் காரியத்தில் இறங்கி விட்டீர்களா? இந்த விளக்கங்களை நிதியமைச்சர் நாவலர் அவர்களிடத்தில் எதிர்பார்க்கிறேன்.

மத்திய அரசு இந்த விவசாயக் கடன்களைத் தீர்ப்பதற்கான 42 கோடியை, 60 கோடியை கொடுக்க மத்திய அரசுக்கு கோரிக்கை அனுப்பியிருக்கிறோம் என்று நம்முடைய நாவலர் நிதிநிலை அறிக்கையின் 7-ம் பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார். கடிதம் எழுதியிருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்— நிதிநிலை அறிக்கையில் 7-ம் பக்கத்திலே; 9-ம் பக்கத்திலே இந்தக் கடன்களை விவசாயிகளுக்கு ரத்து செய்ய மத்திய அரசு உதவிட வேண்டுமென்று கேட்டிருக்கிறோம், எழுதியிருக்கிறோம், கோரிக்கை வைத்திருக்கிறோம் என்று சொல்லி விட்டு மறுநாள் நிருபர்களைச் சந்திக்கிற நேரத்தில் நிதியமைச்சர் அவர்கள் 'நாங்கள் கடிதம் எழுதுவதாக இருக்கிறோம்' என்று குறிப்பிட்டிருக்கிறார். இதிலே எது உண்மை, எது உண்மைக்கு மாறானது என்று கேட்பதுகூட நாவலர் உள்ளத்தைப் புண்படுத்தும் என்ற காரணத்தால், எது சரி, எது தவறு என்று அடக்கமாக அவர்களைக் கேட்க விரும்புகிறேன். மத்திய

[பிற்பகல் 12—10]

அரசுக்கு எழுதிவிட்டோம் என்று கூறியது சரியா அல்லது மறுநாள் நிருபர்களைப் பார்த்து இனிமேல்தான் மத்திய அரசுக்கு எழுதப்போகிறோம் ஒரு வார காலத்திலே எழுதிவிடுவோம் என்று

கூறியது சரியா இதிலே எது சரி எது தவறு என்பதை நாவலர் அவர்கள் விளக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மத்திய அரசு தரவேண்டும். நானும் உங்களோடு சேர்ந்து குரல் கொடுக்கிறேன். ஆனால், மத்திய அரசு தராவிட்டால் என்ன செய்யப்போகிறோம்? 30 இலட்சம் ரூபாய் உபரி விழுந்ததாக அறிவித்திருக்கிறீர்கள். மத்திய அரசு தராவிட்டால் அந்த 42 கோடி ரூபாயை இந்த அரசுதான் பொறுப்பேற்றுக்கொண்டு விவசாயிகள் சார்பாக வங்கிகளுக்குக் கட்ட வேண்டும். அந்த 42 கோடி ரூபாய் மொத்தக் கணக்கில் எல்லாக் கணக்கையும் சேர்த்த மொத்தக் கணக்கில் துண்டு விழுகிற நிதிநிலை அறிக்கையாக இந்த அறிக்கை ஆகிவிடுகிறதா இல்லையா என்பதற்கு நாவலர் அவர்கள் எனக்கு விளக்கம் அளிப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அந்த 42 கோடி ரூபாயை மத்திய அரசு ஒத்துக்கொண்டாலும், ஒத்துக்கொள்ளாவிட்டாலும் அந்தக் கடனை தீர்த்தே தீருவோம் என்கின்ற உறுதிமொழி 42 கோடிக்கல்ல, அது 400 கோடியாக இருந்தாலும் சரி, 5 ஆண்டுக்குள்ளே தவணை முறையில் ரிசர்வ் வங்கியிலே அந்தக் கடனைத் திருப்பிச்செலுத்துவோம், மத்திய அரசு ஒப்புக்கொள்ளாவிட்டாலும் கவலையில்லை என்று நம்முடைய முதலமைச்சர் மார்தட்டி வீராவேசமாக மத்திய அரசைப் பார்த்துக்கூறி இருக்கிறார்கள். நீங்கள் தந்தாலும் தராவிட்டாலும் நாங்கள் தவணை முறையில் ரிசர்வ் வங்கிக்கு பணத்தைச் செலுத்துவோம், விவசாயிகளுடைய கடன்கள் அனைத்தையும் என்று கூறியிருக்கிறார்கள். இந்த அறைகூவலிலிருந்து நீங்கள் பின்வாங்க மாட்டீர்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன். ஆனால், 42 கோடி ரூபாய்க்கு என்ன வழிசெய்யப்போகிறீர்கள்? இதிலே இல்லை. பிறகு சொல்லுவதாகச் சொல்கிறீர்கள். கணக்கிலே காட்டப்படவில்லை. நிதிநிலை அறிக்கையிலே அது வரவில்லை, ஒதுக்கீடு செய்யப்படவில்லை, நீங்கள் என்ன வழி செய்யப்போகிறீர்கள்? மத்திய அரசு தராவிட்டால் நீங்கள் அது துண்டுவிழுந்த தொகை என்று சொல்லி வரிப் போடப் போகிறீர்களா? வேறு வகை என்ன?

மராட்டிய மாநிலத்திலே ஏறத்தாழ 49 கோடி ரூபாய் விவசாயிகளுடைய கடனை ரத்து செய்து விட்டு அவர்களே நிதிநிலை அறிக்கையிலே பணம் ஒதுக்கீடும் செய்திருக்கிறார்கள் என்ற தகவல்களை பத்திரிகையிலே நம்மால் பார்க்க முடிகிறது. ஆனால் இங்கே அதற்கான நிதி ஒதுக்கீடு ஏன் செய்யப்படவில்லை என்பதற்கு நிதியமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்க வேண்டும்.

தேர்தல் அறிக்கையிலே இன்னொன்றைச் சொன்னார்கள். ‘‘ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒருவருக்காவது கட்டாயமாக வேலை தரப்படும், இது ஒன்று. இரண்டாவது ‘‘வேலையில்லாத பட்டதாரிகள் தமிழகத்திலே சுமார் ஒரு இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள்’’—இது உங்கள் அறிக்கையிலே உள்ள வச

னம்—மாதம் ரூபாய் 50 உதவித் தொகை வழங்கி ஆண்டு ஒன்றுக்கு 6 கோடி ரூபாய் ஒதுக்கிட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அறிவித்தது. இத்திட்டத்தை விரிவுபடுத்தி பயிற்சி பெற்று வேலையில்லாமல் இருக்கிற ஆசிரியர்களுக்கும் உதவித்தொகை 50 ரூபாய் கொடுக்கப்படும் என்று தேர்தல் நேரத்தில் தேர்தல் அறிக்கையிலே திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். கவர்னர் ஆட்சியிலே அது அமல்படுத்தப்படவில்லை என்றுகூட குறையோடு சுட்டிக்காட்டி அதற்காக ஒரு போராட்டத்தைக்கூட நடத்த வேண்டும் என்கின்ற அளவுக்கு தோழமைக் கட்சிகளின் சார்பாக அன்றைக்கு அறிவிப்புப் பிரகடனங்களையெல்லாம் செய்தீர்கள். ஆனால் நிதிநிலை அறிக்கையிலே அந்தத் திட்டம் என்ன ஆயிற்று? ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒருவருக்காவது கட்டாயமாக வேலை தரப்படும். இந்தத் திட்டம் எங்கே போயிற்று? அதைப்போலவே நீங்களே ஒத்துக்கொண்டதைப்போல வேலையில்லாமல் இருக்கிற பட்டதாரிகள் ஒரு இலட்சம் பேர்களுக்கு மாதம் 50 ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்குவோம் என்று சொன்னீர்கள், அதற்கான நிதி ஒதுக்கீடு இந்த நிதிநிலை அறிக்கையிலே எங்கே இருக்கிறது? இதை நான் கேட்கிறேன் என்றால் நீங்கள் விளக்கம் அளிப்பதற்காகத்தான் கேட்கிறேன், உங்களைச் சிக்க வைப்பதற்காக கேட்கவில்லை, எங்கே அதற்கு நிதி ஒதுக்கீடு என்றுதான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நாவலர் அவர்கள் நிருபர்களிடத்திலே சொன்னதாகப் பார்த்தேன், பத்திரிகையிலே பார்த்தேன். அதற்கு 50 இலட்சம் ரூபாய் டோக்கனாக அடையாளப்பூர்வமாக ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இலட்சம் பேர்கள் உங்கள் கணக்குப்படி, ஒருவருக்கு 50 ரூபாய் என்றால் இலட்சம் பேர்களுக்கு கொடுத்தால் ஒரு மாதத்திற்கு 50 இலட்சம். ஒரு ஆண்டுக்கு வரவு-செலவுத் திட்டத்திலே 50 இலட்சம் ஒதுக்கியிருக்கிறீர்கள். நீங்கள் சொன்னது இந்த ஆண்டு முழுவதற்கும் அதற்கு 6 கோடி ரூபாய் ஆகும், 6 கோடி ரூபாய் எங்கே இதிலே ஒதுக்கியிருக்கிறீர்கள் என்று கேள்வியாக அல்ல, விளக்கம் பெறுவதற்காக உங்களிடத்திலே நான் கேட்க விரும்புகிறேன்.

வேலைக்கு உணவுத் திட்டம். இது சில உறுப்பினர்களால்—அவர்கள் யாரும் என்மீது தயவு செய்து கோபித்துக் கொள்ளக் கூடாது—ஏதோ 25 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு தரப்பட்டு விட்டது என்றெல்லாம் பேசப்பட்டது; ஏடுகளிலே கூட பெரிய எழுத்துக்களில் 25 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அல்லது 23 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு; நாவலருடைய நிதிநிலை அறிக்கை என்றெல்லாம் போடப்பட்டது. நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர், நாவலர் நிதிநிலை அறிக்கையை அளித்த மறு நாளோ அதற்கு மறு நாளோ இங்கே ஒரு கேள்விக்குப் பதில் அளித்த நேரத்திலே சொன்னார்கள், 23 இலட்சத்திற்குப் பதிலாக 25 இலட்சம் பேர் என்று சொன்னார்கள். இரண்டு

[டாக்டர் மு. கருணாநிதி] [1980 ஜூலை 9

மூன்று இலட்சம் கூடக் குறைவதில் ஒன்றும் பெரிய வேறுபாடு வந்துவிடப்போவதில்லை. நிதியமைச்சர் சொன்னது 23 இலட்சம்; உள்ளாட்சித்துறை அமைச்சர் கேள்விக்குப் பதில் கூறும் பொழுது சொன்னது 25 இலட்சம். இந்த 25 இலட்சம் அல்லது 23 இலட்சம் பேருக்கும் 1979–80 ஆம் ஆண்டில் 55,584 டன் அரிசி வழங்கப்பட்டுள்ளது. இது நிதிநிலை அறிக்கையிலே நீங்கள் தந்திருக்கின்ற புள்ளிவிவரம். இந்த 55,584 டன்னை கிலோக்களாக ஆக்கி அதை 23 இலட்சம் பேரால் வகுத்தால் ஒருவருக்கு ஒரு வருடத்திற்கு 24 கிலோ அரிசிதான் கிடைக்கிறது. ஒரு ஆளுக்கு-நீங்கள் சொல்கிற 23 இலட்சம் பேருக்கு நீங்கள் தருகின்ற 55,584 டன்னை கிலோக்களாக்கி 23 இலட்சத்தால் வகுத்துப் பார்த்தால் ஒருவருக்கு வருடத்திற்கு 24 கிலோ அரிசி கிடைக்கிறது. அதாவது 40 ரூபாய் வருடத்திற்குக் கிடைக்கிறது; மாதம் மூன்றரைரூபாய்; நாளைக்கு அல்ல; மாதம் மூன்றரை ரூபாய்; நீங்கள் சொல்லுகின்ற 23 இலட்சத்தை, அப்படியே கணக்கில் எடுத்துக்கொண்டால்.

ஆனால், அது அல்ல உண்மை. 23 இலட்சம் பேர் வேலை செய்தார்கள் என்று சொன்னீர்களே தவிர, நீங்களே அடுத்த வரியிலே குறிப்பிட்டிருப்பதுபோல, 1,89,000 பேர்தான்—சுமார் இரண்டு இலட்சம் பேர்தான் அந்த வேலைக்குப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கின்றார்கள். இரண்டு இலட்சம் பேரை மறைத்துவிட்டு, 23 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கொடுத்தோம், 23 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கொடுத்தோம் என்று சொன்னால்—ஒரு ஆளுக்கு மாதத்திற்கு மூன்றரை ரூபாய் சம்பளம் கொடுத்திருக்கிறீர்கள் என்பதுதான் அதற்குப் பொருள். ஆகவே, அது சரியான வாதமும் ஆகாது; நல்ல புள்ளி விவரமும் ஆகாது. இது பொதுமக்களை, வாக்களித்த மக்களைத் திசை திருப்பி விடுகின்ற வகையிலே தயாரிக்கப்பட்ட ஒரு நிதிநிலை வாசகமாகத்தான் இருக்கிறது என்று நான் குற்றச்சாட்டாக இல்லை—குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

நாவலர் சொன்னார், 55,584 டன் அரிசி என்று. உள்ளாட்சித்துறை அமைச்சர் இங்கே நண்பர் குமரி அனந்தன் அவர்களுடைய கேள்விக்குப் பதில் அளித்த நேரத்திலே சொன்னார், 64,430 டன் அரிசி என்று அவர் சொன்னார். அது மாத்திரம் அல்ல; உள்ளாட்சித்துறை அமைச்சர் இன்னொரு கணக்கையும் சொன்னார். 1979–80 இல் மத்திய அரசு நமக்குத் தந்த அரிசி 73,000 டன் என்று அவர் சொன்னார். ஆக, நாவலர் கணக்குப்படி 55,000 டன் அரிசி செலவழிக்கப்பட்டது போக, 73,000 டன்னில் மீதம் உள்ளது எவ்வளவு? என்ன ஆயிற்று? எப்படிச் செலவழிக்கப்பட போகிறது என்பதற்காக விளக்கங்களும் தேவை.

இந்த நேரத்திலே இன்னொன்றையும் நான் குறிப்பிடுவது சாலச் சிறந்தது. 1979–80 ஆம் ஆண்டு இந்த அவையிலே வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் ஒன்றைத் திட்டவட்டமாக



1980 ஜூலை 9] [டாக்டர் மு. கருணாநிதி]

இந்த அரசின் சார்பில் எடுத்துக்கூறினார்கள். '' வேலைவாய்ப்பு ஏதும் கிடைக்காத, படித்த, படிக்காத, வேலையில்லாத அனைவருக்கும் வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு ' உறுதியான வேலை வாய்ப்புத் திட்டம் ' செயலாக்கப்படும். இத் திட்டத்தின் கீழ், கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பின்றி இருக்கும், 18 வயதுக்கு மேற்பட்டவர் அனைவரும் வேலை கோரி தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம். பொதுவாக மாவட்டத்திற்குள்ளேயே அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். ஒப்பந்தக்காரர் (Contractor) இல்லாமல், அரசுத் துறைகளின் நேரடி மேற்பார்வையிலேயே இப்பணிகள் செயலாக்கப்படும். ''

நான் கேட்கிறேன், 1979–80 இல் நிதிநிலை அறிக்கையிலே சொன்ன அந்த உறுதியை நீங்கள் காப்பாற்றியிருக்கிறீர்களா? காண்ட்ராக்ட் முறை இருக்காது, முழுதும் அரசுத்துறையாக இருக்கும் என்று உறுதி அளித்தீர்களே, அது என்னவாயிற்று? ஆனால், இந்த வேலைக்கு உணவு என்கின்ற திட்டத்திற்கு ஆங்காங்கு காண்ட்ராக்ட் முறையிலேதான் இந்த விநியோகங்கள் நடைபெற்று இருக்கின்றன என்பதையும், அந்த விநியோகங்களில் பல தவறுகள் நடைபெற்று இருக்கின்றன என்பதையும் இந்த அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வருவது என்னுடைய நீங்காத கடமை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் பொதுவாகச் சொல்லிவிடுவார். தேர்தல் நேரத்திலே எல்லோரும்தான் உறுதிமொழிகளைக் கொடுக்கிறோம் அவைகளையெல்லாம் காப்பாற்ற வேண்டுமென்று ஏதாவது இருக்கிறதா என்று. அன்றைக்குக்கூடச் சொன்னார்கள், நீங்கள் கொடுக்கவில்லையா உறுதி மொழிகளை என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே அளிக்கப்பட்ட உறுதிமொழிகளைக் கூட எடுத்துச்சொன்னார்கள். பட்ஜெட்டைப் பாருங்கள் தெரியும் என்றெல்லாம் கூடச் சொன்னார்கள். பட்ஜெட்டை ஆவலோடு நாங்கள் எதிர்பார்த்தோம். ஆகவே, பட்ஜெட்டிலே, எந்தெந்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படும் என்று சொன்னார்களோ அவைகளெல்லாம் பட்ஜெட்டிலே—நிதிநிலை அறிக்கையிலே இல்லை என்பதைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்டி இருக்கிறேன்.

உறுதிமொழிகளை இந்த அரசு எப்படி அணுகுகிறது என்பதற்காக ஒரே ஒரு உதாரணத்தை மாத்திரம் இங்கே எடுத்து காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

[பிற்பகல் 12-20]

இது அரசினர் உறுதிமொழிக் குழு 1979–80 ஆம் ஆண்டுப புத்தகம். அதில், 6 ஆவது சட்டமன்றப் பேரவையின் 4 ஆவது அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதில், இந்த அவையில்

[டாக்டர் மு. கருணாநிதி] [1980 ஜூலை 9

அளிக்கப்பட்ட உறுதிமொழிகள் எவ்வாறு நிறைவேற்றப் பட்டுள்ளன அல்லது, எவ்வாறு படித்து பதிவு செய்யப்பட்ட தாகக் கருதப்பெற்றுள்ளன, அப்படி நிறைவேற்றப்பட்ட, பதிவு செய்யப்பட்ட உறுதிமொழிகளுடைய எண்ணிக்கை எவ்வளவு என்ற அந்தக் கணக்குகள் அரசினர் உறுதிமொழிக் குழு 1979–80 ஆம் ஆண்டு 4 ஆவது அறிக்கையில் தரப்பட்டி ருக்கின்றன. 159 ஆம் பக்கம், இணைப்பு 2-ல் 1968 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்ட உறுதிமொழிகள், அதாவது அண்ணா காலத்தில் 199. நிறைவேற்றப்பட்ட அல்லது படித்து பதிவு செய்யப்பட்ட உறுதிமொழிகள் 197. மிச்சம் நிலுவையிலே உள்ளவை இரண்டே இரண்டு. 1969 ஆம் ஆண்டு அளிக்கப்பட்ட உறுதி மொழிகள் 280. நிறைவேற்றப்பட்டதாக, அல்லது படித்து பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்பட்டவை 278. நிலுவையிலே உள்ளவை, மிச்சம் உள்ளவை இரண்டே இரண்டு. 1970 ஆம் ஆண்டு அளிக்கப்பெற்ற உறுதிமொழிகள் 220. நிறைவேற்றப் பட்ட அல்லது பதிவு செய்யப்பெற்றவை 212. மிச்சம் 8. 1971 ஆம் ஆண்டு, 256 அளிக்கப்பட்ட உறுதிமொழிகள். நிறைவேற்றப்பட்ட அல்லது படித்து பதிவு செய்யப் பெற்றவை 250, மிச்சம் 6. 1972 ஆம் ஆண்டு 154 அளிக்கப்பெற்றவை. அதில், நிறைவேற்றப்பட்ட அல்லது படித்து பதிவு செய்யப்பட்டவை 158. மிச்சம் 4. 1973 ஆம் ஆண்டு 252, அளிக்கப்பட்ட உறுதிமொழிகள், நிறைவேற்றப்பட்ட, படித்து பதிவு செய்யப்பட்டவை 219, நிலுவையிலே உள்ளவை 33. 1974-ல் 420 அளிக்கப்பட்ட உறுதிமொழிகள். நிறைவேற்றப் பட்ட அல்லது படித்து பதிவு செய்யப்பெற்றவை என்று கருதப்பட்டவை 318. நிலுவையிலே உள்ளவை 102 1975-ல் 416 அளிக்கப்பட்ட உறுதிமொழிகள். நிறைவேற்றப் பட்ட, படித்து பதிவு செய்யப்பெற்றவை என்று கருதப் பட்டவை 286, நிலுவையிலுள்ளவை 130. 1977 ஆம் ஆண்டு அளிக்கப்பட்ட உறுதிமொழிகள் 367, நிறைவேற்றப்பட்ட, படித்து பதிவு செய்யப்பட்டவை என்று கருதப்பெற்றவை 197, நிலுவையில் உள்ளவை 170. 1978 ஆம் ஆண்டு நீங்கள் அள்ளிக் கொடுத்த உறுதிமொழிகள் 1,266. நிறைவேற்றப் பட்டதாக, படித்து, பதிவு செய்ததாகக் கருதப்பட்டவை 354. நிலுவையிலே உள்ளவை 912. 1979-ல் நீங்கள் அளித்த உறுதிமொழிகள் 671. நிலுவையிலே, மிச்சம் உள்ளவை 671. இப்படித்தான் நீங்கள் உறுதிமொழிகளை நிறைவேற்றி இருக்கிறீர்கள் என்று அரசினர் உறுதிமொழிக் குழு இந்த மன்றத்திலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற அல்லது நியமிக்கப்பட்டிருக்கின்ற உறுப்பினர்கள் எல்லாம் இணைந்து அளித்துள்ள அந்த உறுதிமொழிக் குழு புத்தகத்தில், நீங்கள் 1979 ஆம் ஆண்டு 671 உறுதிமொழிகளைக் கொடுத்து ஒன்று கூட நிறைவேற்றாமல், பதிவுகூடச் செய்யாமல், 671-ஐ நிலுவையிலே வைத்திருக்கின்ற இந்த ஆட்சியாளர்களிடத்தில், தேர்தல் நேரத்து உறுதிமொழிகள் என்னவாயிற்று என்று நான் கேட்பது உள்ளபடியே என்னுடைய குற்றம்தான்.



1980 ஜூலை 9] [டாக்டர் மு. கருணாநிதி]

இருந்தாலும், கேட்கவேண்டிய எதிர்க்கட்சியிலே இருக்கிற காரணத்தால் கேட்டுத் தீர வேண்டிய கட்டாயத்தின் காரண மாகக் கேட்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே, கொள்கை விளக்கங்கள் என்ன இருக்கின்றன? இந்த அரசாங் கத்தினுடைய திட்டங்கள் என்ன இருக்கின்றன?

தேசியமயம், அதை எதிர்த்து, நம்முடைய ஹாஜா ஷெரீப் ஒரு வார்த்தை, ஒரு கடுகளவு சொல்வாரேயானால், கம்யூனிஸ்ட் தோழர்கள் சீறிப் பாய்ந்த காட்சியை எல்லாம் நான் இங்கே பார்த்தேன். ஆனால், தேசியமயக் கொள்கைக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே தரப்பட்டிருக்கிற முக்கியத்துவம் என்ன? பஸ்கள் மாவட்ட ரீதியாக தேசியமயமாக்கப்பட வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டு, அது உச்ச நீதிமன்றத்திலே ஸ்டே வாங்கப்பட்டு, இன்றைக்கு முடக்கி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கிடையிலே இரண்டு மாவட்டங்களிலே பஸ்கள் தேசியவுடைமையாக்கப்படும் என்று முதலமைச்சர் அறிவித்தார். அந்த ஸ்டே தளர்த்தப் படாமல் அவைகளைச் செய்ய இயலாது. நான் முதலமைச் சரைக் கேட்டுக்கொள்வது, நிதி அமைச்சரைக் கேட்டுக் கொள்வது, அல்லது அரசைக் கேட்டுக்கொள்வது, அறிஞர் அண்ணாவினுடைய தேசியமயக் கொள்கையில் நமக்கு நம்பிக்கை யிருக்குமேயானால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே படிப்படியாக தொடர்ந்து நிறைவேற்றி, இறுதியாக மாவட்ட வாரியாக பஸ்களை எல்லாம் தேசியமயமாக்கிய திட்டத்தை, இன்றைக்கு உச்ச நீதிமன்றத்திலே கடந்த இரண்டு மூன்று ஆண்டுக்காலமாக, ஸ்டே வாங்கி தேக்கி வைத்திருக்கிறார்கள். அந்த வழக்கை விரைவுபடுத்தி, உடனடியாக பஸ்கள் அனைத் தையும் தேசியமயமாக்குகின்ற அந்தத் திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று நான் இந்த மாமன்றத்திலே இந்த அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

36 நூற்பாலைகளைப் பற்றி நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது தேசிய மயக் கொள்கையிலே ஊறித் திளைத்து இருக்கிற பல தோழர்களின் உள்ளங்களிலே ஏன் பதியவில்லை, ஏன் உறுத்தவில்லை என்று எனக்குப் புரியவில்லை. 36 நூற்பாலைகளையும் தனியார்களே நடத்துவார்கள். அதுவும் எப்படிப்பட்ட நேரத்தில்? நாவலர் அவர்களே கூறி யிருக்கிறார்கள், நூற்பாலைகள் எல்லாம் வளமாக இருக்கின்றன லாபகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று அப்படிப்பட்ட நேரத்தில் 36 நூற்பாலைகளை தனியார் நடத்த வேண்டுமா? அதிலே 36-ம் இல்லாவிட்டாலும் ஒரு 20-ஐயாவது அரசாங்கம் எடுத்து நடத்தக்கூடாதா? தேசிய

மயக் கொள்கை அடிப்படையில் நடத்தக் கூடாதா? அந்தக் கொள்கைகள் எல்லாம் இடம் பெறாத ஒரு நிதி நிலை அறிக்கை இது என்பதை நான் சுட்டிக்காட்டுவது எப்படித் தவறாகும்?

எனவேதான் கருணாநிதி எதிர்க்கவில்லை என்று சொன்னார்கள். பொய் நெல்லைக் குத்தி கை நெல்லையும் விட்டவர் என்றெல்லாம் கதை பாடினார்கள், கவிதை பாடினார்கள். நிதிநிலை அறிக்கையிலேதான் பொய் நெல் நிறைய குத்தப்பட்டிருக்கிறது. அதைத்தான் இங்கே காண முடிகிறது. தேர்தல் நேரத்து வாக்குறுதிகள் எல்லாம் பொய் நெல்லாக ஆக்கப்பட்டு இன்றைக்கு கை நெல்லும் விடப்பட்ட கதையாக வாக்காளப் பெருமக்களுக்கு ஆகி இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இருந்தாலும், நான் இந்த நிதி நிலை அறிக்கையை எதிர்க்கவில்லை. எதிர்த்தால் நீங்கள் அறிவித்திருக்கிற குறைந்த பட்ச நலன்களை நான் எதிர்த்ததாக ஆகிவிடும். கிட்டத்தட்ட 1½ கோடி ரூபாய்க்கு வரிச் சலுகை அளித்திருக்கிறீர்கள், அதை நான் வரவேற்கிறேன். நான் பொதுவாக நிதிநிலை அறிக்கையை எதிர்க்கவில்லை. ஏனென்றால் நீங்கள் 1½ கோடி வரிச்சலுகைகளை அறிவித்திருக்கிறீர்களே, அதையும் எதிர்த்ததாக ஆகிவிடும். ஆகவேதான் எதிர்க்கவில்லை. அதேபோல பாராட்டவும் முடியவில்லை. பாராட்டினால் இவனே பாராட்டிவிட்டான், இனிமேல் ஒன்றும் செய்யவேண்டாம் என்கிற மதமதப்பு எங்கே வந்துவிடுமோ என்ற பயத்தால் உங்களைப் பாராட்டவும் பயப்படுகிறேன். ஆகவே பாராட்டவில்லை. தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்பதைச் சுட்டிக் காட்டி நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்ட திட்டங்கள் இந்த நாட்டிலே இருக்கிற ஏழை எளிய மக்களுக்கு கண் துடைப்பாக இருக்கிறதே அல்லாமல், கண் ஒளி தருவதாக அமையவில்லை என்று சுட்டிக்காட்டி நிதிநிலை அறிக்கை பற்றிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்களை இந்த அளவோடு கூறி அமைகிறேன், வணக்கம்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u> : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, என்ன சொன்னேன் என்பது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு சரியாகக் கிடைக்காத காரணத்தால் அந்தக் கருத்துக்கு மாறாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். "ஒரு கட்சி தேர்தலுக்கு நிற்கும் போது, தங்களுடைய கொள்கையை தேர்தல் அறிக்கை என்ற பெயரிலே வெளியிடுவதும், ஆட்சிக்கு வந்தால் என்னென்ன நன்மைகளை, நாட்டு மக்களுக்குச் செய்வோம் என்று வெளியிடுவதும், இயற்கையாக அரசியலிலே கடமையாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஒரு முறையாகும். அதிலே ஆட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களானாலும், ஆட்சிக்கு வரமுடியாமல்





அந்த வாய்ப்பை இழந்தவர்களானாலும் யாராக இருந்தாலும், அந்தக் கொள்கைகளை அவரவர்களுடைய இருப்பிடத்திலே இருந்து அதை நிறைவேற்றக் கடமைப்பட்டவர்கள் என்பதை நாம் எல்லோரும் கருத்து வேறுபாடு இன்றி ஒப்புக்கொள்வோம் என்று நம்புகிறேன்" என்று சொல்லியிருக்கிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980–81 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீதான வாதங்களிலே இந்தப் பேரவையைச் சேர்ந்த 69 உறுப்பினர்கள் கலந்து கொண்டு அவர்களுடைய உரைகளை ஆற்றியிருக்கிறார்கள். இந்த மாநிலத்தினுடைய அரசின் நிதி ஆதாரங்களையும், எதிர்பார்க்கப்படுகின்ற நிதி ஆதாரங்களையும் கருத்தில் வைத்துக் கொண்டு தமிழகத்தினுடைய வளத்தை மேம்படுத்துவதற்கும், தமிழர்களின் நிலை உயரவும், ஏழை எளிய மக்கள் தொல்லைகள், துயர்கள் துடைக்கப்படுவதற்கும், குறிப்பாக சிற்றூர் பகுதிகளில் உள்ள ஏழை எளிய மக்கள் துயர் துடைக்கப்படுவதற்கும் இந்த நிதி நிலை அறிக்கை உருவாக்கப்பட்டிருக்கிறது.

[பிற்பகல் 12–30]

இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையிலும் இருக்கின்ற நிலைமைகளை கருத்தில் கொண்டு, எந்தெந்த வகையில் நமக்குக் கிடைக்கும் நிதி ஆதாரங்களை வைத்து, நமக்கு இருக்கும் உரிமைகளின் அடிப்படையில் செயலாற்ற முடியும் என்ற கருத்தின் அடிப்படையில்தான் இந்த நிதிநிலை அறிக்கை அமைக்கப்பட்டு இருக்கிறது என்று நான் இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டு இருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை ஒட்டி நீங்கள் வழங்கியிருக்கின்ற கருத்துக்கள், இந்த அரசை சிறப்புற நடத்திச் செல்வதற்குப் பேருதவியாக அமையும். அந்த வகையில் நீங்கள் எல்லாம் வழங்கிய கருத்துக்கள், தருகிற விளக்கங்கள், கூறும் அறிவுரைகள், சுட்டிக் காட்டுகின்ற குற்றங்கள் இந்த அரசுக்குப் பெரிதும் பயன்படும் என்று நான் குறிப்பிட்டு இருக்கிறேன்.

இந்த அறிக்கையின் மீது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், தோழமைக் கட்சிகளைச் சார்ந்தவர்களும், எதிர் தரப்பிலே இருக்கின்றவர்களும், எதிரித் தரப்பிலே எதிரிக் கட்சிகளாக விளங்குபவர்களும் கருத்துக்கள் பலவற்றை இங்கே வழங்கியிருக்கிறார்கள். பொதுவாக இந்த அறிக்கையில் உள்ள நல்ல அம்சங்களை வரவேற்று அவற்றை ஆதரிக்கின்ற வகையிலும், அதற்கு நல்

ஆதரவு தருகின்ற வகையிலும், கருத்துக்களை வழங்கிய பலருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது என் கடமை என்று நான் கருதுகிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையின் அடிப்படைத் தன்மைகளை எல்லாம் விளக்கிக் காட்டினார்கள். இந்த நிதி நிலை அறிக்கை பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் தம்முடைய உரையில் ஆளும் கட்சித்தரப்பிலிருந்தும், தோழமைக்கட்சித் தரப்பிலிருந்தும் இதைப் பாராட்டுகின்ற வகையில் அடைமொழிகள் வந்தன; எதிர்த் தரப்பில் இருந்தும் அடைமொழிகள் வந்தன என்று குறிப்பிட்டார். அந்த வகையில் ஆளும் கட்சித் தரப்பில் இருந்தும், தோழமைக்கட்சித் தரப்பில் இருந்தும், வேறு பல இடங்களில் இருந்தும்கூட இந்த மன்றத்தைப் பொறுத்தவரையிலும் உறுப்பினர்கள் பலரும் கருத்துக்களை எடுத்துத் தருகிற வகையில், இந்த நிதி நிலை அறிக்கையை ஆதரித்துப் பாராட்டிப் போற்றி, வரவேற்று இருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதி நிலை அறிக்கை ஏழை எளியவர்களுக்கு நன்மை பயக்கக் கூடியது என்றும், இது ஒரு நிவாரணம் வழங்கும் பட்ஜெட் என்றும், நடுத்தர மக்களுக்கு வாழ்வளிக்கும் பட்ஜெட் என்றும், இது ஒரு நல்ல துவக்கம் என்றும், இது ஒரு சமுதாய கண்ணோட்டம் உள்ள பட்ஜெட் என்றும், சிறிய விவசாயிகளுக்கு உள்ள பெருங் கஷ்டத்தைப் போக்கும் சீரிய பட்ஜெட் என்றும், சமூக நீதி வழங்கும் அறிக்கை என்றும், தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் நிதிநிலை அறிக்கை என்றும், இது குறிஞ்சி மலர் போன்றது என்றும்கூடப் பாராட்டியவர்கள், வரவேற்றவர்கள் சிறப்பாக எடுத்துத் தெரிவித்தார்கள். ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையை நான் பாராட்டவும் இல்லை, ஆனால், எதிர்க்கவும் இல்லை என்று எடுத்துச் சொல்லி, இந்த நிதி நிலை அறிக்கை மீது கருத்துக்கள் பலவற்றை இங்கே வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கை மீது எடுத்துச் சொன்ன கருத்துக்கள் பலவற்றிலே—மத்திய அரசின் நிதி உதவி இந்த அரசுக்கு அதிகம் வர வேண்டும், இந்த மாநிலம் பெற வேண்டிய பங்கை நீண்ட பெருங்காலமாகப் பெறவில்லை, அது பெறாததன் காரணத்தால் இந்த மாநிலம் அடைய வேண்டிய வளர்ச்சியை அடைய முடியவில்லை, தொழில் வளர்ச்சியானாலும், வணிகத் துறை வளர்ச்சியானாலும், வாழ்க்கைத்தரம் உயரவேண்டுமானாலும், வருமானத்தின் தன்மை பெருக வேண்டுமானாலும், விலைவாசிகள் கட்டுப் படுத்தப்பட வேண்டிய சூழ்நிலையானாலும், இந்த மாநிலம் மத்திய அரசின் தயவை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்று சுட்டிக் காட்டினார்கள். ஆகவே, மத்திய அரசிடமிருந்து நியாயமான அடிப்படையில் மாநிலம் பெற வேண்டிய உதவிகள் அத்தனையும் முறைப்படி பெறுவதால்தான் இந்த மாநில மக்க





ளுக்குச் செய்ய வேண்டிய பணிகளைச் செய்ய முடியும். அந்த வகையில் மத்திய அரசிடமிருந்து இந்த மாநிலம் பெற வேண்டிய நிதி உதவிகளைப் பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபடும்போது தன்னுடைய ஆதரவையும் தருவேன் என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டது மகிழ்ச்சிக்குரிய ஒன்று என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்த நிதி ஆதாரங்கள் பெறுவது போன்றவற்றில் வரவேற்கக் கூடிய முறையில் இந்த மன்றத்தில் இருப்பவர்கள் பலருக்கு வேறுபாடு இல்லை. இந்த மன்றத்தில் உள்ள பலரும் தொடர்ந்து ஆதரவு தருவார்கள் என்று சொன்னால், நமது நோக்கங்களை சிறப்புற நிறைவேற்ற முடியும்.

எதிர்க்கட்சி வரிசையில் இருக்கின்ற எதிர்க்கட்சிகளைச் சேராத பலரும் இந்த நிதிநிலை அறிக்கையில் உள்ள பாராட்ட வேண்டிய கருத்துக்களைப் பாராட்டிவிட்டு, எதிர்க்க வேண்டியவைகள் என்ன என்பதை எடுத்துச் சொல்லி எதிர்த்து நின்று இருக்கிறார்கள். தோழமைக் கட்சிகளை சேர்ந்தவர்களும், எதிர்த் தரப்பில் இருப்பவர்கள் என்கிற முறையில் ஆதரவு தருவனவற்றிற்கு ஆதரவு தருகிறேன் என்று சொல்லிவிட்டு, குற்றங்குறைகளைச் சுட்டிக்காட்டி, இந்தக் குறைகளை நீக்கி எந்தெந்த வகையில் நற்பணிகள் செய்ய வேண்டும் என்றும் சுட்டிக்காட்டி இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதை நிறைவேற்ற வேண்டும் என்றும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதில், இருக்கிற முக்கிய அம்சங்கள் பலவற்றை ஆதரிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம் என்று எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற மாண்புமிகு திரு. ஹாஜா செரீப் அவர்களும், திரு. தொண்டமான் அவர்களும் கூடக் குறிப்பிட்டார்கள். இங்கே இருக்கிற மற்றும் பலரும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரைப் போன்றோ அல்லது மற்ற எதிர்க் கட்சித் தலைவர்களைப் போன்றோ தங்களுடைய கருத்துக்களை இந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கை விவாதத்திலே சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் இந்தத் தரப்பிலே இருந்து பாராட்டு நல்கினார்கள் என்றால் அந்தத் தரப்பிலே இருந்து பழிப்புரையும் நல்கியிருக்கிறார்கள். பொய்மான் கரடு இந்த பட்ஜெட் என்றும், அரசியல் மலடு இந்த பட்ஜெட் என்றும், பஞ்சுமிட்டாய் இந்த பட்ஜெட் என்றும், கை கொட்டி சிரிக்கின்ற பட்ஜெட் இது என்றும், அரைத்த மாவையே அரைக்கிற பட்ஜெட் என்றும், வேடிக்கையான பட்ஜெட் என்றும், மோசமான பட்ஜெட் இது என்றும், ஏமாற்ற நிதி நிலை அறிக்கை இது என்றும், காற்றடைத்த தலையணை இந்த பட்ஜெட் என்றும், கானல் நீர் இந்த பட்ஜெட் என்றும், குடுகுடுப்பைக்காரன் பட்ஜெட் இது என்றும், இது ஒன்றுமே இல்லாத பட்ஜெட் என்றும், யாருக்கும் நன்மை பயக்காத பட்ஜெட் இது என்றும் சொல்லி முடித்திருக்கிறார்கள். ஆக, இதிலே ஒன்றுமே இல்லை என்று சொல்பவர்களும் ஆதரித்துப் பேசுகிறவர்களும் இருக்கிறார்கள் என்பதைப் பார்த்தோம்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1980 ஜூலை 9

'' செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு ''

என்ற வள்ளுவர் பெருந்தகையின் வாக்கிற்கு இணங்க செவி கைப்ப எடுத்துச் சொன்னாலும்கூட சொற்பொறுத்து, இந்த அரசை நடத்தும் பொறுப்பு நமக்கு இருப்பதால் அந்தக் கருத்தைப்பற்றி, அவர்கள் எடுத்துச் சொன்னதைப் பற்றி கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லாமல் நாம் இருக்கிறோம்.

அதுமட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசும்போது உங்களை ஆதரிக்கின்ற பத்திரிகைகள் எல்லாம் கூட கைகொட்டி சிரிக்கின்ற நிலைமை உருவாகியிருக்கிறது என்று நிதி நிலை அறிக்கையிலே பேசும்போது சொன்னார்கள். அவற்றை எல்லாம் நம்பி, தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், திரு. துரைமுருகன் அவர்கள் சொன்னமாதிரி எந்தப் பத்திரிகையும் கைகொட்டி சிரிக்கின்ற நிலையிலே இல்லை. இருக்கின்ற வசதி வாய்ப்புக்களை வைத்து, தேர்தல் காலத்தில் இருந்த அந்த உணர்வின் அடிப்படையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளை தொடங்குகின்ற முறையிலே இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது என்ற அடிப்படையிலே பலரும் பாராட்டுக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதை நீங்களும் காணலாம். ஆக, பத்திரிகைகள் எல்லாம் கைகொட்டி சிரிக்கின்றன என்ற நிலைமை எங்கும் இல்லை.

தினமணி பத்திரிகையை எடுத்துக்கொண்டால், விவசாயிகள் கடனை தள்ளுபடி செய்து, அவர்களுக்குக் கடன் நிவாரணம் அளிக்கின்ற பட்ஜெட் என்று அது குறிப்பிட்டிருக்கிறது. மெயில் பத்திரிகையில்,

"There is no doubt that Mr. Nedunchezhian's first budget, revised budget for 1980–81 which shows a small surplus of Rs. 33 lakhs will be welcomed as one aiming at improving the lot of the common man, the downtrodden. Allocating funds for welfare and increasing the allotment to several schemes new and under implementation without resort to new taxation is an exercise in which few budget framers will succeed. Mr. Nedunchezhian has done it."

அது கைகொட்டி சிரிக்கவில்லை; பாராட்டி இருக்கிறது. இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையைப் பார்க்கும்போது கூட,

> "The concessions will benefit lakhs of marginal farmers who with such heavy debts on their backs would have found it difficult to launch their agricultural operations this season."

என்று அவர்களும் பாராட்டித்தான் இருக்கிறார்கள். இந்துப் பத்திரிகையில் எழுதியிருப்பதை எடுத்துச்சொல்லி சுட்டிக்காட்டினார். இந்துப் பத்திரிகையில் சொல்லியிருப்பது.



1980 ஜூலை 9] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

"Neither the budget speech of Mr. Nedunchezhian, the Finance Minister, nor the accompanying budget papers make it clear how the funds for this purpose are to be secured".

அதைச் சுட்டிக்காட்டினார். அது '' ஸ்டேட்மென்ட் ஆப் பாக்ட்ஸ் ''. இந்த 60 கோடி ரூபாய் தள்ளுபடி செய்வது பற்றி வரவு-செலவுத் திட்டத்திலே யார் யாருக்கு இப்படி நீக்கப்படும் என்று சொல்லவில்லை; அதற்கான விளக்கங்களைச் சொல்லவில்லை. ஆனால், இந்த இனத்தில் இவ்வளவு ரூபாய் தள்ளுபடி என்று தெளிவாக அறிக்கையிலே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறோம். அதைத்தான் சொல்லியிருக்கிறார்கள். அடுத்த வரியிலே,

"It is important for the Government to ensure that its intentions in this regard are not defeated by technical obstacles injuring in the process the goodwill that is sought to be generated by this gesture".

[பிற்பகல் 12–40]

இதன் மூலமாக நல்லெண்ணத்தோடு செய்யப்படுகின்ற இந்த முயற்சிகள் அதிகாரிகளுடைய சட்ட வரம்பு மற்றவைகளின் காரணமாகத் தடைப்பட்டு விடக்கூடாது என்ற அச்சத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படித் தடைப்படுகின்ற சூழ்நிலை ஏற்படாமல் இந்த நிலைமையைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கின்றது. ஆகவே இதை ஏற்கவில்லை என்றோ அல்லது மறுத்தார்கள் என்றோ அல்லது வேறு எந்த வகையிலோ இல்லை. அதேமாதிரி சுதேசமித்திரன் பத்திரிக்கையின் தலையங்கத்திலே ''அகாலத்திலே திணிக்கப்பட்ட போரிலே பலரையும் புறம் கண்டு ஆட்சிப் பீடம் ஏறிய அரசு தேர்தலில் வைத்த வாக்குறுதிகளைத் தனது புதிய பட்ஜெட்டில் நிறைவேற்றியுள்ளது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இரா. நெடுஞ்செழியன் மத்திய நிதியமைச்சர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் அளித்த பட்ஜெட்டுக்கு ஈடு கட்டும் வண்ணம் தனது பட்ஜெட்டை இந்த சட்டமன்றத்தில் தாக்கல் செய்தார், கடந்த சில ஆண்டுகளாக பெருத்த பிரச்சினையாக மக்களுக்கும் அரசுக்கும் இருந்துவந்த விவசாயிகள் கடன் பற்றி இந்த பட்ஜெட் உருப்படியான ஒரு நிறைவுள்ள பரிகாரத்தை அளித்துள்ளது, விவசாயிகள் நாட்டின் முதுகெலும்பு, சிறு விவசாயிகள் மிகப்பெரும்பாலோர் அவர்களுக்கு இந்த பட்ஜெட் ஒரு பயன் அளிக்கின்ற, நம்பிக்கை ஊட்டுகின்ற புரட்சிகரமான பட்ஜெட்'' என்று சொல்லி இருக்கின்றது. இதை எல்லாம் நான் எதற்காகச் சொல்லவருகிறேன் என்றால், யாரும் பாராட்டவில்லை, எல்லோரும் இதை எதிர்க்கிறார்கள், கைகொட்டிச் சிரிக்கிறார்கள் என்று சொன்னதற்காகத்தான்

இதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே ஏற்கெனவே நாங்கள் வாக்குறுதிகள் தந்தபோதும் சரி, இந்தக் கருத்துக்களை வழங்குகின்றபோதும் சரி ஏற்றுக் கொள்கிறவர்கள் இருக்கிறார்கள். எதிர்க்கின்றவர்கள் கடைசி வரையில் அதாவது இப்போதும் எதிர்க்கிறார்கள், ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி மன்ற உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் ஊக்கம் தருவனவாகவும் அவை எதிர்காலத்திலே நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்த வழியிலே நடத்திச் செல்லுகின்ற வகையிலே, பயன்படுகின்ற வகையிலே அமைந்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வெளியிலே பத்திரிகைகளுக்கு எடுத்துச் சொல்லுகின்றபோது கூட இந்த நிதிநிலை அறிக்கை வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு திருப்தி அளிக்குமேயானால் அது எனக்கும் திருப்திதான் என்று குறிப்பிட்டார்கள். அந்த வாக்காளர்களுக்கு திருப்தி அளிக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்ற காரணத்தால், திருப்தி அளிக்கின்றது என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இருக்கின்ற காரணத்தால், அவர்களுடைய முழு ஆதரவும் என்றென்றும் எங்களுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு உண்டு. ஆகவே எந்த உணர்வின் அடிப்படையிலே வாக்குறுதிகளை அளித்தோமோ அந்த உணர்வின் அடிப்படையிலே அதை நிறைவேற்றுவதற்குத் துவங்கி இருக்கிறோம். நிறைவேற்றி வருகிறோம் என்கிற அளவுக்கு எங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு எங்களிடத்திலே நம்பிக்கை இருக்கின்றது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் பேசுகின்றபோது இந்த பட்ஜெட்டினை நல்ல தாளிலே அழகாக அச்சிட்டிருக்கிறார்கள் என்றும், அது நல்ல வெள்ளை வெளேரென்று அவரைப்போலவே இருக்கின்றது என்றும் இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள், அது வெள்ளை வெளேரென்று என்னைப்போலவே இருக்கின்றது என்றும் சொன்னார்கள். இந்த நிதிநிலை அறிக்கை என்னைப்போன்றில்லை, வேறு யாரைப்போலவோ இருக்கின்றது என்று சொன்னால்தான் அதிலே சங்கடப்பட வேண்டிய அவசியம் இருக்குமே தவிர நான் உருவாக்கிய இந்த நிதிநிலை அறிக்கை என்னைப்போலவே இருக்கின்றது என்று அவர்கள் எடுத்துச் சொன்னது உள்ளபடியே மகிழ்ச்சிக்குரிய ஒன்றுதான். ஆகவே நல்ல தாளிலே அழகாக அச்சிட்டிருக்கிறார்கள், வெள்ளை வெளேரென்று இருக்கின்றது. அது உருவத்திலே தான் அவ்வாறு இருக்கின்றதே தவிர உள்ளத்திலே இருப்பதில் ஏதாவது இருக்கின்றதா என்று கேட்டால் ஒன்றுமே இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே உருவத்தி





லேதான் இருக்கின்றதே தவிர உள்ளத்திலே எதுவுமே இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக என்னைப்போலவே இந்த அறிக்கை இருக்கின்றது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நான் யார் என்பதை அவர்கள் எடுத்துச் சொல்லுகின்றபோது என்னுடைய உள்ளத்திலே எதுவுமே இல்லை என்றும், ஆகவே இந்த அறிக்கையிலேயும் எதுவுமே இல்லை என்ற கருத்தின் அடிப்படையிலேயும் அவர்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையினுடைய பளபளப்பையும் வெள்ளைத் தன்மையையும் இன்னும் மற்றவற்றையும் பார்த்து அந்த அளவோடு புகழ்ந்து நின்றிருக்கிறார்கள். ஆனால் மற்றவர்கள் எல்லாம் அதன் உள்ளே சென்று ஆழ்ந்து படித்து போற்றி இருக்கிறார்கள்.

ஆகவே என்னைப் போன்று இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது என்று அவர்கள் சொல்லியிருப்பதிலே நான் ஒன்றும் குறைபட்டுக் கொள்ளவில்லை. அது என்னைப் போன்றுதான் இருக்கிறது. நான் யார் என்பதைப் பற்றி குறிப்பிட்டு சொல்ல வேண்டும். அவர்கள் அப்படிக் குறிப்பிட்டதன் காரணமாக நான் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகிறது. ஆகவே நான் யார், என் உள்ளத்திலே என்ன இருக்கிறது என்று சொல்ல வரும்போது, பெரியார் அவர்கள் என்னைப்பற்றிச் சொல்லியிருப்பதை சொல்கிறேன். ''நாவலர் அவர்கள் தலைசிறந்த பகுத்தறிவாதிகளில் ஒருவர். இப்பொழுதுதான் அவர் பகுத்தறிவுவாதி என்பது அல்ல. மாணவப் பருவத்திலிருந்தே அவர் சிறந்த பகுத்தறிவுவாதியாக விளங்கி வருகிறார். அவர் என்னிடம் வேலை பழகவில்லை, எனக்கே கற்று கொடுக்கும் அளவிற்கு அவர் இருந்தார். எனக்கே பாடம் கற்றுத் தரும் அளவிற்கு அவர் தகுதி பெற்றிருந்தார்'' இப்படி பெரியாரிடத்திலே நான் மதிப்பை பெற்றிருக்கிற நிலையிலே என்னுடைய உள்ளத்திலே எதுவுமே இல்லை.

அறிஞர் அண்ணா அவர்களின் உள்ளத்திலே நான் எப்படி இருந்தேன் என்பதை அவரும் அறிவார், மற்றவர்களும் அறிவார்கள் நானும் உணர்ந்திருக்கிறேன். அவர் என்னைப் பற்றி எடுத்துச் சொல்லும்போது சொல்கிறார். அவர் அப்படி குறிப்பிட்ட காரணத்தினால் இவைகளை எல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு ஏற்படுகிறது என்று மறுமுறையும் சொல்லிக் கொள்கிறேன். அண்ணா அவர்கள் சொல்கிறார். '' தம்பி வா, தலைமைத் தாங்க வா. உன் ஆணைக்கு கட்டுப்பட்டு நடக்கிறேன் வா'' என்று சொல்லி 1956 ஆம் ஆண்டிலே நடைபெற்ற மாநில மாநாட்டிலே ''நாவலரே, கழகத்தைக் கட்டிக் காக்கும் காவலரே', தலைவரே, உன்னுடைய ஆணைக்கு கீழ்படிந்து நடக்க நான் தயாராக இருக்கிறேன் என்று எடுத்துச் சொல்வதன் மூலம் மற்றவர்

கள் அத்தனை பேரும் அந்த அளவுக்குக் கீழ் படிந்து நடக்க தயாராக இருக்கிறார்கள் என்பதையும் நான் கூறுகிறேன். என்னிடம் உள்ள சில குறைபாடுகள் நீக்கப்பட்டு புடம்போட்டு எடுக்கப்பட்ட தங்கத்தை இன்றையதினம் நம்முடைய கழகத்திற்குப் பொதுச் செயலாளராக பெற்றிருக்கிறோம். நாவலர் நெடுஞ்செழியன் தம்பிதான் எனக்கு வயதில், உண்மையில் அவரைத் தம்பி என்று அழைப்பதில் நான் பெருமைபடுகிறேன். என்னை அண்ணனாகக் கொண்டிருப்பதில் அவரும் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்" என்று யான் யார் என்பதற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள்.......................

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய நாவலர், நமது நிதியமைச்சர் அவர்கள் நான் தனிப்பட்ட முறையிலே அவரை விமர்சித்ததாக நினைத்துக் கொண்டு அவர், அவரைப்பற்றி பேரறிஞர் அண்ணாவும், தந்தைப் பெரியாரும் சொல்லியிருக்கிற கருத்துக்களை எடுத்துச் சொல்கிறார். தனிப்பட்ட முறையில் நிறைந்த மதிப்புண்டு அவர்மீது எனக்கு. ஒரு பிரச்சினை என்னவென்றால் முதன் முதலில் அவருடைய பேச்சைக் கேட்டுத்தான் நான் திராவிட முன்னேற்றக் கழகத்திலே சேர்ந்தேன். இன்னும் கூடச் சொல்லப்போனால் என்னுடைய பேச்சில் பாதிப்புக்கள் வருகிறது என்றால், அது அவர் மாதிரியே பேசி பழக்கம் ஆகி விட்டதுதான் காரணம். இன்னும் சொல்லப்போனால் இப்பொழுது அவர் வந்ததற்குப் பிறகு அது அதிகமாகி விட்டது ஆகையால் தனிப்பட்ட முறையில் அவரை எந்தவிதக் குறையும் சொல்லவில்லை.

அவர் உள்ளத்தில் இருப்பது என்று நான் சுட்டிக்காட்டியதன் பொருள் என்னவென்றால் இட ஆகு பெயர் என்று சொல்வார்களே தமிழிலே, தமிழ் அறிஞர்களுக்குத் தெரியும், அப்படிப்பட்ட கருத்திலே, அந்தக் கட்சியினுடைய தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டவைகள் பட்ஜெட் உரையில் பிரதிபலிக்கவில்லை என்ற உருவகம் கொடுத்துத்தான், உருவத்திலே இருக்கிறது உள்ளத்திலே இல்லை என்று சொன்னேனே தவிர, அவரைத் தனிப்பட்ட வகையிலே புண்படுத்த வேண்டும் என்ற எண்ணம் எனக்குக் கிடையாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் துரைமுருகன் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு மகிழ்ச்சி, நன்றி. ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒன்றுமே இல்லை, ஒன்றுமே இல்லை என்று ஒரு சில உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள். நான்





மாண்புமிகு எதிரிக்கட்சித் தலைவர் அவர்களையோ மற்றக் கட்சித் தலைவர்களையோ குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அவர்கள் பாராட்டவேண்டியவைகளை பாராட்டியிருக்கிறார்கள். குறைகள் சுட்டிக் காட்ட வேண்டியவைகளை சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான வழி வகைகளையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆக இதில் ஒன்றுமே இல்லை, ஒன்றுமே இல்லை என்று பலபேர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆம் இதிலே புதிய வரி ஒன்றும் இல்லைதான். மக்களுக்கு தீங்கு இழைக்கும் திட்டம் ஒன்றும் இல்லைதான். போடப்பட்டிருக்கிற திட்டங்களில் குறை ஒன்றும் இல்லை தான், கொடுமை புரியும் குற்றம் எதுவும் இதிலே இல்லை தான். ஆம் இவை எதுவொன்றும் இதிலே இல்லை என்று கூறிக்கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப்பொருத்தவரையில், தேர்தல் அறிக்கைகளைச் சுட்டிக் காட்டி அவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். நிறைவேற்றப்படவில்லை என்று எடுத்துச் சொன்னார்கள். தேர்தல் வாக்குறுதிகளை எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட முடியும், எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட இயலும் என்ற கருத்தினுடைய அடிப்படையில் பல்வேறு திட்டங்கள் அடிப்படையாக இங்கே கொண்டுவரப்பட்டிருப்பதை ஆங்காங்கே நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

குறிப்பாக தேர்தல் அறிக்கையில் எடுத்துச் சொல்கிறபோது இங்கே விவசாயக் கடன் நிவாரணம் அளிக்கின்ற தன்மை பற்றி பலரும் மன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகளுக்கிருக்கிற கடன் சுமைகளை குறைக்க வேண்டும் என்ற கோரிக்கையை பல ஆண்டுக் காலமாக பலரால் வற்புறுத்தப்பட்டு வந்து, அது எங்கள் தேர்தல் அறிக்கையிலேயும் இடம் பெற்றிருக்கிற தன்மையை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

ஆக விவசாயிகளுடைய கடன் சுமை நீக்குவோம என்று தேர்தல் அறிக்கையிலே நாங்கள் வாக்குறுதி தந்தது உண்மை அதே மாதிரி, அதாவது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எப்படி வாக்குறுதி அளித்ததோ அதைப் போல, திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ் கூட்டணியும் கூட விவசாயிகள் கடனை நாங்கள் நீக்குவோம் என்று, அவர்களும் வாக்களித்திருந்தார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1980 ஜூலை 9

[பிற்பகல் 12-50]

ஆக, விவசாயக் கடன் என்கிறபோது அவர்கள் கொண்டிருக்கிற அர்த்தம் எல்லா விவசாயிகளுக்கும் என்பது திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் கட்சி ஆகியவர்களின் பொருளாக இருக்கிறது. விவசாயிகளுடைய கடன் என்று சொல்கிறபோது நாங்கள் கருதுவது சிறிய விவசாயிகளுடைய, கஷ்டப்படுகிற, அந்தக் கடனிலிருந்து மீள முடியாமல் தவிக்கிற அவர்களுடைய கடன்களை நீக்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில்தான் இந்த நிதிநிலை அறிக்கையில் ஐந்து ஏக்கருக்கு உட்பட்டு நிலங்கள் வைத்துக்கொண்டிருக்கிறவர்களின் கடன்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தைச் செயல்படுத்துகிற முறையில் இந்த நிதிநிலை அறிக்கையில் நாங்கள் கொண்டுவந்து சேர்த்திருக்கிறோம். ஆக, ஐந்து ஏக்கர்களுக்குக் குறைவாக இருக்கிறவர்கள் பெற்றிருக்கிற கடன்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கருதி .......... எல்லா விவசாயிகளுக்கும் அளிக்க வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினார்கள். பணக்காரர்களாக இருந்தாலும், வசதி படைத்தவர்களாக இருந்தாலும், பெரிய நிலச்சொந்தக்காரர்களாக இருந்தாலும் அவர்களால் விவசாயத்திற்காக வாங்கப்பட்ட கடன்களை, எந்தக் கடனாக இருந்தாலும் அவை நீக்கப்பட வேண்டும் என்பது காங்கிரஸ் கட்சியின், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாக இருக்கலாம், திட்டமாக இருக்கலாம். அவர்கள் ஆட்சிக்கு வந்திருப்பார்களேயானால் அவர்கள் அந்தனையும் எழுத்திருப்பார்கள். கடன்களை நீக்கியிருப்பார்கள். வராவிட்டாலுமகூட, அவர்கள் தேர்தல் அறிக்கையில் இந்திரா காங்கிரஸ் இங்கே மாநிலத்தில் தேர்தல் நடைபெறுகிறபோதும் சரி, நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றபோதும் சரி அவர்கள் அதைத்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். காங்கிரஸ்-தி.மு.க. கூட்டணியின் குறைந்த பட்ச வாக்குறுதி விவசாயிகளுக்கு உடனடியாக கடன் நிவாரணம் என்று அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். The Party will consider taking steps to waive completely the arrears of loans due from the farmers காங்கிரஸ் கட்சியும் அவர்கள் தேர்தல் அறிக்கையில் அதைத்தான் அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயிகள் கடன் பாக்கிகள் முழுவதையும் தள்ளுபடி செய்வதற்கான நடவடிக்கைகளை காங்கிரஸ் கட்சி மேற்கொள்ளும் என்று. தமிழ்நாட்டில் பல் நெடுங்காலமாக விவசாயிகள் பட்டுள்ள பல்வேறு கடன்கள் ஒவ்வொரு பிரிவாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அவர்கள் கடன் ரத்து செய்ய வகை செய்யப்படும். விவசாயிகளின் கடன் பளுவைக் குறைக்கும் நோக்கத்தோடு ஒரு ட்ரிப்யூனல் அமைக்கப்படும் என்று இந்தத் தேர்தலிலும் அவர்கள் வாககுறுதி அளித்திருக்கிறார்கள். 1980 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் போதும் அகில



1980 ஜூலை 9] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இந்திய காங்கிரஸ் அளவில் போட்டி போடுகிற போதும்கூட அவர்கள் குறிப்பிட்டிருப்பது — மானிபெஸ்டோவில் குறிப்பிட்டிருப்பது — பத்திரிகைகளில் வந்திருக்கிற செய்தி. Marginal farmers will be treated as economically weaker sections. ஐந்து ஏக்கர்களுக்குக் குறைவாக நிலம் உடையவர்கள், பலகீனமானவர்கள், அவர்களைக் கவனிப்போம் என்றுதான் அகில இந்திய காங்கிரஸ் தன் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறது. ஐந்து ஏக்கர் அதற்கும் குறைவாக உள்ள நிலங்கள் மீதான நிலவரி நீக்கப்படும். கடன்களை ரத்து செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சிறிய விவசாயிகள் அவர்களை ஒட்டிவருகிற விவசாயிகள் பொருளாதாரத்தில் பலகீனமானவர்கள் என்று கருதப்படுபவர்கள் என்ற அதே கருத்தின் அடிப்படையில்தான் இந்த விவசாயிகளின், ஐந்து ஏக்கர்களுக்கு குறைவாக உள்ள விவசாயிகளின் கடன்களை தீர்க்கப்படும் என்ற தன்மையில் வருகிறபோது............ விவசாயிகள் என்ற பிரச்னை வரும்போது காங்கிரஸ் கட்சியும், தி.மு.க.-வும் எல்லா விவசாயிகளும் என்று அவர்கள் பொருள் கொள்கிறார்கள். எங்களைப் பொருத்தவரையில் நாங்கள் பொருள் கொள்வது சிறிய விவசாயிகள். தாளமுடியாமல் கடன் சுமையால் அவதிப்படுகிறவர்கள் அவர்கள் கடன்கள் போக்கப்பட வேண்டும் என்பதுதான். ஆக, கடன்களெல்லாம் உலகத்தில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்பதல்ல. கடன் வாங்குவது குற்றமோ அல்லது கடன்பட்டிருப்பது குற்றமோ அல்ல. அப்படிப் பார்த்தால் கடன் வாங்காத நிறுவனங்களே உலகத்தில் இருக்க முடியாது. கடன் வாங்காதவர்களே இருக்க முடியாது. உலகத்தில் உள்ள அவ்வளவு வங்கிகளும் கடன்கள் கொடுக்கத்தான் இருக்கின்றன. கடன் வாங்கித்தான் தொழில்கள் நடக்கின்றன. கடன் வாங்கித்தான் மற்றவர்கள் தங்கள் நிலைகளை உயர்த்திக்கொண்டு வருகிறார்கள். பிர்லா கூட கடன் ஏராளமாக வாங்கியிருக்கிறார். டாட்டாவிற்கு ஏராளமான கடன்கள் இருக்கின்றன. பெரிய பெரிய முதலாளிகளுக்குக் கூட கடன்கள் ஏராளமாக இருக்கின்றன. பெரிய பெரிய மிராசுதார்களுக்கு கடன்கள் இருக்கின்றன. 15 லட்சம், 20 லட்சம், 30 லட்சம் சொத்துடையவர்களுக்கும் கடன்கள் இருக்கின்றன. யாருடைய கடன்கள் நீக்கப்பட வேண்டும் என்பதுதான் பிரச்சனை இப்போது. கடன் அல்ல முக்கியம். கஷ்டங்கள் நீக்கப்பட வேண்டும் என்பதுதான் மிகமிக முக்கியம். கஷ்டங்களை நீக்க வேண்டுமென்றால் யாருக்கு கஷ்டம் இருக்கிறது என்று பார்த்து அவர்களை வாட்டி வதைக்கிற கடன்கள் நீக்கப்பட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில்தான் நாங்கள் எங்களுடைய தேர்தல் அறிக்கையில், எங்கள் கொள்கைக்கு ஏற்ப சிறிய விவசாயிகளுக்கு இருக்கிற இந்தக் கடன்கள் தீர்க்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் நாங்கள் வந்து சேர்ந்தோம்.

ஆக தேர்தல் காலத்திலே கொடுத்த வாக்குறுதியின் அளவிலே, அந்தந் தன்மையில் பார்க்கின்றபோது, எந்த உணர்வின் அடிப்படையிலே நாங்கள் தேர்தல் வாக்குறுதிகளை பெற்று வந்தோமோ, அந்த உணர்வின் அடிப்படையிலே தான் இப்போது சிறு விவசாயிகளாக இருப்பவர்களுக்கு, தாளமுடியாதவர்களுக்கு தரவேண்டுமென்று கருதுகிறோமே தவிர, மற்றவர்களுக்கு அல்ல.

அறிஞர் அண்ணா அவர்கள் ஒன்றைக்குறிப்பிட்டார்கள். ஒரே மாதிரி பணக்காரர்கள், ஏழைகள் அத்தனை பேரையும் கருதக் கூடாது என்று சொல்கிறபோது, இதே அவையிலே குறிப்பிட்டார்கள். To t eat equals as unequals and unequals as equals both are bad. என்று குறிப்பிட்டார்கள். சமமானவர்களை வேறுபடுத்திப் பார்ப்பதும். வேறுபட்ட நிலையிலே இருப்பவர்களை சமமாகப் பார்ப்பதும், இருவரையும் ஒன்றாக ஆக்குவதும் சரியானவைகள் அல்ல. இரண்டுமே தவறு என்று எடுத்துக் காட்டினார்கள். அந்த வகையிலேதான், இங்கே அளிக்கப்படுகின்ற சலுகைகள், கடன் சலுகைகள் பணக்காரர்களுக்கோ, வசதிபடைத்தவர்களுக்கோ மற்றவர்களுக்கோ கொடுக்கத் தேவையில்லை என்று இந்த அரசு இன்றைக்கும் கருதுகிறது. என்றைக்கும் கருதும். ஆகவே முடியாதவர்கள் என்று நாங்கள் கருதுகின்ற அளவிற்கு, 5 ஏக்கர்களுக்குகீழ் உள்ள சிறிய விவசாயிகளின் கணக்கு இருக்கின்ற காரணத்தினால், அந்த அளவிலே கணக்கெடுத்துத் தான் அவற்றை நீக்கவேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம்.

டாக்டர் மு. கருணாநிதி: ஆளும் கட்சியின் தேர்தல் அறிக்கையில் 5 ஏக்கர் விவசாயிகள் என்றோ, சிறு விவசாயிகள் என்றோ குறிப்பிடப்படவில்லை என்பதையும், விவசாயிகள் பெற்ற கடனை தள்ளுபடி செய்ய மத்திய அரசை வற்புறுத்துவோம்; அப்படி தர மத்திய அரசு மறுத்தால், அக்கடனை ஐந்தாண்டுகளில் தீர்க்க சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவோம் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதைத்தான் சொல்கிறேன். விவசாயிகள் என்பதற்கு தெளிவு பொருள் விளக்கம் நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். (கைதட்டல்) ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் கட்சி போட்டிருக்கின்ற அறிக்கையிலே கூட அவர்கள் இப்படித்தான் சொல்லியிருக்கிறார்கள். எல்லா விவசாயிகளும் என்று சொல்லவில்லை. விவசாயிகளுக்கு உடனடியாக கடன் நிவாரணம் அளிக்கப்பட வேண்டும் என்று அந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள் இப்





போது நாங்கள் சொல்லுகின்ற விளக்கம், விவசாயிகள் என்பதற்கு தெளிவு பொருள் விளக்கம் சிறு விவசாயிகள் என்பதுதான். ஆகவே, சிறு விவசாயிகள் என்றுதான் நாங்கள் கருதுகிறோம்.

டாக்டர் மு. கருணாநிதி: ஆளும் கட்சியின் தோழமை கட்சியான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை இங்கே நான் படித்துக் காட்டினேன். அதைப் பற்றி நிதி அமைச்சர் என்ன சொல்கிறார்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தோழமைக் கட்சி எடுத்த முடிவு. அப்படி அவர்கள் எடுத்திருக்கின்ற தன்மை, அது ஆளும் கட்சியைக் கட்டுப்படுத்தாது; இந்த அரசையும் கட்டுப் படுத்தாது. அதை அவர்கள் மாற்றிக்கொள்ளவோ, வைத்துக் கொள்ளவோ, திருத்திக் கொள்ளவோ முழுப் பொறுப்பும் அவர் களுக்கு உண்டு.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். முதியோர்களுக்கு ஓய்வூதியம் தரப்படும் என்று பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் கொண்டு வந்தபோதே, 65 வயது வந்த அத்தனை பேர்களையும் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. முதியோர்களுக்கு என்று சொல்லப்பட்டது. அதற்கு தெளிவு பொருள் வரும்போது 65 வயது என்று இருக்க வேண்டும். இன்னென்ன நிபந்தனைகளோடு இருக்க வேண்டும் என்று சொல்லி, ஆண்டுக்கு ஆண்டு அதைக் கூட்டிக்கொண்டு வருகிறோமே தவிர, முதியோர்களுக்கு ஓய்வூதியம் தரவேண்டுமென்ற அந்த வாக்குறுதி எல்லா முதியவர்களுக்கும் தந்து முடிக்கப்பட்டு விட்டதா என்றால் இல்லை. எது இயலுமோ, எது முடியுமோ அதைச் செய்து கொண்டிருக்கிறோம். அதேமாதிரிதான், இப்படி சொல்லுகின்ற வகையிலே பேரறிஞர் அண்ணா அவர்கள், நாமெல்லாம் ஒன்றாக இருக்கும்போது, எதிர் தரப்பிலே இருப்பவர்களும், இங்கே இருப்பவர்களும் அன்றைக்கு தேர்தல் நடத்தியபோது, அறிஞர் அண்ணா அவர்கள் மக்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். நாங்கள் ஆட்சிக்கு வருவோமானால், ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவோம் என்று சொன்னார்கள். ஆனால், அப்போதிருந்த எதிர்த் தரப்பினர் அத்தனை பேரும் கேட்டார்கள். எல்லோருக்குமே ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுங்கள் என்றார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு படி அரிசி போட வேண்டுமென்ற உணர்விலே. அந்த உணர்வின் அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்னார்கள். அன்றைக்கு இருக்கக்கூடிய எல்லோருக்கும் ஒரு படி கொடுக்கக்கூடிய சூழ்நிலை கொண்டு வரவில்லை. அதற்குப் பிறகு நாட்டிலே இருக்கின்ற

நகராட்சி மன்றங்களுக்கு மட்டும் கொண்டு வரலாமா என்று பார்த்தால். நிதி நிலை என்னவாகும் என்பதைக் கணக்கிட்டுப் பார்த்தார்கள். எல்லோருக்கும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்பது நல்ல திட்டம் தான். அதைக் கொண்டுவந்தால் நல்லதுதான். அதை நிறைவேற்றினால் எல்லோரும் மகிழ்ச்சி அடைவார்கள். ஆனால், ஆட்சிக்கு வந்ததற்குப்பிறகு அந்த உணர்வுக்கு மதிப்பளிக்கின்ற வகையிலே, அந்த உணர்வின் அடிப்படையிலே எல்லா நகராட்சி மன்றங்களுக்கும் கொடுக்க இயலுலுமா என்று பார்த்து, அப்படி கொடுக்க இயலாது என்ற முடிவுக்கு வந்து, இரண்டு நகராட்சிகளும் அதாவது கோயம்புத்தூர், சென்னை நகரங்களிலே உள்ளவர்களுக்கு தரவேண்டும் என்று முடிவுக்கு வந்து, அதிலும் எல்லோருக்கும் தர முடியாது என்ற முடிவுக்கு வந்து. அதற்குப் பிறகு 300 ரூபாய்க்கு கீழே வருமானம் உடையவர்களுக்கு மட்டும்தான், ஏழை எளியவர்களுக்கு மட்டும் ரூபாய்க்கு படி அரிசி கொடுக்கும் அளவுக்கு. ஒரு நடைமுறை தன்மைக்கு, கொடுத்த வாக்குறுதியின் தன்மையிலே, அந்த உணர்வை கொண்டுவந்து சேர்த்து, அறிஞர் அண்ணா அவர்கள் இதை நடைமுறைக்கு கொண்டு வந்தார்கள். அதே உணர்வின் அடிப்படையிலே இப்போது நாங்கள் ஏழை எளியவர்களுக்கு உதவுவதற்காக முதியோர் திட்டத்தையும், 5 ஏக்கர் நிலம் உள்ளவர்களுக்கு, அதற்கு கீழே உள்ளவர்களுக்கு கடன் நிவாரணம் அளிப்பது சரி என்ற முயற்சியில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம்.

[பிற்பகல் 1—00]

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்கள் அண்ணாவின் படியரிசித் திட்டத்தைத் தனக்குச் சாதகமான உதாரணமாக எடுத்துக் கொண்டு கருத்துக்களைச் சொன்னார்கள். ஆனால் நம்முடைய முதல்வர் அவர்கள் 1977-ம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் சொன்னதோடு பொதுக் கூட்டங்களிலும் பேசினார்கள். 'படியரிசித் திட்டத்தை நிறைவேற்றாத பாவிகள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறார்கள். படியரிசித் திட்டத்தை நிறைவேற்றாத திராவிட முன்னேற்றக் கழகப் பாவிகள்—அந்த ரத்தக் கண்ணீரில் பிறந்ததுதான் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.' என்று சொன்னார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் படியரிசித் திட்டத்தை நிறைவேற்ற முயற்சி எடுப்போம் என்று சொன்னார்கள். வந்த பிறகு அதிகாரிகளைக் கலந்த பிறகு அதைச் செய்ய முடியாமல் போய்விட்டது. இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால்—படியரிசித் திட்டத்தை நிறைவேற்றாத பாவிகள் என்று முதல்வர் அவர்கள் எங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள் என்பதற்காகத்தான்.

V2ıı,31 'N8



(N81-4-1;1)



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரறிஞர் அண்ணா அவர்களைச் சாதகமாக எடுத்துக் கொண்டேன் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். [illegible] மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அண்ணா அவர்களைச் சாதகமாக அழைக்காமல் [illegible] நான் சாதகமாக அழைப்பது? அண்ணா அவர்[illegible] அவர் கற்றுத் தந்த [illegible] அடியொற்றி, வழிகாட்டி, [illegible] னோடி, வழிகாட்டி, அவர் கற்றுத் தந்த [illegible] அடிப்படையில்தான் இந்தக் கருத்தைச் சொல்லுகிறேன்.

23100

டாக்டர் மு. கருணாநிதி: அண்ணா அவர்கள் அறிவித்த படியரிசித் திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை [illegible] தோல்வியுற்ற பிறகு, அண்ணா வழியில் செலவதாகச் சொல்[illegible] அரசு அதற்குப் பிறகு திருந்தி நாம் ஏன் இதை அறிவிக்க [illegible]டு மென்று சும்மா இருக்காமல் ஐந்து கிலோ அரிசி வா[illegible] ஒரு கிலோ அரிசி இனாமாகத் தருகிறோம். வறுமை[illegible] டுக்குக் கீழே உள்ள இரண்டு கோடி பேருக்குத் தருவோம், என் றெல்லாம் ஏன் அறிவிக்க வேண்டும்?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு விளக்கங்களுக்கு நான் என்னை ஆளாக்கிக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் படியரிசித் திட்டத்தை நிறைவேற்றாத பாவிகள் என்று நான் சொன்னதாகச் சொல்லுகிறார். எப்போது எங்கே என்பது நினைவில் இல்லை. அடுத்த தொடரில் அதைப் பற்றிய விளக்கத்தை வைத்துக் கொள்வோம்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதற்கு ஒன்று சொல்லுகிறேன். இரண்டு கோடி என்ற கணக்கைச் சொல்லுகிறார்கள். அது உங்களுக்குக் கிடைத்த கணக்காக இருக்கலாம். வறுமைக் கோட்டுக்குக் கீழே இரண்டு கோடி பேர்கள் உண்மையாகவே இருப்பார்களானால் அவர்களுக்கு நாம் அனைவரும் உழைத்து உதவி செய்ய வேண்டியது கடமையாகும். இந்த அரசைப் பொறுத்தவரை கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற ஐந்து ஆண்டு காலத்தில் எப்படியும் முயற்சிப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆகவேதான், இருக்கிற சூழ்நிலையையும், இருக்கிற வசதி வாய்ப்பையும் வைத்து எதைச் செய்ய இயலுமோ, எதைச் செய்ய முடியுமோ அதைத் தெளிவாக இந்த நிதிநிலை அறிக்கையில் எடுத்து வைத்திருக்கிறோம். புயலாலே, வெள்ளத்தாலே பாதிக்கப்பட்டு, கடன் சுமையினால் தாங்க முடியாத துன்பத்துக்கு ஆளாகி, கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத அந்த சிறு விவசாயிகளுக்கு தக்காவிக் கடன் 16 கோடி ரூபாய், கூட்டுறவுக் கடன்

42 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறேன். இதை மத்திய அரசிடத்திலிருந்து நாங்கள் கேட்கிறோம். இந்த நிதி உதவியை மத்திய அரசு வழங்க வேண்டுமென்று கேட்கிறோம்.

நாடாளுமன்றத் தேர்தலின் போது இந்த நாட்டை ஆளுகின்ற பொறுப்பை ஏற்றுக் கொள்ளுகின்ற தன்மையைப் பெற்ற காங் கிரஸ் கட்சி—நான் முதலிலே படித்துக் காட்டியது போல்—சிறு விவசாயிகளுக்கான சுமைகளைக் குறைப்போம் என்ற வாக்குறுதி அளித்தார்கள். நான் தேர்தல் அறிக்கையைப் படித்துக் காட்டி னேன். விவசாயிகளுக்குப் பெரும் கஷ்டம் ஏற்படுகிறது. வெள் ளத்தால் கஷ்டம் ஏற்படுகிறது, புயலால் கஷ்டம் ஏற்படுகிறது. வேறு எத்தனையோ வகையில் கஷ்டம் ஏற்படுகிறது. அந்தக் கஷ்டத்தைப் போக்கும் பொறுப்பு மாநில அரசுக்கு மட்டுந்தான் உண்டா? இந்தத் தமிழகத்தில் நாலரைக் கோடி மக்களையும் காப்பாற்றும் பொறுப்பு மத்திய அரசுக்கு அறவே இல்லையா? இங்கே இருக்கிற விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அதன் காரணமாக வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் கஷ்டப்படுகிறார்கள் என்று சொன்னால் அவர்கள் கடன் சுமை முழுவதையும் ஏற்று அவர்களை வாழ்விக்கும் பொறுப்பு மாநில அரசுக்கு மட்டுந்தான் இருக்கிறதா? மத்திய அரசுக்கு அந்தப் பொறுப்பு அறவே இல்லையென்று சொன்னால் அது எப்படி நியாயமாகும்? மாநில அரசு மட்டுமே மக்களிடத்தில் வரிப் பணத்தை வாங்குகிற அரசு அல்ல என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர் களும் மற்றவர்களும் மிக நன்றாக உணருவார்கள். அவர்களே முதல்வராக இருந்தபோது பல தடவை அழுத்தந்திருத்தமாக சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். நாம் பெறுகிற வரி ஆதாயங் களில் மிகவான வரி ஆதாயங்களை மத்திய அரசு பெற்றுக் கொண் டிருக்கிறது. இந்த மாநிலத்திலே மக்கள் கொடுக்கிற வரிப்பணத் திலே அதிகமான வரியைப் பெறுவது நாமா அல்லது மத்திய அரசா என்று பார்த்தால் மத்திய அரசுதான். ஆனால் மாநில அரசின் கீழே இருக்கிற மக்கள் அவதிப்படுகிறார்கள் என்கின்றபோது அந்த அவதியை நீக்குகின்ற பொறுப்பு மாநில அரசுக்கு மட்டும் தான் உண்டா? மத்திய அரசுக்கு இல்லையா? மாநில அரசுக் கும் மத்திய அரசுக்கும் இருக்கிறது. ஆனால் மாநில அரசுக்கு பல்வேறு பணிகள் இருப்பதால் முடியாத தன்மை இருப்பதால் இவற்றையெல்லாம் நிவர்த்திக்கின்ற தன்மை மத்திய அரசுக்கு இருப்பதால் மத்திய அரசை நாங்கள் கேட்கிறோம். ஆகவே 60 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்கிற அளவுக்கு வருகிறபோது அதை ரிசர்வ் வங்கிக்குக் கட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிற போது மத்திய அரசு அந்த நிதியைக் கொடுத்துத் தீரவேண்டும்





நமக்கு அல்லது ரிசர்வ் வங்கியிடம் ஏற்பாடு செய்து கேட்க மாட்டோம் என்று சொல்லச் சொல்கிற பொறுப்பை மத்திய அரசு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நாம் கேட்கிறோம்.

நாம் மட்டுமல்ல, மகாராட்டிர மாநிலத்திலே 49 கோடி ரூபாய்க்கு சிறு விவசாயிகளுடைய கடன்களை அவர்களும் தள்ளு படி செய்து இருக்கிறார்கள், சிறு விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்த கடனை மத்திய அரசினிடத்திலே கேட்டுப் பெற வேண்டு மென்று தான் அவர்களும் சொல்லி இருக்கிறார்கள். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி ஆளுகிற மாநிலமாக இருக்கிற மகாராட்டிர மாநிலத்திற்கு மத்திய அரசு கொடுக்கிற சூழ்நிலை ஏற்படுமானால், அது இந்த மாநிலத்திற்கும் கிடைக்கக் கூடும். அது மட்டுமல்லாமல் கேரள அரசு கூட வட்டியைத் தள்ளி விட்டதாக நான் கேள்விப் படுகிறேன். உண்மை நிலை எனக்குத் தெரியவில்லை. மத்திய அரசைக் கேட்டுப் பெறவேண்டு மென்றுதான் அவர்களும் சொல்கிறார்கள்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மகாராட்டிர மாநிலத்தில் 49 கோடி ரூபாய்க்கு நிதி ஒதுக்கீடு செய்துவிட்டு மத்திய அரசிடத்திலே நிதி உதவி கேட்கிறார்களா? அல்லது நிதி ஒதுக்கீடு செய்யாமல் கேட்கிறார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அங்கே நிதி ஒதுக்கீடு செய்து விட்டுத்தான் கேட்கிறார்கள். நாம் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. கேட்கிறோம். நிதி ஒதுக்கிவிட்டோமேயானால் நீதான் நிதி ஒதுக்கிடு செய்து விட்டாயே, உனக்கு ஏன் என்று கேட்பார்கள், எனவே நான் நிதி ஒதுக்கீட்டைச் செய்யவில்லை.

டாக்டர் மு. கருணாநிதி: இந்தவாதத்தை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம். திறமையான வாதம். ஆனால் நீங்கள் ஒரு பெரிய தவறைச் செய்திருக்கிறீர்கள். மத்திய அரசு தராவிட் டாலும் நாங்கள் அந்தக் கடனை ரிசர்வ் வங்கிக்கு தவணை முறையிலே தருவோம் என்று ஏற்கனவே முதலமைச்சர் கமிட் செய்து கொண்டிருக்கிறார். எனவே அது நமக்குப் பாதகமாக முடிந்துவிடும.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இருக்கிற நிலைமையைத் தான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நாம் அவர்கள் தருகிற அளவுக்கு என்ன என்ன செய்ய முடியுமோ அதை எல்லாம் செய்து வருகிறோம். கூடுமானால் மாண்புமிகு எதிர்க்கட்சித்

தலைவர் அவர்களைக்கூட அழைத்துக் கொண்டுபோய் கேட்டு வாங்கவேண்டும் என்ற நிலைதான் இருக்கிறது. ஆகவே மத்திய அரசை நாங்கள் கேட்கிறோம். எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற காங்கிரஸ் கட்சியினரையும், மற்றவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் கொடுக்க முன் வந்தாலும் கொடுக்க வேண்டாம் என்று தயவு செய்து நீங்கள் சொல்ல வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, நாங்கள் வற்புறுத்திக் கேட்கிற சூழ்நிலை ஏற்படுகிறபோது இந்த மன்றத்தைச் சேர்ந்த அவ்வளவு கட்சியினரும் சேர்ந்து போய்க் கேட்டால்தான் கொடுப்பார்கள் என்ற சூழ்நிலை வருமானால் உங்களுடைய ஒத்துழைப்பையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாவலர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ரிசர்வ் வங்கியிலே ஏற்கனவே கடன் இருக்கிறது. இந்தச் சர்க்கார்தான் அந்தப் பணத்தை ரிசர்வ் வங்கிக்குக் கொடுக்க வேண்டும். தக்காவிக் கடன் 16 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் 42 கோடி ரூபாய் ஆக மொத்தம் 58 கோடி ரூபாய் கடனை ரைட் ஆப் செய்து விட்டார்கள். ரிசர்வ் பாங்கிற்கு மத்திய அரசு இது சம்பந்தமாக ஏற்பாடு செய்து தருகிற வரைக்கும் விவசாயிகள் கூட்டுறவு வங்கியிலிருந்து—அவர்கள், அரியர்ஸ் கட்டப்படாமல் இருக்கிற வரையிலும்—பிரஷ் லோன்ஸ் வாங்கமுடியாத நிலைமை இருக்கிறது. அதுவரையிலே கட்ட வேண்டிய நிலைமை, அடுத்து ஜப்தி நடவடிக்கை இருக்கிறது. ரைட் ஆப் பண்ணியதன் பலனை அனுபவிக்காமல் போகிற முறையிலே மத்திய அரசை எதிர்பார்த்து இருக்கக்கூடிய இந்த நிலைமையிலே இந்த இடைக் காலத்திலே சிறு விவசாயிகளுக்கு எப்படி கடன் கிடைக்கும்? ஒரு ஆண்டிற்கு இந்த நிலைமை என்றால் 5 ஆண்டுகள் ஆகும் எல்லாவற்றையும் தள்ளுபடி செய்வதற்கு என்றால் 5 ஆண்டுக் காலத்திற்கு விவசாயிகளுடைய நிலைமை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 60 கோடி ரூபாய் வட்டியும் முதலுமாக விவசாயிகளுடைய கடன் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்பது உறுதி. அதைக் கட்டவேண்டிய பொறுப்பு மாநில அரசைச் சேர்ந்தது. அதைக் கட்டுவதற்கு நிதி உதவி செய்யும்படியாக மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அது வரும் என்று எதிர் பார்க்கிறோம். வராவிட்டால் கட்டுகிற காலத தவணையை நாம் எப்படி நீடித்துக் கொள்ள முடியுமோ அப்படி நீடித்துக் கொள்ளலாம். ரிசர்வ் வங்கி மத்திய அரசின் கீழே இருக்கிற ஒன்று. ரிசர்வ் வங்கியாக இருந்தாலும், மத்திய அரசாங்கமாக இருந்தாலும், அதனால் விவசாயிகள் பாதிக்கப்



படமாட்டார்கள். விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமோ அதை அரசு எடுக்கும். அதனுடைய டீடெய்ல்ஸ் என்ன என்ன என்பது எல்லாம் உட்கார்ந்து ஆராய்ந்து பார்க்கிற போதுதான் தெரியும். ஆகவே முடிவு சொல்லியாகிவிட்டது. கடன்கள் நீக்கப்படும். எதிர்காலத்திலே அவர்கள் கடன் சுமையாளர்களாக ஆகாத அளவுக்கு பார்த்துக் கொள்ள வேண்டுமென்று திரு. அழகர்சாமி அவர்கள் சொன்னார்கள். இதே வேலை தொடர்ந்து நீடித்துக் கொண்டே போகுமானால் எதிர்காலத்திலே ஒரு அரசு நடைபெறாமல் போய்விடும்.

[பிற்பகல் 1–10]

ஆகவே, எதிர்காலத்திலே அவர்கள் கடன் சுமைக்கு ஆளாகாத அளவிற்குச் செய்கின்ற சூழ்நிலைகளை நாம் மேற் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆக, இப்பொழுது கடன் சுமையை நீக்கியதற்குக் காரணம் வேளாண்மைத் தொழில் சிறப்பாக நடைபெற வேண்டுமென்பதற்காகத்தான். அதிலே என்னென்ன சங்கடங்கள் இருக்கின்றன என்பதை நடைமுறையில் பார்த்து, அந்தச் சங்கடங்களை நீக்குவதற்கான முயற்சிகளை இந்த அரசு படிப்படியாக மேற்கொள்ளும் என்பதையும் இந்த வாய்ப்பிலே நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, சிறுசிறு சங்கடங்கள், டீடெயில்ஸ் அதைப்பற்றிப் பிறகு பேசுவதைப் பற்றி நான் எந்தக் கருத்தும் சொல்ல விரும்பவில்லை. ஆனால் இப்பொழுது உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால், குப்பன் என்று ஒருவன்—ஒரு விவசாயி, ஒரு கூட்டுறவு சொசைட்டியில் கடன் வாங்கியிருக்கிறான் இரண்டாயிரம் ரூபாய். அவன் ஐந்து ஏக்கருக்குச் சொந்தமானவன். அவனுடைய கடனைத் தீர்ப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அந்த வங்கிக்கு—அந்தக் கூட்டுறவு சொசைட்டிக்கு அந்தப் பணத்தை அவன் கொடுத்தால்தான் குப்பனுக்கு அவர்கள் மறுபடியும் கடன் கொடுக்க முடியும். அதற்கு இப்பொழுது என்ன வழியிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத்தலைவர் அவர்களே, அதற்கான வழிவகைகளைத்தான் நாங்கள் ஆராய்வோம்; விரைவிலே அதற்கான சங்கடங்களைப் போக்குவதற்கான நடவடிக்கைகளையும் எடுப்போம் என்று நான் சொன்னேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது என்றால் பதில் சொல்லி முடிந்த பிறகு எழுப்பலாம். இப்பொழுது எழுப்ப வேண்டாம். அவை முன்னவர் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : பாயிண்ட் ஆப் ஆர்டரே கேட்கக் கூடாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேட்பது என்பது வேறு விஷயம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பேசும் பொழுது யாரும் குறுக்கிடவில்லை. அதையும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். நேரமாகி விட்டது.

டாக்டர் மு. கருணாநிதி : நான் அவைத் தலைவரவர்களுக்கு ஒன்றைச் சொல்லியாக வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் பேசும் பொழுது யாரும் குறுக்கிடவில்லை என்று சொன்னீர்கள். விளக்கம் பெற வேண்டியது அமைச்சர்களிடத்தில் ; என்னிடத்திலே அல்ல். அதனாலேதான் குறுக்கிட்டுக் கேட்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுக்கிடுவது என்பது எல்லோருக்கும் பொதுவானதுதான் ; அதிலே ஒன்றும் வித்தியாசம் இல்லை. ஆனால் அதில் ஒரு முறையை வகுத்துக் கொள்ள வேண்டும் அல்லவா ; அதற்காகத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களே கேட்க வேண்டிய விளக்கங்களையெல்லாம் கேட்க இங்கே இருப்பதன் காரணமாக எல்லோரும் சேர்ந்து கேட்பதைவிட அந்தப் பொறுப்பை அவர்களிடத்திலே விட்டுவிடுவது நல்லது.

அடுத்து, தொழில்களைப்பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, இந்த மாநிலத்திலே மக்களுடைய வாழ்வு வளம் பெற வேண்டுமென்றால் தொழில்துறை வளர வேண்டுமென்று சொன்னார்கள். அதிலே இரண்டுவிதமான கருத்துக்கள் இருப்பதற்கு வழியில்லை. இந்த மாநிலம் தொழில்துறையிலே வளர வேண்டும், நாளுக்குநாள் வளர வேண்டும் என்ற கருத்தை அத்தனைபேரும் கொண்டிருக்கின்றார்கள் ; அதற்கான வழிவகைகளைச் செய்கிறார்கள். ஆனால், இந்த மாநிலம் எப்படியெல்லாம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதை நிதிநிலை அறிக்கையிலே நான் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். ஐந்தாண்டு காலத்தினுடைய நிதி ஒதுக்கீடு எவ்வளவுக்கெவ்வளவு குறைந்து வந்திருக்கிறது என்பதையும், தமிழகத்தை ஒத்த மக்கள் எண்ணிக்கை கொண்டிருக்கின்ற மற்றைய மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இதைவிட 400 கோடி, 500 கோடி, 600 கோடி மத்திய அரசாங்கத்தின் சார்பாக வைத்திருக்கின்ற தொழில்களுக்குத் தந்துவிட்டு, தமிழகத்திற்கே தொழில் வாய்ப்பு ஏற்படாத அ•





விற்குக் குறைத்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நாங்கள் மட்டுமல்ல, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இங்கே முதலமைச்சராக இருந்த பொழுதே பல தடவை இந்தக் குற்றச்சாட்டைச் சாட்டியிருக்கின்றார்கள். ஆகவே, அரசியல் வகையிலே நாம் மாறுபாடு கொண்டிருந்தாலும், முரண்பாடு கொண்டிருந்தாலும், அரசியல் கருத்துக்களிலே மாறுபாடுகள் வேறுபாடுகள் கொண்டிருந்தாலும், அதற்கான வாதப்பிரதிவாதங்களை எடுத்து வைத்தாலும், ஆனால், மாநிலம் தொழில் வளம் பெற வேண்டும், தொழிற்சாலைகள் அதிகமாக ஆக வேண்டும், மத்திய அரசின் நிதியை அதிகமாகப் பெற வேண்டுமென்ற கருத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களும், மற்றக் கட்சித் தலைவர்களும் முழு ஒத்துழைப்பும் தர வேண்டுமென்று இந்த நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலை அளிக்கும் இந்த நேரத்தில் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, அந்த வகையிலே முழு ஒத்துழைப்பும் இருந்தால்தான் இந்தக் காரியங்கள் தொடர்ந்து நடைபெறும் என்று அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுதும், திருப்பித் திருப்பி வற்புறுத்தி வந்திருக்கின்றார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுதும் அந்தக் கருத்தைச் சொல்லி வந்திருக்கிறார்கள் ; காங்கிரசைச் சேர்ந்த முதலமைச்சர்கள் பல்வேறு மாநிலங்களில் இருக்கும்பொழுதும்கூட அந்தக் கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் எந்த அளவிற்குப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதை ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கீடுகளின் தன்மைகளையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆனால், இந்த மாநிலம் புறக்கணிக்கப்பட்டு விட்டது, புறக்கணிக்கப்பட்டு விட்டது என்று பொதுவாகச் சொல்லப்படுகின்றது. ஆனால், எந்த வகையில், இருக்கின்ற வசதி வாய்ப்பு, நமக்கிருக்கின்ற வசதி வாய்ப்பு ஆகியவற்றை அடிப்படையாக வைத்துத்தான் மாநிலத்தினுடைய தொழில் வளர்ச்சியைப் பெருக்குகின்ற திட்டத்தையும் நாம் கொண்டிருக்கின்றோம்.

பெருந்தொழில்கள் துவக்க உரிமங்கள் அனுமதி கேட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள், எந்த வகையிலே நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையிலும் குறைந்துவிட்ட அத்தகைய சூழ்நிலையில் இல்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன். 1977-வது ஆண்டு 55 உரிமங்கள் அனுமதி கேட்டு அனுப்பப்பட்டிருக்கின்றன ; 1978-லே 45 உரிமங்கள், 1979-லே 49 உரிமங்கள், 1980-லே 47. இந்த 1977-ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டு முடிய 196 உரிமங்களுக்குக் கேட்டிருக்கிறோம். அந்த உரிமங்கள் எல்லாம் போதுமான அளவுக்கு அனுமதிக்கப்பட்டு, இங்கே தொழிற்சாலைகள் நிறுவப்படுமேயானால், இதன்

[டாக்டர். இரா. நெடுஞ்செழியன்] [1980 ஜுலை 9

மூலம் ரூபாய் 245 கோடியே 2 இலட்சம் மதிப்பு அளவிலே தொழிற்சாலைகள் இங்கே கொண்டு வரப்படும். ஆனால், நடுத்தர, பதிவு செய்யப்பட்ட தொழில்கள் 1977-லே 19 வந்தன; 1978-லே 29 வந்தன ; 1979-லே 37 வந்தன ; எந்த ஒரு தொழிற்சாலையும் இங்கே வராமல் இல்லை. அதற்கான முயற்சியை இந்த அரசு எடுக்காமல் இல்லை. நிலையாக பதிவு செய்து துவங்கப்பட்டு செயல்பட்டு வரும் சிறு தொழில்களின் எண் கையை, கணக்குப் பார்த்தாலும், 1977-லே 5,394 சிறுதொ கள் பதிவு செய்யப்பட்டு, அவைகள் செயல்படுகின்ற தன்மை வந்தன. 1978-ல் 5,144 தொழிற்சாலைகள் வந்தன. 1979- 6,126 தொழிற்சாலைகள் வந்தன. 1980 ஆம் ஆண்டு மார் திங்கள் 31 ஆம் நாள் வரையில், இந்த ஆண்டிலே மட்டும் 1,795 தொழிற்சாலைகள் வந்திருக்கின்றன.

மற்றொன்றையும் இந்த வாய்ப்பிலே நான் குறிப்பிட விரும்புகிறேன். மற்றொன்றையும் சொல்கிறார்கள், இந்த இரண்டு ஆண்டுக் காலத்திலே, மூன்று ஆண்டுக் காலத்திலே, இந்த மாநிலம் தொழில்துறையிலே கீழே போய் விட்டது. 3-வது இடத்திலே இருந்து 13-வது இடத்திற்குப் போய் விட்டது, 14-வது இடத்திற்குப் போய் விட்டது, சில பேர் 16-வது இடத்திற்குப் போய் விட்டது என்று சொல்கிறார்கள். எந்த ஆதாரத்தின் அடிப்படையிலே சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. நானும் பலவித ஆதாரங்களைத் தேடிப் பார்த்தேன். எந்த ஆதாரத்தினுடைய அடிப்படையிலே 3-லே இருந்தது, 14 க்குப் போயிற்று, அல்லது 13-வது இடத்திற்கு போயிற்று என்று சொல்கிறார்கள், என்று. அதற்கு எத்தகைய ஆதாரமும் இல்லை. ஆனால், இந்த 3 ஆண்டுக் காலத்திலே போய் இருக்குமேயானால், 3-வது இடத்திலேயிருந்து தமிழகம் 13-வது இடத்திற்குப் போக வேண்டுமென்றால், அந்த 3 ஆண்டுகாலத்திற்குள்ளே வேறு, கிட்டத்தட்ட 10 மாநிலங்கள் வளர்ச்சி பெற்றிருந்தால்தான் முடியும். இன்னொரு வாதமும் எடுத்து வைக்கிறார்கள். 3 ஆண்டுக்காலத்திலே ஜனதா ஆண்டபோது எந்த வாய்ப்பும் தரவில்லை, எந்த தொழிற்சாலையையும் தரவில்லை, எங்கும் ஒரு வளர்ச்சியும் ஏற்படவில்லை. என்று. எங்கும் ஏற்படவில்லை என்பதோடு மட்டுமல்லாமல், அப்பொழுது. கடந்த தேர்தலுக்கு முன்னால். ஜனதா கட்சிகளும் பிற கட்சிகளும்தான் அங்கு ஆட்சியிலிருந்தன. இரண்டு மூன்று மாநிலங்களிலேதான் காங்கிரஸ் கட்சி ஆளுகிற நிலையிருந்தது. ஆகவே, ஜனதா ஆட்சியிலே ஒன்றுமே ஏற்படவில்லையென்று சொல்கிற நிலையில், இந்த இரண்டு மூன்று ஆண்டுகளிலே ஜனதா ஆண்ட பெரும்பாலான மாநிலங்கள் எப்படி திடீரென்று தமிழகத்தைப் பின்னால் தள்ளிவிட்டு அவைகள் முன்னால் போயிருக்க முடியும். 3-வதுலே இருந்த இடம் எப்படி, 13-வது இடத்திற்கு, 14-வது இடத்திற்குப் போயிருக்க முடியும் என்கிற வாதத்தையும் உள்ளபடியே சிந்தித்துப் பார்க்க



1980 ஜுலை 9] [டாக்டர். இரா. நெடுஞ்செழியன்]

நிலைமைகளின்படி
வேண்டியிருக்கும். இங்கேயிருக்கிற கணக்கு மைய அரசால் நடத்
பார்ப்போமேயானால், 1976-77-க்கான ஆய்வில் Annual survey of
தப்பட்ட வருடாந்திர தொழில் வளர்ச்சி தமிழ்நாட்டில் 8,247 தொழில்
Industries அந்த முடிவுகளின்படி நபர்கள் வேலை
நிறுவனங்கள் உள்ளதாகவும் அவற்றில் 6,68,000 கூடுதல் மதிப்பு
செய்வதாகவும், அந்த ஆலைகளின் உற்பத்தியில் குறிப்
ரூபாய் 690 கோடி ஆகும் என்றும் ஆய்வு அறிக்கையில் அளவு
பிடப்பட்டிருக்கிறது. அந்த உற்பத்திக் கூடுதல் மதிப்பின் 9.4 சதவீதம்
அனைத்திந்திய உற்பத்திக் கூடுதல் மதிப்பீட்டில் 24.4 சத
ஆகும் என்றும், அந்த அடிப்படையில் மகாராட்டிரம் என்றும் அவற்
வீதம் என்றும், மேற்கு வங்காளம் 12.1 சதவீதம் என்றும்
றுக்கு அடுத்து, தமிழ்நாடு 3-வது இடம் பெற்றிருக்கிறது இடத்தை
1976-77 கணக்குப்படி வந்திருக்கிறது. ஆக, முதல் மேற்கு வங்
மகாராட்டிரா பெற்றது. இரண்டாவது இடத்தை தமிழகம் பெற்றது.
காளம் பெற்றது. மூன்றாவது இடத்தைத்

அதற்குப் பிறகு நமக்குக் கிடைத்திருக்கின்ற தகவல்கள் அடிப்
படையிலே பார்ப்போமேயானால், 1978-79-லே Industrial
Development Bank of India ஒரு சர்வே நடத்தி, அவர்கள்
போட்டிருக்கிற கணக்கிலேதான் நாம் ஓரளவுக்கு நிலைமையைத்
தெரிந்து கொள்ள முடியும். அதன்படி பார்ப்போமேயானாலுங்
கூட, 1977-78-ஆம் ஆண்டிலே—1976-77-க்கு நான் ஏற்கெனவே
சொன்னேன். 1977-78-ஆம் ஆண்டிலே நாம் பார்ப்போமே
யானால், அப்பொழுது முதல் இடத்தை குஜராத் பெறுகிறது.
அதிலே, Regionwise statewise distribution of assistance sanctioned
தொழில்கள் வளர வேண்டுமென்றால், தொழில் நிறுவனம் அதிக
மான தொகையைக் கொடுத்திருந்தால்தான் தொழில்கள் வந்
திருக்க முடியும். எவ்வளவு கோடி ரூபாயை ஒவ்வொரு மாநிலத்
திற்கும் தந்தார்கள் என்ற புள்ளி விவரங்களை இந்த அறிக்கை
தெளிவுபட எடுத்து சொல்கிறது. அந்த அறிக்கையிலே பார்ப்
போமானால், 1977-78-வது ஆண்டு குஜராத் மாநிலத்திற்கு
ரூபாய் 142 கோடியே 61 இலட்சம் இந்தப் புதிய தொழில்களைத்
துவங்குவதற்காக உதவி செய்யப்பட்டிருக்கிறது. இரண்டாவது
இடத்தை மகாராஷ்டிரம் பெறுகிறது. ரூபாய் 94 கோடியே
28 இலட்சம். மூன்றாவது இடத்தைத் தமிழகம் நாம் பெறு
கிறோம்—ரூபாய் 57 கோடியே 48 இலட்சம். நான்காவது
இடத்தை மேற்கு வங்காளம் பெறுகிறது, ரூபாய் 41 கோடியே
51 இலட்சம், ஆக, 1977-78-லே குஜராத் முதலிடம், மகா
ராஷ்டிரம் இரண்டாவது இடம், மூன்றாவது இடம் தமிழகம்
என்று வருகிறது.

[பிற்பகல் 1-20]

1978-79-ல் முதலிடம் மகாராஷ்டிரத்துக்குப்போகிறது. அங்கே
181 கோடியே 81 இலட்சம் முதலீட்டின் அடிப்படையில் தொழிற்

சாலைகள் துவங்கப்படப்போகிறது. அடுத்து குஜராத்தில், அது இரண்டாவது இடத்தைப் பெறுகிறது, அங்கு 123 கோடியே 49 இலட்சம். அடுத்து தமிழ்நாடு 3வது இடத்தைப் பெற்று 108 கோடியே 58 இலட்சம் பெறுகிறது. இது 1978–79-லே; மேற்கு வங்கம் 4வது இடத்தைப் பெறுகிறது. ஆக 1976–77, 1977–78, 1978–79 ஆகிய 3 ஆண்டுகளில் தொடர்ந்து 3வது இடத்தைக் தமிழகம் வைத்திருந்ததோ அதே 3 வது இடத்தைத்தான் வ வருகிறது. 1979–80 ஆம் ஆண்டிற்கான அறிக்கை இ தான் வரவேண்டும். ஆகவே, எப்போதும் இந்த இடம் 13- இடத்திற்கோ, 14 வது இடத்திற்கோ போக வழியில்லை. றான கணக்கு செய்தித் தாள்கள் மூலமும் மற்றவைகள் மூலமும் பரப்பப்பட்டிருக்கின்றன. ஆகவே, தமிழகம் தன்னுடைய நிலைமையை இழந்துவிடவில்லை. நம்முடைய எண்ணம் தமிழகம் முதலிடம் பெறும் சூழ்நிலை ஏற்படுமானால் நாம் பெரிதும் மகிழ்ச்சி அடைவோம. இந்த நிலையைப் பெறுவதற்காக எல்லா வழிகளையும் மற்றவைகளையும் நாம் தொடர்ந்து காண வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை இந்த வாய்ப்பிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, செய்தித்தாள்கள் தவறாக வெளியிட்டன என்று கனம் நிதி அமைச்சர் சொல்லுகிறார்கள். அப்படி இல்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி டிஸ்மிஸ் ஆன உடனே இன்றைய தினம் பிரதமராக இருக்கிற இந்திரா காந்தி அம்மையார் அவர்கள்தான் முதன் முதலில் இந்த ஆர்குமென்டை, 3-வது இடத்திலே இருந்து 13-வது இடத்திற்குத் தமிழகம் போய்விட்டது என்று ஆரம்பித்து "நேஷனல் ஆவரேஜுக்கும் பெர் காபிடா இன்கமும் ரொம்ப கீழே போய்விட்டது" என்று சொன்னார்கள். அங்கே இருந்துதான் அந்த சோர்ஸ்.

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அசோக் லேலாந்து பிரச்சினையைப் பற்றி உறுப்பினர்கள் சில பேர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். அதை நேற்று மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கூட சிறப்பாகச் சுட்டிக்காட்டினார்கள். இந்த அசோக் லேலாந்து தன்மையைப் பொறுத்தவரையில், இங்கே புதிய லாரிகள் செய்யக்கூடிய தொழிற்சாலைகளை உருவாக்குவதற்காக அசோக் லேலாந்து நிறுவனத்தினர் முயன்றார்கள். அதற்காக சில பல நிபந்தனைகளைத் தமிழக அரசுக்கு வைத்தார்கள். அது என்ன நிபந்தனை என்றால் இந்தப் புதிய தொழில் வருகிறபோது, 13 ஆண்டுகாலத்திற்கு அவர்களுக்கு, அவர்கள் செய்கின்ற சாமான்களுக்கு ஏற்படுகின்ற விற்பனை வரியை வட்டி இல்லாத கடனாக அவர்களுக்கே கொடுத்துவிடவேண்டும். அடுத்து 12 ஆண்டுகளுக்கு



பொருள்கள் வாங்கும்போது செலுத்தவேண்டிய வரியை,
அந்த சேல்ஸ்டாக்ஸ் சம்பந்தமான கடனை அந்த நிறுவனம்
பெற்றுக் கொள்ளவேண்டும். 13 ஆண்டு காலத்திற்கு எவ்வ
ளவு பொருள்கள் தமிழக அரசு வாங்குகிறதோ அதை
வட்டி இல்லாத கடனாக அவர்களுக்கே கொடுக்கவேண்டும்.
இது ஒரு கண்டிஷன். மற்றொரு கண்டிஷன் பர்சேஸ்
டாக்ஸ். அதாவது வாங்குகின்ற பொருள்களுக்கான வரிகளிலே
ஆண்டுக்கான வரிகளையும் வட்டி இல்லாத கடனாக
அவர்களுக்கே திருப்பிக் கொடுக்கவேண்டும். அதைத் தவிர,
இந்தத் தொழிற்சாலையை நடத்துவதற்கு மகாராஷ்டிர அரசு
25 கோடி ரூபாய் குறைந்த வட்டிக்குத் தருகிறது, ராஜஸ்தான்
அரசு 10 கோடி ரூபாய் தருகிறது. ஆகவே நீங்கள் அதை
விடக் கூடுதலாகத் தர முன்வருவீர்களா என்று அடுத்த
கண்டிஷன். இந்த நிபந்தனைகளை எல்லாம்
போட்டதற்குப் பிறகு, இந்த நிபந்தனைகளை ஏற்றுக்
கொண்டு இவ்வளவு கோடி ரூபாய்கள் செலவழித்ததற்குப்
பின்னாலே, இதிலே வந்து வேலைவாய்ப்பு, மற்ற வசதிகள்
எந்த அளவுக்கு ஏற்படுகின்றன என்று கணக்கிடுகின்ற
போதுதான், இவ்வளவு கண்டிஷன்களையும் ஏற்றுக் கொண்
டால் அதற்குப் பலன் ஏற்படுமா என்பதைப் பற்றி தமிழக
அரசு சிந்தித்து ஒரு முடிவுக்கு வரவேண்டிய நிலை ஏற்
பட்டது. மகாராஷ்டிர அரசும் மற்றவைகளும் ஏற்றுக்
கொள்கின்றன என்று அவர்கள் சொன்னதன் காரணமாக,
தமிழக அரசு அவ்வளவு பெரிய தொகை தருவதற்கில்லை.
நிதி நிறுவனம் தொழில் பிரிவுகளுக்கு வட்டி இல்லாத
விற்பனை வரியைக் கொடுப்பதற்கு உச்ச வரம்பு 48 லட்ச
மாகத்தான் வைத்திருக்கிறார்கள். பல்வேறு தொழில்களை
ஆரம்பித்து அதை ஊக்குவிப்பதற்காக வட்டி வாங்காத
கடனாக இந்த விற்பனை வரியை நாம் தருகிறோம். அந்த
அளவுக்குக் கொடுக்கலாம் என்று சொன்னாலும் அந்த 48
லட்சத்தை பத்தால் பெருக்கினால் கூட 4¾ கோடி
அளவுக்குத்தான் போகிறது. ஆனால் மற்றவர்கள் தருவதை
விட அதிகாக பல கோடி ரூபாய்கள் வட்டி இல்லாமல்
தரவேண்டுமா என்பதை முடிவு செய்கின்ற போதுதான் இந்த
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு
இருந்த போதிலும் சரி, அதற்குப் பிறகு நடந்த குடியரசுத்தலை
வர் ஆட்சி நடந்தபோதிலும் சரி, அவர்களும் அந்த முடிவுக்கு
இசைவு தருகிற அடிப்படையில், இதை ஏற்றுக் கொள்ள
வேண்டாம் என்ற முடிவுக்கு வந்தார்களே தவிர, அவர்கள்
தொழிற்சாலை வைக்க முன்வந்தார்கள், நமக்குத் தொழிற்
சாலையே வேண்டாம் என்று தெரிவித்து விட்டோம்
என்பதல்ல. ஆனால் அவர்களுக்கு அந்தச் சலுகை தர
முன் வருவோமேயானால் இங்கே தொழிற்சாலை ஆரம்பிக்க

[டாக்டர். இரா. நெடுஞ்செழியன்] [1980 ஜூலை 9

வருகின்ற ஒவ்வொருவரும் இந்த 12 ஆண்டு விற்பனை வரிச் சலுகை தாருங்கள், 13 ஆண்டு வாங்கிற வரியைத் தாருங்கள் என்று கேட்கத் தொடங்குவார்கள். அது முன்னோடியாக அமைந்துவிடும். அதனால் மாநிலத்தின் நிதி நிலைமை மிகவும் பாதிக்கப்படும். ஆகவே, அசோக் லேலண்ட் விரிவாக்கத் திட்டம்—எக்ஸ்பேன்ஷன் தன்மை— ஒன்றும் குறையவில்லை. அது போட்ட திட்டப்படி நடந்து கொண்டு இருக்கிறது. இந்தப் பிரச்சினை புதிதாக ஒரு லாரி தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றியது. அதே மாதிரி ஓசூர் போன்ற இடங்களில் அவர்கள் திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

36 நூற்பாலைகள் தனியார் துறையில் வருவதைப் பற்றிச் சொன்னார்கள். அதைத் தனியார் துறைக்குத் தரவேண்டுமா என்று கேட்டார்கள். தனியார் துறைக்குத் தரவேண்டிய அவசியம் இல்லை தான். ஆனால் இருக்கின்ற நிலைமையை உற்றுப் பார்க்கவேண்டும். மத்திய அரசாகட்டும், மாநில அரசாங்கமாகட்டும், பொதுத்துறை, கூட்டுறவுத் துறை, பொதுத்துறையும், தனியார் துறையும் சேர்ந்து கூட்டுத் துறை, தனியார் துறை என்று ஆக 4 துறைகளின் மூலமாக தொழில்களைத் துவங்குவதும், அவைகளுக்கு உரிமங்கள் வழங்குவதும் மத்திய அரசு, மாநில அரசுகள் செய்து வரும் ஒரு வழிமுறையாகும். 36 நூற்பாலைகளை ஆங்காங்கு இருக்கும் நிதி வசதியுடையவர்கள், இந்தந்த இடத்தில் நாங்கள் தொழில் தொடங்க இருக்கிறோம் அனுமதி தாருங்கள் என்று கேட்டு இருக்கிறார்கள். அதற்கு வசதி வாய்ப்பு செய்து தருகிறோம். இந்தத் தொழில்கள் அனைத்தையும் அரசுத் துறையில் தொடங்கவேண்டுமானால் அதற்கு அரசே நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். அப்படி நிதி ஒதுக்கிற அளவிற்கு நிதி ஆதாரங்கள் பெருக்கப்படவேண்டும். 36 நூற்பாலைகளை அரசாங்கம் தொடங்கவேண்டுமானால், மக்கள் கொடுக்கிற வரிப்பணத்தில் இருந்து தான் செய்யவேண்டும். இந்த மாநிலத்தில் உள்ள சட்டதிட்டங்கள், விதிமுறைகள் ஆகியவற்றிற்கு அடங்கி பல்வேறு தொழில்களுக்கு புதிதாக வாய்ப்பு ஏற்படுத்தவேண்டும் என்கிற கருத்தில், பல்வேறு பகுதிகளில் தொழில்கள் ஏற்படுத்தினால், அந்தந்தப் பகுதிகளில் உள்ள 500–600 1,000, மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்கிற அடிப்படையை வைத்துத்தான் நாம் அதைச் செய்கிறோம். கூட்டுறவுத் துறை, கூட்டுத்துறை ஆகியவற்றில் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாத போது தான் தனியார் துறைக்கு நாம் அந்த வாய்ப்பினைத் தருகிறோம். ஆகவே, நிதி நிலைமை வசதி இல்லாததால் தான் இந்த நிலைக்கு நாம் வந்து இருக்கிறோமே தவிர வேறு இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



1980 ஜூலை 9] [டாக்டர். இரா. நெடுஞ்செழியன்]

உலக வங்கிக் கடனைப் பற்றிச் சொல்கிறபோது, மாண்புமிகு துரை முருகன் அவர்கள் கேட்டார்கள். உலக வங்கி திட்டம்—சத்துணவுத் திட்டம்—அது முழுக்க முழுக்க உங்களுடைய திட்டம் அல்ல— முழுக்க முழுக்க இரவல் திட்டம்—முழுக்க முழுக்க உலக வங்கி கொடுக்கிறது—உங்கள் ஆளைப் போட்டு விநியோகிக்கிறீர்கள்— இது எப்படி இருக்கிறது என்றால் '' வழித் தேங்காயை எடுத்து கடைப் பிள்ளையாருக்கு உடைப்பது போல் இருக்கிறது '' என்று அவர்கள் முதலில் சொன்னார்கள். (குறுக்கீடு) அப்புறம் அதைத் திருத்திக் கொண்டார்கள். உள்ளபடியே பழமொழி என்னவென்றால் '' கடைத்தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது '' (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்ன கருத்தை நான் அப்படியே தெரிவித்தேன். இங்கே நான் ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன் உலக வங்கி கடன் என்று சொல்கிறபோது, நாம் எடுத்துக்கொள்கிற திட்டங்களுக்கு எல்லாம் உலக வங்கி கடன் பெற்று நாம் நிறைவேற்றுகிறோம் என்று கொள்ளக் கூடாது.

உலக வங்கித் திட்டம் என்று நாம் சொல்கிறபோது அதனுடைய முழு விவரங்களையும் இங்கே நாம் சொல்ல முடியாது. சுருக்கமாகச் சொல்லியிருக்கிறோம். உலக வங்கித் திட்டம் மூலம் நிறைவேற்றப் படுகிறது என்று சொன்னால், ஒரு திட்டத்திற்கு 100 ரூபாய் என்று இருந்தால், அதற்கு உலக வங்கி ரூ. 50 கடன் உதவி தருகிறது. அந்தக் கடன் உதவிக்கு அவர்கள் போடுகின்ற 'சர்வீஸ் சார்ஜ் ''—வட்டி என்று போடுவது இல்லை - 3/4 சதவீதம்-50 ஆண்டு காலத்தில் திருப்பித் தரவேண்டும் என்று கொடுக்கிறார்கள். அந்த 50 ரூபாய் மத்திய அரசு வாங்கி, 35 ரூபாயை நமக்குக் கடனாகத் தருகிறது. அந்த 35 ரூபாயில் 10 ரூபாய் மானியமாகவும், 25 ரூபாய் 6 சதவீதம் வட்டிக்கும் தருகிறது. ஆகவே மீதமுள்ள 65 ரூபாய் நம்முடைய மாநிலத்தின் நிதியில் இருந்து தரவேண்டும் அந்தத் திட்டத்திற்காக என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

[பிற்பகல் 1–30]

மாநில அரசு 65 ரூபாய் தருகிறது; மத்திய அரசு கடனாக 25 ரூபாய் தருகிறது; மானியமாக 10 ரூபாய்தான் தருகிறது. ஆக இந்தத் தன்மையை வைத்துக்கொண்டு நாம் திட்டங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. சில குறிப்பிட்டத் திட்டங்களை மாத்திரம் எடுத்துச்சொல்லி, உலக வங்கியோடு இந்த ஏற்பாடு செய்துகொள்கிறோம்.

[டாக்டர். இரா. நெடுஞ்செழியன்] [1980 ஜூலை 9

இன்னொன்று. இந்த சத்துணவுத் திட்டத்திற்குக்கூட உணவுக்காக இந்த நிதியில எடுக்கக்கூடாது என்று கன்டிஷன் இருக்கிறது. மற்ற ஏற்பாடுகளுக்கு, கட்டிடங்களுக்கு, இதர செலவுகளுக்கு எடுத்துக்கொள்ளலாமே தவிர உணவுப் பொருளுக்கு முழுவதும் மாநில அரசு நிதியிலிருந்துதான் செலவிட வேண்டுமென்று கன்டிஷன் இருக்கிறது. ஆக, 50 ரூபாய், 25 ரூபாய், 10 ரூபாய் என்று தந்தாலும் உணவுக்கு முழுவதும் நாம்தான் செலவு செய்ய வேண்டும். இதையெல்லாம் விளக்கத்திற்காகச் சொல்கிறேனே அல்லாமல் வேறு அல்ல. ஆக, நம்முடைய முயற்சி எதுவுமே இல்லாமல் இந்தத் திட்டம் நிறைவேறவில்லை. நம்முடைய பொறுப்பு அதிலே 90 சதவிதம் இருக்கிறது.

மற்றொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். ஏற்கெனவே பொற்கொல்லர்களுக்கு மத்திய அரசு கடன் வழங்கியது. அதைக்கூட தள்ளுபடி செய்ய வேண்டும், தள்ளுபடி செய்ய வேண்டும் என்று இந்த மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் முதலமைச்சராக இருக்கும்போது பல தடவை வற்புறுத்தி, வற்புறுத்தி எழுதி, இப்போதும் எழுதி வந்தோம். 1963-ம் ஆண்டு முதல் 1969-ஆம் ஆண்டு வரையில் மத்திய அரசு பொற்கொல்லர்களுக்கு தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் 2,3[illegible],25,700 ரூபாய் கடனாக வழங்கியது. அந்தக் கடனை திருப்பிச் செலுத்த வேண்டுமென்ற நிபந்தனையை மத்திய அரசு போட்டிருந்தது. ஆனால் பொற்கொல்லர்கள் இருந்த நிலையில் அவர்கள் திருப்பிச் செலுத்தும் நிலையில் இல்லை. அவர்களை நாம் வற்புறுத்தவும் இல்லை; அவர்கள் திருப்பிச் செலுத்தவும் இல்லை. அதிலே வசதி படைத்த பொற்கொல்லர்கள் தாமாகவே 17,11,900 ரூபாயைத் தந்துவிட்டார்கள். மீதி ரூபாயைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்தி, வற்புறுத்தி எழுதி வந்தோம். மத்திய அரசிடமிருந்து இப்போதுதான் ஒப்புதல் வந்திருக்கிறது. மத்திய அதுவும் முழுவதுமாக அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. 91,84,500 ரூபாய் மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்து, மீதித் தொகையாகிய 1,21,29,300 ரூபாயை தள்ளுபடி செய்ய மத்திய அரசு இசைவு தந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆக, பொற்கொல்லர்களுக்கு கடன் இருக்கிறது. கடன் இருக்கிறது என்ற நிலையை மாற்றி, அந்தக் கடனிலே மாநில அரசு 91,84,500 ரூபாயை ஏற்றுக்கொண்டு மத்திய அரசின் சார்பிலே 1,21,29,300 ரூபாயை தள்ளுபடி செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த அவையில் கூற ஆசைப்படுகிறேன்.



1980 ஜூலை 9] [டாக்டர். இரா. நெடுஞ்செழியன்]

ஆக, அந்த வகையிலே—எதிர்க்கட்சித் தலைவர்களும் மற்றவர்களும் தேர்தல் கால வாக்குறுதிகளை நாங்கள் நிறைவேற்றவில்லை என்று சொன்னார்கள்; அது சரியல்ல—தேர்தல் காலத்திலே நாங்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்ற அடிப்படையிலே திட்டங்களைத் தீட்டி வருகிறோம் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி ஒவ்வொன்றாக நிறைவேற்ற சிறப்பாக திட்ட மிட்டிருப்பதை நீங்கள் எல்லாம் காணலாம்.

கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்ற வில்லையே என்று பார்த்தால், காங்கிரஸ் கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியும் கூட தேர்தல் நேரத்தில் பல்வேறு வாக்குறுதிகளைத் தந்தார்கள்; சுவரொட்டிகளை ஒட்டினார்கள்; எழுதினார்கள். அதையெல்லாம் வாக்குறுதியாக எடுத்துக்கொண்டால் இன்றைக்கு நாங்கள் அதை வற்புறுத்தினால் மத்திய அரசு அதை செய்து தீரவேண்டும். அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் மத்தியில் நிலையான ஆட்சி அமைக்கவும், தங்கம், பவுன் 400 ரூபாய்க்கு கிடைக்கவும் இந்திரா காங்கிரஸ், தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களுக்கு கை, உதயசூரியன் சின்னத்தில் வாக்களியுங்கள் என்று ஒட்டியதை நான் போட்டோ எடுத்து வைத்திருக்கிறேன். (குறுக்கீடு) எழுதப்பட்டிருந்ததை எடுத்து வைத்திருக்கிறேன். ஆக, இது தேர்தல் காலத்தில் தந்த வாக்குறுதி. ஊருக்கு ஊர் சுவரிலே எழுதியிருக்கிறார்கள். இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமென்றால் மத்திய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் நிறைவேற்ற வேண்டும். ஆக மாண்புமிகு முதலமைச்சர் கூட்டங்களிலே பேசினார் என்றெல்லாம் மாண்புமிகு எதிர்கட்சித் தலைவரவர்கள் சுட்டிக் காட்டினார்கள் என்ற காரணத்தால் நான் எடுத்துச் சொன்னேன்.

டாக்டர். மு. கருணாநிதி : தலைவரவர்களே, நாவலர் அவர்கள் முதல்வரை அவ்வளவு தாழ்வாக எண்ணிவிட வேண்டாம். சுவற்றிலே எழுதப்பட்ட எழுத்தும், முதலமைச்சர் பேசிய பேச்சும் ஒன்றாக ஆகிவிட முடியாது.

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : ஊருக்கு ஊர் சுவற்றிலே எழுதி, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் அதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்; சுவரிலே இருந்தது தவறு என்று யாரும் அழிக்கச் சொல்ல வில்லை.

[1980 ஜூலை 9

டாக்டர். மு. கருணாநிதி: தலைவரவர்களே, மிகமிக தவறான ஒரு கருத்தை நாவலர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்; மிகவும் வருத்தப்படுகிறேன். நாங்கள் சொல்லி எழுதினார்கள்; அதை அழிக்கச் சொல்லவில்லை என்றால் எவ்வளவோ 'கார்ட்டூன்கள்' எல்லாம் எங்களைப்பற்றி போடப்பட்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் கூட நீங்கள் அழிக்கச் சொல்லவில்லை. அதை மறந்துவிடக் கூடாது. சுவற்றிலே எழுதப்பட்டது 'எலெக்ஷன் மானிஃபெஸ்டோ' ஆகாது.

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் தேர்தல் நேரத்திலே சுற்றுகின்றபோது என்னைப்பற்றிக் கேலி சித்திரம் எழுதப்பட்ட இடத்திலேயே இதே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் பற்றி எழுதப்பட்டிருந்ததை அழிக்க வேண்டும் என்று சொன்னேன். அவ்வாறு நான் சொன்னதை ஆதாரத்தோடு சொல்லக்கூடிய அளவில் சொல்லி இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர். மு. கருணாநிதி: பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் அடிக்கடி தன்னுடைய தோட்டத்திற்குச் செல்லுகின்ற வழியிலே இன்னமும் எழுதப்பட்டிருக்கின்ற கேலிச் சித்திரங்களை அவர் பார்வையிட்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். அப்படியானால் அவைகளையும் அழிக்கச் சொல்லி உத்தரவிடுவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, என் கண் பார்வையில் பட்டால் நிச்சயமாகச் சொல்வேன். ஆனால் அவரவர்களே எழுதச் சொல்லி என்மீது பழி போட்டுவிட யாரும் தயாராக இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நானும் அதைத்தான் சொன்னேன். தேர்தல் வாக்குறுதிகளை இருசாராரும் தாராளமாக வழங்கி இருக்கிறார்கள். தங்களுடைய பேச்சிலேயும் வழங்கி இருக்கிறார்கள். பேச்சிலே இருப்பதை வேண்டுமென்றால் பத்திரிகைகளின் நறுக்குகளைக் கொண்டு வந்து காட்டத் தயாராக இருக்கிறேன்.



1980 ஜூலை 9] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நாவலர் அவர்களைப் போன்ற ஒரு சிறந்த அரசியல் வாதி இப்படித் தேர்தல் வாக்குறுதிகளையும் சுவரொட்டியிலே எழுதப்பட்டிருப்பதையும் ஒன்றாக இணைத்து பேசுவது என்பது முறையாகத் தெரியவில்லை. தேர்தல் மேனிஃபெஸ்டோ என்பது அதாவது தேர்தல் வாக்குறுதி என்பது பத்திரிகைகளிலே வெளி வந்து அல்லது கட்சிகளின் சார்பாக அச்சடித்து கொடுக்கப்பட்டு கள் சுவரொட்டிகளிலேயும் எழுதப்படுவது உண்டு. அதற்காக சுவரொட்டியிலே எழுதப்படுவதெல்லாம் தேர்தல் வாக்குறுதிகளாக ஆகிவிட முடியாது. அவரவர்கள் இஷ்டத்திற்கு அவர்கள் ஆங்காங்கே எழுதி இருப்பார்கள். அதை வைத்துக் கொண்டு காங்கிரஸ் கட்சியின் சார்பாகவோ, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவோ, கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகவோ, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவோ கொடுக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகள் என்று எந்தக் கட்சியினரும் தவறாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதைத்தான் நானும் சொல்கிறேன். ஆகவே தேர்தல் வாக்குறுதிகள் என்று சொல்லப்பட்டவைகளை ஆரம்ப காலத்திலிருந்தே தொடர்ந்து நாம் பார்ப்போமேயானால் அவரவர்களுக்கேற்ற உணர்வுகள் கெடாத வகையில் திட்டம் தீட்டி அதை நடைமுறைப்படுத்தி இருக்கிறார்கள். இதிலே மத்திய அரசானாலும் சரி, வேறெந்த அரசாக இருந்தாலும் சரி, தேர்தல் வாக்குறுதிகள் அத்தனையும் பார்ப்போமேயானால் தங்களுடைய உணர்வைக் கொண்டுவருவதற்காகத்தான் அவர்கள் முயற்சி செய்திருக்கிறார்கள். அதே முறையில் பேரறிஞர் அண்ணா அவர்களும் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே முறையில் தான் நாங்களும் கொண்டு வந்திருக்கிறோம்.

அடுத்து வேலைக்கு உணவுத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். வேலைக்கு உணவுத் திட்டம் என்பதைப் பொறுத்தவரையில் 31—3—1980 முடிய இருக்கின்ற புள்ளி விவரங்களை மட்டும் நான் குறிப்பிடுகிறேன். பயன்படுத்தப்பட்ட உணவு தானியங்கள் 55,584.668 டன்கள். கூலித்தொகையாகக் கொடுத்த பண மதிப்பு 126.504 இலட்சம் ரூபாய். மனித உழைப்பு 142.045 இலட்சம் நாட்கள். பணியில் அமர்த்தப்பட்ட ஆண்கள், 18,60,624. பணியில் அமர்த்தப்பட்ட பெண்கள் 4,55,455. ஆகவே எந்த நோக்கத்தின் அடிப்படையிலே வேலைக்கு உணவுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமோ அந்த அளவுக்கு..............

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பணியில் அமர்த்தப்பட்ட ஆண்கள், பணியில் அமர்த்தப்பட்ட பெண்கள், மொத்தம் 23 இலட்சம் என்று சொல்கிறீர்கள், 23 இலட்சம் நபர்களா? அதைத்தான் கேட்கிறேன். 23 இலட்சம் நபர்கள் அல்ல. மொத்தமே ஒரு லட்சத்து 89 ஆயிரம் பேர்கள்தான். ஆகவே, தவறுதலாக 23 இலட்சம் என்று சொல்லப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்பு பேரவைத் தலைவரவர்களே, வேலைக்கு உணவுத்திட்ட என்பது ஒன்று. வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் என்பது மற்றொன்று. வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் 1979 ஆம் ஆண்டு வந்திருக்கின்றது. வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நபர்களுடைய எண்ணிக்கை 1 இலட்சத்து 89 ஆயிரம் பேர். வேலைவாய்ப்பு கேட்டு பதிவு செய்தவர்கள் எண்ணிக்கை 3 இலட்சத்து 37 ஆயிரம் பேர். ஆக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் என்ற அடிப்படையிலேதான் ஒரு இலட்சத்து 89 ஆயிரம் பேர் வருகிறார்கள். வேலைக்கு உணவு திட்டத்தை மத்திய அரசு என்ன நோக்கத்தோடு நிறைவேற்ற வேண்டும் என்று கருதுகிறதோ அந்த நோக்கத்திலே நிறை வேற்றப்பட்டு, மற்ற மாநிலங்களை விட மிகச் சிறப்பான முறையிலே நிறைவேற்றப்பட்டு வருகின்றது. அந்த அளவுக்கு அவர்களுடைய பாராட்டுதலைப் பெறுகின்ற அளவுக்கு நடை பெறுகிறது என்பதை நான் குறிப்பிட்டு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பொதுவாக இந்த நிதிநிலை அறிக்கையிலே பல்வேறு கருத்துக்களை பலரும் எடுத்துச் சொன்னார்கள். அதைப்போன்றுதான் ஏழை எளியவர்களுக்கு வாரம் கிலோ அரிசி என்பதைப் பற்றியும் மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நான் முதலிலே சொல்லியபடி சாத்தியமான அடிப்படையிலே இதை எந்த அளவுக்கு செய்ய முடியுமோ அந்த அளவுக்கு இயன்றவரையில் செய்வதற்கு இந்த அரசு பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டி ருக்கின்றது. இருக்கின்ற 5 ஆண்டு காலத்திலே இப்போ முதலாண்டிலே நிற்கிறோம். இன்னும் இருக்கின்ற 5 ஆண் களிலும் கொடுத்த வாக்குறுதிகளைத் தொடர்ந்து நிறை வேற்ற முடியும். அவ்வாறு நிறைவேற்ற முடிந்தவை நிறைவேற்றிவிட்டு அடுத்த 5 ஆண்டு காலத்திற்குப் பிறகு வருகிற தேர்தலிலே இதை மறுபடியும் நாங்கள் நிறைவேற்று வோம் என்று எடுத்துக்கூறி பொதுமக்களின் அன்பையும் அரவணைப்பையும் பெறுவோம் என்ற நம்பிக்கை இருக்கின்றது. பொதுமக்களும் இதை ஏற்றுக்கொண்டு ஆதரிப்பார்கள் என்பதன் அடிப்படையிலேதான் சொல்கிறோம்.





அடுத்து நான் முதலிலே சொல்லியபடி முதியோர் ஓய்வூதியம் என்று சொல்லிவிட்டு பிறகு அதிலே கண்டிஷன்ஸ் போடுகிறோம். இப்போது கூட வேலையற்ற பட்டதாரிகளுக்கு 50 ரூபாய் உதவித்தொகை என்ற திட்டம் நடைமுறைக்கு வரும் என்று ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தத் திட்டம் மேற்கு வங்காளம், கேரளா போன்ற பல இடங்களிலே இருக்கின்றது. ஆனால் ஒவ்வொரு இடங்களிலேயும் அந்தத் திட்டங்களை நிறைவேற்றி அதற்கான நிபந்தனைகளையும் வைத்துதான் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த நிபந்தனைகளை எல்லாம் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். ஆகவே அவற்றை எல்லாம் ஆராய்ந்து அந்தத் திட்டத்தை எந்த வகையிலே நிறைவேற்றுவது என்பது பற்றி திட்டமிட்டுக் கொண்டிருக்கிறோம். சில மாநிலங்களிலே இந்த நிபந்தனையைப் பொறுத்தவரையில் வேலையில்லாமல் பதிவு செய்து 3 ஆண்டுகள் ஆகியவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. சில மாநிலங்களில் 5 ஆண்டுகள் என்று இருக்கிறது.

[பிற்பகல் 1-40]

ஒரு வீட்டிலே 4 பேர்கள் இருந்தால், அந்த 4 பேர்களில் ஒருவருக்கு கொடுக்கவேண்டுமா அல்லது இரண்டு பேருக்கா என்று நிபந்தனை வைத்திருக்கிறார்கள். வேலை வாய்ப்பே இல்லாத குடும்பங்களுக்கு என்றால் தனியாக நிபந்தனைகள் வைத்திருக்கிறார்கள். அந்த நிபந்தனைகளின் அடிப்படையில் தான் நாம் நிதி ஆதாரங்களையும் மற்றவைகளையும் செலவழிக்க முடியும். ஆகவே நல்ல நோக்கத்தை நிறைவேற்றும் அந்த உணர்வுகளை அடிப்படையாக கொண்டிருக்கிறது என்றுமட்டும் நான் இப்போது கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் குறிப்பிடுகிற போது 122,80,000 ரூபாய் மட்டுமே மருத்துவத்திற்கு இந்தப் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அது இந்த திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையேதானே தவிர, நடைமுறையில் அதற்குத் தனியாக தொகை கொள்ளப்பட்டிருக்கிறது. அது இந்த ஆண்டு 933,20,000 ரூபாய் வருகிறது. ஆகவே மருத்துவத்திற்கு 607,10,000 ரூபாயும் பொது சுகாதாரத்திற்கு 156,30,000 ரூபாயும், குடும்பநலத் திட்டத்திற்காக 102,20,000 ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது, மொத்தக் கணக்கில் தனியாக 6,76,0000 ரூபாய் செலவழிக்கிறோம். இது 933,20,000 ரூபாய் மருத்துவத்துறை சுகாதாரத் துறைக்கு என்று தனியாக வருகிறது. அது வரவு செலவுத் திட்டத்தில், ஆனால் திட்டச் செலவுக்கென்று ஒதுக்கப்பட்டிருப்பது 122,80,000 ரூபாய் என்று குறிப்பிட்டேன்.

பணக்கார நிலச் சுவான்தார்கள் ஏராளமான பினாமி நிலங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை கைப்பற்ற நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களேயானால், அதற்கு நான் துணையாக நிற்பேன் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் குறிப்பிட்டார்கள். மன்றத்தில் இருக்கிற மற்ற உறுப்பினர்களும் அதை ஆதரித்தார்கள். அதைப் பொருத்த வரையில் யாருக்கும் எந்த வித கருத்து மாறுபாடும் இருக்காது. என்று நான் கருதுகிறேன். அதை நடைமுறைப்படுத்துகிற வழிமுறைகளை அரசு கையாளுகிற போது எல்லோருடைய ஒத்துழைப்பும் கிடைக்கும் என்றும் நான் நம்புகிறேன்.

இங்கே சென்னை நகரைப் பொறுத்த வரையில் விறகு விலைகள் அதிகமாக இருக்கின்றன. கிடைக்கவில்லை என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். சென்னை நகரில் விறகு விலைகள் அளவுக்கு மீறி உயர்ந்திருக்கின்றன என்ற நிலைமை அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. அரசே வனத்துறையிடம் இருந்து விறகுக் கட்டைகளை பெற்று தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகவும், கூட்டுறவு அமைப்புகளின் மூலமாகவும் நியாயமான விலைகளில் விறகு விற்க திட்டம் அமைத்துள்ளது. அதன்படி செங்கற்பட்டு, வடாற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களிலுள்ள காடுகளிலிருந்து வனத்துறையே மரங்களை வெட்டி பிறகு கட்டைகளாகப் பிளந்து சென்னை நகருக்குக் கொண்டு வந்து இந்த அமைப்புகளிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யும். தமிழ்நாடு நுபகர்ப்பொருள் வாணிபக் கழகமும், கூட்டுறவு அமைப்புகளும் சேர்த்து சென்னையில் 50 விற்பனை நிலையங்கள் திறக்கப்படும். வெளிச் சந்தையில் காட்டுக் கட்டை குண்டு ஒன்றுக்கு ரூபாய் 11 என்ற விலைக்கு விற்கப்படுகிறது. வெளிச் சந்தையை விட கணிசமான அளவுக்கு குறைந்த விலையில் விறகுகள் விற்க வழி செய்யப்படும். இன்னும் 2, 3 வாரங்களில் நடைமுறைப்படுத்தப்படும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ளவிரும்புகிறேன்.

மாநிலங்கள் தம் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் அளவிற்கு கூடுதலான அதிகாரங்கள் பெற வேண்டும் என்று ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்காக மத்திய அரசிடம் அணுகு முறைகளில் மாற்றுக் கொள்கைகள் வேண்டும் என்றும், அதற்காக முயற்சிகளை உருவாக்க அண்டை மாநில அரசுகளான மேற்கு வங்கம், திரிபுரா, கேரளா போன்ற மாநிலங்களோடு தோழமை உணர்வு கொண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வற்புறுத்தினார். அந்தக் கருத்தை இந்த அரசு ஏற்





கெனவே கொண்டிருக்கிறது. ஆகவே அதில் மாற்றுத் திட்டம் வேண்டும். அப்படி அந்த அணுகு முறையில் மாற்றுத் திட்டம் இருந்தால் மாநிலங்கள் கூடுதலான அதிகாரங்களைப் பெறவும் அதிகமான வசதி வாய்ப்புகளை பெறவும் மாநிலங்களின் தனித் தன்மையை வளர்க்கவும் வாய்ப்பு வசதிகள் ஏற்படும்.

இதே மாதிரி, இது ஒரு நல்ல துவக்கம் என்று கூறி திரு. நெடுமாறன் அவர்கள் பாராட்டுதலைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிர்வாகத் துறையில் உள்ள குறைபாடுகளை நீக்க வேண்டும் என்றும் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவையெல்லாம் அரசினுடைய கவனத்தில் இருக்கிறது. ஏழை எளிய மக்களுக்கு வாய்ப்பு வசதிகள் பெருக வேண்டும் என்பதற்காக அவர்கள் பல யோசனைகளை சொல்லியிருக்கிறார்கள். அவைகளும் கவனத்தில் கொள்ளப்படும் என்றும் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், இந்த பட்ஜெட் நல்ல பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது என்று வரவேற்று சில நல்ல பல யோசனைகளை எடுத்துச் சொன்னார்கள். இன்டஸ்ட்டிரியல் டெவலப்மெண்ட் கமிட்டி ஒன்று அமைத்தால் நல்லது என்ற யோசனையை எடுத்துச் சொன்னார்கள்.

அதன் மூலமாக பிற மாநிலங்களில் இருக்கிற தொழிலதிபர்களையும் தொழில் துவங்குபவர்களையும் கொண்டு வந்து தொழில்கள் துவங்க இங்கிருப்பவர்களைத் தூண்டிவிட அதற்கான முயற்சி அது தருமானால் இந்தக் குழு பயன்படும் என்று சொன்னார்கள். அதை அரசாங்கம் பரிசீலித்து தக்க முடிவு எடுக்க முயலும்.

மற்றவர்கள் கூறியது பொதுப்படையான கருத்துக்களாக இருக்கின்ற காரணத்தினால் கூடுமான வரை பொதுப்படையான கருத்துக்களுக்கு நான் விளக்கம் தந்திருந்தாலும் அடுத்து மானியக் கோரிக்கைகள் தொடர்ந்து வருவதன் காரணமாக அந்தந்த மானியக் கோரிக்கைகளின்போது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் தங்கள் தொகுதி பற்றிய கருத்துக்களையும், மாநிலம் பற்றிய கருத்துக்களையும் எடுத்து வைக்க நிரம்ப வாய்ப்புகள்

இருப்பதன் காரணமாக அப்போது பதில்கள் தரப்படும் என்று கருதுகிறேன். அவைகளுக்கு நான் பதில் சொல்லிக் கொண்டு போனால் நேரம் கடந்து விடும் என்று கருதுகிறேன். எனவே, பொதுப்படையாக நிதிநிலை அறிக்கையின் தன்மை பற்றிச் சொன்னார்கள். இருக்கிற நிதி ஆதாரங்களை வைத்துக் கொண்டுதான் செய்ய வேண்டும். இருக்கிற நிதி ஆதாரங்களை வைத்துச் செய்ய வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம்.. இப்போது வரிச்சுமை பெருகிவிட்டது என்பதால் புது வரிகள் போட வேண்டிய அவசியமில்லை என்று தவிர்க்க வேண்டும் என்று கருதி கூடுமான வரை அதுமாதிரிச் செய்கிறோம். 33 இலட்சம் ரூபாய் உபரி காட்டியிருக்கிறோம் என்று சொன்னால், செலவு செய்ய வழி இல்லாமல் இல்லை. ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு ஏதாவது ஒரு திட்டத்தைப் போட்டால் அது சரியாகிவிடும். டெபிஸிட் பட்ஜெட் போடுவதில் கஷ்டமில்லை. பற்றாக்குறை பட்ஜெட் போடுவது என்பது எளிது. ஆனால் உபரி பட்ஜெட் போடுவதுதான் கடினம். மேலும் சுமை வேண்டாம் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் இது செய்யப் பட்டிருக்கிறதே தவிர ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன், நிதி ஆதாரங்களைப் பெருக்க வேண்டிய கட்டாயம் வரும்போது அந்த உபாயத்தை அறவே தள்ளிவிடுவதற்கில்லை. எதிர்காலத்தில் அவைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியம் ஏற்படும்போது இந்த மன்றம் தன் முழு ஒத்துழைப்பும், ஆதரவும் தரும் என்று நான் கருதுகிறேன். அரசியல் மாறுபாடுகள், வேறுபாடுகள் எப்படியிருந்தாலும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். கருத்துக்களில், முக்கியமான கருத்துக்களில் நிதி ஆதாரங்களை தேடுவதில், மாநிலத்தின் உரிமைகளைப் பெறுவதில், இந்த மாநிலம் சிறந்த நிலையைப் பெற வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை என்று சொன்னார்கள். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் இருப்புப் பாதைகள் மாதிரிப் போகலாம் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர், அவர்கள் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் சொல்லும் போது முக்கியமான கருத்துக்களில் ஒத்துப் போக முடியும் என்று சொல்லி இப்படிப்பட்ட கருத்துக்களில் நாங்கள் இரட்டைக் குழல் துப்பாக்கியாக இயங்க முடியும் என்று எடுத்துச் சொன்னார்கள். கருத்து வேறுபாடுகள், மாச்சரியங்கள் ஏற்பட்டாலும் கூட மாநிலத்தின் நன்மை கருதி நாங்களாக இருந்தாலும் சரி எதிர்காலத்தில் வேறு கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சரி இந்த மாநிலத்தின் எதிர்கால நன்மையைக் கருதி நாம் திட்டங்கள் வகுக்க வேண்டியிருக்கும். 60 கோடி ரூபாய்தானே தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னார்கள். 500, 600 கோடி, தள்ளுபடி செய்வது என்றால் சொல்வது என்பது எளிது, ஆனால் அதை நிறைவேற்றுகிறபோது ஏற்படுகிற கஷ்டங்களை இந்த மாநிலம் தாங்க வேண்டும் அல்லது மாநில மக்கள் தாங்க





வேண்டும். ஆகவே நியாயமான அடிப்படையில் யாருக்கு நீக்க வேண்டுமோ அவர்களுக்கு நீக்க வேண்டும். யார் கஷ்டம் போக்கப்பட வேண்டுமோ அவர்கள் கஷ்டம் போக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் இந்த நிதி நிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் அவர்களும் இதை குற்றமாக எடுத்துக் கூற மாட்டேன் என்று சொல்லி விளக்கமாக தருகிறேன், கவனத் திற்குக் கொண்டு வருகிறேன், ஆகவே இதைப்பற்றி ஆலோசிக்க வேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள். அந்தளவிற்கு அவர்கள் தொடர்ந்து ஒத்துழைப்பு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் மற்ற எதிர்க்கட்சிகளும் உதவுமானால், குற்றங்கள் குறைகள் சுட்டிக் காட்டப்பட வேண்டியதுதான். ஆனால் நிறைவுகள் நிறை வேற்றப்படுவதற்கு முழு ஆதரவும் இந்த மன்றம் தருமானால் இந்த மாநிலத்தை எல்லோரும் சேர்ந்து நல்ல நிலைக்குக் கொண்டுவர முடியும். ஆக, ஒத்துழைப்பு தருவார்கள் என்று நம்புகிறேன். ஆதற்கான குரல் இந்த மன்றத்தில் எல்லாத் தரப்பிலிருந்தும் ஒலித்ததற்காக எல்லோருக்குமே எனது நன்றி யையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்பு மிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். யானைப்பசிக்கு சோளப்பொறி என்று. சோளப்பொறிதானே என்று சொல்லி இந்திரா காங்கிரஸ் கொடுத்துவிட்டால் எங்களுக்கு ஒரு கஷ்டமும் இல்லை. சோளப் பொறிதானே, எடுத்துக் கொள்ளுங்கள் என்று கொடுத்தால், பொறி யானைக்கு உகந்த ஒன்றா என்று கேட்டால் யானை வடிவத்தில் இருக்கிற பிள்ளை யாருக்கு பொறிகடலைதான் அதிகமாகப் பிடிக்கும் என்று சொல் வார்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே,

*திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, கடன் சுமை 500 கோடிக்கும் அதிகமாக இருக் விவசாயிகளுடைய கடன் சுமையை பூராவும் ரத்து செய் கிறது. விவசாயிகள் கடன் தேர்தல் காலத்தில் சொல்லிவிட்டு இப்போது வோம் என்று அறுபது கோடி என்று சொல்வது இந்த அறுபது கோடி ரூபாய்கூட விவசாயிகளுக்குப் போய் சேருமா என்ற அர்த்தத்தில்தான் சொன்னேன். நிதி அமைச்சர் அவர்கள் அதற்காக அந் நிதி ஒதுக்கம் இல்லை என்று சொல்கிறபோது சோளப்பொறி கூட கிடைக்காதோ என்ற ஐயப்பாடு வருகிறது. மேலும் ஒன்றை தெரிந்து கொள்ள விரும்புகிறேன். நிதி அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1980 ஜூலை 9.

கடன் ரத்துபற்றி மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம் என்று சொன்னார்கள். கடன் சுமை சம்பந்தமாக, மறுநாள் பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசும்போது மத்திய அரசுக்கு எழுதப்போகிறேன் என்று சொன்னார்கள். அதையும் நான் என் உரையில் எடுத்துக் கூறியிருக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் குறிப்பிட்டார்கள். இரண்டில் எது சரி என்று விளக்கம் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எழுதியதும் உண்மை, நான் எழுதப் போகிறேன் என்று சொல்வதும் உண்மை. ஏற்கனவே நாங்கள் 40 கோடி ரூபாய் தள்ளுபடி செய்திருக்கிறோம். அதற்கு மேற் கொண்டும் ஒதுக்க வேண்டும் என்றளவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த பட்ஜெட் வருவதற்கு முன்னா லேயே அவர்கள் எழுதியிருக்கிறார்கள். ஆகவேதான் எழுதி யிருக்கிறோம் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அறுபது கோடி ரூபாய்க்கு முக்கியமான விளக்கங்களைத் தந்து நான் எழுத வேண்டியவனாக இருக்கிறேன் என்றுதான் சொன்னேன்.

[பிற்பகல் 1-50]

முழு விளக்கங்களை நான் தரவேண்டியவனாக இருக்கிறேன். ஆகவே, இத்தகைய விளக்கங்களையெல்லாம் தரவேண்டும். இதிலே 16 கோடி தக்காவிக் கடன் என்று சொல்ல வேண்டும். 60 கோடியில் 42 கோடி இன்னென்ன வகையிலே வரவேண்டும் என்று சொன்னேன். அதை நான் எழுத வேண்டியவனாக இருக் கிறேன். மொத்தத்தில், பொதுவான கருத்தை முதல் அமைச்சர் அவர்கள் முன்கூட்டியே எழுதியிருக்கிறார்கள்.

இந்த அளவுக்கு மன்றத்தில் முழு ஒத்துழைப்பு தந்தமைக்கு என்னுடைய முழு நன்றி. நிதி நிலை அறிக்கையைத் தயாரிப்ப தற்கு ஒத்துழைத்த நிதித் துறை செயலாளர் அவர்களுக்கும் மற்ற அலுவலர்களுக்கும், மற்றவர்களுக்கும் என்னுடைய முழு நன்றியையும் தெரிவித்துக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 10-7-1980 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-51 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

38. பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகப் பணியாளர் நடத்தை விதிகள் செய்வது குறித்து கல்வித் துறையின் 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19-ந் தேதியிடப் பெற்ற 2358 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு. [1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல் கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 43 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

39. பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத் தில் கல்வியாளர் குழு, ஆய்வு வாரியம் அமைப்பது குறித்து கல்வித் துறையின் 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26-ம் தேதியிடப் பெற்ற 2402 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல் கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 43(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

40. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு நகராட்சிப் பணி (ஒழுக்கம்-மேல் முறையீடு) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து ஊர்வளர்ச்சி - உள்ளாட்சித் துறையின் 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் தேதியிடப் பெற்ற 643 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(d) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

41. சென்னையிலுள்ள இந்தியத் தொழில் நுட்ப நிறுவனத் திற்குச் சொந்தமான TMS 5035 ஆம் எண். பயணியர் பேருந் தைப் பொறுத்த வரையில் செலுத்தத்தக்க வரியிலிருந்து சலுகை அளிப்பது குறித்து உள் (போக்குவரத்து–I) துறையின் 1980 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 22 ஆம் தேதியிடப் பெற்ற 493 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி வி[illegible]த்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவி[illegible] பேரவை [illegible]ன் வைக்கப்பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏ[illegible]ய தாள்கள்.

*14. 1980–81 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 25, 45, 54 ஆகியவற்றிற்கான விரிவான மானியக் கோரிக்கைகள்.

*8-7-1980 அன்று பேரவை முன் வைக்கப்பெற்றது.